# கபிலர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,

சென்னை - 600 113.

# கபிலர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Kapilar** |
| Author | : | Vidwan V. Venkatarajulu Reddiar |
| Published by | : | International Institute of Tamil Studies, C.I.T. Campus, Taramani, Chennai - 600 113. |
| Publication No. | : | 273 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | Reprint |
| Paper used | : | Super printing - 16 kg - TNPL |
| Size | : | 1/8 Demmy |
| Price | : | Rs. 70/- |
| Print Types | : | 11 pt |
| No. of Copies | : | 1000 |
| No. of Pages | : | xx + 293 |
| Printed by | : | **Pavai Printers (P) Ltd.,** Royapettah, Chennai - 600 014. |

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தில் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகின்றது.

# அணிந்துரை

'முதுபெரும்புலவர்' என்றும் 'இலக்கணக் கடல்' என்றும் தமிழறிஞர்களால் போற்றப்படுகின்ற வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறன்பெற்ற பன்மொழிப் புலவர் ஆவார். அவரது பன்மொழிப் புலமை இலக்கிய ஒப்பாய்வுக்கு வழிவகுத்தது.

'இக்காலத் தொல்காப்பியர்' என்று திரு.வி.க. அவர்களாலும், 'யான் தேடிக் கொணர்ந்த தமிழ் மாணிக்கம்' என்று உ.வே.சா. அவர்களாலும், 'ரெட்டியார் தமிழில் தருக்க நுட்பமும், விஞ்ஞான வரையறையும் ஒவ்வொரு சொற்றொடரிலும் அமைந்திருக்கும். அவருக்கே சிறப்பாய் அமைந்த திறம்' என்று பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்களாலும் புகழாரம் சூட்டப்பெற்றவர் வேங்கடராஜுலு ரெட்டியார் ஆவார்.

வேங்கடராஜுலு ரெட்டியார் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்பு நெல்லை இந்துக் கல்லூரியிலும் சிதம்பரத்தில் இருந்த பண்டிதர் பயிற்சிக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகம் உருவாக்கிய 'தமிழ் பேரகராதிக் குழு'வில் சேர்ந்து பணியாற்றினார். அதன்பின் 'கீழ்நாட்டுக் கலை ஆராய்ச்சிக் கழகத்தில்' விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். வேங்கடராஜுலு ரெட்டியார் சிறந்த ஆய்வாளராகவும் கவிஞராகவும் விளங்கினார். இவர் இயற்றிய 'நாங்குநேரி தலபுராணம்' ஆயிரம் பாடல்களைக் கொண்ட நூலாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது 'பரணர்' என்ற நூலை எழுதினார். 'பரணர்' என்ற நூலைத் தொடர்ந்து 'கபிலர்' எனும் இந்த நூலை எழுதினார்.

முதுபெரும் புலவர் ரெட்டியாருக்கு முன்னர்க் 'கபிலர்' என்ற தலைப்பில் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் நூல் எழுதியுள்ளார். எனவே இரு நூல்களும் கூறுவது கூறும் தன்மையுடையன என்று படிப்பவர்கள் மயங்கக் கூடாது என்பதற்காக நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய 'கபிலர்' என்ற நூலிலிருந்து இந்நூல் வேறுபட்ட தன்மை யுடையது என்று இந்நூலாசிரியர் முன்னுரையில் விளக்கி யுள்ளார். ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய 'கபிலர்' என்ற நூல் 1921இல் வெளிவந்தது. அந்நூலில் இடம் பெற்றுள்ள 'தமிழ்ச் சங்க வரலாறு', 'கபிலர் காலம்' எனும் இரு பகுதிகளை இந்நூலாசிரியர் நீக்கியுள்ளார்.

வேங்கடசாமி நாட்டார் அவர்களின் 'குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி', 'குறிஞ்சிக்கலி ஆராய்ச்சி' எனும் இரு பகுதிகளை நாவலர் வேங்கடசாமி நாட்டார் பார்வையில் அணுகாமல் செய்யுள் ஆராய்ச்சி, சொல்லாராய்ச்சி முதலிய கோணத்தில் முதுபெரும் புலவர் ரெட்டியார் நோக்கியுள்ளார். எனவே நாட்டார் நூலிலிருந்து இந்நூல் வேறுபட்ட தன்மையுடையது.

''கபிலர் இயற்றியுள்ள பாட்டுக்களெல்லாவற்றையும் ஒருங்கு தொகுத்துப் பிற்சேர்பாகப் பதிப்பிக்கின் கற்போருக்கும் ஆராய்வோருக்கும் பெரும் பயனாகுமாகலின் அவற்றைப் பதிப்பித்தல் வேண்டும் என்னும் எண்ணமுடையேனாயினும், அவையெல்லாவற்றையும் சேர்ப்பின் இப்புத்தகம் பெரிதாகி விடும் என்றஞ்சி நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு இவ்வைந்து நூல்களிலுள்ள (கபிலர்) பாட்டுக்களை மட்டும் பதிப்பித்துள்ளேன். அவற்றுள்ளும் அரசர், தலைவர் முதலியோரைக் குறித்துப் பாடப்பட்ட செய்யுட்களை முதற்கண் தொகுத்துள்ளேன். ஆயின், பாரியைக் குறிப்பதாகிய புறநானூற்று 337-ஆம் செய்யுள் சிறிது சிதைவுற்றிருத்தலின், அதனை இறுதியில் அமைத்துள்ளேன். பின்னர், அரசர் முதலியோர் பெயர் வந்திலாத அகப்பொருட் செய்யுட்களைத் தலைவர் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று

என்று வகுத்து முறையே அமைத்துள்ளேன். ஒவ்வொருவர் கூற்றிலும் வந்துள்ள துறைகளை நோக்கிச் செய்யுட்களை ஓராற்றான் முறைப்படுத்தியுள்ளேன். இம்முறை படிப்போருக்கு நலம் பயக்கும் என்னுங் கருத்துடையேன்'' என்று இந் நூலாசிரியர் கபிலர் பாடல்களைத் தொகுத்திருக்கின்ற முறை பற்றி விளக்கியுள்ள தன்மை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். கபிலர் பாடல்கள் அனைத்தும் ஒரே தொகுப்பாக வெளிவரவேண்டும் என்ற ஆவலை நூலாசிரியர் முன்னுரையின் மூலம் நாம் உணரலாம்.

புகழ்பூத்த சங்கக் கவிஞர்களுள் ஒருவராகக் கபிலர் விளங்கினார்.

இயற்கையோடு இணைந்த மக்கள் வாழ்க்கையைச் சொற்சுவை, பொருட்சுவை ததும்ப புனைந்துள்ளார்.

'தாழாது செறுத்த செய்யுட் செய்செந் நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' (புறம் - 53) என்று பொருந்தில் இளங்கீரனாரும், 'நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம், புல னழுக் கற்ற அந்தணாளன்' (புறம். 126) என்றும், 'இரந்து செல் மாக்கட் கினியிடனின்றிப் பரந்திசை நிற்கப் பாடினான்' (புறம். 126) 'பொய்யா நாவிற் கபிலன்' (புறம் - 174) என்று மாறோக்கத்து நப்பசலையாரும், 'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்' என்று நக்கீரரும் (அகம். 78) 'நல்லிசைக் கபிலன்' (பதிற்றுப்பத்து, 85) என் று பெருங்குன்றூர் கிழாரும் கபிலரைப் போற்றியுள்ளனர். மேலும் உரையாசிரி யர்கள் ஆறாம் வேற்றுமைத்தற்கிழமைப் பொருளுக்குக் 'கபிலரது பாட்டு' என்று எடுத்துக்காட்டியுள்ளனர். கபிலரது பாட்டின் திறம் உரையாசிரியர்கள் மனம் கவர்ந்த பாங்கை இதன் வழி அறியலாம்.

இங்ஙனம் சங்கப் புலவர்களாலும், உரையாசிரியர் களாலும் பெரிதும் போற்றப்பட்ட 'கபிலர்' பற்றி முதுபெரும்

புலவர் வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் நூல் எழுதினார். அந்நூலை 1936-இல் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

நீண்ட ஆண்டுகளாக மறுபதிப்புச் செய்யாமல் இருந்த இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

''கபிலர், முதலில் காரியிடம் சென்றனர் என்றும், பின்னர்ப் பேகன்பால் போயினர் என்றும், அதன்பின் ஆரிய வரசனுக்குத் தமிழறிவுறுத்தினர் என்றும், பின்னர்ப் வேள் பாரியைச் சார்ந்து வாழ்ந்திருந்தார் என்றும் முடிவில் சேரமான் செல்வக்கடுங்கோவினைச் சார்ந்திருந்தார் என்றும் அமைத்துக் கொள்ளுதல் அமைவுடையதாகலாம்'' என்று கபிலரின் வாழ்க்கை நிகழ்வுகளை நூலில் வேங்கடராஜுலு ரெட்டியார் வரையறை செய்துள்ளார். நூலாசிரியரின் திட்பம், நுட்பம் அரும்பெரும் புலமை ஆகியவற்றை இந்நூலில் காணலாம்.

வேங்கடராஜுலு ரெட்டியார் கபிலர், பரணர் முதலிய பெருமக்களைப் பற்றி எழுதியது போன்று அவ்வையார், நக்கீரர், மாமூலர் முதலிய புலவர் பெருமக்களைப் பற்றியும் எழுத எண்ணியிருந்தார் என்று அவருடைய முன்னுரை மூலம் அறிகிறோம். ஆயின் அந்நூல்கள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

நம் முன்னோர்கள் செய்த ஆய்வுகளை அறிவதற்குக் கிடைத்தற்கரிய இந்நூல் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கும், இத்தகைய நற்செயல்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி -

பண்பாட்டுத்துறைச் செயலாளர் திருமிகு த.இரா. சீனிவாசன் அவர்களுக்கும், எங்கள் நன்றி.

அரிய நூல்கள் வெளியிடும் திட்டத்தில் இந்நூல் வெளியீட்டிற்கு நிதி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் சா. நாகராசன் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூலினை வனப்புற அச்சிட்டுத்தந்த பாவையச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

'பரணர்' என்னும் நூலை யான் எழுதி [1]முகித்த பின்னர், பரணரோடு ஒருங்கெண்ணப்படுகின்ற கபிலரைக் குறித்து எழுதுதல் நன்றெனக் கருதி, 'கபிலர்' என்னும் இந்நூலை எழுதினேன். இம்முறையில் அவ்வையார், நற்கீரர், மாமூலர் முதலியோரின் வரலாற்றையும் தனித்தனியே எழுதுதல் நலன் என்னுங் கருத்துடையேன். நிற்க.

கபிலரைக் குறித்துப் பண்டிதர் திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 'கபிலர்' என்னும் நூல் ஒன்று எழுதியுள்ளார் களாதலின், யானும் அவரைக் (கபிலரைக்) குறித்து எழுதியது மிகை என்று சிலர் கருதுதல் கூடும். ஆயின், நாட்டாரவர்கள் பெரும்பாலும் கல்லூரி மாணவரின் பயனைக் கருதி அந்நூலை எழுதியுள்ளார்கள். இஃது அன்னதோர் நோக்கத்தால் எழுதப் பட்டதன்று. அன்றியும், நாட்டாரவர்கள் தம் நூலில் விரிவாகக் கூறியுள்ள 'தமிழ்ச் சங்க வரலாறு', 'கபிலர் காலம்' என்பவற்றை அறவே விடுத்துள்ளேன்; 'குறிஞ்சிப்பாட்டின் ஆராய்ச்சி', 'குறிஞ்சிக்கலியின் ஆராய்ச்சி' என்னும் பகுதிகளையும் அம்முறை யில் ஆராய்ந்திலேன்; 'செய்யுளாராய்ச்சி', 'சொல்லாராய்ச்சி' முதலிய பல பொருள்களை ஆராய்ந்து எழுதியுள்ளேன். ஆகலின், நாட்டாரவர்கள் நூலொடு இந்நூல் பெரிதும் வேறுபாடுடைய தாகும்.

---

1. 'முகிந்தது' என்னுஞ் சொல், வழக்கிலும் பழைய ஏடுகளிலும் வழங்குதலானும்,

'ஆற்றிற், பாலத்தை **முகித்தே** னல்லேன்'

(குற்றாலத்தல. கண்டகசேதன. 39)

என்று செய்யுளிலும் வந்துள்ளதனானும், 'முகிதுது' என்று கன்னடத்திலும், 'முகிஸெனு' என்று தெலுங்கிலும் வழங்குதலானும், முகி என்னுஞ் சொல் தொன்மையதே என்பது அறியப்படும்.

# நூற்பொருள்

## I

இந்நூலின் முதற்கண், கபிலரைக் குறித்து வழங்குங் கதைகளைத் தொகுத்து எழுதியுள்ளேன். ஆயின், திருவிளை யாடற் புராணங்களும் ஹாலாஸ்யமாஹாத்ம்யம் என்னும் வடமொழிப் புராணமும் கூறுவனவற்றைப் 'பரணர்' என்னும் நூலின்கண் ஆராய்ந்துள்ளேனாகலின், அவற்றை ஈண்டும் எழுதுதல் மிகை என்று விடுத்து, ஏனைய நூல்கள் கூறுங் கதைகளை மட்டும் எழுதி, அவற்றை ஆராய்ந்துள்ளேன்.

## II

கபிலர் வரலாற்றில், அவர்தம் குலம் சமயம் வாழ்க்கை முதலிய பலவற்றைக் குறித்து ஆராய்ந்துள்ளேன். ஆயினும், பாரிமகளிரின் மணத்திறத்தில் உண்மை இஃது எனத் துணிந்து அறுதியிட இயலவில்லை. கபிலர், 'பாரிமகளிரைப் பார்ப்பார்ப் படுத்தினர்' என்னும் தொடருக்குப் பொருள் கொள்ளுந் திறத்தில் கருத்து வேறுபாடு உள்ளது; கபிலர், பாரியின் பெண்ணை மலையனுக்கு மணம் புரிவித்தனா என்று திருக்கோவலூர்ச் சாசனம் கூறுகின்றது; தமிழ் நாவலர் சரிதையும் தனிப்பாடற் றிரட்டும் பாரிமகளிருக்கு அவ்வையார் மணஞ்செய்வித்தனர் என்று கூறுகின்றன. ஆயின், வேறு புகலிடமற்ற பாரிமகளிருக்கு மணம்புரிவித்தலை மேற்கொண்ட கபிலர் தாமே எவ்வாற் றானாதல் அதனை நிறைவேற்றியிருப்பர் என்பது என் கருத்து. இச்செய்தியைக் குறித்துப் பேரறிஞர் சிலரோடு உசாவி அவர்தங் கருத்தினை யறிந்து, அதனை மேற்கொண்டுள்ளேன். கபிலர் வடக்கிருந்து உயிர்நீத்தார் என்று புறநானூற்று 236-ஆம் செய்யுளின் குறிப்புக் கூறுதலானும், அவர் கனல்புகுந்து மாய்ந்தார் என்று சாசனங் கூறுதலானும் உண்மை இஃது எனத் துணிதற்கில்லை. இத்திறத்தில் என் கருத்தினைச் சில காரணங்காட்டித் தெரிவித்

துள்ளேன். அதனை அறிஞர் உட்கோட்ட மின்றி ஆராய்ந்து அறுதியிடுமாறு வேண்டுகின்றேன். கபிலர் முதலியோர் காலத்தைக் குறித்துச் சரித்திர ஆசிரியர் பலரும் ஆராய்ந்திருத் தலின், அதனை அறவே விடுத்தேன்.

## III

கலித்தொகையினுள் குறிஞ்சிக்கலியும், பத்துப்பாட்டி னுள் குறிஞ்சிப்பாட்டும் கபிலர் இயற்றியனவல்ல என்பார் கூறுங் கூற்றினை ஆராய்ந்து, அவை கபிலர் இயற்றியனவேயாகும் என்னுங் கொள்கையினை மேற்கொண்டுள்ளேன்.

## IV

கபிலர் இயற்றின என்று வழங்கும் பன்னிருபாட்டியற் சூத்திரங்கள், மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை முதலிய வற்றை ஆராய்ந்து யான் கண்ட உண்மை விளங்க எழுதியுள்ளேன்.

## V

கபிலராற் குறிக்கப்பட்டவரையும், பாடப்பட்ட வரையுங் குறித்து, கபிலர் செய்யுட்களில் கண்டவாறு அவர்தஞ் சீர்த்தியைத் தெரித்துள்ளேன்.

## VI

கபிலர் பாட்டுக்களில் வந்துள்ள மலைகள் ஊர்கள் மக்கள் விலங்குகள் பறவைகள் மரவகைகளையும், செய்திகள் அக்கால வழக்கங்கள் இவற்றுட் சிறந்தவற்றையும் ஆராய்ந்து எழுதி யுள்ளேன்; மக்களுள் குறவரும் வேடரும் ஓரினத்தவரேயாயினும் பாட்டுக்களிற் கண்டவாறே வகுத்து, அவர்தம் செய்கையை

வேறுவேறாக எழுதியுள்ளேன். இவ்வாறே பிறவும் வந்துள்ளன கண்டுகொள்க.

## VII

கபிலர் பாட்டுக்களிற் காணும் உள்ளுறை இறைச்சிகளுக்கு எடுத்துக்காட்டாக ஒவ்வொன்றனைக் குறித்துள்ளேன்; அணிகளுட் சிறந்தவற்றை எடுத்துக்காட்டியுள்ளேன்; அவர்தம் செய்யுட்களிலுள்ள இலக்கண மாறுபாட்டுள்ளும் சிறப்பிலக்கணத்துள்ளும் சிலவற்றை ஆராய்ந்துள்ளேன்.

## VIII

சொல்லாராய்ச்சியுள் - பலவகைச் சொற்களின் பழைய வுருவமும் பிற்காலவுருவமும் இவையென்று குறித்துள்ளேன்; எழுத்து மாறிய சொற்களுள்ளும் பொருள்மாறிய சொற்களுள்ளும் சிலவற்றை எழுதி, அவற்றின் உண்மையியலினைத் தெரிவித்துள்ளேன்; 'பரணர்' என்னும் நூலில் ஆராய்ந்துள்ள அசைநிலைச் சொற்கள் முதலியவற்றைக் குறித்து ஈண்டு எழுதிற்றிலேன்; ஆயினும், சின் என்னுஞ் சொல்லின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தறிந்து தெரிவித்துள்ளேன்; அதனோடு, இகும் என்பதன் தொன்மைப் பொருளையும் குறித்துள்ளேன்.

★★★

## பிற்சேர்பு

## I

பாரியின் புதல்வியரை அவ்வையார் மணம்புரிவித்தனர் என்று தமிழ் நாவலர் சரிதை கூறுதலின், அக்கூற்றினை ஆராய்ந்து

உண்மை காண்டல் இன்றியமையாததாகும் என்று கருதி, அந்நூல் கூறுவனவற்றை ஆராய்ந்து முதற்பகுதியாகச் சேர்த்துள்ளேன்.

## II

கபிலர் பாட்டுக்களுட் குறிஞ்சிக் கலிக்கும் குறிஞ்சிப் பாட்டிற்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரைகளில் அமைவில்லாதன சிலவற்றை ஆராய்ந்து, அவற்றின் நேர்பொருள்களைத் தெரித்துள்ளேன். அகநானூற்றின் உரையிலும், நற்றிணையின் உரையிலும் ஒவ்வோரிடத்தை மட்டும் ஆராய்ந்துள்ளேன்.

## III

கபிலர் இயற்றியுள்ள பாட்டுக்களெல்லாவற்றையும் ஒருங்கு தொகுத்துப் பிற்சேர்பாகப் பதிப்பிக்கின் கற்போருக்கும் ஆராய்வோருக்கும் பெரும் பயனாகுமாகலின் அவற்றைப் பதிப்பித்தல் வேண்டும் என்னும் எண்ணமுடையேனாயினும், அவையெல்லாவற்றையுஞ் சேர்ப்பின் இப்புத்தகம் பெரிதாகிவிடும் என்றஞ்சி, நற்றிணை குறுந்தொகை பதிற்றுப்பத்து அகநானூறு புறநானூறு இவ்வைந்து நூல்களிலுள்ள (கபிலர்) பாட்டுக்களை மட்டும் பதிப்பித்துள்ளேன். அவற்றுள்ளும் அரசர், தலைவர் முதலியோரைக் குறித்துப் பாடப்பட்ட செய்யுட்களை முதற்கண் தொகுத்துள்ளேன். ஆயின், பாரியைக் குறிப்பதாகிய புறநானூற்று 337-ஆம் செய்யுள் சிறிது சிதைவுற்றிருத்தலின், அதனை இறுதியில் அமைத்துள்ளேன்; பின்னர், அரசர் முதலியோர் பெயர் வந்திலாத அகப்பொருட் செய்யுட்களைத் தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று என்று வகுத்து, முறையே அமைத்துள்ளேன்; ஒவ்வொருவர் கூற்றிலும் வந்துள்ள துறைகளை நோக்கிச் செய்யுட்களை ஓராற்றான் முறைப்படுத்தியுள்ளேன்; இம்முறை படிப்போருக்கு நலம் பயக்கும் என்னுங் கருத்துடையேன்.

'கபிலர்' என்னும் இவ்வாராய்ச்சி நூலில் உள்ள சிறப்புப் பொருள்களை எளிதிற் கண்டறிதற் பொருட்டுச் 'சொல்லகராதி' ஒன்று இறுதியில் சேர்த்துள்ளேன். இவை நிற்க.

'**ஆங்கனம்** தணிகுவ தாயின் யாங்கும்' (நற். 322)

**ஈங்கனஞ்** செல்க தானென என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்' (புற. 208)

'**யாங்கனம்** ஒத்தியோ வீங்குசெலன் மண்டிலம்' (புற. 8)

என்று, **ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம்** என்னுஞ் சொற்களே பழைய செய்யுட்களில் வந்திருத்தலானும், ஙகரம் மொழி முதற்கண் வாராதென்று தொல்காப்பியம் கூறுதலானும், **அங்கனம் ஆங்கனம் இங்கனம் ஈங்கனம் எங்கனம் யாங்கனம்** என்னும் சொற்களே பழமைய என்பது அறியப்படும். ஆகலின், யான் இந்நூலில் அங்கனம் இங்கனம் யாங்கனம் என்னும் சொற்களையே வழங்கியுள்ளேன்.

இனி, நல்லந்துவனார் நல்லாதனார் நல்லிறையனார் நல்லுருத்திரனார் என உயிர்முதன்மொழிகள் வந்தவிடத்தும், நன்னாகனார் நன்னாகையார் என மெல்லெழுத்து முதன் மொழிகள் வந்தவிடத்தும், நல்விளக்கனார் நல்வெள்ளியார் நல்வேட்டனார் என இடையெழுத்து முதன் மொழிகள் வந்தவிடத்தும் நல் என்னும் அடைமொழியே வந்திருத்தலின் வல்லெழுத்து முதன்மொழிகள் வருமிடத்தும் நல் என்னும் அடைமொழி நிற்றலே முறையாமாகலானும், நற்காட்சி நல்லொழுக்கம் நன்ஞானம் என்று சிறப்புடைப் பொருள்களைக் கூறுமிடத்தும் நல் என்னும் அடைமொழியே வந்திருத்தலானும், பிறவாற்றானும் [1]நற்கீரர் என்னும் சொல்லே அமைவுடைய தென்றும், நக்கீரர் என்னும் சொல் மரூஉ மொழி என்றும் தேர்ந்து, நற்கீரர் என்னும் சொல்லை (பக்கம் 17) மேற்கொண்டுள்ளேன்.

---

1. இதனைக்குறித்துத் 'தமிழ்ப்பொழி'லில் (துணர். 9:11, 12) யான் விரிவாக எழுதியிருக்கும் கட்டுரையைக் கண்டுகொள்க.

இப்புத்தகத்தின் முதற்பகுதியைத் திருவாளர் சே. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் (Tamil Pandit, St. Bede's European High School, San Thome) 'புரூப்' பார்த்துதவினார்கள். பிற்சேர்பிற்சேர்க்கப்பட்டுள்ள கபிலர் பாட்டுக்களுள் நற்றிணை குறுந்தொகை அகநானூறு இவற்றிலுள்ள பாட்டுக்களைத் திருத்திக் கொள்ள எண்ணித் திருவாளர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களை (Editor, Tamil Lexicon) யான் கேட்டபோது, அவர்கள் பல ஏடுகளோடு ஒப்பிட்டுத் திருத்திவைத்திருந்த தங்கள் ஏட்டை அன்போடு தந்துதவினார்கள். இந்நூலின் 39-ஆம் பக்கத்திற் காணுஞ் சுலோகங்களை அறிவித்ததேயன்றி, வேறு சிலவற்றை ஆராய்தற்கும் ஸ்ரீமத் ஶேஷையங்காரவர்கள் (Junior Lecturer in Kanarese, University of Madras) துணைபுரிந்தார்கள். இவர்களுக்கும், இந்நூற்றிறத்தில் எனக்குத் துணைபுரிந்த அறிஞர் பிறருக்கும் யான் பெரிதும் நன்றியறிதலுடையேன்.

புலவர்களுக்கொரு பெருநிதியா யிருப்பவர்களும், உரைநடை யெழுதுதலில் தலைசிறந்து விளங்குபவர்களும் ஆகிய திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இந்நூல் முழுவதும் கடைக்கணித்து, வேண்டுவன செய்து, சீர்மைப்படுத்தினார்கள். அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

**வே. வேங்கடராஜுலு**

# உள்ளுறை


## I

பக்கம்
*1 - 14*

### கபிலரைக் குறித்து வழங்கும் கதைகள்

**தோற்றுவாய்:**

கபிலரைப் பற்றிக் கூறும் நூல்கள் - கபில ரகவல், சோழ மண்டல சதகம், ஞானாமிர்தம், தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடற்றிரட்டு, புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, திருவள்ளுவர் கதை, பன்னிருபுலவர் சரித்திரத்தில் காணும் மற்றொரு கதை.

கபிலரைப் பற்றி வழங்கும் கதைகளின் ஆராய்ச்சி - கபிலர் பிறந்த ஊர், தாய் தந்தையர், பிறப்பு.

## II

*12-40*

### கபிலர் வரலாறு

கபிலர் வரலாறு-குலம், சமயம், வாழ்க்கை, கபிலரும் மலையமான்காரியும், கபிலரும் பேகனும், கபிலரும் ஆரியவரசன் பிரகத் தனும், கபிலரும் வேள்பாரியும், கபிலரும் விச்சிக் கோனும், கபிலரும் இருங்கோவேளும், கபிலரும் கடுங்கோவாழியாத னும், கபிலரின் வாழ்க்கை நிலை, (கபிலருக்கு நண்பர்கள்) கபிலரது புலமைத் திறன், கபிலரியல்பு, கபிலர் பெருமை.

III 41-58

## கபிலர் இயற்றிய செய்யுட்கள்

கபிலர் இயற்றிய செய்யுட்கள் - குறிஞ்சிக் கலியின் ஆசிரியர் கபிலரே - குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் கபிலரே - இன்னாநாற்பதின் ஆசிரியர்.

IV 59-70

## கபிலர் இயற்றியவை என்று வழங்கும் நூல்கள் முதலியன

பன்னிருபாட்டியல், மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணி மாலை, சிவபெருமான் திருவந்தாதி, கபிலரகவல், கபிலம், கபிலரும் திருவள்ளுவ மாலையும், கபிலரும் தனிச்செய்யுளும்.

V 71-80

## கபிலராற் பாடப்பட்டவர்

நள்ளி, ஓரி, அகுதை, காரி, பேகன், பாரி, விச்சிக்கோன், இருங்கோவேள், கடுங்கோவாழி யாதன், கழாத்தலையார்.

VI 81-114

## கபிலர் பாட்டுக்களால் அறியப்படுபவை

மலைகள் - அயிரைமலை, கொல்லிமலை, நேரிமலை, பறம்புமலை, பொதியில், முள்ளூர்மலை.

ஊர்கள் - அரையம், கூடல், கொடுமணம், துவ்வரை, பந்தர், முள்ளூர்.

**சில செய்திகள்:**

வழக்கங்கள் - அந்தணர், வணிகர், இல்வாழ்வோர், ஆடவர், மகளிர், வீரர் இவர்களின் வழக்கங்களும் பிறவும்.

மக்கள் - குறவர், குறமகளிர், வேடர், காவலர், வேலன், மறவர், ஆயர், உழவர், உமணர், பாணர், பாடினி, ஆடுமகள், புலையர், இயவர்.

விலங்குகள் - கரடி, குதிரை;
குரங்குகள் - கடுவன், மந்தி, முசுக்கலை, கருங்குரங்கு, குட்டிகள்;
நாய் ஆ; ஆமான், பன்றி, புருவை, புலி;
மான்கள் - வருடை, மரைஆ, கடமா, முளவுமா; முதலை, யானை, வெருகு.

பறவைகள் - அன்றில், இருதலைப்புள், எருவை, கடற்காக்கை, கிளி, குருகு, கூகை, மயில், வண்டுகள், வானம்பாடி.

மரவகை - அசோகு, அவரை, இற்றி, உழிஞை, உன்னம், எருக்கு, ஐவனம், கருங்குவளை, காந்தள், குளவி, கோங்கு, சந்தனமரம், சுரபுன்னை, செங்குவளை, சேம்பு, ஞாழல், தினை,

தெறுழ், தோன்றி, நறைக்கொடி, நெய்தல், நொச்சி, பலா, பிடவு, பித்திகம், மா, மிளகு, முல்லை, வயலை, வரகு, வாகை, வாழை, வெதிர், வேங்கை.

குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூக்களின் சிறப்பியல்பு:

குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூவும் இலையும்:

VII 115-149

## செய்யுளாராய்ச்சி

குறிஞ்சிப் பாட்டின் பொருள்:

இன்னாநாற்பது :

நயமிக்க பாட்டுக்கள் - தலைவன் கூற்று; தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று, இயற்கை நவிற்சி, உள் ளுறை யுவமம், இறைச்சிப் பொருள்

அணி - உவமை

கவிமரபான செய்திகள்:

புராணக்கதை:

இலக்கண மாறுபாடு:

இலக்கணச் சிறப்பு:

**VIII** *150-188*

## சொல்லாராய்ச்சி

சொற்களின் பழைய வுருவமும் பிற்கால வுருவமும்; 'இசின்' 'இகும்' என்னும் அசைநிலை முதலியன.

சொற்களில் காணும் எழுத்து மாறுபாடு - 'அளிது' முதலிய சொற்கள், 'செலின்' என்னும் வினையெச்சம், 'இன்னினி', 'மீமிசை', 'ஒரும்', 'எனவ' என்னும் சொற்கள் முதலியன.

சொற்களின் பொருள் மாறுபாடு - இயம்பல், எற்பாடு, கானல், துகில், நகர், பாக்கம், புரையோர், புலம்பு, வாங்குதல், வெய்யள்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் இம்மொழி களோடு ஒத்துள்ள சில சொற்கள்:

வடசொற்கள்:

## பிற்சேர்ப்பு

**I**

*தமிழ் நாவலர் சரிதை* *189-196*

II 197-221

கபிலர் பாட்டுக்களும் உரைகளும் - குறிஞ்சிப் பாட்டின் உரை, குறிஞ்சிக் கலியின் உரை, அகநானூற்றின் உரை, நற்றிணையின் உரை, குறுந்தொகையின் உரை

III 222-276

கபிலர் பாட்டுக்கள் - காரி, பேகன், பாரி, விச்சி கோன், இருங்கோவேள், செல்வக்கடுங்கோ வாழி யாதன், ஓரி, நள்ளி, அகுதை.

தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று.

சொல்லகராதி 277-289

'கபிலர்' என்னும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள நூல்கள் முதலியன. 290-293

★ ★ ★

# கபிலர்

## I

## கபிலரைக் குறித்து வழங்குங் கதைகள்

### தோற்றுவாய்

தமிழ்நாட்டில் கபிலர் என்னும் பெயரால் விளங்கிய புலவர் இருவர்; அவராவார், தொல்கபிலரும் கபிலரும். இவர் களேயன்றி, சாங்கியமதத்தின் ஆசிரியராகிய கபில முனிவரொரு வரும் இருந்தனர். அவர், இத் தமிழ்நாட்டில் வாழ்ந்தவரல்ல ராயினும், சமய நூலறிவினால் அவர் பெயரும் இந்நாட்டில் நிலைபெற்றிருக்கின்றது. கபில முனிவரைத் திருமாலின் அவதாரம் என்று புகழ்ந்து கூறுதலும் உண்டு[1].

நம் நாட்டில், பெரும்புலமை வாய்ந்து விளங்கிய கபிலர் என்னும் புலவருக்கு முற்பட்ட காலத்தில், கபிலர் என்னும் பெயருடைய வேறொரு புலவர் வாழ்ந்திருந்தாராகலின் அவருக்குத், 'தொல்' என்னும் அடைமொழி கொடுத்துத் தொல்கபிலர் என்று அவரை வழங்குகின்றனர். ஆதி சங்கரா சாரியர், ஆதி வண் சடகோபசுவாமி என வழங்குதலும் இம்முறை யில் அமைந்ததேயாகும். தமிழ்ப் புலவராய்த் திகழ்ந்திருந்த கபிலரிருவருள் பிற்காலத்தவராகிய கபிலரது வரலாறே ஈண்டு நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

---

1. பிங்கலம், வானவர் வகை: 48; விஷ்ணு ஸஹஸ்ர. சு. 57.

சாங்கியமதத்தின் ஆசிரியராகிய கபில முனிவர், வேதவியாசர் காலத்திற்கும் முற்பட்டவர் என்பது, அவர், (வியாசர்) தமது ப்ரஹ்ம சூத்ரத்தில் இரண்டாவது அத்யாயத்தின் முதற்பாதத்தில், சாங்கிய மதத்தைக் கூறி மறுப்பதனால் அறியலாகும். நம் கபிலரோ, கி.பி. 1, 2-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களாகிய வேள்பாரி, செல்வக் கடுங்கோவாழியாதன் முதலியோர்க்கு நண்பராய் விளங்கியவர். கபில முனிவர் தத்துவங்களின் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கிய முதல்வர். அவர், கடவுள் உண்டு என்னும் கொள்கையினரல்லர். நம் கபிலரோ உலக இன்பத்தைக் குறித்தே பல பாட்டுக்கள் இயற்றியுள்ளார். தத்துவங்களின் இயல்பும், அவற்றின் பகுதிகளும் இவர் பாட்டுக்களில் யாண்டுங் காணப்படுகின்றில. அன்றியும், இவர் கடவுட் கொள்கையுடையவர்[1]. இவைபோன்ற காரணங்களினால், நம் கபிலர், கபில முனிவருக்கு மிகப் பிற்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர் என்பதும், அவரினும் வேறுபட்ட கொள்கையினர் என்பதும் விளங்குமன்றே!

## கபிலரைப் பற்றிக் கூறும் நூல்கள்

இனி, இவருடைய பிறப்பினைக் குறித்து ஆராய்வாம். இவரைப் பற்றிக் கூறும் நூல்கள் - திருவாலவாயுடையார் திருவிளையாடல், ஹாலாஸ்யமாஹாத்ம்யம் (வடமொழி நூல்), பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், கபிலரகவல், சோழ மண்டல சதகம், ஞானாமிர்தம், தமிழ் நாவர் சரிதை, தனிப் பாடற்றிரட்டு, புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, திருவள்ளுவர் கதை, பன்னிரு புலவர் சரித்திரம் முதலியன.

---

1. 'புல்லிலை யெருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணே மென்னா' (புறம். 106)

என்று பாடியிருப்பதனால், கடவுள் ஒருவர் உளரென்பதும், அவர், அடியவர்கள் அன்புடன் இடுவன எத்தகையனவாயினும் அவற்றை யேற்றுக் கொள்வர் என்பதும் இவர் கருத்தாலறிக.

இவற்றுள், ஹாலாஸ்யமாஹாத்ம்யமும் பரஞ்சோதியார் புராணமும், கபிலர், சரசுவதி தேவியின் உடற்கூறாகிய எழுத்துக் களுள் ஒன்றன் அவதாரம் என்றும், நான்முகக் கடவுளின் சாபத்தால் நிலவுலகில் மக்கட் பிறப்பிற் பிறந்து, சிறந்த புலவராய் மதுரையை யடைந்து, பாண்டிய மன்னனால் சிறப்புப் பெற்று, ஆண்டு வாழ்ந்திருந்தனர் என்றும் கூறுகின்றன. திருவாலவா யுடையார் திருவிளையாடலும் கடம்பவன புராணமும் இவர் கலைமகளின் அமிசம் என்று கூறவில்லையாயினும், மதுரையில் சங்கப் புலவர் களுள் ஒருவராய் வீற்றிருந்தார் என்று மட்டும் தெரிவிக்கின்றன.[1]

## கபிலரகவல்

கபிலரகவல்[2] என்னும் நூல், கபிலர் செய்ததென்று வழங்குகின்றது. கபிலர் முதலியோரின் பிறப்பினைக் குறித்து இதில் கூறப்பட்டுள்ள வரலாறு:

'அருந்தவ மாமுனி ஆம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினில் அன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனின்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனும் ஊர்தனில் தங்கியே
வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்
காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் சேரியில்
சான்றார் அகந்தனில் உறுவை வளர்ந்தனள்

1. இப் புராணங்களில் இவரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளை, யான் எழுதியுள்ள 'பரணர்' என்னும் நூலுட் பரக்கக் காணலாம்.

2. இது கபிலராற் செய்யப்பட்டதன்று என்பது, முன்னர், 'கபிலர் இயற்றியவை என்று வழங்கும் நூல்கள் முதலியன' என்னுமிடத்தில் விளக்கப்படும்.

நரப்புக் கருவியோர் நண்ணிடுஞ் சேரியில்
பாண ரகத்தில் அவ்வை வளர்ந்தனள்
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்
தொண்டை மண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்'

என்பது.

இதனால் கபிலர், **பகவன்** என்னும் முனிவருக்கும் **ஆதி** என்னும் புலைச்சிக்கும் மகவாய்த் தோன்றியவர் என்பதும், அவர், சோழநாட்டில் திருவாரூரில் அந்தணரால் வளர்க்கப்பட்டவர் என்பதும் அறியப்படுகின்றன. இவையே யன்றி, இவருடன் பிறந்தவர்களின் தொகையும், அவர்களின் பெயரும், அவர்கள் வளர்ந்த செய்தியும் இப்பகுதியிற் கூறப்பட்டுள்ளன.

## சோழ மண்டல சதகம்

சோழ மண்டல சதகத்தில் உள்ளதாகிய,

'பொறையர் தில்லை வாழ்முனிவர் புகலிப் பெருமான் சண்டீசர்
நிறையார் கலையார் பூசலையார்[1] நீல நக்கன் நிகழ்சோமன்
**முறையார் ஞானத் திருவகவல் மொழிந்த கபிலர்** முதலாய
மறையோ ரெவரும் இமையோராய்வாழுஞ் சோழ மண்டலமே' *(12)*

என்னும் செய்யுளால், கபிலர், சோழ நாட்டில் பிறந்தவர் எனவும்,

---

1. பூசலார் நாயனார் தொண்டைமண்டலத்தவர் என்பது பெரிய புராணத்தால் (பூச: 2) அறியப்படும்.

மறையவர் குலத்தினர் எனவும், ஞானப் பொருளமைந்ததோ ரகவலைச் செய்தவர் எனவும் தெரியவருகின்றது.

## ஞானாமிர்தம்

ஞானாமிர்தம் என்னும் நூலில்,

*யாளி, கூவற் றூண்டும் ஆதப் புலைச்சி*
*காதற் காசனி யாகி மேதினி*
*இன்னிசை யெழுவர்ப்[1] பயந்தோள் ஈண்டே' (33)*

என்று கூறப்பட்டுள்ளது. அதன் உரையில்,

*'யாளிதத்த முனிவன், (தனக்கு விகிர்தமாய்த்) தன்னாலே வெட்டுண்டு கிணற்றிலே தள்ளப்பட்ட அறிவில்லாத சண்டாளப் பெண்ணை (ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டு போய் உத்தர பூமியிலே வளர்த்துப் பின்பு இவனுக்கே கொடுக்க), சினேகத்துக்கு இருப்பிடமானவளாய்ப் பிராமணியாய்ப் பூமியிலே நிற்கும் இனிய கீர்த்தியை யுடைய கபிலர் உள்ளிட்ட [2]ஏழுபிள்ளைகளையும் பெற்றன ளன்றோ இவ்விடத்திலே'*

என்று எழுதப்பட்டிருக்கின்றது.

---

1. எழுவர் இவர் என்பதை,

*'கபிலர் அதிகமான் கான்குறவர் பாவை*
*முகிலனைய கூந்தல் முறுவை - நிகரில்லா*
*வள்ளுவர் ஔவை வயலூற்றுக் காட்டிலுப்பை*
*எள்ளில் எழுவர் இவர்'*

என்னும் வெண்பாவினால் அறியலாகும். (ஞானாமிர்தம், பக்கம்: 70, அடிக்குறிப்பு)

2 'திருவள்ளுவர், அதிகமான், கபிலர், ஔவை, உப்பை, உருவை, **வள்ளி** என்னும் ஏழு பிள்ளைகளையும் பெற்றனள்' என்பது பிரதிபேதம். (ஞானாமிர்தம். பக்கம்: 70)

## தமிழ் நாவலர் சரிதை

தமிழ் நாவலர் சரிதையில், கபிலர் பிறப்பினைப் பற்றி யாதும் கூறப்படவில்லையாயினும்,

[1]**'கபிலர் பிறந்தபோது பாடியது'** என்னும் தலைப்பின் கீழ்,

'நெட்டிலை யிருப்பை வட்ட வான்பூ
வாடா தாயிற்
பீடுடைப் பிடியின் கோடேய்க் கும்மே
வாடிலோ
பைந்தலைப் பரதர் மனைதொறும் உணங்கும்
செந்தலை யிறவின் சிரேய்க் கும்மே

என்னும் பாட்டுக் குறிக்கப்பட்டுள்ளது.

## தனிப்பாடற் றிரட்டு

தனிப்பாடற்றிரட்டில்,

'ஔவையார் முதலிய எழுவரும் பிறந்தவுடனே, தாயாகிய ஆதி என்பவள் இவர்களை விட்டு நீங்கமாட்டாமல் மயங்கும் போது, அவளுக்கு மனவுறுதி யுண்டாகும்படி பாடியவை'

என்னும் தலைப்பின்கீழ்,

**கபிலர்**

'கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கும்
உண்ணும் படியறிந் தூட்டுபவர் - நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்'

என்னும் பாட்டு குறிக்கப்பட்டுள்ளது.

---

1. தமிழ் நாவலர் சரிதை. பக்கம்: 7, பாட்டு 11.

## புலவர் புராணம்

புலவர் புராணத்தில், ஔவையார் சருக்கத்திற்[1] காணும் வரலாறு:

'நான்முகன் அம்சமான பகவன் என்னும் அந்தணனும், கலைமகளின் அம்சமான ஆதி என்பவளும் இரவும் பகலும் ஓடி, ஒவ்வோரிடத்திற் கூடி, ஏழு குழவிகளைப் பயந்தனர். அக்குழவிகளுள் முதற்குழவியே ஔவை. அவ்வெழுவருள் ஆண் மக்கள் மூவர்; பெண் மக்கள் நால்வர். குழந்தைகள் ஒவ்வொன்றும் பிறந்தவுடனே ஒவ்வோர் வெண்பாவைப் பாடின. ஔவையைப் போலப் பண்படைந்தவர் பிறரில்லை. வள்ளுவர், கபிலர், சேரமான் என்னும் மூவரும், தம் புலமை உலகில் விளங்கி நிற்குமாறு செய்தனர். மற்றைப் பெண்கள் மூவரும் தம் இயல்பினை வெளிக்காட்டா திருந்துவிட்டனர் என்பர்'

என்பதாம்.

## விநோதரசமஞ்சரி

விநோதரசமஞ்சரி, அவ்வையார் சரித்திரத்தைக் கூறுமிடத்தில், அவ்வையார், மதுரையில் கடைச்சங்கமிருந்த காலத்தில் உறையூர் என்னும் பட்டணத்தின் ஒருசாவடியில் ஆதி என்பவளுக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் ஜேஷ்ட புத்திரியாகப் பிறந்தனர் என்று கூறுகின்றது. இதில், கபிலர் வரலாறாக ஒன்றும் காணப்படாவிடினும், திருவள்ளுவர் பிறப்பினைக் குறித்து வழங்கும் கதையை இந்நூலாசிரியர் பின்பற்றியுள்ளார் என்பது போதரும்.

## திருவள்ளுவர் கதை

திருக்குறள் நூலோடு சேர்த்துள்ள திருவள்ளுவர் கதையிற் கூறப்பட்டிருப்பவற்றைச் சுருக்கி, ஈண்டுக் குறிக்கின்றேன்:

---

1. ஔவையார் சருக்கம்: 2 - 4

கயிலை மலையில் ஒருநாள், உமாதேவி சிவபெருமானை வணங்கி, 'மூன்றுலகங்களிலும் இல்லறம் வழுவாது நடத்தி வீடடைந்தவர் உளரோ?' என்று வினவினாள். இறைவர், 'வானுலகில் வசிட்டர், அகத்தியர், அயன், புயங்கன், சம்பு என்போர் ஐவரும், நிலவுலகில் திருவள்ளுவரும் கற்புடைப் பெண்டிரொடு கலந்துறைந்து இல்வாழ்க்கை நிகழ்த்தி வீடெய் தினர்' என்றார். ஆயின், 'அத் திருவள்ளுவர் யாவர்?' என, அவர் கூறுவார்:

நான்முகன் செய்த வேள்வியில் வைத்திருந்த கும்பத்தில் கலைமகள் தோன்றுதலும், அவன் அவளை மணந்தான். பின்னர், அக்கும்பத்தில் அகத்தியர் பிறந்தார். அவர், கடற்கன்னியை மணந்து பெருஞ்சாகரரைப் பெற்றார். அவர், திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப் பயந்தார்.

அந்நாளில் நான்முகன் மரபில் தவமுனி என்பவன், அருண்மங்கை என்னும் அந்தணப் பெண்ணை மணந்து பெண் குழந்தையொன்றைப் பெற்றான். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்து வளர்த்தான். அக்காலத்தில் மண்மாரி பெய்யவே, சேரியில் அக்குழந்தையொன்று நீங்க மற்றையோரனைவரும் மாய்ந்தனர். குழந்தை அவ்வூரை யடுத்த பார்ப்பனச்சேரியில் நீதிஐயன் என்பவன் மனையில் வளர்ந்துவந்தது.

பகவன் என்பவர் காசிக்குச் செல்லுகையில், அவ்வக ரத்தையடுத்ததொரு மடத்தில் அடிசில் ஆக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது, அக்குழந்தை ஆங்குச் செல்ல, முனிவர் முனிந்து, சட்டுவத்தால் அதன் தலையில் அடித்தார். அடித்தலும், குருதி வடியக் குழந்தை அகன்றோடிற்று. பின்னர், காசி சென்று மீண்ட பகவனார், வழியில் அம்மடத்தில் தங்கியிருப்ப, பண்டுபோல் ஆண்டுச் சென்ற அப்பெண்ணின் அழகினைக் கண்டு காமுற்று, அவளை மணந்துகொள்ளலானார். மணவினை நிகழ்கையில், அவள் தலையின் வடுவினைக் கண்டு, 'நீ ஆதியள் அல்லையோ?' என்று கூறி, அங்கு நின்று அகன்றார். இதனால், அவளுக்கு 'ஆதி' ன்னும் பெயர் அமைவதாயிற்று.

ஆதியும், அங்கு நின்று நீங்கிப் பகவனைத் தொடர்ந்து சென்று, பாணர்சேரியிலிருந்த மண்டபத்தில் அவரைச் சார்ந்தாள். அவள், பகவன் கருத்தின்படி, என்றும் அவரைப் பிரியாது உடனிருக்க உடன்படவே, அவர் ஆண்டே அவளைக் கூடினார்; கூடுதலும், ஒரு குழவி பிறந்தது; அதுவே ஔவை. பின்னர்த் தொண்டை நாட்டில், ஊற்றுக்காட்டில் ஒரு மடத்திற் கூட உப்பையும், சோணாட்டில் கருவூரில் ஒரு சோலையிற் கூட அதிகமானும், புகார் நகரில் ஒரு மண்டபத்திற் கூட உறுவையும், **திருவாரூரில் ஒரு மடத்திற் கூடக்** கபிலரும்,[1] வேளின் மலைச் சாரலிற் கூட வள்ளியும், மயிலாப்பூரில் இருப்பைத் தோப்பிற் கூடத் திருவள்ளுவரும் பிறந்தனர். குழந்தைகள் பிறத்தலும் அவற்றைவிட்டு நீங்கத் தாய் தயங்கினள். அப்பொழுது ஒவ்வொரு குழந்தையும் ஒரு செய்யுளைச் செப்பிற்று. செய்யுளைக் கேட்டு அமைதியுற்று அவள் முனிவனைத் தொடர்ந்து சென்றனள். இவ்வாறே அவள் எழுவரைப் பயந்தாள் என்பதாம்.

## பன்னிரு புலவர் சரித்திரத்திற் காணும் மற்றொரு கதை[2]

முற்காலத்தில் வேதமொழி என்பாரொருவருக்குப் பேராளி என்னும் புதல்வரொருவர் இருந்தார். அவருக்குப் பன்னிரண்டாம் யாண்டு நிகழ்கையில் அவ்வூரில் ஓரிழிகுலத்தில் பெண் மக வொன்று பிறந்தது. அம் மகப்பிறந்த நாளின் தீமையால் ஊர் அழிவுறும் என அறிந்து, ஊரார் அதனைக் கொல்விக்கத் துணிகை யில், வேதமொழியார், அப்பெண், தம்மகனுக்கு மனைவியாவாள் என்று உணர்ந்து, அதனைக் கொல்லாமல் தடுத்து, ஒரு பேழையுள் வைத்துக் காவிரியில் விடுப்பித்தார்; அப்பொழுது தம் மகனை யழைத்து, அக்குழந்தையை உற்றுநோக்கிக் குறிக்கொளச் செய்தார்.

யாற்றில் விடுத்த அக்குழந்தையை அந்தணனொருவன் எடுத்து வளர்த்தான்; பின்னர், பேராளியார் தீர்த்தயாத்திரை

1. வள்ளிமலை என்று கந்தபுராணம் (வள்ளியம்மை திருமணம். 7) கூறும்.
2. ஔவையார் : பக்கம் 5-8 பார்க்க.

செல்கையில், அவருக்கு அவளை ஈந்தான். அவர் அவளை உற்றுநோக்கி, அவள், தம்மூரிற் பிறந்த இழிகுலத்தவளே எனக் கண்டு, அவளைவிட்டுப் பிரிந்து சென்றார். அவள் அவரைத் தொடர்ந்து சென்று வேண்டியும் அவர் உடன்பட்டிலர். அவளை வழியிற்கண்ட அந்தணனொருவன், தன்னில்லிற்குக் கொண்டு போய்க் காத்துவந்தான். அவன் இறக்குந்தறுவாயில் அவட்குத் தன் பொருளில் ஒருகூறு உதவினான். அவள் அதனைக்கொண்டு காசிக்கருகில் சத்திரமொன்று அமைத்து, அங்கு வருவோர்க்கு அன்னமிட்டு வந்தாள். வருவோர்பால் அவள், தன் குறைகளைச் சொல்லி அழுதல் வழக்கம். ஒருநாள், அவள் கணவனாகிய பேராளியார் அச்சத்திரத்தைச் சார, அவள் அவர்க்கும் அன்னமிட்டு, வழக்கம்போல், அவர்பால் தனது குறையைக் கூறி அழுதாள். அவளது நற்குணத்தையறிந்த அவர், உண்மையுரைத்து, அவளை உடன்கொண்டு தீர்த்தயாத்திரைக்குச் சென்றார். அவர்களுக்கு மக்கள் எழுவர் பிறந்தனர். அவர்களே அவ்வை முதலியோர் என்பதாம்.

## கபிலரைப் பற்றி வழங்கும் கதைகளின் ஆராய்ச்சி

இதுகாறும், கபிலரைக் குறித்து எழுதப்பட்டுள்ள கதைகளை நோக்கினோம்; இனி, அவற்றின் உண்மைகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்; ஹாலாஸ்யமாஹாத்ம்யம், திருவிளையாடற் புராணங்கள் ஆகிய இவற்றில் கபிலர் முதலிய புலவர்களைப் பற்றிக் கூறியிருப்பவற்றுட் காணும் மாறுபாடுகளைப் 'பரணர்' என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளேனாகலின், ஈண்டும் எழுதுதல் மிகையென்று கருதி அவற்றை விடுத்து, மற்றைய நூல்களின் செய்திகளையே ஈண்டைய ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்கின்றேன்.

## கபிலர் பிறந்த ஊர்

சோழமண்டல சதகத்தினால் கபிலர் பிறந்தவூர், இதுவெனத் தெரியவில்லையாயினும், அவர், சோழநாட்டில் பிறந்தவர்

என்பதும் மட்டும் தெளிவாகின்றது. கபிலரகவல் என்னும் நூலினால், [1]கபிலர் வளர்ந்தது திருவாரூரில் என்பது விளங்குகின்றது; திருவள்ளுவர் கதையினால் கபிலர் திருவாரூரில் பிறந்தவர் எனவே அறியப்படுகின்றது. ஆயின், திருவாலவாயுடையார் திருவிளையாடல்[2], கபிலர் பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில் பிறந்தவர் என்று கூறுகின்றது. இப்புராணங் கூறுமாறு கபிலர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்து வளர்ந்திருப்பாராயின், அக்காலத்தில் மதுரையில் அரசு செலுத்திய பாண்டிய மன்னர்களுள் ஒருவரையேனும் பாடியிருப்பார். அங்கனம் பாடியுள்ளார் என அறியப்படவில்லை. ஆயின், கலித்தொகையில் குறிஞ்சிக் கலியுட் பாண்டியனைக் குறித்தும் மதுரையைக் குறித்தும் பாடியுள்ளாரால் எனின், ஆண்டும் [3]ஒரு செய்யுளில் மட்டும் பாண்டியனைக் குறித்துப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளதே யன்றிப் பிறிதில்லை. இத்துணையானே கபிலர் பாண்டியனைப் பாடியுள்ளார் என்றும், அதனால் அவர் பாண்டி நாட்டிற் பிறந்தவராவர் என்றும் நிலைநாட்டுதல் அமையாது.

கபிலர் பிறந்த ஊரும் நாடும் இவையே எனத் துணிந்து கூறுதல் இயலாததாயினும், அவர் வேள்பாரியைச் சார்ந்து அவனுயிர்த் தோழனாய் அவனுடன் நெடுங்காலம் வாழ்ந்திருந்தனராகலானும், அவன் பாண்டி நாட்டினன் என்பது [4]பாண்டி மண்டல சதகத்தான் அறியப்படுதலானும் அவர் பாண்டி நாட்டில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார் என்றலில் ஐயம் இலது.

---

1. 'கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினில் அன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே'

என்னும் கபிலரகவலின் அடிகளுக்கு, இவர், கருவூரிற் பிறந்தவர் என்றும் பொருள் கூறலாம்.

2. 27:3
3. குறிஞ்சிக்கலி, 21
4. பாண்டிமண்டல சதகம், 63

### தாய் தந்தையர்

கபிலர், **ஆதி** என்பவளுக்கும் பகவன் என்பவருக்கும் பிறந்தவர் என்பது கதைகளால் அறியப்படுகின்றது. **கபிலரகவல்** என்னும் நூல், **ஆதி**யைக் கருவூரிலிருந்த புலைச்சி என்று கூறுகின்றது. **புலவர் புராணமோ,** பகவன் நான்முகன் அம்சம் என்றும், **ஆதி** கலைமகள் அம்சம் என்றும் கூறுவர் என்கின்றது. திருவள்ளுவர் கதையோ, அகஸ்தியரின் புதல்வராகிய பெருஞ் சாகரர் என்பவருக்கும் திருவாரூர்ப் புலைச்சிக்கும் பகவன் என்பவர் பிறந்தார் என்றும், தவமுனி என்பவருக்கும் அருண் மங்கை என்னும் பார்ப்பனமாதுக்கும் ஆதி என்பவள் பிறந்தாள் என்றும், அவள், இளமையில் உறையூர்ப் பெரும்பறையனாலும், பின்னர் நீதிஐயன் என்னும் பார்ப்பனனாலும் வளர்க்கப்பட்டாள் என்றும், ஆதி என்னும் பெயர் அவளுக்கு இயற்பெயர் அன்று என்றும் கூறுகின்றது. **பன்னிருபுலவர் சரித்திரம்,** கபிலர் பேராளி என்பவருக்கும், இழிகுலத்துப் பிறந்து அந்தணனால் வளர்க்கப் பட்ட மாதொருத்திக்கும் பிறந்தவர் என்கின்றது. **ஞானாமிர்தம்** என்னும் நூல், யாளி என்பவனுக்கும் ஆதப்புலைச்சிக்கும் [1]கபிலருள்ளிட்ட எழுவர் மக்கள் பிறந்தனர் என்கின்றது.

மேற்கூறியவாறு இக்கதைகளெல்லாம் ஒன்றற்கொன்று மாறுபாடாகக் கூறுகின்றனவாதலின், இவையனைத்தும் பிற்காலத்தில் தோன்றி விரிந்து பரவிய கற்பனைக் கதைகளே என்பது வெளிப்படை. குழவிகளெல்லாம் பிறந்தவுடனே செய்யுட் செய்யுந் திறனையடைந்திருந்தன என்பது உற்றுநோக்கற் பாலது. இனி, இவற்றை ஆதாரமாகக் கொண்டு, கபிலருக்குத் தாய் தந்தையர் ஆதியும் பகவனும் என்று கோடல் அமைவுடைய தாகாது. திருக்குறள் முதற்பாட்டில், 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் பகுதியிலுள்ள ஆதி, பகவன் என்னும் சொற்களைத் திருவள்ளுவரின் தாய் தந்தையருடைய பெயர்கள் எனக் கூறுந் திரிபுடைப்பொருளே, இக் கதைகளுக்கெல்லாம் மூலமாயிருக் கலாம் போலும். கபிலர் தம் தாய்தந்தையர் பெயரை உண்மையாக அறிய இயலவில்லை என்றலே அமைதி.

---

1. அவ்வெழுவரின் பெயர்களை அந்நூல் கூறவில்லையாயினும் அதன் உரையினால் அவ்வை முதலாய எழுவரே யென்பது விளங்குகின்றது.

## பிறப்பு

திருவாரூரில் ஒரு மடத்தில், ஆதி என்பவளும் பகவன் என்பவனும் கூடியிருக்க, அங்கே கபிலர் பிறந்தார் என்னும் கதையை மேலே குறித்துள்ளேன். கபிலர் பிறந்தவுடனே, அவரன்னை அவ்விடத்தினின்று நீங்கித் தன் கணவனைத் தொடர்ந்து செல்லவேண்டியிருந்ததனால், குழந்தையைத் தனியே விட்டு அகல்வதற்கு மனந் துணியாமல் வருந்தினாளாக, அப்பொழுது குழந்தை அன்னையை நோக்கி, [1]'கண் ணுழையா........... தான்' என்னும் வெண்பாவினைப் பாடித் தேற்றியது என்பது, தனிப்பாடற்றிரட்டினாலும் திருவள்ளுவர் கதையினாலும் அறியப்படுகின்றது. ஆயின், தமிழ் நாவலர் சரிதையால், கபிலர் பிறந்தபோது பாடியது [2]'நெட்டிலை யிருப்பை' என்னும் பாட்டு எனத் தெரிகின்றது.

குழந்தையின் பிரிவை நினைத்து வருந்திய தாய்க்குத் தேறுதல் உண்டாகுமாறு, 'கண்ணுழையா' என்னும் பாட்டை அக்குழந்தை பாடியது என்று கூறுங் கதைகளில், அப்பாட்டின் பொருள் அவ்விடத்திற்கு அமைவுடையதாகும். தமிழ் நாவலர் சரிதை கூறுமாறு, கபிலர் பிறந்தபோது, 'நெட்டிலையிருப்பை' என்னும் பாட்டு பாடியது யாதுபற்றியோ? 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்' என்னும் பழமொழி, 'கண் ணுழையா' என்னும் பாட்டின் திறத்தில் அமைவுறுகின்றது; தமிழ் நாவலர் சரிதையின் கூற்றில் அதுதானும் இல்லை. இதுபற்றிப் போலும், 'கபிலர்' என்னும் நூலின் ஆசிரியர் பண்டிதர், ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இதனை வேறொரு வகையில் அமைத்துள்ளனர். அது வருமாறு:

'ஒருநாள் நண்பகலில், அவர் (கபிலர்), தமக்குத் தமிழறிவுறுத்திய ஆசிரியருடன் ஓர் இருப்பைத் தோப்பை யடைந்தபொழுது, ஆசிரியர், அங்கே பூத்திருந்த இருப்பையின்

1. இதனை இப்புத்தகம் 5-ஆம் பக்கத்தில் காண்க.
2. இதனை இப்புத்தகம் 4-ஆம் பக்கத்தில் காண்க.

நாண்மலலரையும், உதிர்ந்து கிடந்த பழம்பூவையும் காட்டி, ''இவற்றுக்குப் பொருந்திய உவமை கூறிச் செய்யுளொன்றி யற்றுக'' எனப் பணித்தனர்; பணிக்கவே, கபிலர், சிறிதுந் தாழ்க்காது, ''நீண்ட இலைகளையுடைய இருப்பையின் வட்ட மாகிய ஒள்ளியபூ வாடாதிருப்பின், பெருமையுடைய பெண் யானையின் கோட்டினை நிகர்க்கும்; வாடினாலோ கரிய தலையையுடைய வலைஞரது மனைமுன்றில்தொறும் உணங்குஞ் சிவந்த தலையையுடைய இறால் மீனை நிகர்க்கும்'' என்ற பொருளமைத்துப் பாடினர். அதனைக் கேட்ட ஆசிரியர், தன்மை, உவமை, முரண் என்னும் அணிகள் புலப்பட விரைவிற் பாட்டியற்றிய அவரது ஆற்றலுக்கு மகிழ்பூத்து உள்ளத்தாராய்ப் பின்னும் அவரை நோக்கி, [1]என்புது.

இதில், கபிலர், தம் ஆசிரியர் சுட்டிக்காட்டிய இருப்பைப் பூக்களைக் குறித்து, 'நெட்டிலை யிருப்பை' என்னும் பாட்டைப் பாடினார் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரம் இஃது என்று குறிக்கப்படவில்லை. ஆதலின், 'கபிலர்' என்னும் நூலின் ஆசிரியர் 'நெட்டிலை' என்னும் பாட்டைக் குறித்துப் புதிதாக அமைத்த கதையும் உண்மையாதல் அரிது.

இதுகாறுங் கூறியவற்றால், 'நெட்டிலை' என்னும் பாட்டு, கபிலர் பாடியதே எனத் துணிதல் அமையாது என்பதும், கபிலர் பிறப்பினைக் குறித்து வழங்கும் கதைகளெல்லாம் ஆதாரமில்லாத கற்பனைக் கதைகளே என்பதும் தெளிவாகும்.

★★★

---

1. நா. கபிலர், பக்கம்: 31, 32.

# II

# கபிலர் வரலாறு

கபிலர், பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தவர் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடலிற் கூறப்பட்டுள்ளதாயினும், அதனை வலியுறுத்துதற்குப் போதிய சான்றுகளின்மையை மேலே கூறியுள்ளேன்;[1] அவருடைய தந்தைதாயர் பெயர்களும் கதைகள் கூறுமாறு, பகவன், ஆதி என்பன அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளேன். ஆதலின், அவர் பிறந்து வளர்ந்த ஊரின் பெயரும், அவரைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரின் பெயரும் இவை என உறுதியாக அறுதியிட முடியவில்லை என்பதே உறுதியுடைத்து.

## குலம்

கபிலர் அந்தணர் குலத்திற் பிறந்தவர். இதனை,

[2] 'புலனழுக் கற்ற அந்த ணாளன்'

என்று, மாறேக்கத்து நப்பசலையார் கூறியிருப்பதனால் அறியலாகும். அன்றியும்,

[3] 'யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்'

என்றும்,

[4] 'அந்தணன் புலவன் கொண்டுவந் தனெனே'

1. பக்கம். 8 காண்க
2. புறம். 126
3. புறம். 200
4. புறம். 201

என்றும், கபிலரே தம்மைக் குறித்துக் கூறியிருப்பவை தக்க சான்றாகும்.

இவர் ஆரியப்பார்ப்பனர்[1] என்னும் கூற்றுக்குத் தக்க சான்றுகள் இல்லை.

**சமயம்**

'பொய்யடிமை யில்லாத புலவர்'[2] என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறியது, சங்கப் புலவரைக் குறிப்பதெனக் கருதி நம்பியாண்டார் நம்பி,

'தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே''
(திருவந்தாதி. 49)

என்று பாடியுள்ளார். இதனால், கபிலர் முதலிய புலவர், சிவபெருமானை வழிபட்டவராக அறியப்படுதலின், கபிலர் சைவசமயத்தைச் சார்ந்தவர் என்று ஒருசாரார் கூறுகின்றனர். மேற்காட்டிய பாட்டிற் கூறப்பட்டுள்ளவாறு, [3]சங்கப்புலவர்கள், சிவபெருமான்மேல் செய்யுட் செய்தனர் என்பது அறியப்பட வில்லை. மேலும், இறையனாரகப் பொருளுரையில், சங்கப் புலவர் செய்த நூல்களைப் பற்றிக் கூறுமிடத்து, புலவர்கள் சிவபெருமான்மேல் செய்யுட் செய்துள்ளனர் எனக் கூறப்பட வில்லை. இனி, சங்கப் புலவர்கள் பாடிய பிறபாட்டுக்களெல்லாம் இறவாமலிருத்தலின், அவர்கள் சிவபெருமான் மீது பாடிய

1. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும். காலம்: பக்கம், 329
2. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம். 39:7
3. பதினொன்றாந் திருமுறையில் உள்ள சில நூல்களின் ஆசிரியர்களாகக் காணும் கபிலதேவ நாயனார் என்பவர் நம் கபிலரல்லர் என்பது முன்னர்க் கூறப்படும்.

பாட்டுக்கள் இறந்துபோயின என்றலும் அமையாது. 'அற்றன்று; ''அரன் சேவடிக்கே, பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்கள்'' என்றதனால், சங்க நூல்களில் காணப்படுகின்ற அகப்பொருட் பாட்டுக்களே ஈண்டுக் குறிக்கப்பட்டனவாம்' எனின், அப்பாட்டுக்களில், பாட்டுடைத் தலைவனாகச் சிவபெருமானை யாண்டுங் குறித்திலாமையானும், பல பாட்டுக் களில் அரசர்கள், வள்ளல்கள், தலைவர்கள், மறவர்கள் ஆகியோர்களின் செய்திகளையே குறித்துப் பாராட்டியிருப்ப தனானும் பிறவாற்றானும் அங்கனம் கோடல் அமையாத தாகும். அன்றியும், நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதியை மேற்கொண்டு பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் இத்திறத்தில் நம்பியின் கூற்றை மேற்கொண்டிலர். இனி, சங்க காலத்திலும், அதனையடுத்த காலத்திலும் இந்நாட்டில், ஜைன மதம், புத்த மதம், வைதிக மதம் அல்லது ஆரிய மதம் ஆகிய இவை பரவியிருந்தமை போல, சைவமும் வைஷ்ணவமும் பெரிதும் பரவியிருந்தன அல்ல. இவற்றால், கபிலர் வைதிக மதத்தைச் சார்ந்தவர் எனக் கருதலாகும். அவர், 'குவியிணர்ப் புல்லிலை யெருக்க மாயினும் உடையவை, கடவுள் பேணேம் என்னா' என்று பாடியிருப்பது கடவுளின் அருட்டிறனை வெளியிடுவதாகும். அதுகொண்டு, அவரைச் சைவ சமயத்தவர் என்று துணிதலாகாமை அறிக. பண்டைப் புலவர்களுள் பலருடைய கொள்கையும் வைதிக சமயக் கொள்கையேயாகும்.

## வாழ்க்கை

கபிலருடைய இளமைப்பருவமும், அவர் கல்விகற்ற முறையும், இல்வாழ்க்கையும் பிறவும் சிறிதும் அறிதற்கு இடமில்லை. அவர், முதலில் எவரைச் சார்ந்து வாழ்ந்தனரோ, எத்தனை ஆண்டு உயிர் வாழ்ந்திருந்தனரோ, இவையும் உறுதியாகக் கூறுதற்கு உற்ற சான்று இல்லை. ஆயினும், அவர் இயற்றியுள்ள பாட்டுக்களைத் துணையாகக் கொண்டு அவற்றால் அறியப்படும் வரலாறுகளை இங்கே ஆராய்வாம்:

கபிலர், காரி பேகன் பாரி என்னும் வள்ளல்களையும், சேரமான் செல்வக்கடுங்கோ என்னும் வேந்தனையும் பாடி, நன்மதிப்பு அடைந்து வாழ்ந்தவர். இவர், முதன்முதலில் யாவரைப் பாடினரோ, அது தெரியவில்லை. வேள்பாரியைச் சார்ந்தபின், அவன் வாழ்ந்திருந்த காலம் முழுவதும் அவனோடே வதிந்து, அவனுக்கு நேர்ந்த இன்பதுன்பங்களையும் உடனிருந்து துய்த்துவந்தனராகலின், அக்காலத்தில் அவர், காரியினிடமோ அன்றி, பேகனிடமோ சென்றிருக்க இயலாது. பாரி இறந்த பின்னர், அவன் புதல்வியர் பொருட்டு விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகிய இருவரிடம் போய் வேண்டியும் எண்ணியது முடியாமை யின், அவர்களைப் பார்ப்பார்ப்படுத்தினார். அதன்பின், சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனை அடைந்து அங்கேயே வாழ்ந் திருந்தார். ஆதலின், அக்காலங்களிலும் அவர் காரி முதலி யோரிடம் போதற்கு இடமில்லை. அங்கனம் போயிருப்பின், வேள்பாரியாலும், செல்வக்கடுங்கோவினாலும் மதிக்கப் பெற்று, புலவர் பலராலும் பாராட்டப் பெற்ற கபிலர், காரி யினிடஞ் சென்றபோது, அவன், அவரது மேன்பாட்டிற்குத் தக்கவாறு மதித்திருப்பானன்றே? அவன், அவ்வாறு மதித்துப் பரிசில் நல்கிலன் என்பது கபிலர் பாட்டால்[1] அறியப்படுகின்றது. இவற்றால், கபிலர், வேள்பாரியைச் சார்வதன் முன்னரே, காரி, பேகன் என்னும் வள்ளியோர்பால் சென்றிருத்தல் வேண்டும் எனக் கருதலாகும்.

இனி, பாரியினிடத்தில் அமர்ந்து விளங்கிய புலவர், இடையிடையே, காரி, பேகன் முதலியோர்பாற் சென்று வந்திருத்தல் கூடும் என்றும் கொள்ளலாம். இவையெல்லாம் ஊகமாத்திரையவேயல்லாமல் துணியப்பட்டவையல்ல. ஆயினும், மேற்கூறியவற்றால், கபிலர், முதலில் காரியினிடஞ் சென்றனர் என்றும், பின்னர்ப் பேகன்பால் போயினர் என்றும், அதன்பின் ஆரியவரசனுக்குத் தமிழறிவுறுத்தினர் என்றும், பின்னர் வேள்பாரியைச் சார்ந்து வாழ்ந்திருந்தனர் என்றும், முடிவில் சேரமான் செல்வக்கடுங்கோவினைச் சார்ந்திருந்தனர் என்றும் அமைத்துக் கொள்ளுதல் அமைவுடையதாகலாம்.

---

1. புறம். 121

## கபிலரும் மலையமான் காரியும்

கபிலர், செய்யுட் செய்யுந் திறம் படைத்துத் திகழ்ந்த காலத்தில், **மலையமான் திருமுடிக்காரி** வண்மையும் மேன்மையும் உடையவனாய், வள்ளல் எனப் பெயர்பெற்று விளங்கினான். அவனது வலியும் புகழும் தமிழ்நாடு முழுதும் பரவலுற்றன. அவன் துணையை முடியுடை வேந்தரும் வேண்டி நின்றனர். அவன், வேள்வி புரியும் வேதியருக்கும், வறுமையின் வருந்தும் இரவலருக்கும் அவர் வேண்டும் பொருளை ஈந்துவந்தான். அவனைப் பாடிச் சென்ற பாவலர் பரிசில் பெறாது வறிதே மீண்டனரல்லர். அவனுடைய நற்குண நற்செயல்களைக் கேட்டறிந்த கபிலர், அவனைக் குறித்துச் [1]சில செய்யுட்களை இயற்றிக் கொண்டு அவன்பாற் சென்றார்; அவனது நாளோலக்கத்துட்புக்குத் தாம் இயற்றிய பாட்டுக்களைப் பாடினார். காரி, கபிலருடைய பாக்களின் பொருட்சிறப்பினையும், அவரது பெரும்புலமையையும் ஆராய்ந்தறியகில்லானாய், மற்றைப் புலவர்களுக்கு வழங்குமாறே அவருக்கும் பரிசில் வழங்கினான். தமது மேன்பாட்டை அறியானாய்ப் பரிசில் அளித்ததைக் கருதி உள்ளம் மாழ்கிய கபிலர், அவனை நோக்கி, 'வள்ளியோய், ஒருவர், தம்பால் வரும் புலவருக்குப் பரிசில் ஈந்து விடுத்தல் அருஞ்செயலன்று; புலவரது மேன்மையையும் வரிசையையும் அறிதலே அருஞ்செயலாகும். செய்யுட் செய்வோ ரனைவரும் ஒரே திறத்தினர் என்று எண்ணாதி. நீ இதனை உளங்கொண்டு, நின்பால் வரும் புலவர்களின் வரிசையை நன்கு ஆராய்ந்தறிந்து, அதற்கேற்ப அவர்களுக்குப் பரிசில் வழங்கு வாயாக' என்று அறிவுறுத்தினார்[2]. புலவர் அறிவுறுத்திய பொருண்மொழியைப் பொன்னேபோல் போற்றிக்கொண்ட மலையமான்காரி, அவரது மேன்மைக்குத தக்க பரிசில் ஈந்து விடுத்தான். காரியின் நற்குணங்களை உளங்கொண்ட கபிலர், [3]வேறு சில பாட்டுக்களிலும் அவனைக் குறித்துப் புகழ்வா ராயினார். இதனால், கபிலருடைய பெயரும் புகழும் பல விடங்களிலும் பரவின.

---

1. புறம். 122, 123, 124 ஆகிய மூன்று பாட்டுக்கள்.
2. புறம். 121
3. நற்றிணை 291, 320 முதலிய செய்யுட்களைப் பார்க்க.

## கபிலரும் பேகனும்

அக்காலத்தில், வையாவிக்கோப்பெரும்பேகன் என்பவன், பெருங்கொடையாளியாயும், பாவலர்பால் அன்பு மிக்கவனாயும் விளங்கினான். அவ்வனது வண்மையைக் கேட்டறிந்த கபிலர், தமது வறுமைப்பிணியைப் போக்கிச் சுற்றத்தவரை யோம்பி வாழ்தற் பொருட்டு, அவன்பாற் பரிசில் பெறக் கருதி, அவனூரை யடைந்து, அவனது கோயிலைக் குறுகினார். அங்கு நின்று, அவன் புகழைப் பாடிக்கொண்டிருக்கையில், அவன் மனைவி கண்ணகி என்பவள், அவன், தன்னைப் பிரிந்து உறைதலைப் பொருளாய்க் கண்ணீருகுத்துக் கவன்று கொண்டிருந்தாள். கண்ணகியின் துயர்க் காரணத்தை அறிந்த புலவர், உடனே, பேகன் இருக்குமிடத்தை அணுகி, அவனைக் கண்டு, அவன் மனைவிமாட்டு மன மிரங்கும்படி [1]ஒரு செய்யுளைப் பாடினார். கபிலரேயன்றிப் பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர் களும் அப்பொழுது கண்ணகியின் பொருட்டு அவ்வாறே பேகனை வேண்டிப் பாடினர். பின்னர், கபிலர்பேகன்பால் பரிசில் பெற்று மீண்டு, தஞ்சுற்றத்தோடு இன்புற்று வாழ்ந்திருந்தார்.

## கபிலரும் ஆரியவரசன் பிரகத்தனும்

கபிலர், ஆரியவரசன் பிரகத்தனைச் சார்ந்து அவனுக்குத் தமிழறிவுறுத்தார் எனவும், அதன் பொருட்டு அவரியற்றிய பாட்டே குறிஞ்சிப்பாட்டு எனவும் தெரிகின்றது. அவர், வேள்பாரியைச்சார்ந்த பின்னர் வேறு இடங்களுக்குச் சென்றிருக்க ஏது யாதும் இல்லையென்றும், ஆரிய அரசன்பாற் சென்றது, அப்பாரியைச் சார்வதன் முன்னரே யாகல் வேண்டும் என்றும் மேலே கூறியுள்ளேன். ஆகலின், கபிலர் ஆரியவரசன்பாற் சென்றது இவ்விடைப்பட்ட காலமாக இருத்தல் கூடும். அவ்வாரி யவரசன் பெயர் மட்டும் தெரிகின்றதேயன்றி, அவனிருந்த

1. புறம். 143.

ஊரும், அவனாண்ட நாடும் பிறவும் தெரியவில்லை.[1] அவன், கபிலருடைய புலமையும் கவிபாடும் திறமையும் பிறவும் அறிந்து, அவரைத் தன்பால் அழைத்திருக்கலாம்போலும்.

கபிலர், ஆரியவரசனுக்குக் குறிஞ்சிப் பாட்டினால் அறிவித்தது தமிழின் எழுத்திலக்கணமும் அன்று; சொல்லிலக் கணமும் அன்று. பின்னை, யாதோ எனின், பொருளிலக் கணமேயாகும். அதனுள்ளும், பொதுவாகப் பண்டைத் தமிழ ருடைய மணமுறையும், சிறப்பாகத் தமிழக மகளிரின் கற்பின் மேன்பாடுமேயாகும். இவற்றைப் பழைய செய்யுட்களால் அறிவித்தலாகாதோ எனின், அங்கனம் அறிவித்தல் கூடுமாயி னும், அவை பல துறைகளாக இருத்தலின், அவற்றை அறிவித் தற்குப் பல பாட்டுக்கள் வேண்டும். அன்றியும், பிறர் பாடிய பாட்டுக்களாலன்றித் தாமே புதிதாகப் பாடிய பாட்டினால் அறிவிப்பின், அது, தமது தேர்ச்சியினையும் செய்யுள் திறத் தினையும் காட்ட ஏதுவாகும் என்று கருதி, கபிலர் குறிஞ்சிப் பாட்டை இயற்றியிருத்தல் கூடும்.

குறிஞ்சிப்பாட்டு 'அறத்தொடு நிற்றல்' என்னும் ஒருதுறைப்படுமாயினும், பல துறைப்பொருள்கள் அமைந்து ஒரு தொடர்புபட விளங்குதல் காண்க. இக்குறிஞ்சிப் பாட்டினால், கபிலர், ஆரியவரசனுக்கு அறிவித்தது சிறப்பாகத் தமிழக மகளிரின் கற்பின் மேன்பாடேயாதல் மேலே கூறப்பட்டது. இதுவேயன்றிக் கபிலர், அவ்வரசனுக்குத் தமிழ் மொழியின் இலக்கணங்களை அறிவித்த செய்தி அறியப்படாமையின், அவனுக்கு, அவர் தமிழிலக்கணங்களெல்லாம் அறிவித்தார் என்று, 'கபிலர்' என்னும் நூலில் பலபட எழுதியிருப்பது அணிந்துரையே ஆகும். நிற்க.

## கபிலரும் வேள்பாரியும்

பறம்பு நாட்டில் வாழ்ந்துவந்த வேள்பாரியின் அன்பும் அருளும், வண்மையும், திண்மையும் அறிவும் செறிவும், பிறவும்

---

1. இவன், செழியர்பெருமகனால் சிறைக்கோட்பட்டவன் (நா. கபிலர். பக்கம். 35) என்பதற்குச் சான்று யாதுமில்லை

கேட்டறிந்த கபிலர், அவன்பாற் செல்லக் கருதி, அவனைக் குறித்துச் சில செய்யுட்களை இயற்றிக் கொண்டு சென்று, அவனைக் கண்டார்; கண்டதும், அவற்றுள் [1]ஆற்றுப்படைச் செய்யுள் ஒன்றனைப் பாடினார்; பின்னர், மாரியன்ன அவனது வண்மையையும், பயன் நோக்காது ஈயும் தன்மையையும் புகழ்ந்து செஞ்சொற்பாக்கள் [2]சில செப்பினார். புலவர் பாடிய பாட்டுக்களின் பொருட்பொலிவினை ஆராய்ந்துணர்ந்த பாரி, அவருடைய புலமையையும், செய்யுட்டிறனையும் வியந்து, அவரைத் தன்னோ டுடனிருந்து வாழுமாறு வேண்டிக்கொண்டான். புலவரும் அவன் பெருந்தகைமையை அறிந்து, அவனது அன்பினாற் பிணிப்புண்டு, அங்கேயே தங்கியிருந்தார்.

அவ்வாறாக, அவர்களுக்குள் நட்பு நந்திற்று. ஆதலின், ஒருவரையொருவர் நீங்காராய், ஒருமனப்பட்டு வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் பாரியின் பெரும்புகழை அறிந்து [3]அழுக்காறுற்ற

1. புறம். 105
2. புறம். 106, 107.
3. வேளிர் வரலாறு (முதற் பதிப்பு) பக்கம் 49; செந்தமிழ். 2:223. 'புறம். 109-111 ஆகிய பாட்டுக்கள் ''மகண் மறுத்தல்'' என்னும் துறையின் அமைந் திருத்தலான், வேந்தர், பாரியின் புதல்வியரை விரும்பி, அவன்பால் தூதுவிடுப்ப, அவன் உடன்படாமையின், அதுபற்றி அவர் அவனோடு பொருதனர் என்பது அறியப்படும்' எனின், அம்மூன்று பாட்டுக்களும் வேந்தரை நோக்கிக் கபிலர் கூறியனவேயாகலானும், அப்பாட்டுக்களில், 'நீவிர், பாரியை வென்று அவனது நாட்டைக் கைக்கொள்ளுதல் இயலாது; அவனைப் பாடிக்கொண்டு பரிசிலராய்ச் செல்வீராயின், அவனே ஈந்துவிடுவான்' என்று அவனது நாட்டைக் கைப்பற்றும் உபாயம் கூறுதல்போல அவனது பெருமை கூறப்பட்டுள்ளதேயன்றி, அவன் மகளிரைக் குறித்தாதல், வெண்பாமாலையில் 'மகண்மறுத்து மொழிதல்' என்னும் துறையின் இலக்கியத்தில் (நொச்சித். 9), மகளை வேண்டினோர் பொருதொழிந்த செய்தியைக் கூறியிருத்தல்போலாதல் ஒன்றுமே கூறப்படாமையானும், அது பொருந்தாது என்க. அன்றியும், வேந்தர், பாரியின் புதல்வியர் பொருட்டுப் பொருதனராயின், அவனைக் கொன்றபின், அம்மகளிரை மணஞ்செய்து கொள்ளாமல் மீள்தற்குக் காரணம் இல்லையே. இவற்றால் பாரியின் புகழை அறிந்து அழுக்காறுற்ற வேந்தர், அவனைக் கொல்லுதலே குறிக்கொண்டு பொருதனர் என்றும், தமது கருத்து முற்றுப்பெறவே நாட்டிற்கு மீண்டனர் என்றும்

(தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்)

தமிழ் வேந்தர் மூவரும், அவனை வெல்லக்கருதி, படைகளுடன் அவனது பறம்பு மலையை யண்மி, ஊரை முற்றுகை செய்தனர். அதனையறிந்த கபிலர், அவ்வேந்தர் முன்சென்று, [1]'வேந்தீர், நீயிர் மூவிரும் இவ்வூரை முற்றுகை செய்திடுவீராயினும் இதனை நீயிர் கைக்கொள்ளுதல் எளிதின் இயல்வதன்று. என்னெனின், இங்கே, வாழ்ந்திருப்பவருக்கு வேண்டும் உணவுப் பொருள்களெல்லாம் இயல்பாகவே விளைகின்றன; வெதிர் நெல்லும், பலாப்பழமும், கிழங்கும், தேனும் என்றும் மாறாமல் இம்மலையில் உண்டாகின்றன; தெண்ணீரருவியும், தண்ணீர்ச் சுனையும் சிறக்க அமைந்துள்ளன. ஆதலின், நீயிர் நும் நால்வகைப் படையுடன் தாக்கினும், இதனைக் கைப்பற்றுதல் இயலாது. அன்றியும், பாரி என்பவனோ போருக்கு அஞ்சாப் பொருநன். அவனை நீங்கள் வெல்லுதலும் ஒல்லாது. அவனை வெல்ல வேண்டுதிராயின், யான் சொல்லும் விரகினைக் கேண்மின். பாரி, தனது பறம்பு நாட்டு முன்னூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கிவிட்டான்; இப்பொழுது அவனுக்கு இக்குன்று ஒன்றே உளது. விறலியொருத்தி அவனைப் பாடிச் சென்று வேண்டுவளாயின், அவன் இக்குன்றினையும் இல்லை என்னாது அவளுக்கு ஈந்துவிடுவான். அன்றி, நும்முள் ஒருவர் சென்று அவனையே பரிசிலாக வேண்டினும், அவன் அப்பொழுதே அவர் குறித்த எல்லையில் நிற்பவனாய் உடன்படுவான். இவ்வாறன்றி, வேறுவகையால்

---

கொள்ளுதலே அமைதி. ஆயின், அப்பாட்டுக்களுக்கு 'மகண்மறுத்தல்' என்று துறை குறிக்கப்பட்டுள்ளதே எனின், அத்துறை தொல்காப்பியத்தில் இன்மையானும் புறப்பொருட் பாட்டுக்களைத் தொகுத்த புலவரோ பிறரெவரோ அவற்றிற்குத் துறை எழுதியுள்ளாராகலானும் அத்துறை அச்செய்யுட்களுக்குப் பொருந்துதல் இன்று என்க. அன்றியும் 'தத்தம் புது நூல்வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்றுணர்க' (தொல். புறத்: சூ. 35. உரை) என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலும், புறம். 109-ஆம் பாட்டை 'அகத்தோன் செல்வம்' என்னும் துறைக்கு இலக்கியமாக இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் காட்டியிருத்தலும் (தொல். புறத். கொள்ளார் தேஎம்') அறிக.

1. *புறம். 108-111*

அவனை வெல்லுதல் இயலாது என்று, பாரியின் வண்மையும் தன்மையும் அவர் மனத்தில் நன்கு பதியுமாறு, பரிந்து பாடினார்.

கபிலர் கூறிய பொருண்மொழிகளை ஆராய்ந்தறியகில்லாத வேந்தர், ஒழியாராய், பின்னும் பொருதலையே மேற்கொண்டு, முற்றுகை செய்தவாறே, சில நாள் தங்கியிருந்தனர். பாரியின் அகநாடு, வாழ்வோர்க்கு வேண்டும் பொருள்களைக் குறைவின்றிக் கொடுப்பதாயிருந்ததாகலின், குடிகட்கும் படைகட்கும் உணவுப் பொருளால் குறை நேர்ந்திலது. அங்கனமாக, கபிலரும் அந்நாட்டில் வாழ்வோர்க்குப் பசிப்பிணியணுகலாகாதவாறு சூழ்ச்சி செய்து, கிளிகளை வளர்த்து, செய்நிலத்திலுள்ள நெற்கதிர்களைக் கொணர்வித்து, அவர்களுக்கு உணவளித்து வந்தனர் என்பது, [1]நற்கீரனாரும் [2]அவ்வையாரும் செய்துள்ள செய்யுட்களால் அறியப்படுகின்றது. இதனால், பாரியின் பறம்பி லிருந்தவர்களுக்கு உணவுப்பொருள் குறைவின்றிக் கிடைத்து வந்தது என்று கொள்ளுதல் கூடும்.

மூவேந்தரும், பன்னெடுநாள் முற்றுகை செய்திருத்தலைப் பொறாத பாரி, தன் மறவருடன் சென்று பொருது, வேந்தர்களை [3]யோட்டி, வெற்றி பெற்றான். பாரியோடு பொருது தோற்றோடிய வேந்தர், அவனை [4]வஞ்சனையாற் கொல்ல வெண்ணிச் சூழ்ச்சி செய்தனர். அன்னார், கபிலர் கூறியவற்றின் உட்பொருளை அறியாராய், அவர் கூறியாங்கு இரவலரே போல் புக்கு, பாரியை யிரந்து பெற்றுக் கொலைபுரிந்தனர் போலும். நம் புலவர் பெருந்தகையார், தம் நண்பனாகிய பாரியோடு தாமும் உயிர் துறந்து உடன்செல்லத் துணிந்தார். அதனையறிந்த பாரி, அவரை நோக்கி, [5]'தாம் இப்பொழுது உயிர்நீத்தல் தகாது' என்று,

1. அகம். 78
2. அகம். 303
3. அகம். 78
4. புறம். 112-ஆம் பாட்டின் உரை
5. புறம். 236. தன்னோடு உயிர் நீக்கத் துணிந்த கபிலரைப் பாரி தடுத்தது, அவர் தமது பெரும்புலமையினால் தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும்பயன் விளைப்பவராதல் எண்ணியும், அவரால், தன் புதல்வி யர்கட்கு மணஞ் செய்வித்தல் கருதியும் போலும்.

பணிமொழி கூறித் தடுத்தான். நண்பனது அம்மொழிக்கு இணங்கியும், அவன் புதல்வியரின் சார்பிலாத் தனிமையைக் கருதியும், கபிலர் உயிர் துறவாதிருக்க உடன்பட்டார்.

ஆயினும், கபிலர் உள்ளங்கவன்று, 'வள்ளியோய், நீயும் யானும் கூடியிருந்த நட்பிற்குப் பொருந்த ஒழுகிலையாகலின் இதன் முன்னரும் நீ என்னை வெறுத்தனையாவை; நினக்கு யான் பொருந்தினேனன்மையின், யான் நின்னோடு உடன்வர எண்ணியதைத் தடுத்து, வேறுபட்ட தன்மையை ஆயினை. ஆயினும், இப்பிறப்பில் நாம் இருவருங்கூடி வாழ்ந்திருந்தது போலவே, இனிவரும் பிறப்பிலும் யான் நின்னோடு கூடி வாழுமாறு ஆகூழ் கூட்டுவதாக'[1] என்று ஒரு செய்யுட் கூறிப் பெரிதும் இரங்கினர்.

மாரியனைய பாரி வானுலகினை யடையவே, பாணர் பரிந்தனர்; வயிரியர் வருந்தினர்; இரவலர் ஏங்கினர்; கபிலர் அளவிடற்கரிய விழுமம் எய்தினர். அவர், 'பாரியின்றிப் பாழ்பட்ட பறம்புமலையில் இனி நாம் தங்கியிருத்தல் தகாது' என்று உளங்கொண்டு, அதனை விட்டு அகன்று செல்ல எண்ணினர். எண்ணினவர், பாரியின் புதல்வியரையும் தம்முடன் அழைத்துப் போக உறுதிசெய்து, அதனை அவர்களுக்கு அறிவித்து, அவர்களையும் உடன் கொண்டு செல்வாராயினர். வெண்ணில வெறிக்குந் தண்ணிய இரவில் கபிலருடன் செல்லும் பாரிமகளிர், தம் தந்தையை வேந்தர் வஞ்சித்துக் கொன்றதையும், தாமும் தமது மலையின் நீங்கிச் செல்வதையும் குறித்து இரங்கிப் பாடினர்.[2]

கபிலரும், பாரிமகளிரின் செல்வ நிலைமையையும், அன்னார் தமது மலைமேலேறி, தம் தந்தையோடு பொருதற்கு ஆராயாது வந்த அரசர்களின் குதிரைகளை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருந்ததையும், பின்னர், சிறு குடில்களின் முன்றில் களிலுள்ள குப்பைமேடுகளின் மேல் ஏறி நின்று, மலை நிலங் களுக்கு வரும் உப்பு வண்டிகளை எண்ணிக் கணக்கிடுமாறு நேர்ந்ததையும் நினைத்துத் துயர்கூர்ந்து அலமந்தனர்.[3]

---

1. புறம். 236
2. புறம் 112
3. புறம் 116

பின்னரும் கபிலர் உளங்கவன்று கண்ணீருகுத்து, 'புகழ் பெற்ற பறம்பே, நின்பால் வந்தோர்க்கு விருப்பம் மிக்க பல்சுவை யடிசிலை நல்கி வந்த நின்னைப் பிரிந்து, பாரி மகளிர்க்கு உரிய கணவரை நாடி, யான் அவருடன் செல்கின்றேன்'[1] என்றும், 'இக்குன்று, சேய்நிலத்தாருக்கும் (புகழால்) பெரிதும் விளங் கிற்று'[2] என்றும், பலவாறு இரங்கிக்கூறி, அம்மலையின் பல வளங்களையும் நினைந்து நினைந்து இனைந்துருகினர்.

இவ்வாறு பறம்பு மலையை நோக்கிக் கையறுநிலை பாடிக்கொண்டே பாரிமகளிரொடு அதனைக் கடந்து செல்லும் புலவர், அந்நாட்டை நோக்கியும் பலவாறு இரங்கிப் பாடுவா ராயினர்.

'வள்ளலாகிய பாரி நெறிதவறாது முறை செய்ததனால், இந்நாடு, மழை பெய்யலாகாதவண்ணங் கோள்நிலை மாறிய காலத்தும் மழைவளங் குறையாமையின், யாண்டும் நிலவளம் மிக்கிருந்தது; தினையும் வரகும் அவரையும் செழித்துப் பயன் தந்தன. குடிகள் வருந்தியுழைக்காமலே பொருந்திய உணவைப் பெற்று இன்புற்று வாழ்ந்திருந்தனர்; சான்றோர் பல்கியிருந்தனர்'[3] 'இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நாடு, இனி விளைவு குன்றிக் கெடுவதாயிற்றே!'[4] 'இனிய தெண்ணீரையுடைய குளமும் உடைந்து கெடும்போலும்!'[5] என்று இரங்கிக் கூறி, வெய்துயிர்த்து நடந்து சென்றனர்.

## கபிலரும் விச்சிக்கோனும்

பாரியின் பறம்பு மலையையும், அவன் நாட்டையும் நோக்கி நினைந்து நினைந்து நெஞ்சுலர்ந்து சென்ற கபிலர், பாரி மகளிரை

---

1. புறம். 113
2. புறம். 114
3. புறம். 117
4. புறம். 119
5. புறம். 118

உடன் கொண்டு, விச்சிக்கோனை[1] அடைந்தனர். அடைந்தவர், அவனை நோக்கி, [2]'வெற்றி மிக்க வேந்தே, யான் கூறுவதைக் கேட்பாயாக. யானோ பரிசிலனேன்; அன்றியும் அந்தணனேன்; ஆதலின் எனது குறையைத் தீர்ப்பது உனது கடனாகும். நல்லியல் வாய்ந்த இம்மெல்லியலார், சிறிய முல்லைக்குப் பெரிய தேரினை நல்கிய பாரி என்னும் பெருவள்ளலின் புதல்வியர். இவர்களை யான் தரப் பெற்று, நீ மணந்து கொண்டு வாழ்வாயாக' என்று வேண்டினர். அவன், வேந்தருக்குப் பகைவனாயிருந்த பாரி யினுடைய புதல்வியரை மணந்துகொண்டால், அவ்வேந்தரின் பகை நேரும் என்று அஞ்சியோ, அம்மகளிரது இழிநிலைமை யைக் கருதியோ அவர் வேண்டுகோளுக்கு உடன்படானாயினான்.

## கபிலரும் இருங்கோ வேளும்

அதன்பின் கபிலர், அங்குநின்றும் நீங்கி, அம்மகளிருடன், இருங்கோவேள் என்னும் அரசனை அடைந்தார். அடைந்தவர், அவனை நோக்கி, [3]'முனிவனது ஓமகுண்டத்தில் பிறந்து, நாற்பத்தொன்பது வழிமுறையில் வந்த வேளிருள்ளும் சிறந்தோய், **புலிகடிமால்** என்னும் பெயருடையோய், பாணரைப் புரக்கும் பண்புடையோய், இங்கே வந்துள்ள இம்மெல்லியலார், முல்லைக் கொடிக்குத் தேரளித்தவனும், தன் நாட்டின் முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கியவனுமாகிய பாரிக்கு மகளிர். யானோ அந்தணனேன்; அன்றியும் புலவனேன். யான், அவ்வள்ளலுக்கு நண்பினோனாகலின், இம்மகளிர் எனக்கும் புதல்வியராவர். யான், இவர்களைத் தரப்பெற்று நீ மணஞ்செய்து வாழ்தி' என்று வேண்டினார். அவனும் உடன்படானாகவே, கபிலருக்கு உள்ளம் கனன்றது. அவர், அவனை நோக்கி, [4]'அண்ணலே, யான் அறியாமையினால், ''இவர்கள் பாரிமகளிர்''

1. இவன் நாடு இஃது எனத் தெரியவில்லை.
2. புறம். 200
3. புறம். 201
4. புறம். 202

என்று கூறிய புன்சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதி; சினம் கொள்ளாதி. நுங்கட்கு மிக்க பொருள் தந்த அரையத்தினது கேட்டை அறிதியோ? அதற்குற்ற காரணத்தைக் கேட்டி: நுமது குடியிற் பிறந்தவனும் அறிவில் நின்னை ஒத்தவனுமாகிய ஒருவன், பெரும்புலவராகிய கழாத்தலையாரை இகழ்ந்ததுவேயாகும். ஆயினும், நினக்குக் கேடு வாராதாகுக; வெற்றியுண்டாவதாகுக. யான் விடைபெற்றுச் செல்கின்றேன்' என்று குறிப்பு மொழியாற் கூறி, அவ்விடம் விட்டு அகன்றார்.

அகன்றவர், தம் நண்பர் மகளிருக்கு மணஞ் செய்விக்க இயலாமையைக் கருதிப் பெரிதும் கவன்றார். கவன்றும் ஏன்? உருவும் திருவும் அறிவும் நிறைவும் குலமும் நலமும் ஒப்புமையில்லாதவர்க்கு மகளிரை மணம்புரிவித்தல் தகாதாகலின், அம்மகளிரை மன்னரொழிந்த ஏனையோர்க்குக் கொடுக்க அவர் எண்ணிலர்; அதனால், அவரை [1]பார்ப்பார்ப்படுத்தி, அவர்பால் விடைபெற்றுத் திரும்பினார்.

---

1. 'பார்ப்பார்ப்படுத்தி' என்பதற்கு, 'பார்ப்பார்க்கு வாழ்க்கைப்படுத்தி' என்று பொருள் கூறுவர் ஒரு சாரார்; 'பார்ப்பாரிடத்தில் அடைக்கலமாக விட்டுவைத்து' என்று பொருள் கூறுவர் மற்றொரு சாரார்.

பாரி மகளிரின் மணநிகழ்ச்சியைக் குறித்துக் கருத்து வேறுபாடு பல காண்கின்றன:

1. 'பாரியின் நண்பராகிய கபிலர், அவன் மகளிரை........பார்ப்பாருக்கு மணம் புரிவித்தனர்' என்று தமிழ் நாவலர் சரிதையின் முகவுரை (பக்கம். VII) கூறுகின்றது.

2. 'பின்னர், புலவர் (கபிலர்)....... பார்ப்பார் சிலருக்குப் பாரிமகளிரை மணஞ்செய்வித்து...............' என்று தமிழ் இலக்கிய வரலாறு (பக். 158) கூறுகின்றது.

3. கபிலர், பாரியின் அடைக்கலப் பெண்ணை, மலையர்க் குதவினர் என்று கி.பி. 1012-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட திருக்கோவலூர்ச் சாசனம் கூறுகின்றது.

4. காரியின் வழியில் வந்தவர்க்குப் பாரிமகளிரைக் கபிலர் மணஞ்செய்வித்தார் என்று கபிலர் என்னும் நூல் (பக். 55) கூறுகின்றது.

5. பாரிமகளிர் அங்கவை சங்கவை என்பாரிருவர் என்றும், அவ்விருவரையும் மலையமான் தெய்விகனுக்கு அவ்வையார் மணம்புரிவித்தார்என்றும் தமிழ் நாவலர் சரிதை (பக்கம் 20, 21) தெரிவிக்கின்றது. இதனையே செந்தமிழ்ப் பத்திராதிபரும் மேற்கொண்டு கூறியுள்ளார். (செந்தமிழ். 2: பக்கம். 226)

## கபிலரும் கடுங்கோவாழியாதனும்

பெருவள்ளலாகிய வேள்பாரியுடன் நட்புக்கொண்டு, அவனோடு இன்புற்று வாழ்ந்துவந்த கபிலர், அவன் துஞ்சியபின்,

---

6. அங்கவை சங்கவை என்பார் சிங்களநாட்டு மன்னர் பாரிசாலனுக்குப் புதல்வியர் என்றும், அவர்களை அவ்வையார் வளர்த்துத் தெய்விகனுக்கு மணம்புரிவித்தார் என்றும் அண்ணாமலைச் சதகம் (22) கூறுகின்றது.

7. பாரிமகளிருள் ஒருத்தியை மலையனுக்குக் கபிலர் மணஞ் செய்வித்தார் என்றும், மற்றொருத்தியைத் தெய்விகனுக்கு அவ்வையார் மணம் புரிவித்தார் என்றும் வேளிர் வரலாறு (பக்கம். 61) கூறுகின்றது.

8. மஹாமஹோபாத்யாய, டாக்டர் வே. சாமிநாதையரவர்கள், 'அம்மகளிரைப் பார்ப்பார்க்கு வாழ்க்கைப்படுத்திவிட்டு வந்து தம்முடைய நட்புக்கடனைக் கழித்தனர்' என்று புறநானூற்றின் இரண்டாம் பதிப்பிலும், 'பின்னர், அம்மகளிரை மீண்டும் அந்தணரிடத்தே விட்டுவிட்டு பாரியினது பிரிவை ஆற்றவொண்ணாமல் வடக்கிருந்தனர் என்று பத்துப்பாட்டின் மூன்றாம் பதிப்பிலும் எழுதியுள்ளார்கள்.

இவ்வெல்லாவற்றையும் நோக்கின் உண்மை இஃது எனத் துணியுமாறில்லை. உண்மையறிதல் அரிதாயினும் பொருந்துவது யாது என நோக்குதும்:

கபிலர், பாரி மகளிரைப் பார்ப்பார்ப்படுத்தினர் என்பது மட்டுமே புறநானூற்றில் காண்கின்றது. அம்மகளிர் பெயர் சங்க நூல்களால் அறியப்படுதல் இல்லை. பாரி மகளிரின் மணநிகழ்ச்சியைக் குறித்து அவ்வையார் பாடியனவாகத் தமிழ் நாவலர் சரிதையிற் காணும் செய்யுட்களெல்லாம் பிற்காலத்தனவாகத் தோன்றுதலின், அவை கொள்ளத்தக்கனவாகா. வேளிர் வரலாறு கூறுமாறு, பாரி மகளிருவருள் ஒருத்தியை மட்டும் மலையனுக்கு கபிலர் மணஞ் செய்வித்தார் என்றும், மற்றொருத்தியைப் பார்ப்பார்பால் விட்டிருந்தார் என்றுங் கொள்ளுதல் அமைவுடையதாகத் தோன்றவில்லை. கபிலர், பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுத்தினார் என்றல்லாதே, பாரிமகளிருள் ஒருத்தியைப் பார்ப்பார்ப்படுத்தினர் என்று புறநானூற்றுக் குறிப்பில் காணவில்லையன்றே! அன்றியும், மறுபிறப்பிலும் தம் நண்பனோடு உடன்வாழ நினைந்த பெருந்தகையாகிய கபிலர், அந் நண்பன் புதல்வியை - பற்றுக்கோடில்லாதவளை- வதுவைப் பருவம் அடைந்தவளை - பிறர்பால் விட்டுவைத்துத் தம் நட்புக்கடனைக் கழித்ததாகக் கொள்ளார். ஆகலின், அவரே அவ்விரு மகளிரையும் வதுவை செய்து கொடுத்தனராதல் வேண்டும். அவ்வாறு கோடலே அவரது நட்பின் திறத்திற்கும் அற்பின் சிறப்பிற்கும் அமைவுடையதாகும். ஆயின் சாசனத்தில், 'பெண்ணை மலையர்க் குதவி' என்று ஒருமையாகக் கூறியிருத்தலின், ஒருத்தியையே மலையனுக்கு உதவினாரவர் எனின், அதில், 'பாரிதன் அடைக்கலப் பெண்ணை' என்று கூறியிருத்தலின், பாரி அடைக்கலமாகக் கொடுத்த ஒருத்தியே யாதல் வேண்டுமன்றே! அவ்வாறின்மையின், அங்கனம் கோடல் அமைதியன்று.

தம்மைப் புரப்பாரின்றி நல்கூர்ந்து வருந்துவாராயினர். அக் காலத்தில், சேரநாட்டரசனாகிய **செல்வக்கடுங்கோவாழியாதன்** என்பவன், [1]வேள்பாரியைப் போன்று நற்குணம் வாய்ந்த வள்ளலாய் விளங்கினமை கேள்வியுற்று, அவன்பாற் செல்லக் கருதி, அந்நாட்டை நோக்கிச் சென்றார்.[2] கபிலர், கடுங்கோவின் நகரையடைந்தபோது, அவன் அவ்விடத்தில் இருந்திலன்; பாசறையில் தங்கியிருந்தான். கபிலர் அவனிருந்த பாசறைக்குச் சென்று,[3] அங்கே அவனைக் கண்டு வாழ்த்தினார். சேரனும், புலவர் வருகைக்கு மகிழ்ந்து வணங்கினான். புலவர், அவனைக் குறித்து இயற்றிய பாட்டுக்களை அவன்முன் பாடினார். அப்பாட்டுக்களின் சொல்வளம் பொருள்வளம் அறிந்த சேரன், அவருக்கு [4]நூறாயிரங்காணம் நல்கினான்; பின்னும், **'நன்றா'** என்னும் குன்றின்மீது ஏறித் தன கண்ணிற் கண்ட நாடு எல்லாம் காட்டிக்கொடுத்தான்.

கபிலர், கடுங்கோவாழியாதனது அன்பினாற் பிணிப்புண்டு, அவனோடு சிலகாலம் தங்கியிருந்து, தம் நல்லிசைப் பாக்களால்

---

விச்சிக்கோன், இருங்கோவேள் இவரிடத்துப் பாரிமகளிரை உடன்கொண்டு சென்று பயனின்றி மீண்ட கபிலர், அம்மகளிரைப் பார்ப்பார்பால் அடைக்கலமாகவிட்டு, மலையமானிடஞ் சென்று அவனை உடன்படுத்தி, பின்பு அம்மகளிரைக் கொடுசென்று அவனுக்கு மணம்புரிவித்தனர் என்று கொள்ளுதல், புறநானூற்றுக் குறிப்பிற்கும் சாசனக் கூற்றுக்கும் பொருந்துவதாகும்.

சாசனத்தில், 'மலையர்க்குதவி' என்று பன்மையாகக் காணுதல் தவறாகும். அன்றேல், மலையன் கிளைஞர்க்கு உதவினார் என்று கொள்ளுதல் வேண்டும்.

1. பதிற்றுப்பத்து. 61.

2. 'சேரன்பால் இவர் சென்ற காலத்து இப்பாரிமகளிரும் உடனிருந்தனர் போலும்' (வேளிர் வரலாறு. பக்கம் 53) என்பதும், 'அந்தணர்பால் ஒப்பித்து மலைநாட்டிற்குப் போய்............பரிசிலைப் பெற்றனர்' (பத்து. மூன்றாம் பதிப்பு) என்பதும் அமைவுடையவாகத் தோன்றவில்லை.

3. பதிற்றுப்பத்து, 61, 64 பார்க்க.

4. பதிற்றுப்பத்து, 7-ஆம் பத்தின் பதிகம். அந்நாட்டிலிருந்த ஊர்கள் பலவற்றையும் இவர் பெற்றனர் என்பது பெருங்குன்றூர்கிழார் பாடிய பாட்டானும் (பதிற். 85) அறியப்படுகின்றது.

அவனுக்கு இன்பமூட்டி வந்தார். ஒருநாள் அவ்வரசன், கபிலர் கையைப் பற்றி, 'மெல்லிய வாமால் நுங்கை' என்று கூறினான். உடனே கபிலர், 'போர்செய்வதில் முருகனையொத்த வேந்தே, நீ, யானையால் பகைவரது கோட்டை வாயிற்கதவின் கணையத்தை முறித்து இருப்புத்தோட்டியால் முன்னர்க் கடாவிப் பின்னர் வேண்டுமளவிற் பிடித்தலினாலும், பகைவரது அகழிக்கண் செல்லாது மிகைத்த செலவினையுடைய குதிரையைக் குசைதாங்கி வேண்டுமளவில் பிடித்தலினாலும், வில்லினாணால் கையில் வடுவுண்டாகும்படி அம்பு வழங்குதலினாலும், பரிசிலர்க்கு அரிய அணிகலன்களை நல்குதலினாலும் நின் கைகள் வலியனவா யிருக்கும். நின்னைப் பாடுகின்ற புலவருடைய கைகளோ செவ்விய தடியைப் புகைகொளுத்தி அமைத்த ஊனையும் துவையையும் கறியையும் சோற்றையும் உண்ணுந் தொழிலொன்று தவிர, வேறு தொழில் யாதும் அறியமாட்டாவாகலின், அவை மெல்லியவாகவே யிருக்கும்' என்று, தமது நுண்ணறிவு தோன்றச் செஞ்சொற்கவி[1] யொன்றனைப் பாடினார். அரசன், அச்செய்யுட் பொருளை உணர்ந்து மகிழ்ந்து, முன்னிலும் அன்புமிக்கு, அவருக்கு வேண்டுவனவற்றைத் தானே அறிந்து நல்கி, அவருடன் அளவளாவி மகிழ்வுற்று வாழ்ந்திருந்தான்.

கபிலர், சிலகாலம் செல்வக் கடுங்கோவேட்டு அமர்ந் திருந்த, பின்னர் அங்குநின்றும் அகன்றார். அவன் நல்கிய பல ஊர்களின் வருவாயினால் மிக்க செல்வம் படைத்துக் கிளைஞரது பசிப்பிணியைப் போக்கி, வளம் பெற ஓம்பி வாழ்ந்திருந்து, இறுதியில் உலக வாழ்வினை நீத்தார்.[2]

---

1. புறம். 14

2. கபிலர், தம் ஆருயிர் நண்பனாகிய பாரியை நினைந்து வடக்கிருந்து உயிர் நீத்தார் என்பது புறநானூற்றில் 236-ஆம் பாட்டின் குறிப்பினால் தெரிய வருகின்றது. ஆயின், தம்பால் பாரி அடைக்கலமாகத் தந்த பெண்ணை மலையர்க்கீந்து, பின்பு பெண்ணை ஆற்றின் தென்கரையில் கனல் மூழ்கிக் கபிலர் வானுலகடைந்தார் என்னும் செய்தி,

'வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது

(தொடர்ச்சி பின் பக்கம்)

## கபிலரின் வாழ்க்கை நிலை

கபிலர், மாசிலாத உளத்தினராயும் இழுக்கிலாத ஒழுக்கின

---

மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச்செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
அலைபுன லழுவத் தந்தரி க்ஷஞ்செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது' (South Indian Inscriptions. Vol. VII. No. 863)

என்னும் திருக்கோவலூர்க்கீழூர்ச் சாசனத்தால் அறியப்படுகின்றது. இச்செய்திக்குப் பழைய நூல்களில் சான்று இலது. ஈண்டு, 'கனல்புகும்' என்பதற்கு, 'இறந்துபட்ட' என்றாதல் '(பாரியோடு) கனல்புக விரும்பிய' என்றாதல் பொருள் கொள்ளுதல் அமைதி போலும். இனி, மேற்குறித்த 236-ஆவது புறப்பாட்டுக்குறிப்பும் அமைவுடையதாகக் காணவில்லை. என்னெனின் கூறுவல்: 'பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுத்து, வடக்கு நோக்கியிருந்த கபிலர் பாடியது' என்று அக்குறிப்புக் கூறுகின்றது. இதனை நோக்கின், கபிலர் பாரி மகளிரைப் பார்ப்பார்ப்படுத்திவிட்டு உடனே வடக்கிருந்தார் எனத் தோன்றும். தோன்றவே, பாரி துஞ்சிய பின்னர், கபிலர், செல்வக்கடுங்கோர்வாழியாதனைச் சார்ந்து வாழ்ந்திருந்தார் என்று பதிற்றுப் பத்திற் காணும் வரலாறு அமைவுறுதல் இல்லை. அதனால், கபிலர் பாரிமகளிரை பார்ப்பார்ப்படுத்திவிட்டு உடனேயே வடக்கிருந்து உயிர்நீத்தார் எனக் கொள்ளுதல் பொருந்தாது. கபிலர், பாரி மகளிரைப் பார்ப்பார்ப் படுத்தியபின் சேரநாடு சென்று செல்வக்கடுங்கோவாழியாதனோடு சிலகாலம் வாழ்ந்து, பின்னர் உலக வாழ்வினை நீத்திருத்தல் வேண்டும். புறம், 236-ஆம் பாட்டின் பொருளை நோக்கி, கபிலர் பாரியை நினைந்து வடக்கிருந்து உயிர்நீத்தார் என்று வழங்கியதனைக் கேட்டு, குறிப்பெழுதினோர் அவ்வாறு எழுதினாராவர். அவர், 'பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கு நோக்கியிருந்த கபிலர் பாடியது' என்று, பார்ப்பார்ப்படுத்தியதனோடு தொடர்புபடுத்தி எழுதினது அமைதியாதல் இல்லை. இவ்வாறே புறம். 113-ஆம் பாட்டிலும் அமைதியில்லாதவாறு தொடர்புபடுத்தி எழுதப்பட்டுள்ளது. என்னெனின், அப்பாட்டின் கீழ், 'அவன் (பாரி) மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது' என்று குறிக்கப் பட்டுள்ளது. இதனை நோக்கின், கபிலர் பறம்பிலிருந்து புறப்படும்பொழுதே பாரிமகளிரை பார்ப்பார்ப்படுக்க உறுதிசெய்து கொண்டு புறப்பட்டார் எனத் தோன்றும். அங்கனம் எண்ணி புறப்பட்டாராயின், அவர், விச்சிக்கோன் முதலாயினாரிடத்து அம்மகளிரை அழைத்துச் சென்றிருத்தல் வேண்டாவன்றே! அதனால், கபிலர் பறம்பிலிருந்து புறப்படும்பொழுது, பாரி மகளிரை அரசருக்கு மணஞ்செய்து கொடுக்க எண்ணியே அழைத்துச் சென்றார் எனவும், அரசர்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

ராயும் வாழ்ந்தனர். இதனை,[1] 'புலனழுக் கற்ற அந்த ணாளன்' என்று மாறேக்கத்து நப்பசலையார் கூறியிருப்பதனால் அறியலாகும். கபிலர், இல்வாழ்க்கை மேற்கொண்டவர் என்றும்,

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

*மணக்க உடன்படாராகவே மாழ்குற்று மீண்டு, அவர்களைப் பார்ப்பார்ப் படுத்தினர் எனவும் கொள்ளுதல் வேண்டும். இவற்றால், அப்புறப்பாட்டின் கீழ்க்குறிப்பிற் காணுஞ் செய்தி பொருந்தாது என்பது வெளிப்படை. பாரி மகளிரைக் கபிலர் பார்ப்பார்ப் படுத்தினர் என்னும் வழக்கினையுட்கொண்டு, அவர் பறம்பினின்று நீங்கிச் செல்கையில் பாடிய பாட்டின்கீழ் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்பது ஊன்றி நோக்குவார்க்கு உடனே தோன்றும். அவ்வாறே, கபிலர் தம் நண்பனைக் குறித்து வடக்கிருந்தபோது பாடிய பாட்டு என வழங்கிய பாட்டின்கீழும் மேற்காட்டியவாறு தொடர்புபடுத்தி எழுதப் பட்டது. இப்பாட்டு, உடனுயிர் நீக்கக் கருதிய கபிலரைப் பாரி தடுத்தமையின், அவர் உளம் நொந்து பாடியது என்றிருப்பின் அமையும். அன்புடையார், தம் ஆருயிரன்னார் இறக்கும்பொழுது தாமும் உயிர்துறக்க எண்ணுதலும், அவ்வாறே உயிர்துறத்தலும் இயல்பு. அவ்வாறன்றி, நாட்கள் பல கழியின், 'ஆளாற்றாத துன்பம் நாளாற்றும்' என்னுமாறு அத்துன்பம் குறையுமாகலின், பின்னர், அதுகருதி அவர் உயிர் நீத்தல் அரிது. பாரி இறந்தபின், கபிலர், சேரமான் கடுங்கோவாழியாதனைச் சார்ந்து பரிசில் பெற்று இன்புற்று வாழ்ந்திருந்தமை பதிற்றுப்பத்துச் செய்யுட்களான் அறியப்படுதலின், அவ்வாறு வாழ்ந்திருந்தவர், பின்னர், பாரியை நினைத்து உயிர்நீத்தார் என்றல் அமைதியாதல் இன்று. 'நின்னோ டுவனுறை வாக்குஉயர்ந்த பாலே' என்னும் அடியின் கருத்தினைக் கொண்டு, கபிலர் வடக்கிருந்து உயிர்நீத்தார் என்று கதை வழங்கியிருக்கலாம். அதனைக் கேட்டு, குறிப்பெழுதினவர் இவ்வாறு எழுதி யிருத்தல் கூடும். புறப்பாட்டின் கீழ்க்குறிப்புக்களில் தவறாக நேர்ந்தவை வேறு சில காண்கின்றன. உதாரணமாக - புறம். 389-ஆம் பாட்டின் கீழ், **'ஆதனுங்கனைக் கள்ளிலாத்திரைய னார்'** என்று எழுதப்பட்டுள்ளது. அப்பாட்டில்,*

*'கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்*
*செல்வுழி யெழாஅ நல்லேர் முதியன்*
***ஆத னுங்கன் போல நீயும்***
*பசித்த வொக்கற் பழங்கண் வீட*
*வீறுசால் நன்கலம் நல்குமதி'*

*என்றிருத்தலின், பாடப்பட்டவன் **ஆதனுங்கனல்லன்** எனவும், பிற னொருவனே எனவும் தெளிவாதல் காண்க.*

*இவற்றால் புறநானூற்றுச் செய்யுட்களின்கீழ்க் காணுங் குறிப்பு, அவற்றின் ஆசிரியர்கள் எழுதியதன்று என்பதும், அச்செய்யுட்களைத் தொகுத்தவரோ பிறரோ எழுதியதாகும் என்பதும், அதனால் இன்னோரன்ன பிழைபாடுகள் சில நேர்தலாயின என்பதும் அறியத்தகும். இவ்வுண்மை புறநானூற்றுப் பதிப்புக்கள் இரண்டனையும் நோக்கின் தெளிவாகும்.*

*1. புறம். 126*

வறுமைநிலையிற் சிலகாலம் வருந்தினர் என்றும் கருத இடமுளது. வையாவிக்கோப்பெரும்பேகனை இவர் பாடிய [1]பாட்டில்,

'சுரனுழைந்து வருந்திய **ஒக்கல் பசித்தெனக்**
★ ★ ★ ★
★ ★ ★சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னும் நின் மலையும் பாட'

என்று கூறியிருப்பதனாலும், சேரமான் செல்வக் கடுங்கோ வினைப் பாடிய பாட்டுக்களுள் [2]ஒன்றில்,

'காண்கு வந்திசின் கழறொடி யண்ணல்
★ ★ ★ உயர்ந்த
மழையினும் பெரும்பயன் பொழிதி அதனால்
**பசியுடை யொக்கலை ஓரீஇய**
இசைமேந் தோன்றல் நின் பாசறை யானே' (பதிற். 64)

என்று குறிப்பித்திருப்பதனாலும் இவரது வறிய நிலைமை புலனாகும். பதிற்றுப்பத்தின் உரையாசிரியர், 'மழையினும் பெரும்பயம் பொழிதி; அதனால் அண்ணல், தோன்றல், பசியுடை யொக்கலை (பசி) ஓரீஇய, பாசறையானே நின் நோன்றாள் வாழ்த்திக் காண்குவந்திசின்' என்ற இயைத்துப் பொருள் கூறி யிருப்பது இங்கு அறியத்தகும். ஓரீஇய = ஒருவ என்க. ஒருவின எனப் பெயரெச்சமாகக் கொள்ளுதல் அமையாது. 'மழையினும் பெரும்பயன் பொழிதி' என்றது, கருத்துடை யடைமொழி யாயவாறு கண்டுகொள்க. இவற்றால், பாரி இறந்தபின், கபிலரது குடியைப் புரப்பவரின்மையின், அக்குடியினர் இன்னலுழப் பாராயினர் என்றும, அவ்வின்னலைத் தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டே அவர் செல்வக்கடுங்கோவினை நாடிச் சென்றனர் என்றும் கொள்ளுதல் பொருந்தும். தம்முடைய குடியினர்

1. புறம். 143
2. பதிற்றுப்பத்து. 64

வறுமையான் வருந்துதலின்றிச் செல்வத்தான் வாழ்ந்திருப் பாராயின், கபிலர், பாரிமகளிருக்கு மணமுடித்துத் தமது கடன் கழித்து வாழ்ந்திருப்பார்; சேரன்பால் சென்றிரார். இக்கூறிய வற்றை நோக்கின் தன் நண்பன் கருத்தின்படி, அவன் மகளிர்க்கு மணம் புரிவித்தலை மேற்கொண்ட கபிலர், அச்செயலை நிறைவேற்றினவுடனே, தம் ஒக்கல் வறுமையான் வருந்துதல் பொறாராய், பொருள்தேட எண்ணியே சேரநாடு சென்றனர் எனவும், சேரன்பால் பொருள்பெற்றுத் தமது குடியைப் புரந்து, பின்னர், உலக வாழ்வினை நீத்தனர் எனவும் புலனாகும். சேரன்பாற் சென்று, அவனைப் பாடிய கபிலர்,

> **'ஈத்த திரங்கான் ஈத்தொறும் மகிழான்**
> **ஈத்தொறும் மாவள் ளிய**னென நுவலும் நின்
> நல்லிசை தரவந் திசினே' (பதிற். 61)

என்று, சேரனது வள்ளன்மையையே புகழ்ந்து பாடியிருத்தலின், அவன், தம்மைப் புரப்பான் என்னும் கருத்தானே அவன்பாற் சென்றாராவர். இவ்வாறு, அவனது வள்ளன்மையைக் கூறாது, 'நின்னுடைய கல்வி கேள்விகளைக் கேட்டு நின்னைக் காணவந்தேன்' என்றோ, அன்றிப் பிறிதாகவோ கூறியிருப்பின், அவ்வரசன்பாற் பரிசில் பெறுங் கருத்தினராய்ச் சென்றிலர் என்று கருதலாகும். அன்றியும், மேற்குறித்த பாட்டொன்றனில்,

> 'காண்கு வந்திசின்..............
> ....................
> **பசியுடை ஒக்கலை ஒரீஇய'** (பதிற். 64)

என்று பாடியிருத்தலும் இக் கருத்தினையே வலியுறுத்துதல் காண்க. ஆயின், 'இரக்கு வாரேன்' என்று பாடிய கபிலர், பொருட்பேறு கருதிச் சென்றார் என்றல் யாங்கனம் பொருந்தும் எனின், 'பசியுடை ஒக்கலை ஒரீஇய வந்திசின்' என்றவர், பொருள்பெறுங் கருத்தினரல்லர் என்பது யாங்கனம் பொருந்தும் என்க. இவ்விரண்டும் தம்முள் மாறுபடாதவாறு பொருள் கொள்ளுதலே முறைமையாதலின், 'இரக்கு வாரேன்' என்பதற்கு,

'என் பொருட்டு இரப்பேனாக வருவேனல்லேன்' என்று பொருள் கூறுதல் பொருந்தும். மேற்கூறியவற்றால், வறுமையான் வருந்திய தங்குடியைப் புரத்தல் கருதியே கபிலர் சேரமானிடஞ் சென்றனர் என்பது துணியப்படும்.

ஆயின், கபிலர், பெருவள்ளலாகிய வேள்பாரியைச் சார்ந்து பல நாள் அவனோடு கூடி வாழ்ந்திருந்தனரே; அக் காலத்தில், அவன் (பாரி), தன் ஆருயிர் நண்பராகிய கபிலருக்குப் பெருஞ்செல்வம் நல்கியிரானோ என்று ஐயமுண்டாதல் கூடும். வள்ளலாகிய பாரி, தன் நண்பருக்கு வேண்டும் பொருள்களைக் குறைவின்றி நல்கிப் புரந்திருக்கலாம். கபிலர், பாரியளிக்கும் பொருளைத் தம்பால் வரும் இரவலர் முதலியோர்க்கு நல்கிச் செலவிட்டிருக்கலாம். புலவர் இத்தகைய இயல்பினையுடையவர் என்பது புறநானூற்றான் அறியப்படுகிறதன்றே! அன்றியும், கபிலர் தம் வாழ்க்கைக்கு வேண்டும் பொருளனைத்தும் குறைவின்றிப் பாரிபால் பெற்று வாழ்ந்தனராகலின், அவன்பால் பெருநிதி பெற விழைந்திருக்கமாட்டார். கெழுமிய நண்பும் விழுமிய பண்பும் உடைய வள்ளல், தம்மைப் புரந்துவருநாளில், தம் வாழ்நாள் முழுவதும் வளம்பெற வாழத்தக்க பெரும்பொருள் நல்குமாறு, புலவர் அவன்பால் வேண்டிக்கொள்ளுதல் வேண்டாவன்றே? இவற்றால், கபிலர், பாரியொடு வாழ்ந்திருந்த காலத்தில், யாதொரு குறைவுமின்றி வளம் பெற வாழ்ந்திருந்தனரே யன்றி, பெருஞ்செல்வராய் வாழ்ந்திருந்தாரல்லர் என்று கொள்ளுதல் பொருந்தும்.

## கபிலருக்கு நண்பர்கள்

உரையாசிரியர்கள், கபில பரணர் என்னும் தொடர் குறித்திருப்பதனால், கபிலரும் பரணரும் சிறந்த நண்பினராவர் என்று கூறுவாருளர். ஆயின், இவ்விருவரும் வாது செய்தனர் என்று [1]வீரசோழியவுரையினால் அறியப்படுதலின், கபில

1. வீரசோழியம். தொகைப் படலம்: 6 - உரை

பரணர் என்னும் தொடர், நட்பினைக் காட்டுவதன்று எனவும் கருத இடனுண்டு. ஆயினும், மேற்குறித்த கபிலபரணர் என்னும் தொடரினால், இவர் இருவரும் ஒரு காலத்தவர் என்றும், இவர்களுக்கு எவ்வகையிலோ ஒப்பு இருந்தது என்றும் கொள்ளுதல் தகும்; ஒப்பாவது, இவரிருவரும் சிறந்த புலவராய் விளங்கினமையாகும். இனி, கபிலருக்குச் சிறந்த நண்பன் பாரியொருவனே யென்பதுவே உண்மை. அதனை [1]'இவரே....... ........பாரிமகளிர் யானே, தந்தை தோழன்' என்று கபிலர் தாமே கூறியிருப்பதனால் துணியலாகும். 'பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக்காடன்' என்று, [2]திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறுவதனால், இடைக்காடரும் கபிலரும் நண்பினர் என்று கொள்ளலாமாயினும், அதற்குப் பழைய நூல்களில் வேறு ஆதாரமில்லை.

## கபிலரது புலமைத்திறன்

கபிலர், பல நூல்களைக் கற்றுணர்ந்தவர்; அரசர்களின் போர்த்திறனையும் வெற்றியையும் விரித்து, யாவரும் வியக்குமாறு செய்யுட்செய்வதில் தலைசிறந்தவர். கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, தன் வெற்றியைக் குறித்துப் பாடுதற்கு அக்காலத்தில் கபிலர் இல்லாதது கருதி வருந்தினான் என்று பொருந்தில் இளங்கீரனார்3 கூறியிருப்பதனால், இஃது அறியப்படும். இதனால், அச்சேரமான் கபிலரின் செய்யுட்டிறனை நன்கறிந்தவனாவன் என்பது துணியப்படுமேயன்றி, அவன் கபிலருக்கு நண்பன் என்பது (மாணிக்கவாசக. காலம்: 327) உறுதியாதல் இன்று. பாட்டியற்றுதலில் இவருக்கிருந்த வன்மையைக் குறித்து,

---

1 புறம். 201

2. இடைக்காடன்பின் போன திருவிளையாடல்: 1

3. புறம். 53

'தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி **விளங்குபுகழ்க் கபிலன்'**[1]

என்று **பொருந்தில் இளங்கீரனாரும்,**

'நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
**பரந்திசை நிற்கப் பாடினன்'**[2]

என்றும்,

'பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்கண்'[3]

என்றும் **மாறேக்கத்து நப்பசலையாரும்,**

'வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்'[4]

என்று பெருங்குன்றூர்கிழாரும் கூறியிருத்தலின் இவரது புலமைத்திறன் தெளிவாகும். அன்றியும், உரையாசிரியர்கள், 'கபிலரது பாட்டு' என்று ஆறாம் வேற்றுமைத் தற்கிழமைப் பொருட்கு உதாரணங் காட்டியிருப்பதனால், அவர்களும் இவரது பாட்டின் சீர்மையை வியந்தவராவர்.

## கபிலரியல்பு

கபிலர் பொய்யுரை புகலாத வாய்மையினர். இதனை,

---

1. புறம். 53
2. புறம். 126
3. புறம். 174
4. பதிற்றுப்பத்து. 85

[1]'பொய்யா நாவிற் கபிலன்' என்றும், [2]'வாய்மொழிக் கபிலன்' என்றும் புலவர் பிறர் இவரைப் புகழ்ந்து கூறியிருப்பதனால் அறியலாகும். தன் மனைவியைத் துறந்திருந்த பேகனை, அவளுடன் கூடி வாழுமாறு வேண்டியதனான்[3] இவரது அருட்டிறன் விளங்கும். வேள்பாரியோடு இவர் வாழ்ந்திருந்த காலத்தில், அவனது பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகை செய்தபோது, அகத்தே வாழ்வோர்க்கு உணவுப் பொருள் குறைபடாவாறு சூழ்ச்சி செய்து உணவளித்துக் காத்து வந்ததுவும், அவன் துஞ்சும்போழ்து அவனோடு உடனுயிர் நீக்கத் துணிந்ததுவும், அவன் சிலகாலம் உயிர் வாழ்ந்திருக்குமாறு வேண்டிக் கொண்டதற் கிணங்கி உயிர் பொறுத்திருந்து அவன் மகளிரை மணஞ்செய்து கொடுக்க எண்ணி அரசர்பாற் சென்று வேண்டியதுவும், அவர்கள் உடன்படாராகவே அம்மகளிரின் தனி நிலைமைக்கு வருந்திப் பின்னர் மலையனுக்கு அவர்களை யீந்து தமது கடனை நிறைவேற்றியதுவும் நம் புலவரின் நண்பு முதலிய பண்பினை வெள்ளிடை மலைபோல் விளங்கக் காட்டும். அன்றியும், கழாத்தலையார் என்னும் புலவரைக் கூறுமிடத்து அவரைப் புகழ்ந்து கூறியிருத்தலை4 நோக்கின், இவர், புலவரை நன்கு மதிக்கும் பெருந்தகைமையுடையவர் என்பதும் நன்கு புலனாகும்.

## கபிலர் பெருமை

கபிலரது புலமைத்திறன் என்னுந் தலைப்பின்கீழ்க் கூறியுள்ளவற்றால் கபிலரது பெருமை ஒருவாறு புலனாகும். இவர், ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்த செய்தி அறியப்படுதலின், இவரைத் தமிழ் வேந்தரேயன்றிப் பிற வேந்தரும் மதித்து வந்தனர்' என்பது தெளியப்படும்.

---

1. புறம். 174
2. அகம். 78
3. புறம். 143
4. புறம். 202

தொல்காப்பியச் செய்யுளியலுள்[1] மந்திரச் செய்யுளுக்கு உதாரண மாகக் காட்டப்பட்டுள்ள பாட்டில்,

'முரணில் பொதியின் முதற்புத்தேன் வாழி
பரண **கபிலரும்** வாழி'

என்று, இவரை அகத்திய முனிவரோடு ஒருங்குகூட்டி வாழ்த்தி யிருப்பது நோக்கின், இவரது பெருமை பெரிதும் புலனாகும்.

★★★

1. செய்யுளியல், சூ. *178.*

# III

# கபிலர் இயற்றிய செய்யுட்கள்

எட்டுத்தொகை நூல்களுள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் ஏழு நூல்களிலும், கபிலர் பாடிய பாட்டுக்கள் கோக்கப்பட்டுள்ளன. பத்துப் பாட்டுள், குறிஞ்சிப்பாட்டு ஒன்று இவராற் பாடப்பட்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், இன்னாநாற்பது என்னும் நூல் ஒன்று இவரால் இயற்றப்பட்டது. ஆகவே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் மூவகை நூல்களிலும் இவர் பாட்டுக்கள் உள்ளன. இதனால், கபிலர் அகப்பொருள், புறப்பொருள் என்னும் இரு பொருட்பகுதிகளையும் பாடுதலில் வல்லவர் என்பதும் போதரும். ஆயினும், இவர் பாடிய பாட்டுக்களுள் பெரும்பாலன அகப்பொருள்பாட்டுக்களேயாகும்.

கபிலர் பாடிய அகப்பொருள் பாட்டுக்களாக, நற்றிணையில் 20-ம், குறுந்தொகையில் 29-ம், ஐங்குறுநூற்றில் 100-ம், கலித்தொகையில் 29-ம், அகநானூற்றில்[1] 18-ம் ஆக, 196 பாட்டுக்கள் எட்டுத்தொகை நூல்களிற் காண்கின்றன; இவற்றோடு, குறிஞ்சிப்பாட்டு ஒன்று சேர்க்க, 197 பாட்டுக்கள் ஆகும்.

புறநானூற்றில் காணப்படும் பாட்டுக்கள், 28-ம் பதிற்றுப் பத்தில் 7-ஆம் பத்தின் பாட்டுக்கள் 10-ம் ஆக, இவர் பாடிய புறப்பொருள் பாட்டுக்கள் 38. இவற்றோடு 'இன்னா நாற்பது'

1. 254-ஆம் பாட்டின் பாடபேதத்தில், கபிலர் என்று காணப்படுகின்றது. அஃது இவர் செய்ததாயின் அகநானூற்றில் 19 பாட்டாகும்.

என்னும் நூலிலுள்ள பாட்டுக்கள் [1]40-ம் சேர்ப்பின் புறப்பொருள் பாட்டுக்கள் 78 ஆகும். ஆகவே, கபிலராற் பாடப்பட்ட பாட்டுக்கள் 275[2] என்று கொள்க. இவையேயன்றி, கபிலம் என்னும் நூல் ஒன்று இவராற் செய்யப்பட்டது என்பது உரையாசிரியர்கள் காட்டியுள்ள உதாரணத்தால் (தொல். சொல்: 'முதலிற் கூறும்' சூ. உரை) அறியப்படுகின்றது. நிற்க.

---

1. 'இன்னா நாற்பது' என்னம் நூலில், பாட்டுக்கள் 41 உள்ளனவாயினும், அவற்றுள் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இவர் பாடியதன்று எனக் கொண்டு அதனை ஒழித்து, ஏனைய 40 செய்யுட்களே எண்ணப்பட்டன. நற்றிணை யுரையாசிரியரும் 40 பாட்டுக்களையே எண்ணியுள்ளார். அந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில், மாயோனைச் 'சக்கரத்தான்' என்றும், முருகனைச் 'சத்தியான்' என்றும், கபிலர் காலத்தே தமிழ் மொழியிற் பயிலாதனவும் சகரத்தை முதலில் உடையனவுமாகிய வடமொழிப் பெயர்களாற் கூறியிருத்தல் அறியத்தக்கது. இதனால், நற்றிணை முதலிய பல நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பின்னுள்ளோர் பாடியிருத்தல்போல, இந்நூற்கும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பிற்காலத்தவரொருவர் பாடியிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

2. பிறரெல்லாரும் எண்ணியவாறு, 'நெட்டிலையிருப்பை' என்னும் பாட்டும், திருவள்ளுவமாலையில் உள்ள 'தினையளவு' என்னும் பாட்டும் ஈண்டு எண்ணப்படவில்லை. இவற்றைக் குறித்து முன்னர்க் கூறுவேன். கபிலர் பாடிய பாட்டுக்கள் 278 - (புறநா. படினோர் வரலாறு) என்று மஹாமஹோபாத்யாய டாக்டர் வே. சாமிநாத ஐயரவர்களும், 246 என்று, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களும் எழுதியுள்ளார்கள். கபிலர் என்னும் நூலின் ஆசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எண்ணியவாறு 278 ஆயினும், மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் குறித்திருப்பதனோடு சில நூல்களில் தொகை மாறுபடுகின்றது. இம்மூவரும் குறித்துள்ளவாறு தொகைகளை ஈண்டுக் குறிக்கின்றேன் :

| | மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் | நாராயணசாமி ஐயரவர்கள் | வேங்கடசாமி நாட்டரவர்கள் |
|---|---|---|---|
| நற்றிணை | 20 | 20 1 | 20 |
| குறுந்தொகை | 29 | 29 | 29 |
| ஐங்குறுநூறு | 100 | 100 | 100 |
| பதிற்றுப்பத்து | 10 | 10 | 10 |
| கலித்தொகை | 29 | ... | 29 |
| 2அகநானூறு | 16 | 16 | 18 |
| 3புறநானூறு | 30 | 28 | 28 |
| குறிஞ்சிப்பாட்டு | 1 | 1 | 1 |

கபிலர் பாடியனவாக எட்டுத்தொகை நூல்களுட் காணப்படும் அகப்பொருட் பாட்டுக்கள் 196 என்று மேலே குறித்துள்ளேன். அவற்றுள், நற்றிணையிலுள்ள 20-பாட்டுக்களுள் 59-ஆம் பாட்டு முல்லைத் திணையது என்றும், 267, 291-இப் பாட்டுக்கள் நெய்தற்றிணையன என்றும், 320-ஆம் பாட்டு மருதத்திணையது என்றும் அந்நூலின் ஏனையப்பாட்டுக்கள் 16-ம் குறிஞ்சித் திணையன் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. குறுந்தொகையில் 246-ஆம் பாட்டு ஒன்றுமட்டும் நெய்தற் திணையதென்று, எழுதப்பட்டுள்ளது; ஏனைய பாட்டுக்கள் 28-ம் குறிஞ்சித் திணையைச் சேர்ந்தவையே. அகநானூற்றில் 203-ஆம் பாட்டு, பாலைத்திணையைச்சார்ந்ததாகத் தொகுக்கப்படடுள்ளது; மற்றைய 17 பாட்டுக்களும் குறிஞ்சித் திணைப்பாட்டுக்களே. கலித்தொகையில் உள்ள 29 பாட்டுக்களும், ஐங்குறு நூற்றில்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| இன்னா நாற்பது | 41 | 40 | 41 |
| திருவள்ளுவமாலை | 1 | 1 | 1 |
| 'நெட்டிலை' என்னும் செய்யுள் | 1 | 1 | 1 |
| ஆக | 278 | 246 | 278 |

1. பத்தொன்பது என்று எழுதியிருப்பது தவறாக நேர்ந்ததாகும்.

2. அகநானூற்றில் 16 பாட்டுக்கள் உள என்று மஹாமஹோபாத்யாய ஐயரவர்களும் (17 என்று பத்துப்பாட்டின் மூன்றாம் பதிப்பிற் குறித்துள்ளார்கள்). நற்றிணை உரையாசிரியரவர்களும் குறித்துள்ளனர். அவர்கள் எண்ணாதுவிட்ட 2 பாட்டுக்கள் இவை எனத் தெரியவில்லை. அகம். 12-ஆம் பாட்டின்கீழ், 'தொல் கபிலர்' எனப் பாட பேதங்காணுதலின், அதனை அவ்விருவரும் நீக்கி யிருக்கலாம்; மற்றொன்று இது என ஊகிக்கவும் இயலவில்லை.

3. மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் குறித்துள்ளவாறு புறநானூற்றில் 30-பாட்டுக்கள் காணப்படவில்லை; 28-பாட்டுக்களே காண்கின்றன. பாடப் பேதங்களெல்லாம் ஆராய்ந்தும் ஏனைய இரண்டு பாட்டுக்கள் இவை எனப் புலப்படவில்லை. புறநானூற்றின் அரும்பத முதலியவற்றின் அகராதியில் கபிலர் என்னும் தலைப்பின் கீழ், கபிலர் என்னும் பெயர் வந்துள்ள பிறர் பாட்டின் எண்களையும் எழுதி அவற்றையும் கபிலர் ப்பாட்டின் எண்களோடு சேர்த்தெண்ணி, வந்த தொகையினைக் கபிலர் செய்த செய்யுளின் தொகையாகக் கொண்டு குறிக்கப்பட்டுள்ளது எனத் தோன்றுகின்றது.

உள்ள 100 பாட்டுக்களும் குறிஞ்சித்திணையைச் சார்ந்தவையே என்பது கூறாமலே விளங்கும். ஆகவே, மேற்காட்டியவாறு எண்ணுமிடத்து, [1]அந்நூற்றுத் தொண்ணூற்றாறு பாட்டுக்களுள், குறிஞ்சித் திணைப்பாட்டுக்கள் 190-ம், முல்லைத் திணைப்பாட்டு 1-ம், மருதத்திணைப்பாட்டு 1-ம், நெய்தற் திணைப்பாட்டு 3-ம், பாலைத்திணைப்பாட்டு 1-ம் ஆகும்.

---

1. இவற்றுள், நற்றிணையில் 217-ஆம் பாட்டு, உரிப்பொருளை நோக்கின், மருதத் திணைக்கு உரித்தாகற்பாலது. அங்கனமே, 225-ஆம் பாட்டும் மருதத்திணைக்கே அமைவுடையது என்பது அதனை ஒருமுறை நோக்குவார்க்கும் விளங்கும். அன்றியும், அப்பாட்டிற்கு எழுதப்பட்டுள்ள கருத்துரை யிரண்டனுள், 'பரத்தை, தலைமகட்குப் பாங்காயின வாயில் கேட்பச் சொல்லியதூஉமாம்' என்னும் இரண்டாவது கருத்துரையும் காண்க. 291-ஆம் பாட்டும் மருதத்திணையுரிப்பொருளே யமைந்துளது. ஆகவே, நற்றிணையில் இம்மூன்று (217, 225, 291) பாட்டுக்களும் மருதத்திணைப் பாட்டுக்களாக எண்ணுதற் கேற்றனவாகும். 267-ஆம் பாட்டு, உரிப்பொருளை நோக்கின், குறிஞ்சித் திணையாகும்.

குறுந்தொகையில், நெய்தற்றிணைப் பாட்டாக எண்ணப்பட்டுள்ள 246-ஆம் பாட்டு, உரிப்பொருளைக் கருதுமிடத்து, குறிஞ்சித் திணையில் சேர்க்கத்தக்கதாகும். திணை கூறுமிடத்து, உரிப்பொருளையே சிறந்ததாகக் கொளல் வேண்டும் என்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர் கொள்கை. அது, தொல். அகத்திணையியல் 3-ஆம் சூத்திரத்திற்கு, '.... முதலும் கருவும் உரிப்பொருளும் என்ற மூன்றேயாம்; அவைதாம், செய்யுள் செய்யுங்கால் ஒன்று ஒன்றனிற் சிறந்து வருதலுடைய' என்று உரை கூறி, 'முதலிற் கருவும், கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும்' என்று அவர் எழுதியிருத்தலான் அறியப்படும்.

அகநானூற்றில் 203-ஆம் பாட்டு, 'மகட்போக்கிய தாய் சொல்லியது' என்னும் துறையமைந்தது. இது, குறிஞ்சி நிலத்தில் நிகழும் ஒழுக்கமாயினும், தமர்களினின்று தலைவி பிரிந்து செல்லுதலாகலின் பாலைத்திணையில் அமைத்துள்ளார்.

'கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவ ணிரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான' (தொல். அகத்: 17.)

என்னும் சூத்திரத்தில், 'கொண்டுதலைக்கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல்; அது, நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது' என்று, இளம்பூரண அடிகள் உரை கூறியிருத்தல் ஈண்டு அறியத்தக்கது.

இனி, கபிலர் பாடியவை என எண்ணப்பட்ட பாட்டுக்கள் இருநூற்றெழுபத்தைந்தனுள் ஆசிரியப்பாட்டு 206;[1] வெண்பாட்டு 40; கலிப்பாட்டு 29. ஆகலின், அவர் பாட்டுக்களுள் ஆசிரியப் பாக்களே பெரும்பாலான என்பது தெளிவுறும்.

## குறிஞ்சிக் கலியின் ஆசிரியர் கபிலரே

கலித்தொகையில் உள்ள குறிஞ்சித் திணைப் பாட்டுக்கள் கபிலர் பாடியனவே என்று ஒரு சாராரும், அவர் பாடியன அல்ல என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஆகலின், அஃது ஆராயத் தக்கதாகும். குறிஞ்சிக் கலிச் செய்யுட்கள் கபிலர் இயற்றியன அல்ல என்பார், 'பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டின் உரை யிறுதியில், ''**கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு** மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த வுரை முற்றிற்று'' என்று எழுதப்பட்டிருத்தல்போல, கலித்தொகையில் குறிஞ்சிக் கலியின் உரையின் இறுதியில், கபிலர் பாடிய குறிஞ்சிக்கலிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று என்று எழுதப்படவில்லை. அன்றியும், கபிலர் பாடிய பிறபாட்டுக்களில் வடசொற்கள் அருகியே வந்துள்ளனவாகவும், இக்குறிஞ்சிக் கலியில் வடசொற்கள் பல்கி வந்துள்ளன. புராணக்கதைகளும் பல காண்கின்றன. இவற்றால், குறிஞ்சிக்கலிப் பாட்டுக்கள் கபிலர் பாடியன அல்ல' என்று காரணம் காட்டுவர்.

ஆயின், பத்துப்பாட்டில் ஒவ்வொரு பாட்டின் உரையிறுதி யிலும், இன்னார் பாடிய பாட்டிற்கு நச்சினார்க்கினியர் செய்தவுரை

1. ஆசிரியப் பாட்டுக்கள் 206-க்கு விவரம் :

| | |
|---|---|
| நற்றிணையில் | 20 |
| குறுந்தொகையில் | 29 |
| ஐங்குறுநூற்றில் | 100 |
| பதிற்றுப்பத்தில் | 10 |
| அகநானூற்றில் | 18 |
| புறநானூற்றில் | 28 |
| குறிஞ்சிப்பாட்டு | 1 |
| ஆக, | 206 |

முற்றிற்று என்பது காணுதல்போல, கலித்தொகையில் ஒவ்வொரு திணையின் இறுதியிலும் காணவில்லை. புராணக் கதைகளாக வந்துள்ளவற்றுள், சிவபெருமான் இமயமலையை வில்லாக வளைத்ததொன்று ஒழிய மற்றவையெல்லாம் பாரத ராமாயணங் க்ளின் முக்கியமான கதைகளே. அவை கபிலர் காலத் திற்கு முன்னரே நமது நாட்டில் வழங்கி வந்துள்ளன என்பது ஏனைத் தொகை நூல்களாலும் அறியப்படுகின்றது. குறிஞ்சிக் கலியின் இரண்டாவது செய்யுளில் மட்டுமே 5 வடசொற்கள் (இமையம், சடை, உமை, அரக்கர், மதம்) வந்துள்ளன; ஏனைச் செய்யுட்களில் அருகியே வந்துள்ளன; சிலவற்றில் (25, 26 முதலியன) ஒவ்வொரு சொல்லே காண்கின்றது; சிலவற்றில் (14, 27 முதலியன) வடசொல் வரவேயில்லை. வந்துள்ள சொற்களும் புலவர் பிறர் செய்யுட்களிற் பயில்பவையே. இவை, குறிஞ்சிக்கலிச் செய்யுட்கள் கபிலர் பாடியன அல்ல என்பார் கூற்றுக்குச் சமாதானம் ஆகும்.

இனி, 'கலித்தொகையில் ஒவ்வொரு திணைச் செய்யுட் களும் ஒவ்வொருவர் பாடியிருப்பாராயின், அத்திணைகளின் இறுதிச் செய்யுளின் கீழ், இன்னார் பாடிய இன்ன திணைச்செய்யுள் முற்றும் என்று எழுதப்பட்டிருக்கும்; அவ்வாறு இன்மையின், நூல் முழுவதும் இயற்றினவர் நல்லந்துவனாரே யாவர்' எனின், அவ்வாறாயின், நூலின் இறுதியில், 'நல்லந்துவனார் செய்த கலித்தொகை முற்றும்' என்று எழுதப்பட்டிருக்குமன்றே! அவ்வாறு காணப்படாமையின், நூல் முழுவதும் இயற்றினார் நல்லந்துவனார் ஆகார் என்று விடுக்க.

அன்றியும், 'ஈண்டுப் பாலைத்திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் **கோத்தார்** என்று கூறுக' என்றும், 'இத்தொகைக்கண்ணும் அவை மயங்கிவரக் **கோத்தார்** என்று கூறிவிடுக்க' என்றும், 'அதுபற்றிப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் எனவும் **கோத்தார்**' என்றும் (கடவுள் வாழ்த்துச் செய்யுள் உரை), 'சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தார்' (நெய்தல். 25 உரை) என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலின், கலித்தொகையுள், நெய்தற்கலிச் செய்யுளை

மட்டுமே நல்லந்துவனார் இயற்றினார் என்பதும், மற்றவற்றை அவர் **கோத்தல்** மட்டுமே செய்தார் என்பதும் அவர் (நச்சினார்க் கினியர்) காலத்தில் புலவர்கள் கொண்டிருந்த கொள்கை என்பது நன்கு அறியப்படும்.

அன்றியும், தொகை நூல்களோடு கலித்தொகையும் ஒன்றாக எண்ணப்பட்டு வரும் வழக்குப் பழமையதாகக் காண் கின்றது. தொகை நூல்கள் எட்டனுள் கலித்தொகை யொழிந்த ஏழும் புலவர் பலர் பாடியவையாயிருத்தலானும், 'தொகை' என்பதற்கு, தொகுத்தல் (= ஒருங்குசேர்த்தல்) என்பதுவே பொரு ளாகலானும், 'கலித்தொகை' என்னும் பேரானும், இந்நூல் பலரால் செய்யப்பட்டதுவே என்பது வலியுறும். கலித்தொகைச் செய்யுட்களெல்லாம் ஒருவரே இயற்றியவையாகுமாயின், அதனைத் தொகை நூல்களின் வரிசையில் வைத்து எண்ணுவா ரல்லர். தொகை நூல் எட்டு என்றே கூறல் வேண்டும் என்பதொரு கட்டு இல்லையே; ஏழே என்னின் இழுக்கென்னை? இதனால், இதுவும் தொகை நூலே என்பது பழைய வழக்காதல் தானே போதரும். ஆயின், கலித்தொகைச் செய்யுட்கள் பலரால் இயற்றப் பட்டனவே எனக் கொள்ளினும், குறிஞ்சிக்கலிச் செய்யுட்களைப் பாடினவர் கபிலரே எனக் கொள்ளுமாறு யாங்கனம் எனின், கபிலர் குறிஞ்சித் திணையைப் பாடுதலில் வல்லுநர் என அறிதலானும், ஐங்குறுநூற்றில் அவர் பாடிய குறிஞ்சித்திணைச் செய்யுட்கள் நூறு அமைந்திருத்தலானும், 'பெருங்கடுங்கோன் பாலை **கபிலன் குறிஞ்சி'** என வழங்கும் வெண்பாவானும் அது கொள்ளப்படும் என்க. 'அஃதேல், ''பெருங்கடுங்கோன்'' என்னும் செய்யுள் எல்லா ஏடுகளிலும் இல்லாமையின் அது பழம்பாட்டன்றாம்; ஆகலின் அது கூறுஞ் செய்தி கொள்ளற்பாற்றன்று' எனின், இவ்வாறே சில செய்யுட்கள் எல்லா ஏடுகளிலும் காண்டல் இல்லை. அதுபற்றி அவை கொள்ளப்படா என்பது கூடாது. உதாரணமாக - புறம் பொருள் வெண்பாமாலையின் உரை யாசிரியர் இவர் எனக் குறிக்கும் பாட்டு மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்குக் கிடைத்த ஏடுகளுள் ஒன்றிலும் இல்லையாகலின் அவர்கள் அதனைக் குறிக்கவில்லை. அச்செய்யுளைச் செந்தமிழ்ப் பத்திராசிரியராகிய மஹாவித்வான் ஸ்ரீமத். ரா. ராகவையங்

காரவர்கள் ஓர் ஏட்டில் கண்டறிந்து வெளியிட்டார்கள். அப்பாட்டுக் கொள்ளப்படுகின்றதன்றே என்க.

இனி, 'கலித்தொகைச் செய்யுட்களுள் ஒரு திணைச் செய்யுளில் ஒவ்வொரு கருத்துடையனவும், ஒவ்வொரு முறையில் அமைந்தனவுமாயுள்ள அடிகள், வேறு பல திணைச்செய்யுட் களிலும் காணப்படுதலின், அச்செய்யுட்களெல்லாம் புலவரொரு வராலேயே இயற்றப்பட்டனவாகும்' எனின், ஏனை தொகைநூற் செய்யுட்களில் பலவிடங்களிலும் ஒத்த கருத்துக்களும் சிறிதும் மாறுபாடு இல்லாத அடிகளும் பார்க்கக் காணுதலின், அங்கனம் அமைந்துள்ள செய்யுட்களெல்லாம் ஒருவரே இயற்றின என்று கொள்ளுதல் வேண்டுமன்றே! அவை பல்வேறு புலவர் பாடியவை என்பது ஆண்டாண்டுக் குறிக்கப்பட்டிருக்கும் குறிப்பினான் அறியப்படுதலின், அவ்வாறு கோடல் அமையாதே என்க. இவற்றால், கலித்தொகைச் செய்யுட்கள் எல்லாவற்றையும் இயற்றினார் நல்லந்துவனார் ஒருவரே என்றல் இயைபுடைத்தன்று என்று விடுக்க.

இனி, இக்கொள்கையினர்க்கு, கபிலர் செய்யுட்களே எனத் தெளிந்த பிற தொகைநூற் செய்யுளிலும், குறிஞ்சிக்கலியிலும் ஒத்த கருத்துக்கள் காணப்படுமாயின், குறிஞ்சிக்கலி, கபிலர் இயற்றியதுவே என்று கொள்ளலாமன்றே! அதன் பொருட்டு, அவ்வாறமைந்துள்ள பகுதிகளுட் சிலவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்:

''காண்டொறும் பொலியுங் கதழ்வாய் வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ அயலது
கருங்கால் வேங்கை யூறுபட மறலிப்
பெருஞ்சினந் தணியுங் குன்ற நாட' (நற். 217)

'கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலின்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்

புதுவ தாக மலர்ந்த வேங்கையை
அதுவென வுணர்ந்ததன் அணிநல முருக்கிப்
பேணா முன்பிற்றன் சினந்தணிந் தம்மரம்
காணும் பொழுதில் நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும் நன்மலை நன்னாட'

*(குறிஞ்சிக்கலி. 13)*

'யானைக்
கால்வல் இயக்கம் ஒற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்
உடுவுறு கணையிற் போகிச் சாரல்
வேங்கை விரியிணர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துட் டங்குப்
மலைகெழு நாடன்' *(அகம். 292)*

'யானை
அடியொதுங் கியக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துட் டங்கும் மலைகெழு வெற்பனை''.

*(குறிஞ்சிக்கலி. 5)*

இவற்றை நோக்கின், நற்றிணைச் செய்யுளிலும் அகநானூற்றுச் செய்யுளிலும் கூறப்பட்ட செய்தியே சிறிது விரிவாகக் கலித் தொகைச் செய்யுட்களிற் கூறப்பட்டுள்ளது என்பது எளிதிற் புலனாகும். இனி,

'விசும்பா டாய்மயில் கடுப்ப யானின்று
பசுங்கா ழல்குல் பற்றுவன னூக்கிச்
செலவுடன் விடுகோ தோழி' (நற். 222)

என்னும் அடிகளின் கருத்தோடு,

'ஐய சிறிதென்னை ஊக்கி எனக்கூறத்
தையால் நன்றென் றவனூக்க' (குறிஞ்சிக்கலி. 1)

என்னும் அடிகளின் கருத்தினை ஒப்பிட்டுக் காண்க. இது நிற்க.

கபிலர் இயற்றிய செய்யுட்களே என ஒப்ப முடிந்த செய்யுட்களுள்ளும் இவ்வாறே ஒப்புமையுடைய அடிகளையும் எடுத்துக்காட்டாக ஈண்டுத் தருகின்றேன்:

'பெரும்புனங் கவருஞ் சிறுகிளி யோப்பிக்
கருங்கால் வேங்கை யூசல் தூங்கிக்
கோடேந் தல்குல் தழையணிந் தும்மோ
டாடினெம் வருதலின் இனியதும் உண்டோ?' (நற். 368)

என்னும் அடிகளின் கருத்தினையும்,

'நாடனொடு
சூருடைச் சிலம்பின் அருவி யாடிக்
காரரும் பவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாவமை இதணம் ஏறிப் பாசினம்
வணர்குரற் சிறுதினை கடியப்
புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே' (நற். 373)

என்னும் அடிகளின் கருத்தினையும் ஒப்பிட்டுக்கொள்க. கலித்தொகையில் ஐந்துதிணைச் செய்யுட்களிலும் பிற ஊரையும் பிற யாற்றையும் கூறாமல் கூடலையும் (மதுரை) வையையினையுமே கூறியிருத்தலின், அவையெல்லாம் நல்லந்துவனாரொருவரே செய்தவையாகும் எனின், 70 பரிபாடல்களுள் வையையினைக்

குறித்த பாட்டு 26-ம், மதுரையைக் குறித்த பாட்டு 4-ம் அமைந்திருந்தனவே யன்றி, காவிரி முதலிய பிறயாற்றையும் புகார் முதலிய பிற ஊரையும் குறித்தப் பாட்டுக்கள் இன்மையின், மதுரையையும், வையையினையும் குறித்த அப்பாட்டுக்களெல்லாம் ஒருவரே பாடியவையாகும் எனல் வேண்டுமன்றே. இப்போது கிடைத்துள்ள பரிபாடல்களுள் ஆசிரியர் பெயர் தெரிகின்ற வையைப்பாட்டு 7-ம் ஐவர் புலவர் இயற்றின எனக் காண்கின்றனவாகலின் அக்கூற்று அமைவுடைய தாகாது என்க.

இனி,

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்' (தொல். அகத்: 53)

என்னும் சூத்திரத்தினால், நாடக வழக்கில் புனைந்துரையாகக் கூறும் செய்தி கலிப்பாவிலும் பரிபாடலிலுமே கூறப்படுமாகலின், அவ்வாறு கூறுமிடத்து யாதேனும் ஓர் யாற்றில் நீராடல் நிகழ்ந்ததாகக் கூறுதல் வேண்டுதலின், பரிபாடலில், செந்தமிழ் நாட்டின் தலைநகரை அடுத்த ஆறாகிய வையை ஆற்றைக் குறித்தனர் என்று கொள்க. கபிலர் பாடிய கலிப்பாட்டுக்களுள்ளும் நாடக வழக்குக் காண்கின்றது. குறிஞ்சிக் கலிப்பாட்டுக்களுள் 20, 21, 22, 26, 28, 29 ஆகிய இவை ஆறும் நாடக வழக்காகக் கொள்ளத்தக்கன. இவையேயன்றி, வேறு சிலவற்றையும் நாடக வழக்கிற் சேர்த்தலும் அமையும். ஆகவே, புனைந்துரை வகையால் அமைந்தனவே பெரும்பாலன எனலாம்.

## குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் கபிலரே

இனி, குறிஞ்சிப்பாட்டுக் கபிலர் பாடியதன்று என்று கூறுவாருளர். அவர், அதற்குக் காரணமாக அப்பாட்டிலிருந்து இரண்டு சொற்களைக் காட்டுவர். அவற்றுள்,

(1) 'பைவிரி யல்குற் கொய்தழை தைஇ'

என்னும் அடியில், அல்குல் என்பது பெண்குறியை உணர்த்து கின்றது. இவ்வாறு அல்குல் என்னும் சொல்லைப் பெண் குறிக்குப் பெயராகப் பண்டைப்புலவர் வழங்கிலர். ஆதலின், இப்பாட்டுப் பண்டைப் புலவராகிய கபிலர் பாடியதாகாது என்பதாம்.

இதனை ஈண்டு நோக்குதும் :

மகளிர் உறுப்புக்கள் பலவற்றையும் வருணிக்குமிடத்தும் பெண்குறியினைக் கூறும் வழக்கு, பண்டைச் செய்யுட்களில் யாண்டும் இல்லை. 'சிந்தாமணி' போன்ற காப்பியங்களிலும் காண்டல் அரிது. அதனைச் செய்யுளிற் கூறுதல் 'அஶ்லீலம்' என்று வடமொழிவாணரும் விடுப்பர். நிற்க, குறிஞ்சிப்பாட்டு, தோழி, தாய்க்கு அறத்தோடு நிற்குமிடத்துக் கூறும் முறையின் அமைத்துப் பாடப்பட்டுள்ளது. தோழி, பண்டு நிகழ்ந்த செய்தியைத் தாய்க்குக் கூறுமிடத்து, 'மலர் கொய்தும் இடையிடையே கிளியோப்பியும் தழை செய்து அதனை அரையில் உடுத்து, கோதையை முடியிற் சுற்றி, அசோகின் நிழலில் யாம் தங்கியிருந்தோம்' எனக் கூறும்வழி, மேற்குறித்த 'பைவிரி யல்குற் கொய்தழை தைஇ' என்னும் அடி வந்துள்ளது. 'தழையுடையைச் செய்து' என்பதுவே ஈண்டுக் கூற எடுத்துக்கொண்ட செய்தி. அதனைக் கூறுமிடத்து 'அல்குலி லுடுத்துந் தழையுடையைச் செய்து' என்றாள். ஈண்டு, அல்குல் என்பது பெண்குறியைக் குறித்தற்கு இடமே இல்லை. தழையுடையை அரைசூழ உடுத்தாது, பெண் குறியை மட்டுமே மூடுதல் வழக்காயினன்றே, ஈண்டு, அல்குல் என்பது அப் பொருளில் வந்ததெனக் கொள்ளுதல் வேண்டும்? 'அற்றன்று, அரவின் படத்தை உவமையாகக் கூறியதனால் ஈண்டு, அல்குல் என்பது பெண்குறியையே குறிக்கும்' எனின், பாம்பின் படத்தை நிதம்பத்திற்கு (புட்டம்) அன்றிப் பெண்குறிக்குக் கூறும் வழக்கு உளதோ?

**'ஆடுபாம் பெனப்புடை யகன்ற அல்குல்** மேற்
**சூடிய கலை'** (சீவக. 1007)

என்பதை நோக்கின், அரவின் படம் நிதம்பத்திற்கே உவமமாதல் தெளிவுறும். 'புடையகன்ற அல்குல்' என்பது, பெண்குறிக்கு ஏற்ற அடைமொழியாதல் அரிது. இவ்வாறே, 'கோடேந்தல்குல்' (நற். 368) என்று வருவதும் காண்க.

இனி,

**மன்னாக விணைப்படமுந் தேர்த்தட்டும்** மதிமயக்கிப்
**பொன்னால வட்டமும்**போற் **கலையிமைக்கும்**
**அகலல்குல்'**
(சீவக. நாமக: 144)

என்று, பாம்பின் படம், தேர்த்தட்டு, ஆலவட்டம் ஆகியவற்றை அல்குற்கு உவமை கூறியுள்ளார். பாம்பின் படம் பெண்குறிக்கே உவமையாகுமேல், ஈண்டு ஒருங்கே கூறிய தேர்த்தட்டு, ஆலவட்டம் இவையும் பெண்குறிக்கே உவமையாக வேண்டு மன்றே? இவையெல்லாம் அதற்கு உவமையாவனவோ? இனி, 'உவமான சங்கிரகம்' என்னும் நூலில்,

**'பெண்குறிக்கு மான்குளம்பைப்** பேணு' (11)

என்னும் அடியில், பெண்குறிக்கு மானின் குளம்பினை வழங்கி யிருத்தலான், அஃதன்றித் தேர்த்தட்டு முதலியவை பெண்குறிக்கு உவமையாகக் கொள்ளுதல் இயலாதன்றே!

**'ஹரிணீகுர**மாத்ரேண சர்மணா மோஹிதம் ஜகத்'
(ஸுபாஷித ரத்ன பாண்டாகாரம்.
விஷயோபஹாஸப்ரகரணம்: சு. 121)

என்னும் வாக்யத்திலும்,

'குரங்ககுரரூபோய:..............அதிதுர்ப்பக:'
(ஸ்காந்தம், காசிகாண்டம்: அத்தியா. 37)

என்னும் ஸ்காந்தபுராணத்திலும், பெண்குறியை மானின் குளம்பாகவே கூறியிருத்தலான், பெண்குறிக்கு மான்குளம்பே உவமையாகும் என்று உவமான சங்கிரகம் கூறியது வலியுறும். ஆகவே, குறிஞ்சிப்பாட்டிற் கூறிய 'பைவிரி யல்குல்' என்பது நிதம்பமாதலே யன்றிப் பெண்குறி ஆதல் இன்று என உணர்க. அன்றியும், இவ்வுவமை,

'துத்திப் பாந்தட் பைத்தக லல்குல்' (குறுந். 294)

என, **அஞ்சியாந்தையார்** செய்யுளிலும் வந்துளது காண்க.

பண்டைச் செய்யுட்களில், அல்குல் என்பது பக்கத்தையும், [1]மகளிரின் அரை, புட்டம் என்னும் உறுப்புகளையும் குறித்து வந்துளதேயன்றி, பெண்குறியை குறித்து வந்திலது. பிற்காலத்தில், அரையின் முன்பக்கத்தையும் குறிப்பாகக் கொண்டதனால், பெண்குறியினைக் கூறும்வழி (அதன் மேலிடத்திற்கு வழங்கிய) அல்குல் என்னும் சொல்லை இலக்கணையாக அதற்கும் வழங்கலாயினர். இதனான், அல்குல் என்பது பெண்குறிக்குப் பெயரன்று என்பது போதரும். ஆகவே இது காரணமாகக் குறிஞ்சிப்பாட்டுப் பாடினவர் கபிலரல்லர் என்பது அமையாது.

(2) 'கானங் கல்லென் றிரட்ட'

என்பதில் இரட்டுதல் என்பது ஒலித்தல் என்னும் பொருளில் வந்துளது. இரட்டுதல் என்னும் சொல், ''யானை மணி யிரட்ட'' என்பது போலவே பண்டு வழங்கியதன்றி, ஒலித்தல் என்னும் பொருளில் வழங்கிலது. ஆகலின், இது கபிலர் பாடியதன்று' என்பதாம். சொற்கள் தமக்குரிய பொருளினின்று விலகிச் சிறிது இயைபுடையவற்றைக் குறித்து வருதலும் மொழிகளில் (பாஷைகளில்) வரலாற்று முறையில் காணும் இயல்பு, புலம்புதல் (அழுதல்), சாற்றுதல் (சொல்லுதல்), இயம்புதல் (சொல்லுதல்), பன்னுதல் (சொல்லுதல்) முதலியன அறிக. வஞ்சினம், மன்று என்பனவும் இவ்வாறேயாம். இரட்டுதல் என்பது, **'படுமணி யிரட்டும்** பாவடிப் பணைத்தாள், நெடுநல் யானை' (புறம். 73)

1. ஆடவர்க்கு அரைக்கும் வழங்குதல் உண்டு. (பெருமாள். திரு. 9:7)

என்பது போன்ற இடங்களில் வழங்குதலே அமைதியாயினும், அஃது அப்பொருளினின்று மாறிப் பிறவற்றுக்கண்ணும் பண்டைச் செய்யுட்களிலேயே பலவிடங்களில் வந்துளது.

> '**பூசல் அனைத்தும்**
> இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் **திரட்ட**'
> (மதுரைக் காஞ்சி. 298)
> '**குடிஞை யிரட்டுந்** துறுகல்'
> '**தணி மணி** யிரட்டும்' (அகம். 35)

என்று வந்துள்ளன காண்க.

> 'கானங் கல்லென் றிரட்ட' (குறிஞ்சிப்பாட்டு)

என்பதும் இவ்வாறு வந்ததுவேயாம். ஆசிரியர் நச்சினார்க் கினியர், இவ்வடிக்கு, 'காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் ''கல்'' என்னும் ஓசையையுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக்கூப்பிட' என்று பொருள் எழுதி அமைத்துள்ளமை அறிதற்பாலது. இக்கூறிய வற்றால், இரட்டுதல் என்னும் சொல்லை ஒலித்தற் பொருளில் வழங்கினமையின் இதன் ஆசிரியர் கபிலர் ஆகார் என்றல் அமைதியன்று என்பது அறியப்படும்.

## இன்னா நாற்பதின் ஆசிரியர்

இனி, கபிலர் இயற்றியது என்று வழங்கும் 'இன்னா நாற்பது' என்னும் சிறுநூலைக் குறித்துச் சிறிது நோக்குவோம்: இந்நூல், புலவர் பெருந்தகையராகிய கபிலர் இயற்றியதுதானோ என ஐயம் உண்டாகின்றது. என்னெனின், இந்நூலில் பல

பொருள்கள், 'இனியவை நாற்பது' என்னும் நூலின் பொருள் களை யுட்கொண்டு கூறப்பட்டன எனத் தோன்றுகின்றது. உதாரணமாக -

'உடையான் வழக்கினிது' (இனியவை. 3)
'இன்னா, பொருளில்லார் வண்மை புரிவு' (இன்னா. 11)
'யானை யுடைய படைகாண்டல் முன்னினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினிது' (இனியவை. 5)
'யானையில் மன்னரைக் காண்டல் நனியின்னா
ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா
....இன்னா, கான்யா றிடையிட்ட வூர்' (இன்னா. 23)
'அந்தண ரோத்துடைமை ஆற்ற மிகவினிதே' (இனியவை. 8)
'இன்னா, ஒத்தில்லாப் பார்ப்பா னுரை' (இன்னா. 22)
'கற்றார்முற் கல்வி யுரைத்தல் மிகவினிதே'
(இனியவை. 17)
'பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்தல் இன்னா'
(இன்னா. 11)
'கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே'
(இனியவை. 33)
'கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா' (இன்னா. 16)

என்று வந்துள்ளன காண்க.

இவற்றை நோக்குமிடத்து, 'இனியவை நாற்பது' என்னும் நூலைக் கண்டு இந்நூல் செய்யப்பட்டது என்பது விளங்கும். இன்னாநாற்பதனை நோக்கியே இனியவை நாற்பது இயற்றப் பட்டது என்று கொள்ளலாகாதோ எனின், முதலில் இனிய செய்திகளைக் கூறும் நூலே தோன்றியிருக்கும்; இனியவற்றைக் கூறும் நூலைக் கண்ட பின்னரே இன்னாதவற்றையும் கூறல் வேண்டும் என்று ஒருவர்க்கு எண்ணத் தோன்றும் என்க. இனி, 'இனியவை நாற்பது' என்னும் நூலில், நான்கடியிலும் எதுகைத் தொடை நன்கமைந்துள்ள செய்யுள் 7 மட்டுமே உளவாக, 'இன்னா நாற்பது' என்னும் நூலில் அவ்வாறு எதுகைத் தொடையமைந்த

செய்யுட்கள் 33 காண்கின்றன. பழைய செய்யுட்களில் எல்லாவடிகளிலும் இவ்வாறு எதுகை அமைந்திருத்தல் இல்லை. அன்றியும், இனியவை நாற்பதில், 5-அடியுடைய செய்யுள் ஒன்றாதல் உளது; இதில் ஒன்றுமே இல்லை. இவற்றால், இந்நூல் 'இனியவை நாற்பது' என்னும் நூற்குப் பிற்பட்டதாதல் அறியப் படும். இவையெல்லாம் நிற்க. இச் சிறுநூலுள் 'கூறியது கூற'லாக வந்துள்ள பல. உதாரணமாக -

| | | |
|---|---|---|
| 1. | இடும்பை யுடையார் கொடையின்னா | 7 |
| 2. | பொருளிலார் வண்மை புரிவு இன்னா | 11 |
| 3. | பொருளிலான் வேளாண்மை காமுறுதல் இன்னா | 37 |
| 1. | வண்மையி லாளர் வனப்பின்னா | 10 |
| 2. | வளமையி லாளர் வனப்பின்னா | 28 |
| 1. | பண்ணில் புரவி பரப்பின்னா | 10 |
| 2. | வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா | 39 |
| 1. | ஏமமில் மூதூர் இருத்தல் மிகவின்னா | 25 |
| 2. | கட்டில்லா மூதூர் உறைவின்னா | 26 |
| 1. | கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா | 4 |
| 2. | முறையின்றி வாழும் அரசின்னா | 6 |
| 1. | கொடும்பா டுடையார்வாய்ச் சொல்இன்னா | 7 |
| 2. | ஈரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா | 21 |

என்பன காண்க.

இக்காட்டியவை பெரும்பாலும் தம்முள் ஒத்த நீதியன வாயிருத்தல் அறிக. இனியவை நாற்பதில் (பொருள் வேறு பாடின்றி) இவ்வாறு வந்திலாமை அறிக. நாற்பது செய்யுட்களே யுள்ளதொரு சிறுநூலில், ஒத்த கருத்துள்ள நீதிகள் மீண்டும் வந்திருத்தலை நோக்கின், இந்நூல், 'கூறியது கூறல்' என்னும் குற்றம் உடையதே என்பது தானே போதரும். ஆயின், 'கபிலர் இயற்றியுள்ள அகப்பொருள் பாட்டுக்களுள் ஒத்த கருத்துக்களை யுடையன காண்கின்றனவே, அவற்றிற்போலவே இந்நூலிலும்

வந்துள்ளன' என்று அமைத்துக்கொள்ள லாகாதோ எனின், அகப்பொருட்பாட்டுக்கள் ஒவ்வொருகால் இயற்றிய தனிச் செய்யுட்களாகலானும், அவற்றுள் ஒரு செய்யுளிற் கூறியதனையே சிறிது மாற்றிப் பிறிதொரு செய்யுளில் கூறுதல் கூடுமாகலானும் அவை அமையும். இந்நூல் அவைபோல்வதன்று. இது நீதி நூலாகலின் ஒரு செய்யுளிற் கூறிய நீதியையே மற்றொரு செய்யுளிலும் கூறுதல் அமைவுடையதாகாது என்க.

இவற்றால், இந்நூல் கபிலர் இயற்றியதுவே எனத் துணிந்து கூறுதற்கு இடமில்லை. ஆயினும், இந்நூல், கபிலர் இயற்றியது என்னும் வழக்கினை நீக்குதல் கூடாமையின், கபிலர் செய்யுளாகவே மேல் எண்ணப்பட்டது.

★★★

# IV

# கபிலர் இயற்றியவை என்று வழங்கும் நூல்கள் முதலியன

பண்டைத் தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினென்கீழ்க்கணக்கு என்னும் மூவகைப்பட்ட நூல்களிலும் கபிலர் இயற்றியனவாகக் காணும் பாட்டுக்களைப் பற்றி மேலே கூறியுள்ளேன். அவர் இயற்றியவை என்று வழங்கும் பிற நூல்களைப் பற்றி இங்கே சிறிது ஆராய்வோம்: 'பன்னிரு பாட்டியல்' என்னும் நூலிலுள்ள சில சூத்திரங்களும், பதினொன்றாந் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கும் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களும், கபிலரகவல் என்னும் ஒரு சிறு நூலும், சில தனிச் செய்யுட்களும் கபிலர் இயற்றியவை என்று வழங்கு கின்றன.

அவற்றுள், பன்னிருபாட்டியல் என்பது, [1]பன்னிரு புலவர்களாற் செய்யப்பட்ட சூத்திரங்களையுடையதொரு பாட்டியல் நூல். இதில் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்று இயல்கள் உள்ளன. இந்நூலில், கபிலர் இயற்றி யனவாக 8 சூத்திரங்கள் உள. அவை, எழுத்தியலில் 3, சொல்லிய லில் 5. அவற்றை ஈண்டுத்தருகின்றேன்.

---

1. பன்னிருவ ராவார்:

| | |
|---|---|
| 1. பொய்கையார் | 7. சேந்தம்பூதனார் |
| 2. பரணர் | 8. கோவூர்கிழார் |
| 3. இந்திரகாளியர் | 9. மாபூதனார் |
| 4. அவிநயனார் | 10. சீத்தலையார் |
| 5. கல்லாடனார் | 11. பல்காயனார் |
| 6. கபிலர் | 12. பெருங்குன்றூர்கிழார் |

என்பவர்.

அவை:

## எழுத்தியல்

1. குணபாற் பரிதி தென்பால் இயமன்
குடபால் வருணன் வடபாற் சோமன்
திசைமுகன் நடுவாந் தெய்வ நிலைகளில்
[2]குறிலைந் தவித்து முதன்மூன்றுங் கொள்கென
நெறியறி புலமை அறிஞர்நேர்ந் தனரே.

2. அருக்கன் இயமன் வருணன் சோமன்
பிரமனுந் தெய்வ நிலையெனப் பேசுவர்.

3. அகரமுத லாக முறையான் எய்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே.

## சொல்லியல்

1. நவையறு சீர்க்கணம் மங்கலச் சொற்பெயர்
இவையொரு நாலுக் கியம்புதல் சொல்லியல்.
2. ஈரசைச் சீரே மூவசைச் சீரே
நாலசைச் சீரே யோரசைச் சீரெனச்
சீர்வகை நான்குந் தெரிந்தனர் புலவர்.
3. ஈரசை யகவல் மூவசை நான்கும்
நேரிறில் வெள்ளை நிரையிறில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே.
4. மூவசை யொண்சீர்க் கணமென மொழிந்தனர்
ஈரசை நாலசை யோரசை யொழித்தே.
5. கணமே மூவசைக் கூட்ட மாகும்

என்பன.

பன்னிருபாட்டியலில் ஒரே செய்திக்குப் புலவர் பலர் இயற்றிய சூத்திரங்கள் உள்ளன. அதனால், பன்னிருவர் புலவர் தனித்தனியே செய்த பாட்டியல்களுள் சிலவற்றைச் சேர்த்து

இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது என்று சிலர் கூறுகின்றனர். ஆயின், ஒரே செய்தியைக் குறித்துப் புலவரொருவரே செய்தன வாகப் பல சூத்திரங்கள் உள்ளனவே, இதற்கு யாது காரணம் கூறுவரோ! மேற்குறித்த சூத்திரங்கள் எட்டனுள், 'அருக்கன் இயமன்', 'அகரமுதலாக' என்னும் சூத்திரங்களும், 'கணமே மூவசை' என்னும் சூத்திரமும் கூறியது கூறலாகக் கூறப்பட்டன வாதல் காண்க.

அன்றியும் பரிதி, சோமன், அருக்கன், பிரமன் என்பன போன்ற வடசொற்களும் வந்துள்ளன. மேலும், தொல்காப்பியத் தில் கொள்ளப்படாத நாலசைச் சீரைப் பற்றிய இலக்கணமும் காண்கின்றது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, இந்நூல், பிற்காலத்தவரொருவராலே செய்யப்பட்டிருக்க வேண்டும் எனத் துணியலாகும். பன்னிருவர் புலவராற் செய்யப்பட்ட பன்னிரு படலம் என்னும் நூலை கண்டார் ஒருவர், அதுபோல, பன்னிருவர் புலவர் செய்த பாட்டியல் என்று கொள்ளுமாறு இந்நூலைச் செய்திருக்கலாம். மேற்கூறியவற்றால், இந்நூலிலுள்ள 8 சூத்திரங்களும் கபிலர் இயற்றியன அல்ல என்பது தேற்றம்.

## மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை இருபது பாட்டுக் களையுடையது. சங்க நூல்களில் விநாயகரைப் பற்றிய செய்தி யாதுமே கூறப்படாமையின் அக்காலத்தில் நம் நாட்டில் விநாயக வணக்கம் நடைபெறவில்லை என்பது நன்கு அறியலாகும். எட்டுத்தொகை நூல்களில் சிலவற்றிற்கு, பிற்காலத்தில், கடவுள் வாழ்த்துச் செய்யுள் செய்த பெருந்தேவனாரும் விநாயகரைக் குறித்து வாழ்த்தினாரல்லர். [1]கீழ்க்கணக்கு நூல்களிலும் விநாயக

1. இ. வை. அனந்தராமையரவர்கள் பதிப்பித்துள்ள ஐந்திணை எழுபதில் விநாயக வணக்கம் காண்கின்றது. ஆயின், அந்நூலின் முகவுரையில், 'இக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஐயுறுதற் கிடமா யிருப்பினும் எனக்குக் கிடைத்த பிரதியில் இருத்தலால் விடாது பதிப்பித்துள்ளேன்' என்று அவர்கள் எழுதியிருத்தலானும், அச்செய்யுளின் சொற்களானும், அது பிற்காலத்தது எனல் போதரும்.

வணக்கம் காணப்படவில்லை. பிற்காலத்து நூல்களிலேயே முதலில் விநாயக வணக்கம் காணப்படுகின்றது. இவற்றால் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழ் நாட்டில் விநாயக வழிபாடு நடைபெற்றிலது என்பது அறியலாகும். **'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்'**[1] என்னும் நூலிலும் அவ்வாறே கூறப் பட்டுள்ளது. இவற்றால், பண்டைத்தமிழ்ப் புலவராய் விளங்கிய கபிலர், தமது காலத்தில் தமது நாட்டில் வழக்காற்றிலில்லாத கடவுளை வழிபட்டுப் பாடியுள்ளார் என்று கூறுதல் பொருத்த முடையதாகாது. அன்றியும், இரட்டை மணிமாலை போன்ற பிரபந்தங்களும் அவர் காலத்தில் தோன்றியிருக்கவில்லை. கட்டளைக்கலித்துறைப் பாட்டுக்களும் கபிலர் காலத்தில் வழங்க வில்லை. நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து முதலாய நூல்கள் நாயன்மார் காலத்திலாதல், அல்லது, சேக்கிழார் காலத்திலாதல் வழங்கி வந்தன என்று கூறுதல் அமையாதே! அவ்வாறே பிரபந் தங்கள் பலவும், கபிலர் வாழ்ந்த காலத்தில் வழங்கின என்றல் பொருந்தாதே. அவை, அவர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் பின்னர்த் தோன்றியனவே. [2]ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவேயாதலறிக. இவையெல்லா வற்றையும் ஆராயாது, பெய ரொற்றுமை ஒன்று மட்டுமே கருதி, கபிலதேவநாயனாரைக் கபிலர் என்னும் பழம்புலவர் என்று கோடல் மயக்கவுணர்வே யாகும். இனி, இந்நூலிலுள்ள பாட்டுக்களையும் சிறிது ஆராய்வோம்:

இந்நூலிலுள்ள பாட்டுக்களெல்லாம் சொற்செறிவும் இன்னோசையும் அமைந்தவை; அவற்றுள் பல பாட்டுக்கள் பொருட்சிறப்புள்ளனவாயும் விளங்குகின்றன; சிலபாட்டுக்கள் திரிபணியுடையன. இந்நூலில், விநாயகர் திருமாலுக்கு மருகர் என்றும் (7), மன்மதனுக்கு மைத்துனர் என்றும் (12) கூறப்பட் டுள்ளார். இவ்வாறு பழைய நூல்களுள் யாண்டும் கூறப்பட வில்லை.

---

1. மாணிக்கவாசர் வர. காலம்: பக்கம் 190
2. தொல். செய்: சூ.239. ந. உரை; தொல். புறத்: சூ. 30. ந. உரை.

மேலும், வாக்கு (1), விநாயகன் (5, 7), கணபதி (8, 15, 19), பணம் = படம் (9), போகபந்தத்தந்தம், நாகபந்தம், ஏகதந்தம் (10), நீலகண்டம், சிங்கம், சரணா, சரணங்கள் (12), அண்டத்தான் (13), அரன் (15), பத்தர், சித்தம் (18) முதலிய வடசொற்களும், வடசொற்றொடர்களும் வந்துள்ளன. இவற்றாலும் இந்நூல், பண்டைப் புலவராகிய கபிலரால் செய்யப்பட்டதன்று என்பது விளங்கும்.

## சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

இனி, **சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை**யைச் சிறிது ஆராய்வோம்:

இந்நூலில் முப்பத்தேழு பாட்டுக்கள் காண்கின்றன. இரட்டை மணிமாலையாவது, வெண்பாவும் கலித்துறையும் விரவி, அந்தாதித் தொடையான் இருபது பாட்டுக்களால் முடிவது என்பது, [1]பாட்டியல்களால் அறியப்படும். மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, இவ்விலக்கணத்திற்குப் பொருந்தி யுளது. இந்நூலோ, இவ்விலக்கணவமைதி இல்லாததோடு, வெண்பாவும் கலித்துறையும் இணையிணையாக வருவதாகிய முறையும் இறுதியில் இல்லாதிருக்கின்றது. இந்நூலுட் கதைகள் பல காணப்படுகின்றன. அவையாவன:

சிவபிரான் நஞ்சுண்ட காலத்து, உமாதேவி தம்கையாற் காத்தது 2
,, மழுவாளால் தாதையின்தாளை எறிந்தவர்க்கு அருள்செய்தது 2

---

1. 'வெண்பா முதலாக் கலித்துறை பின்வரும்,
இந்த இருபஃ திரட்டைமணி மாலை (பன்னிருபாட். 252)

'இரட்டை மணியிருபான் - ஏய்ந்தீர்
வெண்பா கலித்துறையாம்'. (வெண்பாப்பாட். செய்: 17)

'இருபது வெண்பாக் கலித்துறை யியையின்,
வருவ திரட்டை மணிமாலை யாகும். (இலக்கண-பாட்டியல். 59)

| | | |
|---|---|---|
| ,, | நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்தது | 3 |
| தேவரும் அயனும் மாலும் சேவற்கொடியானும் கூடிநின்று சிவபிரானுக்கு நஞ்சூட்ட எண்ணியது | | 17 |
| சிவபிரான் யானையுரி போர்த்தது | | 27 |
| ,, | தலைகொண்டு பலிக்கு ஊர்திரிந்தது | 31 |
| ,, | பிணமிடுகாட்டயல் வந்து நின் றாடியது | 36 |

முதலாயின.

அனங்கன் (3), கோமளம், நக்கர் (4), சடையான் (5), தவளம், சங்கரர் (6), மகுடம் (20), பூதப்படை, ஞானம் (22), சித்தம் (24, 37), கங்கணம், சிவன், நட்டம் (26), இலயம் (27), விதிவசம் (28), மதுகரம், நதி (29), வீரட்டானம் (31), உத்தமன் (35), சத்தி, தேசு (37) முதலான வடசொற்கள் பல வந்துள்ளன. அன்றியும், இந்நூலில் 6-ஆம் பாட்டு யமகமாக அமைந்திருக்கின்றது. மேலும், 'வைக்கின்ற' (2) என்று, கின்று என்னும் இடைநிலை யோடு கூடிய சொல் (பெயரெச்சம்) வந்துளது. இவையெல்லாம் கபிலர் காலத்தில் வழங்காதனவேயாம். இவற்றால், இந்நூல் கபிலரால் செய்யப்பட்டதன்று என்பது துணியப்படும்.

## சிவபெருமான் திருவந்தாதி

இனி, சிவபெருமான் திருவந்தாதி என்னும் நூலையும் சிறிது ஆராய்வாம். இதில், சிவபெருமானைப் பற்றிக் கூறியிருப்பவை:

| | | |
|---|---|---|
| சிவபெருமான் | தமது இடப்பாகத்தில் திருமாலை யுடையவர் - | 1, 2 |
| ,, | நஞ்சுண்டவர் - | 2 |
| ,, | வெண்டலையை உண்கலனாகக் கொண்டவர் - | 6 |
| ,, | மகளிர் கைவளைகளைக் கவர்ந்தவர் | 9 |
| ,, | அனங்கனைச் செற்றவர் - | 10 |
| ,, | சுடர்மூன்றனையும் மூன்று கண்ணாகக் கொண்டவர் | 11 |
| ,, | பிரமனும் மாலும் விண்ணுமண்ணும் தேட நின்றவர் | 49 |

| | | |
|---|---|---|
| ,, | ஆனையை யுரித்தவர் - | 67 |
| ,, | சூரியனுடைய பற்களைத் தொலைத்தவர் | 70 |

என்பன. இனி, 'வேங்கடத்து மேயான்' (15) என்று, வேங்கடமலை சிவபிரானது இருப்பிடமாகக் கூறப்பட்டுளது. ஆனால், பண்டைக்காலத்ததாகிய சிலப்பதிகாரத்தில் வேங்கடமலை திருமாலுக்குரியதாகவே கூறப்பட்டிருக்கின்றது.

அன்றியும், அங்கமலம், கமல வண்ணன் (3), அந்தரம் (4), பரஞ்சோதி (8, 56), பதி (9), அனங்கன் (10, 19), காபாலி (16), பத்தர் (18), விமலன் (20), அயம் = குதிரை (21), சலமுடி, சங்கரன், சங்கம், சலம் = அடம் (22), சங்கம் = வளையல் (23), பாசுபதன் (31, 82), உன்மத்தகம் (34), ஈசன் (35), புராணன், நட்டங்கம் (44), நக்கர் (45), மா தேவா (51), பண்டரங்கன், பவன் (54), பவனம், (55), பாவனை, (56), பதங்கன் (57), நட்டம் = நஷ்டம் (60), அலங்காரம் (64), சாமத்தன் (68), புண்ணியன் (73), தருப்பை (75), சடாமகுடர் (78), பாணி (78), பாதம் (82), சோதி (87), பாகீரதி (93), ஆலிங்கனம் (95) என்பன போன்ற வடசொற்கள் பல வந்துள்ளன.

இவையேயல்லாமல், 'ஐயம் பெய்கின்றேன்மேல், அனங்கன் ஐயம்பு எய்தான் (27), என்றும், 'அனங்கவே ளம்பகலம் டாயும்' (63), என்றும் மன்மதன் அம்புகள் எய்யுஞ் செய்தி கூறப்பட்டுளது. இச்செய்தி, பிற்காலத்து நூல்களிற் காணப் படுகிறதேயன்றிப் பண்டைக்காலத்து நூல்களில் யாண்டுங் காணப்படவில்லை. அகப்பொருட்பாட்டுக்களையேயுடைய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு என்னும் இந்நூல்களில், மன்மதன் ஐந்தம்புகளை எய்கின்ற செய்தி கூறப்படவேயில்லை. இதனானே, இவ்வந்தாதி பண்டைப் புலவராற் செய்யப்பட்டதன்று எனத் துணியலாகும். இவை நிற்க.

**அடுகின்றது** (46), **ஆழ்கின்றேன்** (58), **ஆகின்றன** (60), **அழிகின்றார்** (91), என்னும் நிகழ்கால வினைமுற்றுச் சொற்களும், **பெய்கின்றேன்** மேல் (27), என வினையாலணையும் பெயரும்

இந்நூலிற் காணப்படுகின்றன. வினைச் சொற்கள் இவ்வடிவங் களில் கபிலர் காலத்தில் வழங்கினவல்ல என்பதை, பழைய நூல்களில் யாண்டும் இவ்வாறான சொற்கள் வந்திலாமையான் அறியலாகும்.

இவ்வாறான அகச்சான்றுகளெல்லாவற்றையும் ஆராய்ந் தறியாதே பெயரொற்றுமை ஒன்று மட்டும் கருதி, இந்நூலைப் பண்டைப்புலவராகிய கபிலர் பேரில் ஏற்றுவது முறையல்லாச் செயலேயாம். ஆயின், 'எனையந்தாதி சொன்னவன் கபிலன்' என்று திருவாலவாயுடையார் திருவிளையாடல் கூறுகின்றதே எனின், திருவிளையாடற் புராணங்கள் சரித்திர ஆராய்ச்சிக்குத் துணையாவன அல்ல என்க. அதனைக் குறித்து ஈண்டு எழுதப் புகின் பெருகும் என்றஞ்சி விடுக்கின்றேன்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், பதினொன்றாந் திருமுறை யில் சேர்க்கப்பட்டுள்ள இம் மூன்று பிரபந்தங்களும் பண்டைப் புலவராகிய கபிலரால் செய்யப்பட்டன அல்ல என்பது தெளிவாதல் அறிக. இவற்றைக் கபில தேவநாயனார் என்னும் பெயருடைய பிற்காலத்தவரொருவர் பாடியிருக்கலாம் என்று கொள்ளுதலே அமைதி.

## கபிலரகவல்

கபிலரக்வல் என்னும் சிறு நூலொன்று நம் கபிலர் செய்தது என்று வழங்குகின்றது.

> 'ஆதி கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
> சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம்'
> (பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பல். 25)

என்பது கபிலரகவலைக் குறிப்பிடுவதெனத் தோன்றுகின்றது. அவ்வாறாயின், இந்நூல் பத்திரிகிரியார் காலத்திற்கு முற்பட்ட தாகும். இந்நூலின் வரலாறாவது: பகவன் என்பவனுக்கும் ஆதி என்பவளுக்கும் திருவாரூரில் பிறந்தவர் கபிலர். அவரை,

அவ்வூர்ப் பார்ப்பனனொருவன் எடுத்து வளர்த்து வந்தான். அவன், கபிலருக்கு உபநயனஞ் செய்யக் கருதிப் பார்ப்பனரை அழைத்த பொழுது, அவர்கள், 'பார்ப்பனக்குலத்திற் பிறவாத இக் குழந்தைக்கு உபநயனஞ் செய்ய யாம் உடன்படேம்' என்று மறுத்தனர். அதுகேட்டுப் பார்ப்பனன் வருந்திக் கொண்டிருக்கை யில், கபிலர், அப்பார்ப்பனரை நோக்கி, 'பிறப்பினால் சாதி வேறுபாடு கருதலாகாது' என்று நியாயம் கூறி அறிவுறுத்திய பாட்டு என்பது.

இந்நூலிற் கூறப்பட்டுள்ள முதன்மையான செய்தி மக்கட் பிறப்பில் சாதி வேறுபாடு இல்லை என்பதுவே யாயினும், வேறு சில செய்திகளும் கூறப்பட்டுள்ளன. அவையாவன: சிராத்தஞ் செய்வதனால் பயனில்லை என்பது; நால்வகைச் சாதிகளையும் இந்நாட்டில் நிலைநாட்டினவர் பார்ப்பனரே என்பது; தந்தையின் சாதியே மைந்தருக்கும் உரியதாகும் என்பது முதலாயின.

கபிலர் கடுங்கோவாழியாதனைக் கூறுமிடத்து, **'பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே'** என்று கூறியிருப்பதனாலும், தம்மைக் கூறுமிடத்து, 'அந்தணன் புலவன்' என்று அறிவித்திருப்ப தனாலும், அவர், பார்ப்பனக் குலத்தை உயர்வாக மதித்திருந்தமை பெறப்படும். அங்கனம் கூறிய அவர்தாமே,

'ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பில்ஈர்
இருவகை யாகநீர் இயம்பிய குலத்துள்
ஆண்பெண் மாறி அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதும் காண்கின் றிலிரோ?'

என்று கூறினார் என்பது அமையுமோ! ஈண்டு, இவர் கூறியுள்ள காரணம், 'ஞானவெட்டியான்'[1] என்னும் நூலிலும் காண்கின்றது. அதனை இயற்றினவர் திருவள்ளுவர் என்று கூறுகின்றனர். இதனை இயற்றினவர் கபிலர் என்பதும் அக்கூற்றுப் போன்றதேயாகும். நிற்க.

1. ஞானவெட்டியான். 545, 550, 551 முதலியன.

இச்செய்யுளுள் நானாவகை, பஞ்சேந்திரியம், சலம், சதுர், பாவனை, புத்திரர், மிலேச்சர், ஊணர், சிங்களர், சீனத்தர், பூசுரர், சண்டாளி, தரணி என்பன போன்ற வடசொற்கள் பல வந்துள்ளன. சங்க காலத்துப் பாட்டுக்களில் யவனரைத் தவிர, ஊணர், சீனத்தர், சிங்களர் முதலானவர்களின் பெயர்கள் வந்தில. [1]யவனர் என்பதற்குச் சோனகர் என்று நச்சினார்க்கினியர் பொருள் எழுதியிருக்கின்றார். இந்நூலின் ஆசிரியர், 'இட்டிடைச் சோனகர் யவனர்' என்று வேறு வேறாகக் கூறியுள்ளார். அன்றியும், 'எத்துணையர்' என்று வரவேண்டிய சொல் 'எத்தனைபேர்' என்று வந்துளது. இனி, காண்கின்றிலிரோ, இடப்படுகின்றதோ எனக் கின்று இடைநிலையோடுகூடிய நிகழ்கால வினைச் சொற்களும் காணப்படுகின்றன. இவற்றாலும், இந்நூலின் நடையாலும், இது பண்டைக் காலத்துப் புலவராகிய கபிலர் பாடியதன்று என்பது ஒருதலை.

இந்நூலில், கபிலர் தம்மோடு பிறந்தவர்களையும் அவர்கள் வாழ்ந்த இடங்களையும் கூறுகின்றார், இதற்கு ஆதாரமாகப் பழைய செய்யுட்களில் யாண்டும் யாதும் காணப்படவில்லை.

இந்நூல், சாதி வேறுபாடு கருதலாகாது என்பதற்குப் பற்பல காரணங்கள் கூறுகின்றது. ஆகலின் இது, சாதி வேறுபாடுகளை நோக்கிக் கொடுமை செய்தலைப் பொறாதானொருவனால் இயற்றப்பட்டதாகும். நிற்க.

## கபிலம்

கபிலம்' என்று ஒரு நூலின் பெயர் உரைகளில்[2] காணப்படுகின்றது. அந்நூல் இக்காலத்தில் இன்மையானும், வேறு சான்று காணப்படாமையானும் அஃது இவர் செய்ததுவே என்று துணிந்துகூற இயலவில்லை.

இனி தனிச் செய்யுட்களை நோக்குதும்:

---

1. 'வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்' (முல்லைப். 61) உரை.
2. தொல். சொல். வேற்றுமை மயங்கியல் : 30.

## கபிலரும் திருவள்ளுவ மாலையும்

திருவள்ளுவமாலையில் ஐந்தாம் பாட்டாகவுள்ள,

'தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி'

என்னும் பாட்டுக் கபிலர் பாடியதாகக் குறிக்கப்பட்டுளது. திருவள்ளுவரைக் குறித்தும் திருவள்ளுவமாலையைக் குறித்தும் வழங்கும் கதைகளுக்குப் பண்டை நூல்களில் சிறிதும் சான்று இன்மையின், அவை பிற்காலத்தே புனைந்துரையாக எழுதப் பட்டனவே என்பது அறிஞர்க்கு ஒப்ப முடிந்த தொன்றாகலின், இப்பாட்டும் கபிலர் பாடியதன்று எனக் கொள்ளுதலே அமைதி. அன்றியும், ஒரு நூலுக்குச் சிறப்புப்பாயிரம் கூறுபவர் அந்நூல் முழுவதையும் குறிப்பிடுதல் வழக்காறாகவும், எறிச்சலூர்மலாட னார், போக்கியார், மோசிகீரனார் என்பவர் முறையே அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் பகுதிகளில் உள்ள இயல்களின் தொகையையே கூறியிருப்பதாகக் காணுதலானும், சங்கப் புலவர் காலத்திற்குப் பிற்பட்டவராகிய பாரதம் பாடிய பெருந்தேவனார் பாட்டும் இந்நூலில் (திருவள்ளுவமாலையில்) இருத்தலானும், பிறவாற்றானும் இப்பாட்டுக்களெல்லாம் சங்கப் புலவர் பாடியன அல்ல எனவும், பிற்காலத்தவரொருவர் பாடியன ஆகும் எனவும் கொள்ளுதல் அமைதி.

## கபிலரும் தனிச் செய்யுளும்

இனி, 'நெட்டிலையிருப்பை' என்னும் பாட்டுக் கபிலர் பாடியது என்று திருவாலவாயுடையார் திருவிளையாடல் கூறுகின்றது. அதனைக் குறித்துத் தமிழ்நாவலர் சரிதை கூறுவது அமைவுடையதன்று என்று மேலே கூறியுள்ளேன். திருவால வாயுடையார் திருவிளையாடல், 'சங்கறுப்ப தெங்கள்குலம்' என்னும் செய்யுள் நற்கீரர் பாடியது என்று கூறுகின்றது. அது கூறுவனவெல்லாம் உண்மையன்று கோடல் அமைதியன்று. இச்செய்யுள் கபிலர் செய்ததுவேயாயின், அவர் செய்த தனிச் செய்யுட்களெல்லாந் தொகுத்த புலவர்கள் இதனையும் அச்

செய்யுட்களோடு சேர்த்திருப்பரே; அல்லது, பழைய உரையாசிரியர்களர்தல் எடுத்தாண்டிருப்பரே. அங்கனம் இன்மையின், இது கபிலர் செய்ததெனக் கொள்ளுதல் அமைவுடையதாகாது. இனி, 'கண்ணுழையா' என்னும் பாட்டும் இந்நியாயத்தாலும், அதன் சொல்லாலும் பொருளாலும் கபிலர் பாடியதன்று என்று ஒதுக்கப்படும்.

★★★

# V

# கபிலராற் பாடப்பட்டவர்

நள்ளி, ஓரி, அகுதை என்பவர்களைக் கபிலர் தம் செய்யுட்களில் குறிப்பிட்டுள்ளார்; காரி, பேகன், பாரி, விச்சிக் கோன், இருங்கோவேள், செல்வக்கடுங்கோவாழியாதன் ஆகிய இவர்களிடம் சென்று, அவர்களைப் பாடிப் புகழ்ந்திருக்கின்றார்; ஆரியவரசன் பிரகத்தனுக்காகக் குறிஞ்சிப் பாட்டைப் பாடினா ராயினும், அப்பாட்டினுள் அவ்வரசனைக் குறித்து யாதும் கூறவில்லை. அதனால், அவனைவிடுத்து, மற்றையோரைக் குறித்துக் கபிலர் கூறியிருப்பனவற்றை இங்கே எழுதுகின்றேன்.

### நள்ளி

நள்ளி என்பவன், சிறந்த வள்ளல்களுள் ஒருவன்; இரவலருக்கு நெடிய தேர்களையும் பெரிய களிறுகளையும் நல்குபவன்; மழைபோல் கொடுக்கும் கொடையினன்; சிறந்த குதிரையை உடையவன். இவன் மலையிலுள்ள காந்தட்பூ மிக்க மணமுடையது.[1]

### ஓரி

ஓரி என்பவன், வள்ளல்களுள் ஒருவன்; விற்பயிற்சி மிக்கவன். அதனால் வல்வில் ஓரி என்னும் பெயர் பெற்றான். கொல்லிமலை இவனுக்கு உரியதாயிருந்தது. அங்கே சிறந்த [2]பாவை ஒன்று உண்டு. இவன் காரி என்பவனாற் கொலை

---

1. அகம். 238
2. குறுந். 100

யுண்டான்.[1] அதன் பின்னர்க், கொல்லிமலை, சேரர் வேந்தனாகிய பெரும்பூட்பொறையனுக்கு உரியதாயிற்று.

### அகுதை

அகுதை, போர் புரிதலில் வல்லவன்; கூடல் என்னும் ஊரினன்.[2] இவனைப் பற்றி வேறொன்றும் இவர் பாட்டுக் களில் கூறப்படவில்லை.

### காரி

காரி மிக்க வன்மையுடையவன்; சிறந்த வள்ளல்; முள்ளூரினன்.[3] இவனது நாடு கடலையடுத்ததன்று.[4] தமிழ்நாட்டு மூவேந்தரும் இவன் துணையை வேண்டி, இவனுக்கு மிக்க பொருள் நல்குவர். இவன் வேந்தர்களிடமிருந்து தனக்குக் கிடைக்கும் பொருளெல்லாவற்றையும் இரவலருக்கு ஈபவன்;[5] புலவரனைவரையும் ஏற்றத் தாழ்வின்றி ஒரே நிலையில் மதிப்பவன்;[6] வேள்வி வளர்க்கும் அந்தணரை ஓம்பி, அவர்க்குப் பொருள் நல்குபவன்;[7] இரவல்ருக்கு எண்ணிறந்த தேர்களை வழங்குபவன். இவனைப் பாடிச்சென்ற புலவர் பரிசில் பெறாது வீணே மீண்டதில்லை.[8]

காரி, தன் மனையாளையன்றி வேறுமகளிரை நினையாத நல்லொழுக்கமுள்ளவன். இவன், மாவூர்ந்து சென்று பிறருடைய ஆனிரைகளைக் கவர்ந்து வருவான். இவன் ஓரியைக் கொன்று அவனூருக்குட் சென்றபோது, அங்கே மிக்க ஆரவாரம்

---

1. நற். 320
2. புறம். 347
3. புறம். 123; நற். 291
4. புறம். 122
5. } புறம். 121
6. }
7. புறம் 122
8. புறம். 124

உண்டாயிற்று.[1] ஓரியினது கொல்லி மலையைச் சேரலனுக் கீந்தவன் இவனே. இவனது வண்மையும் இயல்பும் மிக்க நயம்படக் கூறப்பட்டுள்ளன.[2] இவனது கானம் மிக்க மண முடையது. அங்குள்ள சந்தனமரம் சிறந்த நறுமணமுள்ளது.[3]

## பேகன்

பேகன் வள்ளல்களுள் ஒருவன். இவனது ஊர் மலையை யடுத்திருந்தது. இவன், தன் மனைவி கண்ணகி என்பவளைப் பிரிந்து பரத்தையொருத்தியுடனிருந்தபோது, கபிலர் முதலிய புலவர்கள் இவனை யணுகி, முன்போல் மனைவியுடன் கூடி வாழுமாறு வேண்டிக்கொண்டனர். இவன் நாட்டில் மலை வாழ்நர் (குறவர்), மழை வேண்டுங்காலத்து பலி தூவி மழை பெய்வித்தும், அது வேண்டாதபோது கடவுளைப் போற்றி விலக்கியும் பயிர் விளைவிப்பர்.[4]

## பாரி

பாரி கபிலருக்குச் சிறந்த நண்பன். இது, [5]'தந்தை தோழன்' என்று கபிலர்தாமே கூறியிருத்தலான் அறியப்படும்.

பாரி, தன்பால் வருபவர் எவராயினும் அவருக்குத் தவறாது வழங்கும் இயல்பினன்;[6] தன்னாட்டின் முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு நல்கினவன்;[7] தன்னைப் பாடும் பாணர் முதலியோருக்குத் தெளிவாகிய மதுவும், ஊனொடு கூடிய சோறும் வேண்டியாங்கு உதவினவன்;[8] இரவலருக்குத் தேர்களை வழங்கினவன்;[9] பரிசிலர், தன்னையே வேண்டினும் அதற்குடம்பட்டு, அவரெல்லையில் நிற்கும் இயல்பினன்;[10] மழையை ஒப்ப உலகு புரந்தவன்.[11]

---

1. நற். 320
2. புறம். 122
3. குறுந். 312
4. புறம். 143
5. புறம். 201
6. புறம். 106
7. புறம். 110
8. புறம். 113
9. புறம். 114
10. புறம். 108
11. புறம். 107

பாரி நெறி தவறாது அரசு செலுத்திவந்தான். அதனால், அவன் நாட்டில் மழை பிழையாது பொழிந்தது; ஆனினங்கட்குச் செழிப்பாகப் புல் கிடைத்தது; சான்றோர் பல்கினர்.[1]

பாரி பொருதலில் வல்லவன்; பகைவரை வென்றவன். தமிழ்நாட்டு முடிவேந்தரும் இவனோடு பொருது, வெல்ல முடியாராய்த் தயங்கி நின்றமையறியின்,[2] இவனது போர்த்திறன் புலனாகும். இவன் முல்லைக்கொடிக்குத் தேர் வழங்கிய செய்தி[3] பலவிடங்களிற் கூறப்பட்டுள்ளது. அஃது இவனது கொடை மடத்தை வெளிப்படுத்தும். இவன் இறந்தபின்னர் இரவலர் பாணர் முதலியோர் கையற்றுக் கவன்றனர்.[4]

## விச்சிக்கோன்

விச்சிக்கோன், பகைவர்களை வென்று அடக்கினவன்; யானைப் படைகளை உடையவன். இவன் நாடு மிக்க விளைவுடையது. பாரியின் புதல்வியரை வதுவை செய்துகொள்ளும்படி கபிலர் வேண்டிக்கொண்டதற்கு[5] இவன் இணங்காது மறுத்து விட்டான்.

## இருங்கோவேள்

இருங்கோவேள், வடநாட்டில் முனிவன் ஒருவன் செய்த வேள்வியில் தோன்றிய வேளின் மரபில் 49-ஆம் தலைமுறையில் பிறந்தவன்; துவராபதி என்னும் ஊரிலிருந்து ஆண்டவன்; மலைகளடர்ந்த நாட்டையுடையவன். 'பொன்படு மால்வரைக் கிழவன்' என்று கூறப்பட்டிருக்கின்றான். இவன், பகைவர் அஞ்சத்தக்க பெரும்படை யுடையவன்; பாணர்கள் வேண்டியன

---

1. புறம். 117
2. புறம். 109
3. புறம். 200, 201
4. பதிற். 61
5. புறம். 200

நல்குபவன்.[1] பாரியின் மகளிரை மணந்து கொள்ளுமாறு கபிலர் வேண்டிக் கொண்டதற்கு, இவன் உடன்படாது மறுத்து விட்டான். அப்பொழுது, அவர், இவன் முன்னோருள் ஒருவன், கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததனால் விளைந்த கேட்டினைக் கூறிவிட்டு, மனம் வருந்தி மீண்டார்.[2]

இருங்கோவேளுக்குப் **புலிகடிமால்** (புற. 201) என்னும் பெயர் உண்டு. அஃதாவது, புலியைக் கடிந்த பெரியோன் என்பதாம். வேள் வம்சத்தில் பிறந்தவனாகிய **சளன்** என்னும் வேந்தனொருவன் புலியைக் கொன்ற செய்தி, கன்னட மொழியிலுள்ள சாசனங்கள் பலவற்றில் காணப்படுகின்றது. அவற்றுள் [3]ஒன்றிற் காணுமாறு:

'விஷ்ணுவின் நாபிக்கமத்தில் **பிரமன்** தோன்றினான். பிரமனிடமிருந்து அத்திரி பிறந்தார். அவருடைய கண்ணி லிருந்து சந்திரன் பிறந்தான். சந்திரனுக்குப் புதனும், புதனுக்குப் புரூரவ னும், புரூரவனுக்கு ஆயு என்பவனும், ஆயுவினுக்கு நகுஷனும், நகுஷனுக்கு யயாதியும், யயாதிக்கு யதுவும் பிறந்தனர். யதுவின் காலமுதல் சந்திர வம்சத்துக்கு யதுவம்சம் என்று பெயர் வழங்கலாயிற்று. அவ்வம்சத்தில் சளன் என்பவன் தோன்றினான். ஒருநாள் அவன், ஸஹ்யாசலத்தின் அடிவாரத் தில் வேட்டையாடுகையில், ஒரு முயல் புலியொன்றனைத் துரத்திச் செல்லக்கண்டான். கண்டதும், அந்நிலத்தின் மேன்மையை அறிந்து வியந்துகொண்டே சென்றான். அப்பொழுது அங்கேயிருந்த திவ்யரிஷி ஒருவரைத் தாக்கு வதற்கு ஒரு புலி நெருங்கியது. அதனைக் கண்ட ரிஷி, அரசனை நோக்கி, 'பொய் சள' (பொய்-அடி. (கன்னடம்)) என்று கூற, உடனே அரசன், தன் கட்டாரியினால் அதனைக் கொன்றான். அதனைக் கண்டு மகிழ்வுற்ற ரிஷி சளனை நோக்கி, 'இன்று முதல்

1. புறம். 201
2. புறம். 201, 202
3. Epigraphia Carnatica Vol. V. Part II பேலூர்த் தாலுக்கா சாசனங்கள் 171.

உங்கள் வம்சம் 'பொய்சள' வம்சம் என்னும் பெயருடையதாகுக; புலிக்கொடியே உங்களுக்கு வெற்றிக் கொடியாய் விளங்குக[1]' என்று அருளிச் செய்தார். அதனால் அதுமுதல், அவ் யதுவம்சம் 'பொய்சள வம்சம்' என வழங்கலாயிற்று. சளன் அவ்விடத்தி லேயே நகரமைத்து அரசு செலுத்தினான். முயலின் வெற்றியைக் குறித்து, அவ்வூருக்குச் 'சசகபுரம்' என்று பெயரிட்டனர்' என்பது.

[2]வேறொரு சாசனத்தில் காணப்படுவது: 'சசகபுரத்தில், பத்மாவதி தேவியை ஜைனரிஷி ஒருவர் பூசித்துக் கொண்டிருக் கையில், ஒரு புலி அவர்மேற் பாய வந்தது. அவர் அதுகண்டு அஞ்சித் தம் கையிலிருந்த மயிற்பீலிக்கோலால் தடுத்து,

---

1. விஷ்ணு
|
பிரமன்
|
அத்திரி
|
சந்திரன்
|
புதன்
|
புரூரவன்
|
ஆயு
|
நகுஷன்
|
யயாதி
|
யது
|
சளன்

2. பேலூர்த் தாலூகா சாசனங்கள் 124

அப்பொழுது அங்கே வந்த சளன் என்னும் அரசனை நோக்கி, 'பொய் சள' என்று கூறினார். உடனே அரசன், அப்புலியைக் கொன்றொழித்தான். அதனால் அவன் 'பொய்சளன்' எனப் பட்டான்; அவன் வம்சமும், 'பொய்சள' வம்சம் என வழங்கப் பட்டது' என்பது.

[1]மற்றொரு சாசனத்தில் காணப்படுவது: 'முனிவன், தன் கையிலிருந்த மயிற்பீலிக்கோலைக் கொடுத்து, புலியை அடிக்கும் படி ஏவினான். அவ்வாறே அரசன் அதைக்கண்டு, அப்புலியை யடித்துக் கொன்றான்' என்பது. கன்னட பாஷையிலுள்ள **'யசோதர சரித்ரெயும்'**[2] இவ்வாறே கூறுகின்றது. வசந்த காலத்தில் பூசனை நடந்ததனால், பத்மாவதி தேவிக்கு 'வாசந்திகா தேவி' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

## கடுங்கோ வாழியாதன்

கடுங்கோவாழியாதன் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றும், சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றும் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றும் கூறப்படுவான். இவன் பெயர் 'செல்வக்கடுங்கோ ஆழியாதன்' என்று [3]நற்றிணை உரையாசிரியர் குறித்துள்ளார். ஆயினும், ஆழியாதன் எனப் பிரித்துக் கூறுவது அமைதியாகத் தோன்ற வில்லை. என்னெனின், 'ஆயிர வெள்ள வூழி, வாழி யாத வாழிய பலவே'[4] என்று காண்டலான் என்க.

கடுங்கோவாழியாதன், சேரமான் அந்துவனுக்கு மருமான்; பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன்.[5] இவனுக்குப்பின் அரசு புரிந்தவன், அதிகமான் தகடூர் எறிந்த பெருஞ்சேர விரும்பொறை

1. பேலூர்த் தாலூகா சாசனங்கள். 112
2. யசோதர சரித்ரெ. 1:9
3. நற்றிணை. பாடினோர் வரலாறு: பக்கம். 21
4. பதிற். 63
5. பதிற். 7-ஆம் பத்துப் பதிகம்

என்பான். இனி, செல்வக்கடுங்கோவினைக் குறித்துக் கபிலர் கூறியிருப்பவற்றைத் தொகுத்து எழுதுகின்றேன்.

கடுங்கோவாழியாதன் சிறந்த நற்குணங்கள் அமையப் பெற்றவன். அதனாலேயே, பாரி இறந்த பின்னர்க் கபிலர் அவன்பாற் சென்றனர். இதனை,

> 'ஈத்த திரங்கான் ஈத்தொறும் மகிழான்
> ஈத்தொறும் மாவள் ளியனென நுவலுநின்
> நல்லிசை தரவந் திசினே' (பதிற். 61)

என்று அவர்தாமே கூறியிருத்தலான் அறியலாகும்.

கடுங்கோவாழியாதன் அரசாட்சியை மேற்கொண்ட காலத்தில் அந்நாடு சிறியதாயிருந்தது. ஆயினும் இவன் ஒடுங்காத ஊக்கமும் மடங்காத ஆண்மையும் உடையவனாய், அரசர் பலரை வென்று அவர்கள் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான்;[1] நால்வகைப் படைகளுடன் பகைவர் மேற்சென்று போர்புரிந்து வெற்றி பெற்றான்; சோழனையும் பாண்டியனையும் வென்றான். பிற அரசர்களை வென்றவர்களும் இவனுக்குத் தோற்று, இவனைச் சரணடைந்தனர்.[2] பகைவர் திறைதந்தா லன்றி இவன் வஞ்சினந் தணியான்; ஊருக்கும் மீண்டு செல்வான். இவன் மறவரும் பகைவர் நாடுகளைக் கைப்பற்றினாலன்றிப் பொருதல் ஒழியார்; உண்ணாதேயும் பலநாள் போர்புரிவர்;[3] தங்கள் உடல் சிதைந்து குருதி பாயினும் பின்னிடுதல் இலர்.

வாழியாதன் தன்னால் அழிவுற்ற பகைவர் நாடுகளை முன்போல வாழ்விக்கும் இயல்பினன். இவன், தன் முன்னோர் களைப் போன்றே தானும் நெறி தவறாது உலகம் செழித்தோங்க ஆட்சி செய்தான்.[4]

---

1. புறம். 8
2. பதிற். 63
3. பதிற். 68
4. பதிற். 69

செல்வக்கடுங்கோ வாழியாதன் சிறந்த நல்லியல்பு வாய்ந் தவன்; அந்தணர்களை மட்டும் வணங்குபவன்; நண்பர்களுக்கு மட்டும் அஞ்சுபவன்.[1] தன்னை யடைந்தோரை வாழ்விப்பவன்; படைவீரரைக் காப்பவன்;[2] நகை மொழியிலும் பொய்யுரையாத வாய்மையினன்;[3] பிறர் புறங்கூறுஞ் சொற்களை ஏற்றுக்கொள்ளாத இயல்பினன். இவனது பெரும்புகழ், ஏனை வேந்தர்களின் புகழைத் தாழ்வித்து, மேன்பட்டு விளங்கிற்று.

நம் சேரர் பெருமான், ஒப்புயர்வில்லாத வண்மை யுடையவன்; வேள்வி செய்து முடித்த வேதியர்களுக்கு அருங் கலங்களை நீர்வார்த்துக் கொடுப்பான். அதனால், இவன் கோயில் முற்றம் சேறாயிருக்கும்.[4] நம் கடுங்கோ வாழியாதன் பாணர் முதலியோருக்கு உயர்ந்த பலவகை நறவினை ஓலக்கத்திலிருந்தே நல்குபவன்;[5] புலவர்களுக்குச் சிறந்த உணவை உதவுபவன். பகையரசர்களிடமிருந்து பெற்ற களிறுகளையும் நெற்குவியலை யும் இரவலருக்கு மிகுதியாக ஈபவன்;[6] தன்னைப் பாடி வருங் கூத்தர் முதலாயினோர் தன்னை வந்து காணுவதன் முன்னரே, அவர்கட்குக் குதிரையும் எருதும் ஈந்து அனுப்புமாறு ஆணையிட்டிருந்தான்.[7] இவன், தன் வாழ்நாள் முழுவதும் உலகத்தாருக்கு நன்மையே செய்து வந்தான். அதனாலேயே கபிலர்,

'நனந்தலை **யுலகம் செய்தநன் றுண்டெனின்**
அடையடுப் பறியா அருவி யாம்பல்
ஆயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே' (பதிற். 63)

---

1. பதிற். 63
2. பதிற். 65
3. பதிற். 70
4. பதிற். 64
5. பதிற். 65
6. பதிற். 66
7. பதிற். 64

என்று வாழ்த்துவாராயினர். இவன், பல வேள்விகளைச் செய்து தேவர் கடனையும், வேதம் முதலிய கேள்விகளைக் கேட்டு முனிவர் கடனையும், நற்புதல்வரைப் பெற்று முன்னோர் கடனையும் தீர்த்தவன்;[1] கற்பிற் சிறந்த துணைவியோடு நல்வாழ்வு வாழ்ந்தவன்.

இனி, பதிற்றுப்பத்தில் 7-ஆம் பத்தின் பதிகத்தால், கடுங்கோ வாழியாதன் தன் நாடுகளிலெல்லாம் ஊர்களை நன்கு நிலைபெறுத்தினான் என்பதும், திருமாலை வழிபட்டு, அதற்காக **ஒகந்தூர்** என்னும் ஓர் ஊரை விடுத்தான் என்பதும், புரோகிதனிலும் அறநெறி மிகுதியாக அறிந்திருந்தான் என்பதும், கபிலருக்கு நூறாயிரங் காணமும், **நன்றா** என்னுங் குன்றிலேறித் தன் கண்ணிற் கண்ட நாடுகளும் கொடுத்தான் என்பதும் அறியப்படும்.

## கழாத்தலையார்

கழாத்தலையார், சிறந்த புலமை வாய்ந்தவர்; பரணர் காலத்தவர். இவர், கபிலர் காலத்திற்குச் சிறிது முற்பட்டிருந்தவராவர். அன்றி, கபிலரின் இளமைப் பருவத்தில் இவர் முதிர்ந்த பருவத்தினராய் இருந்திருக்கலாம். கழாத்தலையார், தம்மை இகழ்ந்த அரசனது அரையம் என்னும் ஊர் கேடுறுமாறு முனிந்தனர்[2] என்பது கபிலர் பாட்டினால் தெரிகின்றது.

★ ★ ★

1. பதிற். 70
2. புறம். 202

# VI

# கபிலர் பாட்டுக்களால் அறியப்படுபவை

## மலைகள்

### அயிரை மலை

அயிரைமலை சேரநாட்டிலுள்ளது; பல சிகரங்களை யுடையது; மிக்க முழக்கத்தோடு பாயும் பல அருவிகளை உடையது. 'அயிரை நெடுவரைபோலத் தொலையாதாக நீ வாழும் நாளே' (பதிற். 70) என்று சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் வாழ்த்தியிருக்கின்றனர்.

### கொல்லிமலை

கொல்லிமலை ஓரிக்கு உரியதாயிருந்தது (குறுந். 100); பின்னர்ச் சேரருக்கு உரியதாயிற்று. இது, பிற்காலத்தில் சோழருக் குரியதாயிருந்தது என்பது, 'கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவர்' என்பதனால் (தனிப்பாடல்) அறியப்படும். கொல்லி மலையில் அழகான பாவையொன்று உண்டு.

### நேரிமலை

நேரிமலை சேரருக்கு உரியது. செல்வக்கடுங்கோ வாழி யாதனை, 'கல்லுயர் நேரிப் பொருநன், செல்வக் கோமான்' (பதிற். 67) என்று கூறியிருப்பது காண்க. பிற்காலத்து நூலில் (சூடாமணி நிக. 2:19) இது, சோழருக்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

## பறம்பு மலை

பறம்பு மலை வேள்பாரிக்கு உரியது. இம்மலை அகன்ற பரப்பினது. இதில் எந்நாளும் அருவி ஒழியாமற் பாய்ந்து கொண்டிருக்கும்; சுனை பல உண்டு;[1] சுனைகளைப் பிறர் அணுகிக் காணமுடியாதவாறு மலையைக் காவலர் காத்திருந் தனர்.[2] சுனையின் நீர் தெளிவினதாயும் மிக்க குளிர்ச்சியினதாயும் இருக்கும். மலையில் நீர் நிரம்பியிருந்ததனால் நிலவளம் நிறைந் திருந்தது. பலாமரங்கள் மிக்கிருந்தன.[3] மரங்கள் காலமல்லாத காலத்திலும் பயன் தருபவாயின.[4] உழவர் உழுது பயிரிடாமலே, நெல், பழம், கிழங்கு இவை உண்டாகும். இனியதேன் அகப் படும்.[5] தினை முதலியவை நன்கு பயன்தரும். இம்மலையில் மயில்கள் அகவிக் களிக்கும்; கலைகள் துள்ளித் திரியும்.[6] இம்மலை, தன் புகழால், நெடுந்தொலையிலிருப்பவர்களுக்கும் விளக்கித் திகழ்ந்தது.[7]

## பொதியில்

இது பாண்டியனுடையது. இங்கு வேங்கை மரங்கள் செழிப்பாக வளரும். (கலி. 57)

## முள்ளூர் மலை

இது மலையமான் காரிக்கு உரியது. (புற. 123) இங்கு மழை மிகுதியாகப் பெய்யும்.

---

பறம்புமலை.
1. புறம். 109
2. புறம். 337; நற். 253
3. நற். 253
4. புற. 116
5. புறம். 109
6. புறம். 116
7. புறம். 114

## ஊர்கள்

1. **அரையம்** - இது, **சிற்றரையம், பேரரையம்** என இரண்டு பிரிவுடையது. வேளிர்மரபினர் இதனை ஆண்டு வந்தனர். அவர்களுள் ஒருவன், கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்து கூறியதனால் இவ்வூர் அழிவுற்றது. (புற. 202)
2. **இடங்கில்** - சிறந்ததோரூர் (நற். 65)
3. **கூடல்** - பாண்டியனுடையது. (கலி. 57)
4. **கொடுமணம்** - அரிய கலன்களுக்குப் பெயர் பெற்றது. (பதி. 67)
5. **துவரை** - இஃது இருங்கோவேளினது (புறம். 201) இது, துவார சமுத்திரம் எனப்படும்; மைசூருக்கு வடமேற்கில் சுமார் ஐம்பது மைல் தொலைவில் உள்ளது. இப்பொழுது இதற்கு 'ஹளெபீடு' (பழைய வீடு) என்று பெயர் வழங்குகின்றது.
6. **பந்தர்** - சிறந்த முத்துக்கள் கிடைக்குமிடம். (பதிற். 67)
7. **முள்ளூர்** - இது, மலையமான் காரியின் ஊர். இதனை யடுத்த கானம் நறுமணம் மிக்க பூக்களை உடையது. (குறுந். 312)

## சில செய்திகள்

கடவுள், பொருள்களின் உயர்வு இழிவு கருதாது ஏற்றுக் கொள்வர்.[1]

வடபுல வாழ்நர் எக்காலத்தும் இன்ப வாழ்க்கை யுடையர்.[2]

கண்ணன் கருநிற முள்ளவன்.[3]

பலராமன் வெள்ளைநிற முள்ளவன்.[4]

மார்பில் மூன்று வரியுடைமை உத்தமவிலக்கணம்.[5]

உயர்குடியின் சால்பும் செம்மையும் பிறவும் கெடின், பின்னர் அவற்றை ஆக்குதல் இயலாது.[6]

---

1. புறம். 106
2. பதிற். 68
3,4. நற். 32
5. குறிஞ்சிப். 123 உரை
6. குறிஞ்சிப். 15-17

மராமரத்தின் அடியில் கடவுள் இருத்தல்.[1]

முருகன் பகைவரைக் கொல்லுதற்கு ஒளியுள்ள வேலை ஏந்தியது.[2]

வரையரமகளிர் மிக்க மென்மை வாய்ந்தவர்;[3] அவர் மலையிற் பந்தாடுவர்; பந்தாடிய இளைப்புத்தீர அருவியாடுவர்.[4]

அந்தணருக்குத் தாமரைப்பூமாலை உரியது.[5]

பார்ப்பனக் குறுமகன் குடுமித்தலைய னாதல்.[6]

நீரில் நெடுநேரம் மூழ்கினால் கண் சிவப்பாதல்.[7]

நெல்லை அளக்கும்போது உறையிட்டு எண்ணுதல்.[8]

கள்வர், தாம் கருதிய பொருளை நோக்காததுபோல நோக்குதல்.[9]

வாரணவாசியில் இருப்பவர் பிறர் வருத்தத்தைத் தம் வருத்தமாகக் கொள்ளுதல்.[10]

சனி புகையினும், வெள்ளி தெற்கோடினும், தூமந்தோன்றினும் மழை பெய்யாமை.[11]

வெள்ளி நன்னாளில் இருப்பின், மழை பெய்தல்.[12]

காற்றினால் மேகங்கள் ஒன்றோடொன்று கலாவுதலின் முழங்கி மின்னி மழை பெய்தல்.[13]

உருமு, அரவினை எறிதல்.[14]

யாழ் இருகோடும் வளைந்திருப்பது.[15]

பாலைப்பண்கள், பிற பண்களினும் வருத்தந்தரும் உறுப்புடையவை.[16]

நைவளம் (நட்டராகம்) பாலையாழ்க்குரிய பகற்பண்.[17]

தொண்டகப்பறை குறிஞ்சிநிலத்துக் குரியது.[18]

மகளிர்க்குப் புணர்ச்சியினால் கூந்தலில் மணம் உண்டாதல்.[19]

---

1. குறுந். 87
2. குறிஞ்சிப். 51, 2
3. ஐங். குறிஞ். 55; குறிஞ். 195
4. கலி. 40
5. கலி. 52 உரை
6. ஐங். 202
7. அகம். 278
8. பதிற். 66
9. கலி. 61
10. கலி. 60 உரை
11. புற. 117
12. பதிற். 69
13. குறிஞ்சிப். 48-53
14. அகம். 182
15. பதிற். 66
16. பதிற். 65
17. குறிஞ்சிப். 146
18. அகம். 118
19. நற். 368

மகளிர் தலைவனைப் பிரிந்துறையும் நாட்களில் திதலையும் மாமையும் தேய்தல்.[1]

மகளிர்க்கு நுதல், கண், மார்பு இவற்றில் பசலைநிறம் தோன்றுதல்.[2]

மாமை நீலமணியின் நிறம் போல்வது.[3]

சுணங்கு வேங்கைமலரின் நிறம் போல்வது.[4]

மேகலை, எண்கோவையை யுடையது.[5]

மகளிர், 'தலைப்பாளை' என்னும் அணியைத் தலையில் அணிதல்.[6]

துகில் வெண்ணிற முடையது.[7]

வில்லில் அரவின் பொறிபோன்ற பொறி இருத்தல்.[8]

தேன் முதிர்ந்தால் அதில் ஓரி (நீல நிறம்) பாய்தல்.[9]

## வழக்கங்கள்

**அந்தணர்,** மகளிர் விளக்கேற்றும் நேரத்தில், மாலைக் கருமம் செய்வர். (குறிஞ்சிப். 224, 25)

**வணிகர்,** பண்டங்களைப் பையிற் போட்டுக்கொண்டு ஊர்தோறும் போய் விற்பதுண்டு. (ஐங். குறிஞ். 71)

**இல்வாழ்வோர்,** விருந்தினரும் சுற்றத்தாரும் உண்டபின், மிச்சிலை உண்ணுவர்;[10] விருந்தினருக்குச் சிறந்த உணவை அளிப்பர்;[11] வருவோர்க்கு இல்லை என்னாது உணவளிப்பர்.[12] வளர்பிறைக் காலத்தில் வதுவை நடைபெறும்.[13] மணஞ்செய் வித்தற்கு மணமகனது குடி, குணம் முதலியவற்றை ஆராய்ந்து

1. ஐங். குறிஞ்: 31
2. நற். 1; குறுந். 13; நற். 225
3. கலி. 48
4. ,, 57
5. ,, 56 உரை.
6. கலி. 59 உரை
7. குறிஞ்சிப். 55
8. கலி. 50
9. புறம். 109.
10. குறிஞ்சிப். 205-207
11. குறிஞ்சிப். 204-206
12. குறிஞ்சிப். 201-203
13. அகம். 2

ஒப்புக்காண்பர்.[1] பெண்ணின்தமர், அவள் கையைப்பற்றி மண மகனுக்குக் கொடுப்பர்.[2] ஆடவர், தாம் விரும்பிய பெண்டிரைப் பெறாராயின், ஊர் மன்றத்தில் மடலூரும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டு.[3] அயலாருக்குப் பொற்கரகத்தில் நீர் வார்த்தல்[4] வழக்கம். கடவுளருக்கு மலர்தூவி, நறை விரை முதலியன கொடுத்து, வாழ்த்தி வணங்குவதுண்டு.[5] கொடையாக வழங்கும் பொருள்களை நீருடன் நல்குதல்[6] மரபு. நன்னாள், புள், கண்கள் தோள்கள் துடித்தல் ஆகிய இவற்றால் பலன்காணும் [7]வழக்கம் உண்டு. நற்சொல் சொன்னோரை வாழ்த்துதல்[8] மரபு.

## ஆடவர்

ஆடவர், குஞ்சியில் தகரச்சாந்து பூசுதலும், அகிற்புகை யூட்டுதலும் உண்டு.[9] மயிர்ச்சாந்து உலரும்படி மயிரைக் கோதி விரலால் உளர்த்துவர்.[10] தோளில் வீழ்ந்து அலைக்கும்படி, காதில் அசோகந்தளிரைச் செருகுதல் உண்டு.[11] ஆடவர், மார்பிற் சந்தனம் பூசுவர்;[12] உடை கலையாதிருப்பதற்காக அதன்மேல் கச்சை கட்டுவர்.[13] கச்சை, நுண்ணிய தொழில்கள் செய்யப் பெற்றி ருக்கும்.

## மகளிர்

இளமகளிர் தெருவில் மணல்வீடு கட்டி விளையாடுவர்.[14] மரத்தாற் செய்த தூதையையும் பாவையையும் வைத்து விளை யாடுதல் உண்டு.[15] அவர், மரத்திற் கயிறு தொடுத்து ஊசலாடுவர்.[16]

---

1. குறிஞ்சி. 30-31
2. குறிஞ்சி. 231-232
3. கலித். 58
4. கலித். 51
5. குறிஞ். 6-8
6. பதிற். 64
7. புறம். 124; ஐங். குறி:18
8. நற். 65
9. குறிஞ்சிப். 108, 110
10. ,, 109
11. ,, 119-120
12. ,, 120, 21
13. குறிஞ்சி. 125
14. கலி. 51
15. கலி. 59
16. நற். 222

சிறுமியர் தைநீராடும் வழக்கம் உடையவர்.[1] அவர் நோன்பெடுத்து வீடுதோறும் பாடிச் சென்று ஐயம் ஏற்றும், அதனை இரந் தோர்க்கீந்தும், சிறு சோறட்டு ஆயத்தார்க்கிட்டுங் களிப்பர்.[2] இளமகளிர் கூந்தலைப் பின்னிவிட்டிருப்பர்.[3]

மகளிர், தோளில் தொய்யிலால் கரும்புபோல எழுதிக்கொள்ளுதல் வழக்கம்.[4] கணவரைப் பிரிந்துறையும் மகளிர் சுவரிற் கோடிட்டு நாட்களை எண்ணுதல் உண்டு.[5] கணவரை இழந்த பெண்டிர் நூல் நூற்றுக் காலங்கழிப்பர்.[6] மகளிர் குவளையின் முழுப்பூவாற் செய்த தழையை உடுத்தலும், புறவிதழ்களை யொடித்துத் தழை கட்டி அவற்றை ஒழுங்குபடக் கொய்து அணிதலும் வழக்கம்.[7] பொன்னாற் பலவகைப் பூக்கள் செய்து கூந்தலில் அணிதலும், மகரவாயாகச் சமைத்த தலைக் கோலத்தைக் கூந்தலில் வைத்து அணிதலும், பொன்னைக் கூறுபடுத்தின வகிர்களைக் கூந்தலில் வைத்து, இடையிடையே தாழம்பூவின் போழையிட்டு ஒப்பனை செய்தலும் உண்டு.[8] மகளிர் பந்தாடுதல் மரபு.[9]

## ஊர்

சிற்றூர்களுக்கு நாற்புறத்தும் முள்வேலியிட்டிருப்பர்.[10] குரம்பைகட்குப் புல் வேய்வர்.[11] அவற்றின் முன்றில்களில் பீர்க்கு, சுரை முதலிய கொடிகள் படரவிட்டிருப்பர்.[12]

---

1, 2 . கலி. 59-இதுவே, 'மார்கழி நீராட்டம்' என்று பிற்காலத்தில் வழங்கு கின்றது.

3 குறுந். 246

4 கலி. 63. இக்காலத்தில் பச்சை குத்திக்கொள்ளும் வழக்கும் உளது. இது தொய்யிலெழுதுதலினின்று வந்ததாதல் வேண்டும்.

5 பதிற். 68

6 நற். 353

7 புறம். 116; குறிஞ்சி. 101

8 கலி. 55

9 ஐங். குறிஞ்: 95

ஊர் :

10 புறம். 116

11 புறம். 120

12 புறம். 116

## பயிர்த் தொழில்

கார்காலத்தில் பல சால் உழுது வரகு விதைப்பர். வரகிற்குக் களையெடுக்கும் வகையிற் 'பல்லியாடுதல்'[1] உண்டு. மலையில் அருவிப்பக்கங்களில் ஐவனநெல் வித்தி விளைப்பர்.[2] பயிருக்குத் தீங்கு நேராதபடி பொய்ம்மை உரு[3] அமைத்துக் கட்டிப் பயிரிடையே நிறுத்திவைப்பர். பொய்ம்மையாகச் செய்த புலியுருவிற்குக் கழற்சிக்காயைக் கண்ணாக அமைப்பர்.[4] வேங்கை மரத்திற் பரணமைத்து,[5] அதன் மேலிருந்து கிளியோப்புவர். தழல், தட்டை, குளிர் முதலியவற்றைக் கிளி கடியுங் கருவிகளாக வழங்கிவந்தனர்.[6]

## உணவு

தேன் சிறந்த உணவாகக் கொள்ளப்பட்டிருந்தது. அதனை மூங்கிற் குழாயில் வார்த்து, நிலத்தினுட் புதைத்துவைத்துச் சில காலத்தின் பின்னர் எடுத்து அருந்துவர்.[7] கள்ளைப் பனங்குடையில் ஊற்றிப் பருகுவர்.[8] கட்கடையில் கொடிகட்டப் பட்டிருக்கும்.[9] சிலர் ஈயலைத் தயிரோடு சேர்த்துப் புளிங்கறி சமைப்பதுண்டு.[10] நெய்யிற் கடலையைச் சேர்த்துச் சோறு சமைப்பர்.[11]

## வீரர்

வீரர் போருக்குச் செல்கையில் முரசும் உடன் செல்லும். போர் தொடங்குமுன் முரசு முழங்கும்.[12] மணல்மேடு களிலிருக்குங் குருகுகளைப் படைவீரருக்கு உவமை கூறி யிருத்தலின்,[13] அவர்கள் வெண்ணிற உடையைத் தரித்திருந்தனர் எனக் கருதுதலாகும்.

---

1. புறம். 120 இது, 'பயிரடிப்பு' என்று தென்னாட்டில் வழங்கும்.
2. குறுந். 100
3,4. ஐங். 246
5. நற். 373
6. குறிஞ்சிப். 43, 44
7. புறம். 120
8. நற். 253
9. பதிற். 68
10. புறம். 119
11. புறம். 120
12. பதிற். 68
13. நற். 291

| | |
|---|---|
| **யானை** | யானைக்கு மணிகட்டுதல் வழக்கம்.[1] |
| **குதிரை** | குதிரையைத் தாற்றுக்கோலால் விரையச் செலுத்துவர்.[2] |
| **நாய்** | நாயைக் கோட்டால் ஊதி அழைப்பதுண்டு.[3] |
| **முழவு** | முழவின் கண்ணில் மண் பூசுதல் உண்டு.[4] |
| **வளை** | வளை, அரத்தால் அராவிச் செய்யப்படும்.[5] |
| **தூண்டில்** | தூண்டிலால் மீனைப் பிடிப்பர்.[6] |

இவையேயன்றி, உரலில் நெல் முதலியன குற்றும்போது தலைவனை வாழ்த்திப்பாடுதல்,[7] மதயானையை நீர்க்குச் செல்ல விடுங்காலத்துப் பறையறைதல்[8], மழைக்காலத்தில் குன்றத்தைக் காப்பாளன் காத்திருத்தல்[9] முதலிய வழக்கங்களும் அறியப் படுகின்றன.

## குறவர்

குறவர் வாழும் குடிசைகள், குறிய கால்களை உடையவை; கூரை இருவியால் வேயப்படும்.[1] குறவர் உழுது பயிரிடுவர்; பயிரிடு முன், அந்நிலங்களில் உள்ள மரங்களை வெட்டிப் புகைப்பர்; செடிகொடிகளை அழித்து எரிப்பர்[2]; மழை வேண்டுங் காலத்தில் கடவுளைப் பேணி வேண்டுவர்; வேண்டாத காலத்தில்

---

1. புறம். 201
2. கலி. 50
3. அகம். 318
4. பதிற். 61
5. நற். 77
6. ஐங். 278.
7. கலி. 40
8. கலி. 56
9. ஐங். 206

குறவர்,

1. குறிஞ்சிப். 153
2. நற். 353; குறுந். 291; ஐங். 253.

அவ்வாறே கடவுளை வேண்டி, அதனைப் போக்குவர்[3]; தினையரிகாலில் அவரையை (மொச்சை) விளைவிப்பர்[4].

குறவர், தினையரிசியையும், கிழங்கினையும் உணவாகக் கொள்ளுவர்;[5] மாவடுக்களைத் தொகுத்து வைத்துக்கொண்டு பயன்படுத்தலும் உண்டு.[6] அவர் தெளிந்த தேனை அருந்துவர்;[7] உணவுப்பொருள் இல்லாத நாளில் யானை மருப்புக்களை விலைக்கு விற்று உண்பர்[8]; கண்ணேணியை அமைத்து, அதில் ஏறித் தேன்கூடுகளை அழித்துத் தேன் எடுப்பர்.[9] குறவர், வேங்கைமலர் சூடுவர்;[10] முருகவேளைக் குறித்து இன்னியங் கறங்கப் பாடி ஆடுவர்;[11] அவற்கு மறி முதலியன பலி இடுதல் உண்டு.[12] குறவர், மகப்பேற்றைக் கருதி முருகனை வழிபடுவர்[13]; பறை முழங்க, மகளிரொடு தெருவில் கூத்தாடுவர்[14]; வேங்கை மரத்தின் கீழிருந்து மணம் பேசி உறுதிசெய்வர்.[15] வேங்கைப்பூ மலருங்காலம் அறிந்து, சிறுவர், 'புலி புலி' என்று கூவுதல் வழக்கு.[16]

---

3. புறம் 143. இத்தகைய வழக்கம் பர்மாவில் உண்டு.
4. ஐங். 286
5. புறம். 143; ஐங்குறு. 208.
6. ஐங். 213.
7. குறிஞ்சிப். 155
8. குறுந். 100.
9. கலித். 39
10. அகம். 118
11. அகம். 382
12. ஐங்குறு. 210 உரை.
13. ஐங்குறு. 257
14. அகம். 118
15. கலித். 41
16. குறுந். 241

## குற மகளிர்

குறத்தியர் வேங்கைப்பூவினைச் சூடுவர்;[1] சந்தனக் கட்டையை விறகாக எரிப்பர்.[2] கணவன் அம்பெய்து கொன்று தந்த பன்றியை அறுத்து, அவன் மனைவி மற்றை வீடுகளுக்கும் பகுந்து கொடுப்பாள்.[3] இளமகளிர், சந்தன மரத்தாற் செய்த உரலில், யானை மருப்பினை உலக்கையாகக் கொண்டு தினை குற்றுதலும், சேம்பின் இலையைச் சுளகாகக் கொள்ளுதலும் உண்டு.[4] அவர், தம் தந்தையின் மலையைப் பாடி ஐவனநெல் குற்றுவர்;[5] தமக்கு மணம் நிறைவேறக் கருதிக் கடவுட்கு வேங்கைமலர் தூவி வாழ்த்தி வேண்டுதலும்,[6] வரைவு நிறை வேறின் இன்னது செய்வேம் என நேர்ந்து கடம்பூணுதலும் உண்டு.[7] சிறுமியர் கூந்தலைப் பின்னிவிடுதல் வழக்கம்.[8] அவர்கள் தினைமாவினை உண்டு புனத்தைக் காவல் காப்பர்.[9]

## வேடர்

வேடுவர் தேனைப் பருகி, வேங்கையிணர் சூடி, வில்லைத் தாங்கி, இளையருடன் வேட்டைமேற் செல்வர். அவர் பலாச் சுளையின் தேனையருந்தி வேட்டைக்குச் செல்வர்[1] என்றும் கூறப்பட்டுளது. வேட்டுவர் பன்றி, கடமா[2], முயல் இவற்றை வேட்டையாடிக் கொல்லுவர். உடும்பு, நுணல், புற்றீயல் இவற்றைக் கொண்டுவருஞ் செய்தி கூறப்பட்டுள்ளது.[3] யானையின் கோட்டைக் கருதி அதன்மேல் அம்பெய்வர்.[4] வேடுவன், தான் வேட்டையாடிக் கொண்டுவந்த பொருள்களை வீட்டில் போகட்டுக், கட்குடித்துச் செருக்கியிருத்தலும்[5] உண்டு.

---

*குறமகளிர்,*

1. *குறுந். 208*
2. *புறம். 108*
3. *நற். 336*
4. *கலித். 40, 41*
5. *நற். 373*
6. *ஐங். 259*
7. *கலித். 46*

*8, 9 . ஐங். 285*

*வேடர்*

1. *அகம். 182*
2. *புறம். 202*
3. *நற். 59*
4. *நற். 65*
5. *நற். 59*

## காவலர்

காவலர், தினைப்புனத்தில் மேயும் பன்றியை மறைந் திருந்து அம்பெய்து[1] கொல்லுவர். விலங்குகளின்மேல் எய்த அம்புகளைப் பிடுங்கி எடுப்பதுண்டு.[2] முசுக்கலையை அம்பி னால் ஓட்டுவர்.[3] தினைப்புனத்தில் மேயும் யானையை அம்பெய்தும், பலர்கூடி வீளையொலி செய்தும் துரத்துவர்.[4] இராக்காலத்தில் பரண்மேலிருந்து புனங்காவல் செய்வர்; வெளிச்சத்திற்காகக் கொள்ளியை வழங்கிக்கொள்வர்;[5] வில், கவண் முதலியவற்றைக் கைக்கொண்டிருப்பர்;[6] இரவில் யானை வருதலை அதன் காலடியோசையினால் அறிந்து, கவண்கல் எறிந்து அதனை ஓட்டுவர்.[7] யானையின்மேல் எறிந்த கவண்கல், வேங்கையிணரைச் சிதறித் தேனைச் சிதைத்துப் பலாப்பழத்தினுள் தங்கியதாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.[8]

## வேலன்

முருகக் கடவுளுக்குரிய வேலைப்பிடித்து ஆடுவோனுக்கு வேலன் என்று பெயர். குறவர், தமக்கு யாதேனும் துன்பம் நேரின், அப்பொழுது வேலனை அழைத்து வெறியாட்டயர்வர்; இள மகளிருக்கு உற்ற நோயை அறிதற்கும் அதனையொழித்தற்கும் வேலனை அழைத்து வினாவி வெறியாட்டயர்குவர். வெறியயரு மிடத்திற் புதுமணல் பரப்பி அழகு செய்வர். வேலன், மாலை சூடி[1], பலவகை மலர்களைத் தூவி ஆடுவான். ஆடி, மகளிர்க்குற்ற நோயின் காரணம் கூறுவான். வேலன், கழங்கினால் ஆராய்ந் தறிதல் உண்டு. நோய் தணித்தற்காக அவனுக்குப் படிமம் (பாவை) செய்து கொடுப்பர்.[3] அவன், குளகு தின்னும் மறியைக்

---

*காவலர்.*

1. நற். 336
2. நற். 13
3. குறுந். 385
4. குறிஞ்சி. 160-165
5. குறுந். 357
6. கலித். 52

7, 8 அகம். 292

கொன்று[3] முருகனுக்குப் பலியிடுதல் வழக்கம். ஆயினும், வேலன் ஒன்றனையும் உண்மையாக அறியான் என்றும், அவனை யாது வினவினும், அது வெறி என்றே கூறுவான்4 என்றும் அவனைக் குறித்து இகழ்வாகக் கூறப்பட்டுள்ளது.

## மறவர்

மறவர், பகையரசரின் கோட்டையைக் கைப்பற்றி னாலன்றி உண்பதில்லை என்று வஞ்சினம் கூறிப் போர்புரியும் வீரம் உள்ளவர்[1]. அவர், பகைவேந்தரின் யானைகளைக் கொன்று அவற்றின் கோடுகளைக் கள்விலைக்குக் கொடுத்து[2] உண்ணுதலும் உண்டு.

## ஆயர்

மாலைக்காலத்தில் ஆம்பற்குழல் ஊதுவர்.1

## உழவர்

உழவர் ஆம்பற்பூச் சூடுவர்; கள்ளருந்துதல் உண்டு.[1]

## உமணர்

உமணர் உப்பினை வண்டியிற் கொண்டுபோய் விற்று வருவர்.[1]

---

*வேலன்,*

1. *அகம். 292*
2. *ஐங். 245*
3. *அகம். 292*
4. *ஐங். 243*

*மறவர், 1, 2 பதிற். 68*

*ஆயர், 1 குறிஞ்சிப். 221-22*

*உழவர், 1 பதிற். 62*

*உமணர், 1 புறம். 116*

### பாணர்

பாணர் தலைவனுக்குத் துணையாயிருப்பர். அவன் பொருட்டுத் தலைவியிடம் வாயில் சென்று கூறுவர்[1]. தலைவியும் அவரிடம் செய்தி கூறி விடுப்பதுண்டு. பாணர் தேன் அருந்துவர்[2].

பாடினி, கிணையை வைத்திருப்பாள்[1]; பாட்டின் பொருளுக்கேற்பத் தொழிற்கையால் அவிநயஞ் செய்வாள்; எழிற்கையால் (வெறுங்கையால்) தாளத்திற்கு இயைய இசைவிடுதல் உண்டு[2].

### ஆடுமகள்

ஆடுமகள், விழவுக்காலத்தில் தாளத்திற்கியையக் கயிற்றின் மேல் ஆடுவாள்[1].

### புலையர்

வீரர் போருக்குச் செல்லுகையில், புலையர் துடியறைந்து முழக்குவர்.[1]

### இயவர்

இயவர் தண்ணுமை முழக்குவர்.[1]

---

*பாணர்,*

*1 நற். 291*
*2 புறம். 115*

*பாடினி.*
*1 புறம். 111*
*2 பதிற். 61*
*ஆடுமகள். 1குறிஞ்சி 192-4*
*புலையர், 1நற். 77*
*இயவர், 1ஐங். 215*

## விலங்குகள்

### கரடி

கரடி, இரவில் ஈயப்புற்றினை அகழ்ந்து இரை தேரும்[1].

### குதிரை

குதிரையின் பிடரி மயிரைக் கத்தரிப்பதுண்டு[1]. அதற்கு உளைசூட்டுதலும்[2], பொன்னாலாகிய கலனை[3] முதலியவற்றை யிடுதலும் வழக்கம். உளையைச் சூட்டின், அதற்குப் போரில் ஊக்கம் உண்டாகும்[4] என்பது அறியப்படுகின்றது.

## குரங்குகள்

**குரங்கு** குரங்கு மிளகின் தழையைத் தின்னும்.[1]

### கடுவன்

கடுவன், கரிய விரல்களை உடையது.[1] அது, பலாப் பழத்தைத் தின்னும்[2]; பலாப்பழம் வாழைப்பழம் இவற் றாலாய தேனை உண்டு, மயக்கங்கொண்டு மரமேற முடியாமல் கீழே கிடந்துறங்கும்[3] என்று கூறப்பட்டுளது. கடுவன், மழை நாளில் மொக்குள் எழும்போது, சிறிய பிரப்பங்கோல் கொண்டு அதனைப் புடைத்தும்[4], நறைக்கொடியினால் மேகத்தைப் புடைத்தும்[5] விளையாடும் இயல்பினது; புலி முழக்கங் கேட்பின் வெருண்டு மலைமேற் பாய்ந்து செல்லும்[6] தன்மையது.

---

கரடி, 1 நற். 336

குதிரை, 1 பதிற். 62, 64
2 பதிற். 65
3 புறம். 116
4 பதிற். 65 உரை

குரங்கு, 1 குறுந். 288

கடுவன், 1 புறம். 200
2 புறம். 200
3 அகம். 2
4 ஐங். 275
5 ஐங். 276
6 ஐங். 274

## மந்தி

மந்தி, செம்முகத்தது; புன்றலையது[1]. அதன் விரல்கள் கரியனவாயிருக்கும்.[2] அது, பலாப்பழத்தின் சுளையைத் தின்னும்[3]; அவரையின் இலையையும்[4], குளவியின் தளிரையும் தின்னும்;[5] தழையின் பொருட்டு மரங்களில் ஏறும். மந்தி, பலாப்பழத்தைப் புணையாகக் கொண்டு துறையிழியும்[6] இயல்புடையது.

## முசுக்கலை

முசுக்கலை, குரங்குகளுள் ஒருவகை. முசுக்கலையின் முகம் மை நிறத்தது.[1] அது, பலாவின் கிளைகளில் பாய்ந்து திரியும்[2]; மிளகின் தழையைத் தின்னும்[3]; பலாப்பழத்தை விருப்பத்தோடு தின்னும்[4]. தின்னும்பொழுது கானவன் அம்பெய்வானாயின் விரைந்து ஓடிவிடும்[5]. முசுக்கலை, குதிரைபோல விரைந்து செல்லக் கூடியது[6] என்று கூறப்பட்டுளது. முசுவின் குட்டிகள் மயில் முட்டைகளை உருட்டி விளையாடும் இயல்பினவை.[7]

## கருங்குரங்கு

கருங்குரங்கு நரைமுகத்தது; அது மலையில் வாழ்ந் திருக்கும்[1]. மழை நாட்களில் அது தன் பார்ப்புகளோடு வருந்தும்[2] என்று கூறப்பட்டுளது.

---

*மந்தி*

1. புறம். 200; நற். 373
2. நற். 353; அகம். 382
3. நற். 373
4. ஐங். 271
5. ஐங். 279
6. அகம். 382

*முசுக்கலை*

1. குறுந். 121
2. குறுந். 153
3. அகம். 182
4, 5, 6. குறுந். 385
7. குறுந். 38

*கருங்குரங்கு*

1. கலி. 43
2. குறுந். 249

## குட்டிகள்

குரங்குக் குட்டிகள் வெதிர்ங்கழையின் மேல் ஏறியிருக்கும்[1]; அசோகின் தளிர்களைத் தின்னும்[2]; தேன்கூடுகளைக் கிளர்த்து விளையாடும்[3]; அப்பொழுது தேனீக்கள் மேல் விழ வருமாயின், அவற்றிற் கஞ்சியோடிவிடும்.

## நாய்

நாயின் பல், மூங்கிலின் முளைபோல் இருக்கும்[1]; அதன் நகங்கள் பெரியவை[2]. நாய்கள், தம்மை எவையேனும் நெருங்குமாயின், உடனே சினங்கொண்டு அவற்றின் மேல் பாயும் இயல்பின.[3] குறவர் வேட்டையாடுதற்கு நாய்களை உடன்கொடு செல்லுவர்.4

## ஆ

ஆக்கள் மலையில் மேய்ந்து திரியும்.1 அவை மாலைக் காலத்தில் கன்றுகளை அழைக்கும் குரவலாய் மன்றினை நோக்கி வரும்.2

**ஆமான்** ஆமான் கொம்புகள் உட்டுளை யுடையவை.1

---

*குட்டிகள்,*

*1. ஐங். 280*
*2. ஐங். 273*
*3. ஐங். 272*

*நாய். 1, 2, 3 } குறிஞ்சிப். 130-31*

*4 அகம். 182*

*ஆ. 1. நற். 359*
*2. குறிஞ்சிப். 217, 8*

*ஆமான். 1. குறிஞ்சிப். 253*

## பன்றி

பன்றி, கட்டளைக்கற் போன்ற நிறமுடையது.[1] பெண் பன்றி களங்கனியின் நிறமுடையது[2] என்று கூறப்பட்டுளது. பன்றி சிறிய கண்ணையும்[3], வெளிய கோட்டையும் உடையது[4]; கோடு வளைந்து இளம்பிறை போன்றிருக்கும்[5]. பன்றியின் சுவல் பிணருடையது.[6]

யானையை ஈர்த்துச் செல்லத்தக்க பெருவெள்ளத்திலும் பன்றி அஞ்சாது நீந்திச் செல்லும்[7]; அது, தறுகண்மை உடையது. காவலர்களை ஓட்டிவிட்டு ஐவனநெல்லைக் கவர்ந்து தின்பதுண்டு[8]. பன்றி, தன் பிணவினொடு கூடித் தினை மேய்ந்து வதியும். அஃது, எருவையைக் கொம்பாற் கிளறிப் பெயர்க்கும்.[9] பன்றி, கிழங்கிற்காகக் கிளறிய புழுதியில் கானவர் விதைத்துப் பயிரிடுவதுண்டு[10] என்று கூறப்பட்டுளது.

பன்றி, நாயைக் கொல்லும் வன்மையுடையது[11]. ஆண் பன்றி, தன் பிணவு இறந்துபட்டாலும் குட்டிகளை வளர்த்து வரும்12 என்று கூறப்பட்டிருக்கின்றது.

## புருவை

பெண்யாட்டிற்குப் புருவை என்று பெயர். புருவை, தகர் வாராதிருப்பின், அதன் வரவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இயல்பினது.[1]

---

பன்றி. 1. ஐங். 263
2. ஐங். 264
3. ஐங். 266
4. நற். 336
5. ஐங். 264, 5
6. நற். 336
7. அகம். 18
8. ஐங். 267
9. ஐங். 269
10. ஐங். 270
11. அகம். 248
12. ஐங். 265

புருவை. 1 ஐங். 238

## புலி

புலியின் எருத்தம், பணை போன்றது.[1] அதன் முன்கால்கள், குறியவை.[2] புலி, மலைமுழைஞ்சில் தங்கியிருக்கும்.[3] பெண் புலி, மரம் முதலியன நெருங்கிய காடுகளில் ஈனும்.[4] ஈன்று இளைத்த பிணவிற்காக ஆண்புலி, விலங்குகளைக் கொன்று இழுத்து வரும்[5]; ஆமானைக் கொன்றுங் கொணர்ந்து கொடுக்கும்.[6]

புலி, இராக்காலத்தில் இரைதேரும்[7]; யானைக் கன்றினைப் பிடிப்பதற்காக மறைந்திருக்கும்[8]; புலி, யானையைக் கொல்லும் வன்மையுடையது. யானையின் செவிமறைவில் மறைந்து அதன்மேற் பாயும்.[9] புலி, பன்றியோடு பொருதல் உண்டு.[10] அது, பரணைக் கண்டு அஞ்சும் இயல்பினது[11]. புலியை வலைகட்டிப் பிடிப்பர்.[12]

## மான்கள்

மான்கள் வேங்கைப் பூத்தின்னும்[1]; மாலைக்காலத்தில் மரத்தடியில் ஒருங்கு திரளும்.[2]

## வருடை

வருடை, மலைப்பக்கங்களில் திரியும்.[1] வருடைக்குழவி, கருங்குரங்கைக் காணின் வெருளும்.[2]

---

புலி. 1. அகம். 238
2. ஐங்குறு. 266
3. குறிஞ்சிப். 252
4, 5, 6 அகம். 238
7. அகம். 238
8. ஐங். 216
9. கலித். 52
10. ஐங். 266
11. குறிஞ்சி. 41
12. கலித். 65

மான் 1. ஐங். 217
2. குறிஞ்சிப். 217

வருடை. 1. நற். 359. வரையாடு என்பர்.
1. கலி. 43

### மரைஆ

மரையா மானுள் ஒருவகை. இது, மலைச்சாரலில் வதிந்திருக்கும்.[1]

### கடமா

கடமாவும் மானுள் ஒருவகை. கடமாஏறு விரைந்து செல்லும் இயல்பினது.[1]

### முளவுமா

[1]முளவுமா, புதலில் தங்கியிருக்கும். குறவர், வேட்டையாடி அதனை வீழ்த்துவர்.[2]

### முதலை

முதலைகள் கான்யாறுகளில் வதியும்;[1] குட்டங்களிலும் கிடக்கும். முதலையின் கால்கள் வளைந்திருக்கும்.[2] முதலை, இடங்கர், கராம் இவை வேறு வகையின[3].

### யானை

யானை, காணுந்தோறும் பொலிந்து தோன்றும் விளக்கம் உடையது.[1] அதன் செவி முறம் போல்வது[2]; கை, பிணர் உடையது[3]. யானை, கவளத்தை மென்று, அவற்றிலிருக்குங் கோதுக்களை வெளியே உமிழ்ந்துவிடும் இயல்பினது[4];

---

மரைஆ. 1 குறுந். 115
கடமா. 1 புறம். 202
முளவுமா. 1 இதனை 'மிளா' என்று வழங்குகின்றனர்.
2 அகம். 182

முதலை, 1 அகம். 18
2, 3 குறிஞ்சிப். 257
யானை, 1 நற். 217
2 கலித். 42
3 குறிஞ்சிப். 163
4 புறம். 114

நெல்லையுடைய வெதிர்ங்கழையையும் மூங்கிலையும் மேயும்; வளகு என்னும் புதலின் தழையைத் தின்னும்[5]. அஃது, இரவிலும் மேய்வதுண்டு.[6] மழை நாளிரவில் மின்னலி னொளியினால் மேயும்.[7]

யானை, புலியின் உருவம்போற் பூத்த வேங்கை மரத்தைக் கண்டு பொறாது, அதன் தாளில் குத்தி நெரிக்கும்;[8] புலியைக் கண்டு அஞ்சிச் செல்லுகையில், அயலிலிருக்கும் வேங்கை மரத்தைக் குத்திச் சினந்தணியும். பகலில் புலியொடு பொருத யானை, கனவில் அப்புலியைக் கண்டு வெருவி எழுந்து, புலிபோலப் பூத்திருந்த வேங்கை மரத்தை அழித்துச் சினந் தணியும் என்பதும், பின்னர் அம்மரத்தைக் காண்கையில், நாணமுற்று அதனைப் பார்க்காது தலைதாழ்த்திக் கொண்டே செல்லும் என்பதும்[9] கூறப்பட்டுள்ளன.

யானை, இரவில் புலி வருதலைப் பார்த்துக் கொண்டே யிருக்கும்[10]; அது தன்பால் வந்ததும் அதனொடு போர் செய்யும்; போரில், யானை புண்பட்டு வருந்துதலும் உண்டு; புலியைக் கொன்று உரறுதலும் உண்டு[11]. யானை உருமு முழங்குவது போல் பிளிறும்.[12] அது, தன்மேற் பாய்ந்த புலியின் மருமத்திற் கோட்டால் குத்தி அதனை வீழ்த்தும்[13]; புலியைக் கொன்று கறைப்பட்ட கோட்டை மழைநீராற் கழுவும் இயல்பினது[14]. புலியைக் கொன்ற யானை, தலைமை தோன்றச் சென்று பிடியைப் புணரும்[15]; பிடி, தன்பால் இருக்கும்பொழுது வேறு யானை வருமாயின், அதன் நுதலிற் கோட்டாற் குத்தித் தாக்கும்.[16]

---

யானை, 5 { குறிஞ்சி. 35-7; அகம். 332; கலித். 43 }

6, 7 கலித். 41

8 கலித். 38

9 கலித். 49

10 நற். 336

11 நற். 353

12 குறிஞ்சிப். 162-65

13 கலித். 52

14, 15 அகம். 332

16 கலித். 53

யானை, சூல்கொண்ட பிடிக்குக் கரும்பினை ஒடித்து ஊட்டும்[17]; தன் கிளையைப் பேணி, அதற்கு வேண்டுந் தழை களைக் கொணர்ந்து கொடுக்கும்[18].

பரண்மேலிருக்குங் கானவன் கையிற் கொள்ளியை அஞ்சிய யானை, விண்வீழ் மீனினொளியையும் அஞ்சும்[19] என்றும், வேங்கைப்பூ பரந்து கிடக்குங் குரம்பையைப் புலி என்று வெருவும் என்றும்[20] கூறப்பட்டுளது.

யானை, சேற்றிடத்தில் நிற்றலை வெறுக்குந் தன்மை யது[21]; மதயானை கிளைகளை ஒடித்து ஓச்சிக்கொண்டிருக்கும் இயல்பினது[22]. யானை அருவியொலியிற் துஞ்சும்.[23]

யானைக்கு மணிகட்டுதல் உண்டு.[24] மலையில் வாழ் பவர், யானைக் கோட்டை உலக்கையாகக் கொண்டு வெதிர் நெற் குற்றுவர்.[25] பெண்யானை, தன் கன்று பால் குடிக்கும் பொழுதுந் தினைமேயும்[26] என்று கூறப்பட்டிருக்கின்றது.

**வெருகு** இளவெருகின்பல், முல்லைமுகை போல்வது[1].

---

யானை, 17. கலித். 40
18 அகம். 218
19 குறுந். 357
20 அகம். 12
21 பதிற். 64
22 குறிஞ்சிப். 149, 150
23 கலித். 42
24 புறம். 201
25 கலித். 41
26 குறுந். 225

வெருகு.

1 புறம். 117

## பறவைகள்

பறவைகள் மழைநேரத்தில் தம்மிருப்பிடங்களுக்குச் செல்லும்[1]. அவை அந்திக்காலத்தில் கூவி ஒலி செய்து கொண்டிருக்கும்.[2] அவற்றினொலி வாச்சியங்களின் ஒலியை யொத்திருக்கும்.[3] நீர் வற்றிய குளங்களுக்கு அவை செல்ல மாட்டா.[4]

### அன்றில்

அன்றில், மாலைக்காலத்தில் பனை மடலிலிருந்து கூவும்.[1] அதன் குரல், ஊதுகொம்பினோசையை ஒத்திருக்கும்.[2]

### இருதலைப்புள்

இருதலைப்புள் என்பது ஓருடலில் இரண்டு தலையை உடையது எனத் தெரிகின்றது; ஒற்றுமையாய உள்ளமுடைய தலைவன் தலைவியருக்கு உவமை[1] கூறப்படுகின்றது.

**எருவை** எருவை குருதியை விரும்பி உண்ணும்.1

### கடற்காக்கை

கடற்காக்கை சிறிது வெண்மையுள்ளதாயிருக்கும்; கழிகளி லுள்ள இலைகளை நீக்கித் துழாவி மீன் தரும்.[1]

---

பறவைகள்

1 குறிஞ்சிப். 46
2 '' 228
3 '' 99
4 அகம். 42

அன்றில்,

1, 2 குறிஞ்சிப். 216-220

இருதலைப்புள். 1 அகம். 12
எருவை. 1 பதிற். 67
கடற்காக்கை. 1 குறுந். 246

## கிளி

கிளி வளைந்த அலகினையுடையது[1]. அது தினைப்புனங்களில் கதிர்களைக் கொண்டுபோகும்[2]; அவரைச் செடிகளில் காய்களை உணவாகக் கொள்ளும்[3]; வருடையைக் காணின் அஞ்சிச் செல்லும்.[4]

## குருகு

குருகின் கால்கள் தினையின் தாள்போலச் சிறியவை[1]. அஃது ஆரல்மீனை விரும்பித் தின்னும்[2]; நீர் வடிந்தபின் அங்குச் சேற்றிலிருக்கும் மீன்களைத் தின்னும்[3].

**கூகை** கூகை குன்றில் வாழும்.[1]

## மயில்

மயில் மலையில் கூடுகட்டும்.[1] மழைக்காலத்தில் மயில் அகவும்[2]; மழை முகிலின் வரவறிந்து களித்து ஆடும்[3]; காட்டில் ஆற்றங்கரையில் அகவிக்கொண்டு ஆடும்[4].

பெண் மயில் பாறையில் முட்டையிடும்.[5] தாள் நீண்டு வளர்ந்து காய்த்துள்ள வரகு ஈன்றணிமையுடைய மயிலை ஒக்கும் என்று கூறப்பட்டுளது.[6]

---

கிளி. 1 நற். 376
2 நற். 13
3 ஐங். 286
4 ஐங். 287

குருகு. 1,2 குறுந். 25
3 நற். 291

கூகை. 1 குறுந். 153

மயில். 1. ஐங். 250
2. குறுந். 249
3. ஐங். 298
4. குறுந். 264
5. குறுந். 38
6. புறம். 120

மயில் ஏனலைத் தின்னும்.[7] அது கொள்ளிக்கு அஞ்சிச் செல்லும் இயல்பினது[8]. சூருற்ற மயில் நடுங்கும்[9] என்றும், மா பலா இவற்றின் கனிகளாலாய தேனையுண்ட மயில் தளர்வடையும்[10] என்றும் கூறப்பட்டுளது.

## வண்டுகள்

வண்டுஞ் சுரும்பும் வேறு வேறானவை[1]. (இவை தும்பி யின் இனம் என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். சீவக. குண: 42, 43 உரை). தும்பி கட்டளைக்கல் போன்ற நிறமுடையது[2]. வண்டு முல்லைப்புதலைச் சூழ்ந்து திரிந்து பூந்தாதினை உண்டு பெயரும்[3]; சந்தன மரத்தின் பூந்தாதுவினையும் உண்ணும்.[4] பிடவின் சூலையில் தங்கியிருத்தல் உண்டு[5]. யானையின் மதத்தினை உண்ணும் என்பது அறியப்படுகின்றது.[6] வண்டு காந்தட்பூவில் பலமுறை ஊதியுண்டால் பின்னர்ப் பறக்க இயலாமற் சிறிது நேரம் மயங்கிக் கிடக்கும்[7] என்பது கூறப் பட்டுளது.

வண்டு மாலைக்காலத்தில் இமிரும் ஒலி, ஆம்பற்பண் போன்று இருக்கும்[8] எனவும், அதன் ஒலி 'நைவளம்' என்னும் பண்போலக் கேட்கும் எனவும்[9], யாழின் ஓசைபோன்றிருக்கும்[10] எனவும் தெரிகின்றது.

---

மயில். 7. ஐங். 256
8. ஐங். 295
9. குறிஞ்சிப். 169
10. குறிஞ்சிப். 186-194

வண்டு. 1. குறிஞ்சிப். 148
2. ஐங். 215
3. பதிற். 66
4. கலி. 43
5. பதிற். 66
6. அகம். 332
7. பதிற். 67

வண்டு, 5 ஐங். 215
9 குறிஞ்சிப். 146-148
10 அகம். 82

### வானம்பாடி

வானம்பாடி என்பது, வானை நோக்கிப் பாடுதலால் வந்த பெயர். வானம்பாடி நீர்நசையினால் வானை நோக்கிப் பாடும்.[1]

★ ★

## மரவகை

### அசோகு

அசோகின் தளிர் செந்நிறம் உள்ளது[1]. அதனை எரி போன்ற நிறத்தது என்று கூறுவர்[2]

### அவரை

(மொச்சை) அவரைப்பூ நுனியில் வெண்மை யுடையது.[1]

### இற்றி

இற்றி மரம் குறிய விழுதுகளை உடையது.[1] அதன் வேர் வெளிய நிறத்தது;[2] வேர்கள் கல்லிலும் இறங்கிச் செல்லும்.[3] இற்றி மரத்தில் மலைமல்லிகை படர்தல் உண்டு.[4]

### உழிஞை

உழிஞையின் இலை சிறியது.[1]

---

வானம்பாடி 1 கலித். 46
அசோகு. 1 ஐங். 273
2 குறிஞ்சிப். 105
அவரை, 1 ஐங்குறு. 209
இற்றி, 1, 2 குறுந். 106
3, 4 ஐங். 279
உழிஞை. 1 பதிற். 63

### உன்னம்

உன்ன மரத்தின் இலை சிறியது[1]. அதன் பூ பொன்னிற முடையது.[2]

### எருக்கு

எருக்கின் இலை புன்மையது. அதன் இணர் குவிந்திருக்கும்.[1] அதன் பூ சூடத்தக்கதன்று.

**ஐவனம்** ஐவனம், மலையில் விளையும் வெண்ணெல்.[1]

### கருங்குவளை

கருங்குவளை நீலமணி போன்ற கொத்துக்களை உடையது; தேன் உள்ளது. [1]

### காந்தள்

காந்தளில் வெண்காந்தள், செங்காந்தள் என இரண்டு வகையுண்டு. செங்காந்தள் பெரிய இதழை உடையது.[1] இதன் முகை குருதி பட்ட யானைக் கொம்பு போன்றிருக்கும்.[2] இது, மழைக்காலத்தில் செழித்திருக்கும்.[3] காந்தட்பூ மிக்க மண முடையது;[4] காந்தட்குலை, அரவு போன்ற உருவமுள்ளது[5]. காந்தட்

---

*உன்னம். 1, 2 பதிற். 61*
*எருக்கு. 1 புறம். 106*
*ஐவனம். 1 நற். 373*
*கருங்குவளை1 குறிஞ்சிப். 84*
*காந்தள், 1 குறிஞ்சிப். 61-62*
*2, 3 கலித். 53*
*4 கலித். 59*
*5 கலித். 45*

பூந்தாதினை யளைந்த வண்டு பறக்க முடியாமல் கிடக்கும்.[6] காந்தள், மலைப் பக்கத்திலுள்ள பனைகளின் அடியில் நிலைத்திருக்கும்[7] எனத் தெரிகிறது.

**குளவி** (மலைமல்லிகை) குளவி, இற்றி மரத்திலும் படரும்.[1]

**கோங்கு** கோங்கின் பூ பொன்னிறத்தது.[1]

**சந்தன மரம்**

சந்தனத்தின் பூ மணமுடையது. சந்தனத்தைப் புகைத்தால் அதன் மணம் பெரிது கமழும்.[1] சந்தன மரத்தில் மிளகுக் கொடி படரும்.[2] குறவர் சந்தன மரத்தால் உரலும் உலக்கையும் செய்து வழங்குவர்.[3]

**சுரபுன்னை** சுரபுன்னை மலைச்சாரலில் உண்டாவது.[1]

**(செங்)குவளை (செங்கழுநீர்)** குவளை, குளத்தில் வளரும்.[1]

**சேம்பு** சேம்பின் இலை சுளகு போல்வது[1].

**ஞாழல்** ஞாழல் கொழுவிய நிழலுடையது[1]. இதன் பூவைத் தலையில் வைத்து முடிப்பர்.[2]

**தினை** இருமண்பாடான நிலத்தில் செழித்து வளரும்.[1] தினைக்கதிர் துய் உடையது.[2] கதிர்வாங்கிச் சிலநாளாயினபின், தினை பொன்னிறமடையும்.[3]

---

6 பதிற். 67
7 அகம். 238
குளவி, 1 ஐங். 279
கோங்கு, 1 கலித். 42
சந்தனம், 1 ஐங். 251
2 அகம், 2
3 கலித், 40, 43
சுரபுன்னை, 1 கலித். 53
செங்குவளை, 1 குறிஞ்சிப். 63
சேம்பு, 1 கலித். 41
ஞாழல், 1, 2 கலித். 56
தினை, 1 ஐங். 260
2 குறிஞ்சிப். 37
3 ஐங். 263

**தெறுழ்** தெறுழ் ஒருவகைக் கொடி; கார்காலத்திற் பூக்கும்.[1] இதன் பூ, யானை முகத்திலுள்ள புள்ளி போல்வது.[2]

**தோன்றி** தோன்றி வேங்கை மரத்தோடு ஒருங்கு பூப்பது.[1] இதன் பூ தீப்போன்ற நிறமுடையது[2]; விளக்குப் போன்ற வடிவுடையது.[3]

**நறைக்கொடி** நறைக்கொடி வாசனை உடையது.[1]

**நெய்தல்** நெய்தல் கழியில் வளரும்[1]. இதன் பூ நீண்டிருப்பது[2]; நறுமணமுடையது[3].

**நொச்சி** நொச்சியை மனைப்பக்கங்களில் வளர்த்தல் உண்டு[1].

**பலா**

பலாமரத்தின் வேர்களிலும் கிளைகளிலும் காய் காய்க்கும்[1]. பலாப்பழம் தேனையுடையது[2]. அதிற் பிசின் உண்டு[3]. பலாச்சுளை இனிமையுடையது.

**பிடவு** பிடவு காடுகளில் உண்டாவது. இதன் பூ, குலையாயிருக்கும்.[1]

---

| | | |
|---|---|---|
| தெறுழ். | 1, 2 | புறம். 119 |
| தோன்றி, | 1, 2 | அகம். 218 |
| | 3 | குறிஞ்சி. 90 |
| நறைக்கொடி | 1 | ஐங். 276 |
| நெய்தல். | 1 | பதிற். 64 |
| | 2, 3 | குறிஞ்சிப். 79 |
| நொச்சி. | 1 | அகம். 203 |
| பலா | 1 | நற். 77; குறுந். 18 |
| | 2 | பதிற். 61 |
| | 3 | கலித். 50 |
| பிடவு. | 1 | பதிற். 66 |

**பித்திகம்** பித்திகம் கார்காலத்தில் தழைக்கும்[1]; அந்தி வேளையில் மலரும்[2]. பித்திக அரும்பின் பின்புறம் சிவப் பாயிருக்கும்[3].

**மா** மாவடுக்கள் மூக்கிற்று உதிரும்.[1]

**மிளகு** மிளகு மலையில் உண்டாவது[1]. இதன் தழையைக் குரங்கு தின்னும்[2] மிளகின் கொடி சந்தனமரத்திற் படர்வதுண்டு.[3]

**முல்லை** முல்லையரும்பு இளவெருகின் பல் போன்று இருக்கும்.[1]

**வயலை** வயலை ஒரு வகைக் கொடி. இக்கொடி, உழுத்த மாவினை நெய் சேர்த்துப் பிசைந்து நூற்றது போன்றிருக்கும்[1].

**வரகு**

வரகங் கதிர் அடியிலிருந்து நுனிவரை இடையீடின்றிக் காய்த்திருக்கும்.[1]

**வாகை** வாகைப்பூ துய் உள்ளது.[1]

**வரகு** வரகங் கதிர் அடியிலிருந்து நுனிவரை இடையீடின்றிக் காய்த்திருக்கும்.[1]

---

பித்திகம் 1 அகம். 42
2 குறிஞ்சிப். 117 உரை
3 அகம். 42 பித்திகம், தென்னாட்டில் 'பிச்சி' என்று வழங்குகின்றது.

மாவடு 1 ஐங். 213
மிளகு 1, 2 குறுந். 288
3 அகம். 2

முல்லை. 1 புறம். 117
வயலை 1 ஐங். 211.
வரகு. 1 புறம். 120

**வாகை** வாகைப்பூ துய் உள்ளது.[1]

**வாழை**

வாழை மலைகளிற் பயிராதல் உண்டு.[1] மலை வாழையின் முகை (தாறு) குருதி பட்ட யானையின் கோடு போன்றிருக்கும்[2] என்றும், வாழைப்பூ மகளிர் முடித்துவிட்ட ஓதியை ஒக்கும் என்றும்[3], வாழைக்குலையிலுள்ள காய் புலியின் அடியை நிகர்க்கும்[4] என்றும் கூறப்பட்டுளது.

**வெதிர்** வெதிர் மூங்கிலில் நெல் உண்டாகும்.[1]

**வேங்கை**

வேங்கை மரத்தின் அடி முழவு போன்றிருக்கும்[1]. அதன் அரும்பு கருநிறம் உடையது[2]; நீலமணியின் நிறத்தது[3] எனவும் தெரிகின்றது. அதன் பூ பொன்னிறத்தது[4]; தகடு போல் மென்மையானது[5]. வேங்கைமரம் புலியினிறம்போற் பூக்கும்[6]. வேங்கைப்பூ எரியினிறமுடையது7 என்றும், கொல்லனுலையில் அடிக்கின்ற பொன்னின் பிதிர்போன்ற நிறமுடையது[8] என்றும் கூறப்பட்டுளது.

மகளிர் வேங்கை மரத்தில் ஊசல் கட்டி ஆடுவர்9.

வேங்கை மரத்தில் பரண் அமைத்தல் உண்டு[10].

★★★

---

வாகை 1 பதிற். 66
வாழை 1 நற். 222, 309; கலி. 50.
2, 3 நற். 225
4 கலித். 43
வெதிர். 1 குறிஞ்சிப். 35
வேங்கை 1 கலித். 44
2 நற். 373
3 ஐங். 201
4 ஐங். 217
5 ஐங். 219; புறம். 202
6 புறம். 202; கலி. 38
7 ஐங். 291
8 நற். 13
9 நற். 368
10 நற். 373

# குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூவும் இலையும்

## குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூக்களின் சிறப்பியல்பு

| | |
|---|---|
| ஆம்பல் - அந்திக்காலத்தில் மலர்வது | 223 |
| எறுழ் - எரி போன்ற நிறத்தது | 66 |
| கருவிளை - நீலமணி போன்ற நிறமுடையது | 68 |
| குரா - பல இதழ்களையுடையது | 69 |
| குருந்து - கருநிறமுடையது | 95 |
| கொகுடி (ஒருவகை முல்லை) - நறுமணமுடையது | 81 |
| கொன்றை - கொத்துக் கொத்தாகத் தூங்குவது | 86 |
| செங்காந்தள் - பெரிய இதழையுடையது | 61-62 |
| தோன்றி - விளக்குப் போல்வது | 90 |
| பாதிரி - தேன் உடையது | 74 |
| புழகு - அரக்குவிரித்தாற் போன்ற செந்நிறமுடையது | 96 |
| புன்னை - மணமுடையது | 93 |
| பெருமூங்கில் - மணமுடையது | 65 |
| மா - கடிமணமுடையது | 76 |
| வெட்பாலை - வெண்மையானது | 67 |

★ ★ ★

## குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூவும் இலையும்

1. அடும்பு
2. அதிரல்
3. அவரை
4. அனிச்சம்
5. ஆத்தி
6. ஆம்பல்
7. ஆரம் (சந்தனம்)
8. ஆவிரை
9. இருணாறி
10. இலவம்

11. ஈங்கை
12. உந்தூழ் (பெருமூங்கில்)
13. எருவை
14. எறுழ்
15. கரந்தை
16. கருங்குவளை 'நெய்தல்'
17. கருவிளை
18. காஞ்சி
19. காயா
20. காழ்வை (அகில்)
21. குடசம்
22. குரவம்
23. குரீஇப்பூளை (சிறு பூளை)
24. குருக்கத்தி
25. குருகு (முருக்கு)
26. குருந்து
27. குல்லை
28. குவளை
29. குளவி (காட்டு மல்லிகை)
30. குறிஞ்சி
31. குறுநறுங்கண்ணி (குன்றி)
32. கூவிரம்
33. கூவிளம்
34. கைதை (தாழை)
35. கொகுடி
36. கொன்றை
37. கோங்கம்
38. கோடல்
39. சண்பகம்
40. சிந்துவாரம் (கருநொச்சி)
41. சிறு செங்குரலி
42. சிறு மாரோடம் (செங்கருங்காலி)
43. சுள்ளி (மராமரம்)
44. சூரல் (சூரை)
45. செங்காந்தள்
46. செங்கொடுவேரி
47. செம்மல் (சாதிப்பூ)
48. செருந்தி
49. செருவிளை (வெண்காக்கணம்)
50. சேடல் (பவழ மல்லிகை)
51. ஞாழல்
52. தணக்கம்
53. தளவம் (செம்முல்லை)
54. தாமரை
55. தாழை (தெங்கிற்பாளை)
56. தில்லை
57. திலகம்
58. தும்பை
59. துழாய்
60. தேமா
61. தோன்றி
62. நந்தி (நந்தியாவட்டம்)
63. நரந்தம் (நாரத்தம்)
64. நறவம்
65. நாகம்
66. நெய்தல்
67. பகன்றை (சிவதை)
68. பசும்பிடி (பச்சிலைப்பூ)
69. பயினி
70. பலாசம்
71. பாங்கர் (ஓமை)
72. பாதிரி
73. பாரம் (பருத்தி)
74. பாலை

75. பிடவம்
76. பிண்டி
77. பித்திகம்
78. பீரம் (பீர்க்கு)
79. புழகு
80. புன்னாகம்
81. புன்னை
82. போங்கம் (மஞ்சாடி)
83. மணிச்சிகை (செம்மணி)
84. மரா
85. மருதம்
86. மா
87. முல்லை
88. மௌவல்
89. வகுளம்
90. வஞ்சி
91. வடவனம்
92. வழை
93. வள்ளி
94. வாகை
95. வாழை
96. வானி
97. வெட்சி
98. வேங்கை
99. வேரல் (சிறுமூங்கில்)

★ ★ ★

# VII

# செய்யுளாராய்ச்சி

கபிலர் பாடிய பாட்டுக்களுட் பல, ஒன்றற்கொன்று பொருட் தொடர்பில்லாத தனிப்பாட்டுக்களே என்பது பலரும் அறிந்ததே. ஐங்குறு நூற்றிற் கோக்கப்பட்டுள்ள நூறு பாட்டுக் களுள் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு பொருள் பற்றி வருவ தாயினும், அப்பத்தினுள்ளும் பாட்டுக்கள் ஒன்றற்கொன்று பொருட்டொடர்பு அமைந்திருக்கவில்லை. கலித்தொகை யிலுள்ள பாட்டுக்களும் இத்தகையனவே. இன்னாநாற்பது நீதிநூலாகலின், அதனைக் குறித்துக் கூறவேண்டியதில்லை. குறிஞ்சிப்பாட்டு ஒரு தனிப் பாட்டேயாயினும், அப்பாட்டினுள், களவியற்றுறைகள் பல அமைந்து தொடர்புடையதொரு வரலாறு போலிருத்தலின், அப்பாட்டின் பொருளைச் சுருக்கி ஈண்டுத் தருகின்றேன்:

செவிலித்தாய், மகளின் நிறவேறுபாடும் தளர்வும் நோயும் அறிந்து, அவற்றின் காரணம் அறியாளாய், குறி முதலாயின கேட்டும், கடவுட்குப் பூசனை புரிந்தும் வருந்திக் கொண்டிருக் கையில், தோழி, அம்மகளுக்கு (தலைவிக்கு) உற்ற நோயின் காரணம் இது என்று அறியக் கூறிய செய்தியைக் குறிஞ்சிப்பாட்டு விரிவாகக் கூறுகின்றது.

## குறிஞ்சிப் பாட்டின் பொருள்

### தோழி கூற்று

'தாயே, என் தலைவிக்கு உற்ற நோயின் காரணம் இது என்று யான் நின்னிடத்தில் கூறாது என்னுள் அடக்கியிருந் தமையின், நீ அதனை அறியாது கட்டினானும் கழங்கினானும்

எண்ணியறிவோரை வினாவியும், கடவுட்குப் பூசனை புரிந்தும் வருந்துகின்றனை. என் தலைவியும், ''ஒருவருடைய சால்பும் மேன்பாடும் இயல்பும் கெடுமாயின், அவற்றை முன்போல நிலைநிறுத்துதல் இருடிகளுக்கும் அரிய செயல் என்று பெரியோர் கூறுவர். (ஆதலின், நமது சால்பு முதலியன கெடாதபடி) என்நோயின் காரணம், நாம் இருவருமாகத் தெரிந்தெடுத்த மணமேயாகும் என்று இதனைத் தாயினிடத்து அறிவிப்பதில் வருவதொரு பழியில்லை; (அங்கனம் உரைத்துமோ)'' என்று எண்ணி வருந்துகின்றனள். யானோ, போர்மேற் சென்ற வேந்தரிருவரைச் சந்து செய்தற்கு இடையே நிற்பவர்போல அச்சமுறுகின்றேன். ஆயினும், யானும் தலைவியும் எண்ணாது துணிந்து செய்த ஏமாஞ்சால் செயலை நிகழ்ந்தபடியே நினக்குத் தெரிவிக்கின்றேன்; நீ, முனிவுகொள்ளாது கேட்டருளல் வேண்டும். *(1-34)*

''தினைப்புனத்திற் சென்று புள்ளோப்பி, பொழுதுசாய வீட்டுக்கு வருதிர்'' என்று, எங்களை நீ புனத்திற்குச் செல்ல விடுத்தனை யன்றே. அதனால், யாங்கள் தினைப்புனஞ் சென்று பரண்மேல் ஏறியிருந்து, கிளிகடி கருவிகளைக் கொண்டு பறவை களை ஓட்டினோம். பின்னர், நண்பகற்பொழுதில் அருவிநீராடி, பாடிக்கொண்டே சுனையில் நெடுநேரந் திளைத்து வெளிவ்ந்து கூந்தல் பிழிந்து துவர்த்தினோம்; அதன்பின், பலவகை மலர் களைக் கொய்து, அவற்றை ஒரு பாறைமேற் குவித்து, அவற்றின் இதழ்களைப் பறித்து இடையிடையே விளிபயிற்றிக் கிளிகளை யோட்டிக்கொண்டே தழையுடை செய்து, அல்குலில் உடுத்தும், பலநிற மலர்களால் மாலை தொடுத்து முச்சியிற் கட்டியும் அசோகமர நிழலில் தங்கியிருந்தோம் *(35-106)*.

'அங்கனம் இருக்கையில், ஓர் ஆடவன், பலவகை மலர்களால் கட்டிய கண்ணியைத் தலையிற்சூடி, அசோகந் தளிரைக் காதிற்செருகி, மார்பில் சாந்தம் பூசிப் பூண்கள் பூண்டு, வில்லும் அம்பும் கைக்கொண்டு, கச்சைக் கட்டி, கழல் தரித்து, சினமிக்க நாய்கள் தன்னுடன் வர, நடந்து வந்தான். அவனுடன் வந்த நாய்கள் எங்களை வளைத்துக்கொள்ள நெருங்கவே, யாங்கள்

அஞ்சி நடுங்கி வேறிடஞ் செல்லலாயினோம். அப்பொழுது அவன், மெல்லியவாய இனிய சொற்களைக் கூறி, ''நல்லீர், என்னினின்று தப்பி இங்கு வந்தவை பல; (அவற்றை நீவிர் கண்டனிரோ?)'' என்று வினவிநிற்க, யாங்கள் மறுமொழி தாராதே வாளாவிருந்தோம். அப்பொழுது அவன், ''மெல்லியலீர், நீவிர் விடையிறுத்தலும் பழியோ'' என்று கூறி, குரைத் தெதிர்ந்த நாய்களை ஒரு பூங்கொம்பினால் அடித்து ஒச்சி, அவற்றின் பேரரவத்தை அவித்து, எங்கள் வாய்மொழியை எதிர்நோக்கி நின்றான் (107-152).

'அவ்வமயத்தில், யானை, புனத்தைத் தின்று பெரிதும் அழித்ததை யறிந்து வருத்தமிக்கு எழுந்து அம்பெய்து, பலர் வீளையொலி செய்து அதனைத் துரத்தலின் அது மதமிக்கு இடிபோற் பிளிறி எங்கள்மேல் வருவதாயிற்று. அதனைக் கண்டதும் யாங்கள் உளம் நடுங்கி, நாணம் மறந்து ஒன்றுந் தோன்றாமல், திடீரென்று போய் அவனைச் சார்ந்து நடுங்கிக் கொண்டிருந்தோம். உடனே அவன், அவ்யானையின் முகத்தில் ஓர் அம்பெய்தலின், குருதி பாய, அது நில்லாது புறமாறிற்று. அதன்பின்னரும், யாங்கள் ஒருவர் கையை ஒருவர் விடேமாய், இடிகரையிலுள்ள வாழையே போல் நடுங்கிக்கொண்டிருப்ப, அதனைக் கண்ட அப்பெரியோன், நின்மகளை நோக்கி, ''நீ அஞ்சாதை; நின்நலனை நுகர்வேன்'' என்று நுதல் தடவி, என் முகத்தை நெடிது நோக்கி நகைபுரிந்தான். அப்பொழுது நின்மகள் நாணும் உட்கும் எய்தி, அவனைவிட்டு நீங்கலாயினள். அவள் நீங்கவிடானாய், அவளைத் தழுவி முயங்கலின், அவ்வழி, அவள் உள்ளத் தன்மையை உள்ளனனாகி, அவளை நோக்கி, ''யான், நின்னை மணம்புரிந்து இல்லறம் வழுவாது நிகழ்த்துவேன்'' என்று தேற்றிச் சூளுரைத்துப் பகலெல்லாம் தங்கியிருந்து, பொழுது மறைகையில், ''நும் சுற்றத்தார் கொடுப்ப யான் மணம் புரிவேன்; சிலநாள் வருந்தாதிருப்பீராக'' என்று உரைத்து, நம்மூர்வாயில் நீதித்துறைவரை வந்து எம்மை விட்டுப் போயினான். அதுமுதல், இன்றளவும் அவன், அத் தலைநாளன்பு போன்ற அன்புடையனாய் இரவில் வருவான்; வருகையில்,

காவலர் எதிர்ப்படினும், நாய் குரைப்பினும், நிலவு வெளிப் படினும், நீ துயிலுணர்ந்திருப்பினும் இடையூறுற்று இவளைக் கூடப்பெறாது திரும்புவான்; அதனால் வெறுப்புக் கொள்ளுதலும் இலன். அவன் இளமைப்பருவம் கடந்தவனும் அல்லன்; செல்வத்திற் குறைபாடு உடையவனும் அல்லன்; செல்வச் செருக்கினால், தனது நன்னிலைமை தவறினவனும் அல்லன். அவன், இராக்காலங்களில், கொடிய விலங்கினையும் பாந்தளை யும் உடையதும், ஏற்றிழிவுள்ளதுமான மலைவழியே இங்கு வருதலையக் குறித்து நினைக்குந்தோறும் நின்மகள் வருந்து கின்றனள். இதுவே, நின்மகளுக்கு உற்றநோய், பிறிதில்லை' *153-261.*

இதுவே குறிஞ்சிப்பாட்டிற் கூறப்பட்டுள்ள பொருள். இங்கனம் தோழியால் உண்மை அறிந்த செவிலி, அதனை நற்றாய்க்கு அறிவிப்பள். அவள், தன் கணவனுக்கும் மைந்தர் களுக்கும் குறிப்பால் அறிவித்துத் தன்மகளை அத்தலைவ னுக்கே மணஞ்செய்விப்பள்.

★★★

## இன்னா நாற்பது

இனி, 'இன்னா நாற்பது' என்னும் நூலிற் கூறப்பட்டுள்ள பொருள்களுட் சிறந்தவற்றை ஈண்டு எழுதுகின்றேன்:

## இன்னாதவை

பாட்டு

2. அந்தணரில்லிலிருந்து (பிறர்) உண்ணுதல்.
மந்திரம் (சூழ்ச்சி) வாயாதொழிதல்.
3. பார்ப்பாரில்லில் கோழியும் நாயும் புகுதல்
மனைவி அடங்காதிருத்தல்
6. மறையின்றி வினைசெய்தல்
7. இடும்பையுடையார் கொடை
9. போருக்கு எழுந்தவர் புறங்காட்டுதல்
10. பண் இல்லாத புரவிமேல் ஊர்தல்
12. உடம்பாடிலாத மனைவியொடு சேர்தல்
14. மணியில்லாக் குஞ்சரத்தை ஊர்தல்
15. மகளிர் (கணவரை) வஞ்சித்தல்
16. புரவியை மணியின்றி ஊர்தல்
18. நோன்று அவிந்து வாழாதார் நோன்பு
20. குலத்துப் பிறந்தவன் கல்லாமை
குலமில்வழி கலத்தல்.
21. மூரியெருத்தால் உழுதல்.
22. ஓத்தில்லாப் பார்ப்பான் உரை.
23. ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல்.
24. நிறையிலான் கொண்ட தவம்.
26. கவற்றினாற் சூதாடல்
27. அரியவை செய்தும் என உரைத்தல்
32. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல்
மண்ணில் முழவின் ஒலி
34. கள்ள மனத்தார் தொடர்பு.
41. அடைக்கலப்பொருளை வவ்வுதல்.

★ ★ ★

# நயமிக்க பாட்டுக்கள்

கபிலர் பாட்டுக்களுள் பல பாட்டுக்கள் பொருணயஞ் செறிந்து திகழ்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு எழுது கின்றேன். முதலில், தலைவன் கூற்றாக வந்துள்ளவற்றைக் காண்போம்:

## தலைவன் கூற்று

'மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகை ததும்பும் பன்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
**நீரோ ரன்ன சாயல்**
**தீயோ ரன்ன என் உரனவித் தன்றே'.** (குறு. 95)

இப்பாட்டில் உள்ள உவமநயமும், முரண்தொடைநயம் முதலியனவும் அறிக.

'சுடுபுன மருங்கிற் கலித்த ஏனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே
**கிளியவள் விளியென எழலொல் லாவே**
**அதுபுலந் தழுத கண்ணே** சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே'. (குறு. 291)

இப்பாட்டில், தலைவியின் மொழித் திறனையும், அவளது செயலையும் கூறியிருக்கும் முறை இன்பந் தருவதாகும்.

'சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
**நலம் பெறு கையின் என் கண்புதைத் தோயே**
பாயல் இன்றுணை யாகிய பணைத்தோள்

தோகை மாட்சிய மடந்தை
**நீயல துளரோ என் நெஞ்சமர்ந் தோரே!** (ஐங்குறு. 293)

இப்பாட்டில், தலைவனது கண்ணைப் புதைத்த தலைவிக்குத் தலைவன் கூறுவது மிக்க இன்பந் தருவதாயமைந்துளது.

இனி, **தலைவி** கூற்றாக வந்துள்ளவற்றுள் சில பாட்டுக்களை ஈண்டு எழுதுகின்றேன்.

## தலைவி கூற்று

'மெய்யோ வாழி தோழி சாரல்
மைபட் டன்ன மாமுக **முசுக்கலை**
**ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற**
**கோட்டொடு போகி யாங்கு** நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் தடமென் றோளே'. (குறு. 121)

இப்பாட்டில், தலைவன் குறிபிழைத்த தப்பிற்காகத் தனதுதோள் பசந்த செயலிற்குக் கூறியுள்ள உவமை பாராட்டற்பாலது.

'பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் **பானாள் தனித்தோர்**
**தேர்வந்து பெயர்ந்த தென்ப அதற்கொண்**
**டோரும் அலைக்கும் அன்னை பிறரும்**
**பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்**
**இளையரும் மடவரும் உளரே**
**அலையாத் தாயரொடு நற்பா லோரே'.** (குறு. 246)

இப்பாட்டில், தன்னையொத்த இளமகளிர் தாயரால் அலைப்புறாது மகிழ்ந்திருத்தலும், தான்மட்டும் தாய் அலைத்தலால் வருந்துதலும் எண்ணித் தலைவி கூறுவது நயமுடையதாகும்.

இனி, தலைவன் தன்னைப் புனைந்து கூறி வேண்டிக் கொண்ட பகுதியைத் தலைவி கூறுவது:

'நில்லென நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையும் அன்று
மைதீர்ந் தன்று மதியும் அன்று
வேயமன் றன்று மலையும் அன்று
பூவமன் றன்று சுனையும் அன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று
சொல்லத் தளரும் கிளியும் அன்று
எனவாங்கு

அனையன பலபா ராட்டிப் பையென
வலைவர் போலச் சோர்பத னொற்றிப்
புலையர் போலப் புன்க ணோக்கித்
தொழலும் தொழுதான் தொடலும் தொட்டான்'
(குறிஞ்சிக்கலி. 19)

என்பது. இதன் பொருணயம் அறிந்து இன்புறற்பாலது.

இனி, **தோழி கூற்றாக** உள்ளவற்றுள் சில பாட்டுக் களைக் குறிக்கின்றேன்.

தோழி கூற்று

'சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குகுலைக் காந்தள் தீண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாடன்
**உடுக்குந் தழைதந் தனனே அவையாம்**
**உடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பின்**
**கேளுடைக் கேடஞ் சுதுமே** ஆயிடை

வாடல கொல்லோ தாமே அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை அடுக்கத்த கொயற்கருந் தழையே.'' (நற். 359)

தலைவன் கொடுத்த தழையை ஏற்றுக்கொண்ட தோழி, தலைவியின் குறிப்பறிதற்குக் கூறுகின்ற இப்பாட்டில், தோழி வருந்து முறையும், தலைமகள் தழையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் உட்கோளும் இன்பந் தருவனவாயிருத்தல் அறிக.

'உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனென் இவளென
அலையல் வாழிவேண் டன்னை நம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே இவள்தான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர
மன்ற மராஅத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரும் அதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு
முருகின் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்லன் ஆக
அஞ்சுவ ளல்லளோ இவள்இது செயலே'.

(அக. 158)

இப்பாட்டில், தலைவியின் களவொழுக்கங் கண்டு ஐயுற்று வினாவிய செவிலிக்குத் தோழி மறைத்துக் கூறும் மறுமொழி மிக்க இன்பமுடையதாதல் அறிக.

**'கொடிச்சி இன்குரல் கிளிசெத் தடுக்கத்துப்**
**பைங்குரல் ஏனற் படர்தரும் கிளியெனக்**
**காவலுங் கடியுநர் போல்வர்**
*மால்வரை நாட வரைந்தனை கொண்மோ'*

*(ஐங்குறு. 289)*

இப்பாட்டின் முதலிரண்டடிகளின் கருத்து, முன்னர்த் தலைவன் கூற்றாக வந்துள்ள, 'சுடுபுன மருங்கில்' என்னும் பாட்டின் கருத்தை ஒத்திருத்தலை அறிக. தலைவனை வரைவுகடாவுந் தோழி, ஈண்டுக் கூறிய காரணம் வியப்புத்தருவதாயுளது.

இவையே யன்றி, குறிஞ்சிப்பாட்டில், தலைவன்றன்மை யைக் கூறும் பகுதியும் இன்பந் தருவதாயிருத்தலின், அதனையும் இங்கு எழுதுகின்றேன்.

*'ஈர நன்மொழி தீரக் கூறித்*
*துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து*
*துஞ்சா முழவின் மூதூர் வாயில்*
*உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன் அதற்கொண்*
*டன்றை யன்ன விருப்போ டென்றும்*
*இரவரன் மாலைய னேவரு தோறும்*
*காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்*
*நீதுயில் எழினும் நிலவுவெளிப் படினும்*
*வேய்புரை மென்றோள் இன்றுயில் என்றும்*
*பெறாஅன் பெயரினும் முனிய லுறாஅன்*
*இளமையின் இகந்தன்றும் இலனே வளமையில்*
*தன்னிலை தீர்ந்தன்றும் இலனே''* *(234-245)*

இப்பகுதியில், தலைவனியல்பும் நற்செயல்களும், அவற்றால் அவனைக் குறித்துத் தலைவி வருந்துதலும் அழகு பெறக் கூறப்பட்டுள்ளன அறிக.

இனி, தலைவனியல்பினைத் தலைவிக்குத் தோழி கூறும்பகுதி அடியில் வருமாறு:

'ஒன்று, இரப்பான்போல் எளிவந்துஞ் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கட் டோன்றும் அடக்கமும் உடையன்
இல்லோர் புன்கண் ஈகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன்
அன்னான் ஒருவன் தன் ஆண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய்'.

*(குறிஞ்சிக்கலி. 11:1-8)*

இதில் கூறியுள்ள தலைவனியல்பு உளங்கொளத்தக்கது.

இனி,

'விண்டோய்கன் னாடனும் நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ
மைதவழ் வெற்பன் மணவணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்களும் கண்களோ''

*(குறிஞ்சிக்கலி. 3: 37-42)*

என்று, தோழி நகைக்குறிப்பிற் கூறியதுவும்,

அதற்கு மறுமொழியாக,

'என்னை மன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்'

என்று தலைவி கூறியதுவும், மீண்டும்,

'நெய்த லிதழுண்கண் நின்கண்ணா கென்கண்மன'

என்று தோழி நகையாடிக் கூறியதுவும் மிக்க இன்பம் தருவனவாகும்.

இனி, தலைவனது பொய்ம்மைத் திறத்தைத் தலைவி கூறுதலும், தோழி அதனை மறுத்து, அவனது வாய்மையை வற்புறுத்திக் கூறுதலும் இன்சுவை தருவனவாயிருத்தலின் அவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்.

**தலைவி**

'இலங்கும் அருவித் திலங்கும் அருவித்தே
வானி னிலங்கும் அருவித்தே தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை' (குறிஞ்சிக்கலி. 5)

**தோழி**

'பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
அஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற் குரியனோ
குன்றகல் நன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றில்
திங்களுள் தீத்தோன்றி யற்று'.

**தலைவி**

'இளமழை யாடும் இளமழை யாடும்
இளமழை வைகலும் ஆடும்என் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று'.

**தோழி**

'வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவான் அல்லன் மலைநாடன்
ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கயத்துள்
நீருட் குவளைவெந் தற்று'.

### தலைவி

'மணிபோலத் தோன்றும் மணிபோலத் தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும்என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை'.

### தோழி

'துறக்குவன் அல்லன் துறக்குவன் அல்லன்
தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன்
தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பிற்
சுடருள் இருள்தோன்றி யற்று'.

இப்பகுதியில், தலைவியின் கூற்றுக்குத் தோழி மாற்றங் கூறுதல், சிறப்பும் உயர்வும் உடையதாதல் அறிக.

இவையேயன்றி, இக்குறிஞ்சிக்கலியுள் 15, 20, 25, 26, 28, 29 இவ்வாறு பாட்டுக்களும் முழுவதும் இவ்வாறே இன்பம் தருவனவாகும். அவற்றை நோக்கிக் கொள்க.

மகட்போக்கிய செவிலித்தாயின் கூற்றாயுள்ள செய்யுளில், மகளிரியல்பும் பிறவும் அருமையவாகக் கூறப்பட்டுள்ளனவாகலின் அச்செய்யுளை ஈண்டுத் தருகின்றேன்.

### செவிலி கூற்று

**'உவக்குந ளாயினும் உடலுந ளாயினும்**
**தாயறிந் துணர என்னார் தீவாய்**
**அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்**
**இன்னாள் இனையள் நின் மகள்** எனப் பன்னாள்
எனக்குவந் துரைப்பவும் தனக்குரைப் பறியேன்
நாணுவள் இவள்என நனிகரந் துறையும்

யான்இவ் வறுமனை யொழியத் தானே
அன்னை அறியின் இவணுறை வாழ்க்கை
எனக்கெளி தாகல் இல்லெனக் கழற்கால்
மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுறப்
பன்மலை அருஞ்சுரம் போகிய தனக்கியான்
அன்னேன் அண்மை நன்வா யாக
மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
வெய்திடை யுறாஅ தெய்தி முன்னர்ப்
புல்லென் மாமலைப் புலம்புகொள் சீறூர்ச்
செல்விருந் தாற்றித் துச்சில் இருக்க
நுனைகுழைத் தலமரும் நொச்சி
மனைகெழு பெண்டியான் ஆகுக மன்னே'.

(அகம். 203)

இனி, **புறப்பாட்டுக்களுள்** நயமிக்க பாட்டொன்றனையும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

'கடல்கொளப் படாஅ துடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலைநீ பெருமிதத் தையே'. (புறம். 122)

இப்பாட்டில், காரியின் நாடு உள்நாட்டின் நடுவணது என்பதையும், அவனது கொடைத்தன்மை முதலியவற்றையும் கூறியிருக்குந் திறன் பாராட்டத்தக்கதாகும்.

## இயற்கை நவிற்சி

இனி, கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டில் மாலைக்கால வருணனை மிக்க நயமுடையதாகக் காணுதலின் அதனை இங்கே எழுதுகின்றேன்.

'எல்லை செல்ல ஏழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய
மான்கணம் மரமுதல் தெவிட்ட ஆன்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றில்
ஓங்கிரும் பெண்ணை யகமடல் அகவ
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வானம் மாமலை வாய்சூழ்பு கறுப்பக்
கானம், கல்லென் றிரட்டப் புளளினம் ஒலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ'

(குறிஞ்சிப். 215-230)

என்பது அறிக.

## உள்ளுறை யுவமம்

பண்டைப் புலவர் பாட்டுக்களுள் உள்ளுறை யுவமமோ, அல்லது இறைச்சியோ பெரும்பாலும் அமைந்திருக்கும். அவ்வாறு அமைந்திராத பாட்டுக்கள் பொருட்சிறப்புடை யனவாகா என்பது பழைய உரையாசிரியர்களின் கருத்து. இதனை, [1]'ஏனை யுவமத்தினும் உள்ளுறையுவமமே செய்யுட்கும் பொரு

---

[1]தொல். உவமவியல்: சூ. 25 உரை.

விலக்கணத்திற்கும் சிறந்த தென்பது' என்றும், '.......... அல்லாக் கால், ''கரும்பு நடு பாத்திக் கலித்த தாமரை, சுரும்புபசி களையும் பெரும்புன லூர'' என்பது பயமிலவென்பது கூறலாம் என்பது' என்றும் பேராசிரியர் எழுதியிருப்பதனால் அறியலாகும்.

கபிலர் பாடிய பாட்டுக்களுள் பலவற்றில் உள்ளுறை யுவமம் காண்கின்றது. அவ்வெல்லாவற்றையும் எடுத் தெழுதின் விரியுமாகலின் ஒவ்வொரு நூலிலிருந்து ஒவ்வோர் உள்ளுறையை ஈண்டு எழுதுகின்றேன்.

[1]'ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடன்'. (குறு. 208)

இத்தலைவி கூற்றில், 'பிறிதொன்றன் பொருட்டுப் பொரு கின்ற யானையால் மிதிப்புண்ட வேங்கை நசையற உணங்காது குறையுயிரோடு மலர் கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடன்' என்றது, 'தலைவன் நுகருங் காரணத்தானன்றி வந்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குவான் நம்மை இறந்துபாடு செய்வியாது ஆற்றுவித்துப் போயினான். அதனால் நாமும் உயிர்தாங்கியிருந்து பலரானும் அலைப்புண்ணாநின்றனம்' என்று கூறியவாறாதல் அறிக.

'பிணர்ச்சுவற் பன்றி தோன்முலைப் பிணவொடு
கணைக்கா லேனல் கைம்மிகக் கவர்தலிற்
கல்லத ரரும்புழை யல்கிக் கானவன்
வில்லிற் றந்த வெண்கோட் டேற்றைப்
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்

---

1. இச்செய்யுளை இறைச்சிப்பொருட்கு உதாரணமாகக் காட்டினர் இளம்பூரணர் (பொருளியல். 34). இது, உள்ளுறையுவமமேயாதல் நச்சினார்க்கினியருரையால் (அகத்திணையியல், சூ. 47) அறியப்படும்.

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட
★ ★ ★ ★
வரைசேர் சிறுநெறி வாரா தீமே'. (நற். 336)

இப்பாட்டில், 'கானவன் வில்லிற் றந்த வெண்கோட் டேற்றைப் புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக், குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட' என்று தோழி கூறியதில், 'நின்னாட்டில் வேடன் விற்றொழிலால் அகப்படுத்துத் தந்த பன்றியை, அவன் மனைவி பல வீட்டினருக்கும் பகுந்து கொடுப்பாள்' என்றதனால், 'நீயும் இவளை மணந்துகொண்டு இல்லறம் நடத்துகையில், நீ பகைவரை வென்று தரும் பொருளை இவள் சுற்றத்தார் முதலியோர் பலருக்கும் நல்கி நல்வாழ்வு வாழ்வாள்' என்றாவாறாம்.

'இரவில் மேயல் மரூஉம் யானைக்
கால்வல் இயக்கம் ஒற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்

உடுவுறு கணையிற் போகிச் சாரல்
வேங்கை விரியிணர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துட் டங்கும்
மலைகெழு நாடன்'. (அக. 292)

இவ்வடிகளில், 'யானையின் வரவினை யறிந்து அதன்மேல் வேடன் எறிந்த கவண்கல், வேங்கையிணரைச் சிதறி, தேனைச் சிதைத்து, பலவின் பழத்துட் டங்கும்' என்ற தலைவி கூற்று, 'தலைவன் களவொழுக்கத்தில் வருதலை யறிந்து ஊரார் தூற்றும் அலரானது, ஆயத்தாரை அணுகவொட்டாது நீக்கி, தோழியை வருத்தி, தலைவியின் நெஞ்சினைப் புண்படுத்தி நிலைநிற்கும்' என்ற பொருளதாகும்.

'வன்கட் கானவன் மென்சொல் மடமகள்
புன்புல மயக்கத் துழுத வேனற்

பைம்புறச் சிறுகிளி கடியும் நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே'

(ஐங்குறு. 283)

என்னும தோழி கூற்றில், 'மென்சொல் மடமகள் ஏனலிற் கிளிகடியும் நாட' என்பது உள்ளுறை. இதற்குப் பழைய உரையாசிரியர் எழுதியிருப்பது:

'தினைப்புனத்துப் பலவாய்ப் படிகின்ற கிளிகளை ஒருத்தி தன்னாற் காக்க முடியாதாயினும் அவற்றை அவள் கடியமுயலும் நாட என்றது, நின்னோடு இன்பநுகர்ச்சி விரும்பு மகளிரை யாங்கள் விலக்க முயல்கின்றது முடியாது என்பதாம்.

குறிஞ்சிப்பாட்டில்,

'பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட் டின்னியம் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியில் தளருஞ் சாரல்' (187-194)

என்னும் அடிகளுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உள்ளுறை உவமப் பொருளாவது:

1. 'மிளகு உக்க பாறை, அந்நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும்,
2. நெடுஞ்சுனை, தலைவன் குடியாகவும்,
3. மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல், தந்தையாலும் தாயாலும் உளனாகிய தலைவனாகவும்,

4. பிரசம், இவரைக் கூட்டின பால்வரை தெய்வமாகவும்,
5. அதனையுண்ட மயில், உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு ஒத்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும்,
6. அத்தேறலிற் பிறந்த களிப்பு, களவொழுக்கத்தாற் பிறந்த பேரின்பாகவும்,
7. மயில் ஆட ஆற்றாத தன்மை, வருந்திக் குறைந்த தன்மை யாகவும் உள்ளுறையுவமம் கொள்க'

என்பது.

குறிஞ்சிக்கலியில்,

'கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
அதுவென வுணர்ந்ததன் அணிநல முருக்கிப்
பேணா முன்பிற் றன் சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதில் நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும் நன்மலை நன்னாட'.
(குறிஞ்சிக்கலி. 13)

இப்பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது:

1. 'புலியினை வென்று துயிலும் யானை, அயலார் கூறிய அலரைச் சுற்றத்தார்க்குப் பொய்யெனத் தேற்றி மனைக்கட் டுயில்கின்ற தலைவியாகவும்,

2. கனவிற் கண்டு வெருவின தன்மை, அத்தலைவி, நனவில் தான் அங்ஙனம் செய்ததெல்லாம் தன் மனத்ததாகலின் அச்செயலைக் கனவினுங் கண்டு அவள் வெருவின தன்மையாகவும்,

3. வேங்கையை நலங்கெடுத்தமை, தோழி அவனது களவொழுக்கத்திற்கு உடம்பட்டுக் கொடுமை செய்து ஒழுகு கின்றாள் என்று, தலைவி தோழியை வருந்தியதாகவும்,

4. அது சினந்தணிந்த தன்மை, தோழி கருத்தறியாமல் அவளைக் கொடுமை கூறினோம் என்று தலைவி உட்கொண்ட தன்மையாகவும்,

5. அஃது அதனை நோக்காது இறைஞ்சுகின்ற தன்மை, யாமும் இவள் வருந்த இங்ஙனம் கூறினோம் என்று எதிர்முகமாக மகிழ்ந்து நோக்காது, தலைவி நாணி இறைஞ்சியிருக்கின்ற தன்மையாகவும் உள்ளுறை யுவமம் கொள்க'

என்பது.

கலித்தொகைப் பாட்டுக்களிலும் ஐங்குறு நூற்றுப் பாட்டுக்களிலும் வந்துள்ள உள்ளுறையுவமங்கள் பல. அவற்றிற் கெல்லாம் உரையாசிரியர்கள் எழுதியுள்ளவை கண்டுகொள்க.

இனி, புறப்பாட்டுக்களுட் காணும் உள்ளுறை யொன்றனையும் ஈண்டு எழுதுகின்றேன்.

'அடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே'. (புறம். 202)

இதில், 'வேங்கைவீ தாய துறுகல் இரும்புலி வரிப்புறங் கடுக்கும்' என்ற கருத்து, 'ஏதஞ் செய்யாததூஉம் ஏதஞ் செய்வது போலக் கண்டார்க்கு அச்சம் வரத் தோன்றும்' என்பதாகலின், 'நீ, இம்மகளிரை மணப்பாயின், அதனால் உனக்கு யாதோர் இடையூறும் உண்டாகாது; அங்கனம் இருக்கவும் தீங்குவரும் என்று அஞ்சுகின்றாய்' என்று கூறியவாறாம்.

## இறைச்சிப் பொருள்

இனி, **இறைச்சிப் பொருளுக்கு** ஓர் உதாரணம் தருகின்றேன்.

'எம்படப்பைக்
கொடுந்தேன் இழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கும் நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகல்நீ வரினும் புணர்குவை........
..............தோளே'. *(அகம். 18)*

இதில், 'நீ பகலில் வரினும் புணர்குவை' என்று தோழி கூறினாளாயினும் 'தேனிழைத்த' என்றதனால் தேனழிக்க வருவாராலும், 'பழந்தூங்கும் நளிப்பு' என்றதனால் பழமெடுக்க வருவாராலும், 'காந்தளம் பொதும்பு' என்றதனால் பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதாகலின், பகலிலும் நீ வாரற்க என்று விலக்கினமை இறைச்சிப் பொருளாதல் அறிக. இவ்வாறு கொள்ளும் பொருளை வடநூலார் **'த்வநி'** என்பர்.

## அணி

இனி, கபிலர் பாட்டுக்களில் வந்துள்ள அணிகளுட் சில வற்றை இங்கு எடுத்துக்காட்டுகின்றேன்.

[1]'**மாயிரு விசும்பிற் பன்மீன் ஒளிகெட**
**ஞாயிறு தோன்றி யாங்கு** மாற்றார்
உறுமுரண் சிதைத்த நின் நோன்றாள் வாழ்த்திக்
காண்கு வந்திசின்'. (பதிற். 64)

---

1. 'இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
..........நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்' (கம்ப. குகப்படலம்: 36)

என்று, இக்கருத்தினைக் கம்பநாடர் கூறியிருத்தல் அறிக.

இவ்வடிகளில், கடுங்கோவாழியாதனுக்கு ஞாயிற்றையும், அவன் பகைவருக்கு விண்மீன் கூட்டத்தையும் உவமித்துள்ளமை அறிக.

'போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்பப்
பூத்த முல்லைப் புதல்சூழ் பறவை'. (பதிற். 66)

இதில், 'கிழித்துக் குறுக நறுக்கி வாகையோடு இடை வைத்துத் தொடுத்த பனங்குருத்து முல்லைமுகைக்கொப் பாகவும், வாகைவீ அம்முல்லையைச் சூழ்ந்த வண்டிற்கொப் பாகவும் உவமங் கொள்ள' வைத்திருத்தலை அறிக.

'அணிமுகம் மதியேய்ப்ப அம்மதியை நனியேய்க்கும்
மணிமுக மாமழையின் பின்னொப்பப் பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய வீரித ழலரி
அரவுக்கண் ணணியுறழ் ஆரல்மீன் தகையொப்ப
அரும்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தொலி கூந்தலாய்'. (கலி. 64)

இவ்வடிகளில், முகத்திற்கு மதியும், பின்னின் மயிர்க்கு மழையும், அப்பின்னலில் வைத்துள்ள பூக்களுக்குக் கார்த்திகை நாண்மீனும் ஆகப் பல உவமைகள் சேர்ந்து வந்துள்ளமை காண்க.

புறநானூற்றின் 8-ஆம் பாட்டும், 107-ஆம் பாட்டும் உவமையின் வகைகளாளமைந்தவை. அவை மிக்க நயமுடை யனவாதலின், அவற்றை ஈண்டு எடுத்தெழுதுகின்றேன்.

'வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னும் ஊக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னாலும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே'. *(புறம். 8)*

இப்பாட்டில், பொருளிற்குக் கொடுத்துள்ள அடைகளை உவமைக்கும், உவமைக்குக் கொடுத்துள்ள அடைகளைப் பொருளுக்கும் கூட்டிப் பேராசிரியர் விளக்கி எழுதியிருப்பது *(தொல். உவம: 32)* அறியத்தக்கது.

'பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீங் குலகுபுரப் பதுவே'. *(புறம். 107)*

இப்பாட்டில், உவமையின் தன்மை அமைந்துளது. 'உவமத் தன்மையும் உரித்தென மொழிப' *(தொல். உவம: 34)* என்பது விதி. இதுவும் உவம வகையே[1].

[2]'ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்

---

1. பிற்காலத்தார் கொள்கைப்படி ப்ரதீபாலங்காரத்தி னுட்படுவதாகும். 'குறிப்புவமைப்பாற்படும்' என்றார் மாறனலங்கார உரையாசிரியர். *(பொருளணி. சூ. 15. உரை)*

2. 'ஆடமை.............குழலிசை யாக'
என்பதனோடு,

'ஸ கீசகைர் மாருதபூர்ணரந்த்ரை:
கூஜத்பி ராபாதிதவம் ஶக்ருத்யம்' *(ரகுவம்ஶம். 2:12)*

என்னும் சுலோகத்தை ஒப்பிடுக.

கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் களிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
நனவுப்புகு விறலியிற் றோன்றும்'. (அக. 82)

இதில், 'ஆடமை.. நோக்க' என்னுமளவும் இயைபுருவக அணியாகுமாயினும், பண்டைக் காலத்தில் உவம வகையுள் ஒன்றாகவே கருதப்பட்டது. இவ்வடிகளிற் காணும் அணி மிக்க நயமுடையதாதல் அறிக.

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கும் நாடகேள்'. (கலி. 38)

இத் தரவினில், வேங்கை மரத்தின் அடியிற் குத்தி வருந்திய யானைக்குக் கைமலையைத் தூக்கி வருந்திய இராவணனை உவமையாகக் கூறியிருப்பது, அமைவுமையதாதல் அறிக.

இனி, கபிலர் செய்யுட்களிற் காணும் உவமைகளுள் சிலவற்றை ஈண்டு எடுத்தெழுதுகின்றேன்.

மகளிர் (விரித்த) கூந்தல், மயிலின் கலாவம்போறல்.
(குறுந். 225)

மயிலினது விரிந்த சிறகு, மகளிர் கூந்தல்போறல்.
(ஐங். 300)

மகளிர் முன்கை, காந்தட்பூவின் துடுப்புப்போறல்.
(கலி. 59)
மகளிர் கைவிரல், நறவம்பூ அலர்ந்தபோறல். (கலி. 54)
மகளிராகத்திலுள்ள சுணங்கு, வேங்கைப்பூப்போறல்.
(கலி. 64)
மகளிரது செவ்வரிபரந்தகண், மாரிக்காலத்துப் பித்திகையரும்பின் பின்புறம் போறல். (அகம். 42)
மகளிர்முதுகிற் கூந்தல் தாழ்ந்திருத்தல், பொன்னில் மணிபதிந்திருத்தல் போறல். (குறிஞ்சிப். 59)
மகளிர் நடை, மயில் நடைபோறல். (ஐங். 258)
பெண்மகள் அழுகைக்குரல், குழல் இனைவது போறல். (புற. 143)
ஆடவர் உயிர்த்தல், பள்ளியானையின் உயிர்ப்புப் போறல். (குறுங். 142)
ஆடவர் உயிர்த்தல், உலையில் துருத்திமூக்கு உயிர்த்தாற் போறல். (கலி. 54)
ஆடவர்தோளில் பூமாலை புரிய வீழ்ந்து கிடப்பது, எருத்தின் இமிலிற் கயிறு கிடப்பதுபோறல்.(அகம். 248)
மகளிரின் நலனுகர்ந்து ஆடவர் பெயர்ந்துபோதல் கொங்குண்ட வண்டு பெயர்தலை ஒத்தல். (ஐங். 226)
குதிரையின் குடுமித்தலை, பார்ப்பனக்குறுமகனது குடுமித் தலையை ஒத்திருத்தல். (ஐங். 202)
அவரை தின்ற மந்தியின் உருவம், வணிகர்பை போறல். (ஐங். 271)
மலர்ந்த வேங்கை மரத்தில் இருககும் மயில், பூக்கொய்யும் பெண்டுபோல் தோன்றுதல். (ஐங். 297)
மலர்ந்த வேங்கை மரத்தில் இருக்கும் மயில், இழை யணிந்த பெண் போல் தோன்றுதல். (ஐங். 294)
காந்தளரும்பில் இருக்கும் வண்டு, மகளிர் கைவிரலில் அணிந்த தாள் (அணி) போல் தோன்றுதல். (கலி. 43)
கதிரால் தாழ்ந்துநிற்குந் தினைப்பயிர், மகளிர் நாணி இறைஞ்சுதல் போறல். (கலி. 40)

தலைவளைந்த தினைக்கதிர், யானை, தன் மருப்பில் தொங்கவிட்ட கை போறல். *(குறிஞ்சிப். 35-7)*

வெதிர்முளையின் கண்லணப் பொதிந்த பாளை, மான் செவி போறல். *(கலி. 43)*

(மலை) வாழைக்குலையில் இருக்குங் காய்கள், புலி யினடிபோறல். *(கலி. 43)*

குரங்கு தங்கியிருந்து பின்பு பாய்ந்து சென்றதனால் உயர்ந்த மூங்கிற்கோல், மீனெறி தூண்டில் போறல். *(ஐங்குறு. 278)*

கோங்கமரம் பூத்ததனால் பொலிவுபெற்ற மலை, பொன் அணியப்பெற்ற யானைபோல் விளங்குதல். *(கலி. 42)*

மலையில் தொடுக்கப்பட்ட இறால், மழையில் நுழையுந் திங்கள் போன்றோன்றுதல். *(கலி. 42)*

மலையிற் செல்லுஞ் சிறிய வழி, யானையின் கயிற்றுப் புறம்போல் காணுதல். *(அகம். 128)*

மலையில் அருவியொலி, முழவொலிபோறல். *(அகம். 318)*

அருவியினொலி, முரசினொலிபோறல். *(புறம். 143)*

மலையில் அருவி வாள்போல் ஒளிசெய்தல். *(அகம். 278)*

மலையில் உள்ள சுனைகள் வான்மீன்கள் போறல் *(புறம். 109)*

யானையின் மீது எடுத்தகொடி, மலையின் அருவிபோல் தோன்றுதல். *(பதிற். 69)*

அருவி, துகில்போறல். *(குறிஞ்சிப். 55)*

வாள் அசைதல், பூமாலை அசைதல்போறல். *(பதிற். 66)*

தோல்கள் (கிடுகு), முகிற்கூட்டம்போறல். *(பதிற். 66)*

மழைமுகில், தோல்நிரை போறல். *(அகம். 278)*

முரசு, காற்றினால் கடல் ஒலித்தல்போல் முழங்குதல். *(பதி. 68)*

மலையில் தவழும் (வெண்) முகில், நுண்ணிய பஞ்சு போறல். *(நற். 353)*

குளத்தின் வளைந்த கரை, எண்ணாட்டிங்களை யொத் திருத்தல். *(புற. 118)*

நறவைப்பிழிந்து போகட்ட கோது, களிறு மென்று இட்ட
கவளம் போறல். (புற. 114)
புகையால் ஒளிமழுங்கிய திங்கள், தேனிறால்போறல்.
(கலி. 39)

இவ்வாறு வந்துள்ள சிறப்புவமைகள் பல. இனி,

'..........கடுவரற் கான்யாற்றுக்
கராஅம் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப வொற்றி
உராஅ வீர்க்கும் உட்குவரு நீத்தம்
கடுங்கட் பன்றியின் நடுங்காது துறந்து
நாம வருந்துறைப் பேர்தந் தியாமத்
தீங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப.' (அகம். 18)

தலைவனை நோக்கித் தோழி கூறும் இப்பகுதியில், 'நீ, பன்றிபோல நடுங்காது நீத்தங் கடந்து வருதல் தகுமோ?' என்றது இழிபுவமை எனத் தோன்றும். ஆயினும், ஈண்டுவமித்த பன்றி காட்டுப் பன்றியாகலானும், அது தறுகண்மையும் வன்மையும் மிக்கதாகலானும், வெள்ளத்தினை அஞ்சாத தறுகண்மையும் அதனை நீந்திச் செல்லும் மிடுக்குமே ஈண்டைக் கெடுத்துக் கொண்ட பொதுத்தன்மையாகலானும், இவ்வுவமை இழிபன்றென்று அமைத்துக் கொள்ளுதல் கூடும்.

'வேறுபுலத்
தாகாண் விடையின் அணிபெற வந்து'
(குறிஞ்சிப். 135, 6).

என்பதும்,

'துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து'
(குறிஞ்சிப். 235)

என்பதும் சிறந்த உவமைகளாகா. இவை உவகைச் சுவைக்குச் சிறப்பில்லாமை அறியத்தக்கது.

## கவிமரபான செய்திகள்

இனி, கபிலர் செய்யுட்களுள் கவிமரபாக வந்துள்ள செய்திகளைக் குறிக்கின்றேன்.

ஞாயிற்றின் தேரை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லுதல். *(குறிஞ்சிப். 215, 6)*

நல்லரசர் காலத்தில், வெள்ளி, மழை பெய்யத்தக்க நன்னாளில் நிற்றல். *(பதிற். 69)*

காந்தளைப் பாம்பெனக் கருதி உருமேறு இடித்தல். *(கலி. 45)*

சூர் உள்ள இடத்தில் வருடையும் பாயாமை. *(நற். 359)*

அணங்கு, தான்வேண்டும் உருவின் வருதல். *(அகம். 158)*

முருகன் சீற்றம் மிக்கவன். *(அகம். 158)*

முகில் கீழ்கடலில் நீர்முகந்து வலனெழுந்து மழை பெய்தல். *(அகம். 278)*

கற்புடை மகளிர் மழைபெய்க எனின் மழை பெய்தல். *(கலி. 39)*

இவ்வாறு வருவன கவிமரபாகக் கொள்ளத்தக்கன. இவற்றைப் புலவர், மரபாகக் கொண்டு பாடுதலின் இவை **கவிமரபு** எனப்பட்டன.

## புராணக்கதை

கபிலர் பாட்டுக்களுள் காணும் புராணக்கதைகளை ஈண்டு எடுத்தெழுதுகின்றேன்.

சிவபெருமான், இமயமலையை வில்லாகக் கொண்டது. *(கலி. 38)*

சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருக்கும்போது இராவணன் கயிலை மலையைத் தூக்கி வருந்தியது. *(கலி. 38)*

வீமன், துரியோதனனது குறங்கினை அறுத்தது.
(கலி. 52)
திருமால், மல்லரை அடக்கி வென்றது. (கலி. 52)
வேளிர்குடியின் முதல்வன், வடதிசைக்கண் முனிவ னொருவன் செய்த வேள்வியில் தோன்றினமை.
(புற. 201)
முருகன், பகைவரை (அசுரரை)க் கொல்லுதற்கு வேலை ஏந்தியது. (குறிஞ்சிப். 51, 52)

## இலக்கண மாறுபாடு

பண்டைப் புலவர்களுள் கபிலர் சிறந்தவர் என்பதும் செய்யுட் செய்தலில் வல்லவர் என்பதும், மேல் அவர் வரலாறு கூறியவிடத்துக் கூறியவாற்றால் அறியப்படும். அத்தகையரான பெரும்புலவர் பாட்டுக்களில் இலக்கண மாறுபாடுகள் இரா என்று நாம் எண்ணுவோம். ஆயின், சில மாறுபாடுகள் காண் கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிக்கின்றேன்.

பெருமலை நாடன் கேண்மை நமக்கே
விழும மாக அறியுநர் இன்றெனக்
கூறுவை மன்னோ நீயே
தேறுவென் மன்யான் அவருடைய நட்பே'. (நற். 309)

என்னும் இவ்வடிகளில், **'அறியுநர் இன்று'** என்பது வழுவான முடிபாகும். 'அற்றன்று, உண்டு என்னும் சொல் ஐம்பாற்கும் வருதல்போல இன்று என்பதும் வரும் எனக் கோடல் அமையும்' எனின், அது பொருந்தாது, என்னெனின், ஐம்பாற்கும் உரிய சொற்களைக் கூறுமிடத்து, ஆசிரியர் தொல்காப்பியனார், 'இன்மை செப்புங் கிளவி'யை ஒன்றாகக் கூறியுள்ளார். அஃது, **இல்லை, இல்** என்பனவே என்று உரையாசிரியர்கள் அனைவரும் கூறினர். அதனான், **இல்லை** என்பது ஐம்பாற்கும் உரிய சொல்லாகுமேயன்றி, **இன்று** என்பது ஆகாது. இன்மை செப்புங்கிளவியாவது, 'இல்லை' என்னும் சொல்லே என்று ஆசிரியர் விதந்து கூறாமையின், **இன்று** என்பதைக் கொள்ள

லாகாதோ எனின், அதனைக் கொள்ளுதல் பொருந்தாது. என்னை எனின், **இன்று** என்னும் சொல் இலது என்னும் சொல்லின் மற்றொரு வடிவேயாகலானும், அஃறிணை பெருமைக்குரிய துவ்விகுதியை உடையதனானும் என்க. மற்று, **இல்லை** என்னும் சொல்லோ எனின், அஃது, அஃறிணை யொருமைக்குரிய துவ்விகுதியையோ, பன்மைக்குரிய அகர விகுதியையோ, உயர்திணைக்குரிய னகர ளகர ரகர விகுதியையோ கொண்டில தாகலின் அதில் இன்னதோர் வழுவில்லை என்க. **உண்டு** என்னும் சொல்லும் உளது என்னும் சொல்லின் மற்றொரு வடிவேயாய்த் துவ்விகுதியை யுடையதாகலின், அஃறிணையொருமைக்குரிய சொல்லேயாம் என்று துணிந்து, ஆசிரியர் தொல்காப்பியர் கூறாது விடுத்தார். நன்னூலார் தங்காலத்திலக்கியம் நோக்கி அதுவும் ஐம்பாற்கும் வரும் என்று கூறினார். அங்கனம் கூறிய அவர் தாமும் **இன்று** என்னும் சொல்லைச் சேர்த்துக் கூறினாரல்லர். ஆகலின், 'அறியுநர் இன்று' என்று கபிலர் செய்யுளில் வந்திருப்பது இலக்கண வழுவேயாம் என்க. இனி, 'அறியுநர் இலர்' என்னும் பாடமே இவ்வாறு பிழைபட்டது போலும்.

'ஓரிக் கொன்ற ஒரு பெருந் தெருவில்
காரி சென்ற....... *(நற். 320)*

என்னுமிடத்து, ஓரி என்பது உயர்திணைப் பெயராகலின் இரண்டனுருபு விரித்து, 'ஓரியை' என்றல் தக்கது;

'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்'
*(தொல். எழுத். 157)*

என்பது விதியாகலின், ஆயின், **'உடம்பொடு புணர்த்த'** லால், உருபுபெறாதும் வருமென்பராயினும், அது சிறப் பன்றென்க.

குறிஞ்சிக்கலியில், **'இஃதொத்தன்'** (25, 26) என்று வந்துளது. இதில், ஒருத்தன் என்பது, ஒத்தன் என்று வந்துள்ளதைக்

குறித்து முன்னர்க் கூறுவேன். இனி **'இஃது ஒத்தன்'** என்றிருப்பது வழுவாகும். **'இவன் ஒருத்தன்'** என்பதே அமைதி. இச்சொல் ஈண்டு இலக்கண அமைதியுடையதாதல் இன்றாகலின், இதனை வழுவென்பதே நேர். கபிலரேயன்றி வேறு சிலரும் இங்ஙனம் வழங்குதலின், இஃது அக்காலத்து வழங்கின வழக்கு என்பது அறியக்கூடுமாயினும் இலக்கண மரபுடையதாதல் இல்லை. இனி, நாடக வழக்கினைக் கூறுங் கலிப்பாட்டில் வந்ததாகலின் இதனை அமைத்துக் கொள்ளுதலும் பொருந்தும்.

இவையேயல்லாமல், 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி'யும் பயின்று வந்துளது.

> '**கொடிய ரல்லர்** எங் குன்றுகெழு **நாடர்**' *(குறுந். 87)*
> 'ஆரிருட் கங்கு **லவர்** வயின்'. *(குறுந். 153)*

என்பன போல்பவை பல. இவற்றை ஆசிரியர் தொல்காப்பி யனார், 'இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல' *(கிளவி. 27)* என்று விலக்கியுள்ளார்.

> 'உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்
> இரவின் அஞ்சாய்' *(நற். 336)*

என்னும் இவ்வடிகளில், வேழம் புலியைப் பார்க்குமோ, அன்றி, புலி வேழத்தைப் பார்க்குமோ என்பது ஐயத்திற்கிடமாயிருத் தலின், இத்தகைய இடங்களில் செயப்படுபொருளிற்கு இரண் டனுருபு விரித்தலே நன்று. ஈண்டு, 'உரவுச்சின வேழம்' என்று யானைக்கு அடை கொடுத்திருத்தலின் யானையே புலியைப் பார்த்திருக்கும் என்று கொள்ளலாமாயினும் ஐயம் தோன்றக்கூடிய இடங்களில் தெளிவாகக் கூறுதலே அமைதி என்க.

இனி, இன்ன இன்ன உவமைகளுக்கு இன்ன இன்ன உருபு வரும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் வகுத்தோதிய முறை பிறழ்ந்து மாறாக வந்துள்ளன பல.

'மாரிப் பித்திகத்து
............ மணமுகைச்
செவ்வெளி **நுறழூங்** கொழுங்கடை மழைக்கண்'.
(அக. 42)

ஈண்டு, **உறழும்** என்னும் உவமவுருபு உருவுவமத்து வந்துளது. இவ்வுருபு வினையுவமத்துக்குரியதென்பது.

'அன்ன ஆங்கமான விறப்ப
என்ன **உறழத்** தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவம'. (உவம. 12)

என்னும் சூத்திரத்தான் அறியப்படும்.

'நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே' (அகம். 158)

ஈண்டு **போல** என்னும் உவமவுருபு வினையுவமத்து வந்துளது. இவ்வுருபு உருவுவமத்துக்கு உரியதென்பது,

'**போல** மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தஎன்
றொருத்துவரு கிளவி **உருவி** னுவமம்' (உவம. 16)

என்னும் சூத்திரத்தான் அறியப்படும்.

இவ்வாறு, தொல்காப்பியனார் கூறிய விதிக்கு மாறாக வந்திருப்பன பல. அவ்வெல்லாவற்றையும் எடுத்தெழுதின் விரியுமென்றஞ்சி எழுதாது விடுக்கின்றேன்.

## இலக்கணச் சிறப்பு

இனி, கபிலர் செய்யுட்களில் காணும் இலக்கணச் சிறப்புக்களுள் சிலவற்றை ஈண்டு ஆராய்கின்றேன்.

'புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவி
அலங்கும் பாண்டில் இழையணிந் **தீம்**என
ஆனக் கொள்கையை'. *(பதிற். 64)*

இவ்வடிகளில், 'இழையணிந் தீம்' என்றதில், ஈம் என்பது, ஈயும் என்னும் ஏவல்வினை. 'ஈம்' என்றது, அவ்வீகைத் துறைக்குக் கடவாரை' என்றார் உரையாசிரியர். இதனால், மகரவீற்றுச் சொல் முன்னிலையில் வந்திருப்பது தெளிவாகும். தொல்காப்பியனார்,

'ஔ என வருஉம் ★ ★
**ஞநமவ** என்னும் புள்ளி யிறுதியும்
★ ★ ★
முற்றத் தோன்றா **முன்னிலை மொழிக்கே'** *(எழுத். 152)*

என்று கூறியுள்ளார். ஆயின் சென்மே, நின்மே என்பன முதலிய மகர வீற்று வினைச்சொற்கள் முன்னிலைக்கண் வந்துளவால் எனின், அவை,

'முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே' *(எச்ச. 55)*

என்னும் விதியால் அமைதி பெறுவனவாகும். இஃது அவ்வாறு வந்ததன்று. என்னெனின், சென்மே நின்மே என்பன, செல் நில் என்று ஒருமைப்பொருளைத் தருவனவாகலின் அவை மகரவீற்றன அல்ல என்பர்; ஈம் என்பது பன்மைப் பொருளைத் தருவதாகலின் அவர்க்கும் மகரவீற்றதே எனல் வேண்டும் என்க. இனி,

'மன்னா வுலகத்து மன்னுவது **புரைமே'** *(கலி. 54)*

என்பதில், **'புரைம்'** என்பது புரையும் என்னும் முற்றுச்சொல். அஃது ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டுப் படர்க்கைக்கண் வந்துளது. ஆசிரியர் தொல்காப்பியனார்,

'அவற்றுள்
செய்யும் என்னும் **பெயரெஞ்சு கிளவிக்கு**
**மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம்**
அவ்விட னறிதல் என்மனார் புலவர்' *(வினை. 41)*

என்னும் சூத்திரத்தால், செய்யும் என்னும் பெயரெச்சம் ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டு வருதலை விதித்தாரே யன்றி, செய்யும் என்னும் முற்று அவ்வாறு வருதலை விதித்தா ரல்லர். ஆகலின், இது தொல்காப்பிய விதிக்கு மாறுபட்டதே யாம் என்க. இவ்வாறு வருதலைக் கண்டு நன்னூலார்,

'செய்யும் என் எச்சவீற் றுயிர்மெய் சேறலும்
..................................**முற்றேல்**
**உயிரும் உயிர்மெய்யும் ஏகலும்** உளவே'
*(நன். வினை: 22)*

என்று விதிகூறி அமைத்துள்ளார்.

இனி, பழைய செய்யுட்களில் தன்வினை பிறவினை இரண்டற்கும் ஒரே சொல் வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம். கபிலர் செய்யுட்களிலும் அவ்வாறு வந்துளது.

'இன்னா வாடையு மலையும்' *(ஐங். 236)*

என்னும் அடியில், அலையும் என்னும் தன்வினைச்சொல் பிறவினைப் பொருளில் வந்துளது. அலையும் என்பதற்கு ஈண்டு, அலைக்கும் என்பது பொருள். இனி இவ்வாறன்றி, 'வாடையும் மலையும்' எனப் பிரித்துப் பொருள் கூறுதலும் அமையுமாயினும் அது தக்கதன்று. என்னெனின், 'வாடை **யலைக்கும்'** என்பதே வழக்கு.

'வேறுபுல **வாடை** யலைப்ப' *(நற். 341)*
'பனிமயங் கசை**வளி யலைப்ப'** *(அகம். 161)*

என்பன காண்க.

'காழகி லம்புகை **கொளீஇ**'

என்பதில், **கொளீஇ** என்பது பிறவினைப் பொருளில் வந்திருத்தல் அறிக. இவ்வாறே இன்னும் சில உள. இனி,

'மண்டம ரட்ட களிறன்னான் றன்னை**யொரு**
**பெண்டிர்** அருளக் கிடந்த தெவன்கொலோ?'
(கலி. 61)

என்னுமிடத்தில், ஒரு பெண்டு என்று வருதற்கு மாறாக, ஒரு பெண்டிர் என்று வந்துளது. ஈண்டு, பெண்டிர் என்னும் பன்மைச் சொல் ஒருமைக்கு வந்திருத்தல் அறியத்தக்கது. **'ஒரு பெண்டிர்'** என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், **'ஒரு மகளாயிருக்கின்றவள்'** என்றே பொருளெழுதியிருத்தல் காண்க. இனி,

'நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் **இனிய** அவர்நாட்
டுவலைக் கூவற் **கீழே**
மானுண் டெஞ்சிய கலிழி **நீரே**' (ஐங். 203)

என்னும் செய்யுட் பகுதியில், 'கூவற்கீழ் நீர் இனிய' என்று இயைகின்றது. ஈண்டு, **கீழ** என்னும் அடைமொழியும், **இனிய** என்னும் பயனிலையும் பன்மைச் சொற்களாயிருப்ப, **நீர்** என்பதொன்று ஒருமைச் சொல்லாய் வந்திருத்தல் அறிக.

'தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
**குருகும்** உண்டு தான் மணந்த ஞான்றே' (குறுந். 25)

என்னுமிடத்தும், கால என்னும் பன்மைச்சொல், குருகு என்னும் ஒருமைச்சொற்கு அடையாக வந்துளது காண்க.

மேற்கூறிய இவை (நீர், குருகு) தொகுதியொருமையாகக் கொள்ளற்பாலன.

★ ★ ★

# VIII

# சொல்லாராய்ச்சி

பண்டைக்காலத்தில் நம் நாட்டில் வழங்கி வந்த தமிழ் மொழியைப் பாண்டி மன்னர்களின் வேண்டுகோளால் புலவர் பலர் சீர்திருத்தம் செய்து செம்மைப்படுத்தினர். அதனால் அம்மொழி **செந்தமிழ்** என்னும் சிறப்புப்பெயர் பெற்றது. செந்தமிழாதற்கு முன்னரே தமிழ் மொழியிற் செய்யுட்கள் பல்கியிருந்தன. இப்போதுள்ள பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தினின்று அப்பழந்தமிழின் இயல்புகள் சில வற்றை நாம் ஆராய்ந்து அறிதல் கூடும். இவற்றால் தமிழ் மொழியைப் **பழந்தமிழ்** அல்லது **கொடுந்தமிழ்** எனவும், **செந்தமிழ்** எனவும் இருவகைப்படுத்துதல் தகும். கன்னடமொழி **ஹளகன்னடம்** (பழங்கன்னடம்) எனவும், **ஹொஸகன்னடம்** (புதுக்கன்னடம்) எனவும் பகுத்து வழங்கப்படுதல் ஈண்டைக்கு அறியத்தக்கது.

பழந்தமிழ் மொழியில் இயற்றிய செய்யுட்கள் இக் காலத்தில் இல்லையாயினும், பழந்தமிழ்மொழியின் இயல்பு களுள் சிலவற்றை இக்காலத்தில் வழங்குகின்ற செந்தமிழ்ச் செய்யுட்களிலும் காணலாகும். இலக்கண நூலாசிரியரும் பழந் தமிழியல்புகளுள் சிலவற்றைத் தம் நூலுட் கூறியுள்ளனர். அவற்றை ஆராய்வது ஈண்டைக்கு மேற்கொண்ட பொருளன் றாகலின், கபிலர் பாட்டுக்களில் காணும் பழந்தமிழ்ச் சொற்களை எடுத்துக்காட்டி, அவற்றைக் குறித்துச் சிறிது கூறுவல்; முதற்கண், சில சொற்களின் பழைய உருவமும் பிற்கால உருவமும் நேர்நேரே எழுதுகின்றேன்.

| பழைய உருவம் | | பிற்கால உருவம் |
|---|---|---|
| 1. இயலி | (குறு. 264) | இயன்று, இயங்கி |
| இரீஇ | (அகம். 182) | **இருத்தி** |
| உண்இ | (ஐங். 268) | உண்டு |
| உரீஇ | (கலி. 40) | உருவி |
| கழீஇ | (குறிஞ்சி. 16) | கழுவி |
| கொளீஇ | (குறிஞ்சி. 110) | **கொளுத்தி** |
| செரீஇ | (குறிஞ். 119) | செருகி |
| துவரி | (குறிஞ். 60) | **துவர்த்தி** |
| பரீஇ | (அகம். 248) | பரிந்து |
| பழுநி | (புறம். 113) | பழுத்து (முதிர்ந்து) |
| பொரீஇ | (குறிஞ். 31) | பொருவி |

இக்காட்டிய சொற்களின் பழையவுருவம் ஒரு தன்மையதாய் (பகுதியும் இகர விகுதியும் உடையதாய்) இருப்பினும், பிற்கால உருவம் பலவாறு திரிபு (பகுதியும் இகர விகுதியுமேயன்றி, உகர விகுதி, கால இடைநிலை, சந்தி, விகாரம் முதலியன) பெற்று வந்துள்ளது காண்க. தன்வினை பிறவினை இரண்டிலும் ஒரே உருவினதாயிருந்த சொல், பின்னர் வேறு வேறு உருவம் பெற்றிருத்தலும் அறியலாகும்.

உண்இ, கொளீஇ, இயலி, துவரி என்னும் சொற்கள் மெய்யீற்றுப் பகுதியவாதல் போலவே, இரீஇ, உரீஇ, செரீஇ, பரீஇ, பொரீஇ, பழுநி என்னும் சொற்களும் பண்டைக் காலத்தில், இர், உர் என்பனபோல மெய்யீற்றுப் பகுதி யினவேயாம். பிற்காலத்தில் இவை பலவாறு திரியலாயின.

| | | |
|---|---|---|
| 2. உரைஇ | (அகம். 128) | - |
| கனைஇ | (அகம். 128) | - |
| குவைஇ | (குறிஞ். 98) | குவித்து |
| தடைஇ | (நற். 376) | - |
| தலைஇ | (அகம். 128) | - |

| | | |
|---|---|---|
| நினைஇ | (குறிஞ். 246) | நினைத்து |
| வளைஇ | (பதிற். 62) | வளைந்து |
| விரைஇ | (அகம். 118) | விரவி |

இச்சொற்களுள் தடைஇ, விரைஇ என்னும் சொற்கள் அகரவீற்றுப் பகுதியவன்றே; பகுதியோடு இறந்தகாலங் காட்டும் இகரஞ் சேரவே, அகரமும் இகரமும் ஒருங்குநின்று 'அகர இகரம் ஐகார மாகும்' (தொல். மொழி: 21) என்னும் விதியின்படி ஐகார மாயினமையின், தடை, விரை என்றாயின. தடைஇ, விரைஇ என்பவற்றின் ஈற்றில் நிற்கும் இகரம் தட, விர என்பற்றோடு இகரஞ் சேர்ந்ததை அறிவித்தற்கு அடையாள மாத்திரையாய் நிற்பது. இவற்றை நோக்கின், உரைஇ, கனைஇ, குவைஇ, தலைஇ, நினைஇ, வளைஇ என்பவையும் உர, கன, குவ, தல, நின, வள, என்பவைபோல அகரவீற்றுப் பகுதியனவாகும் என்பது உணரப்படும். இது நிற்க.

| | | |
|---|---|---|
| 3. தொலைச்சி | (அகம். 238) | தொலைத்து |
| தொலைச்சும் | (அகம். 182) | தொலைக்கும் |
| மிலைச்சி | (குறிஞ்சி. 116) | மிலைந்து |
| ஓச்சி } | (குறிஞ். 150) | ஓச்சி } ஓட்டி |
| ஒப்பி } | (குறிஞ். 101) | ஒப்பி } |
| கழிப்பி | குறிஞ். 214) | கழித்து |
| அடைச்சிய | (கலி. 511) | அடைந்த |

இச்சொற்களுள் தொலைச்சி, தொலைச்சும் என்பன போன்ற சொற்கள் மருஉமொழிகளே. இவற்றில் தகார ககாரங்கள் சகாரங்களாகத் திரிந்துள்ளன. இ, ஈ, ஐ இவ்வுயிர்கட்கு முன்னும் யகரத்திற்கு முன்னும் வருந்தகாரம் உலக வழக்கில் சகாரமாய்த் திரிந்து வழங்குகின்றது; இவற்றின் முன் வருங் ககாரமும் சகாரமாதல் உண்டு.

| | | |
|---|---|---|
| அடித்து | - | அடிச்சி |
| நீத்தும் நிலையும் | - | நீச்சும் நிலையும் |

| | | |
|---|---|---|
| அடைத்து | - | அடைச்சி |
| காய்த்து | - | காய்ச்சி |

என்பன காண்க.

இவ்வாறாதற்குக் காரணம் என்னையெனின், கூறுவல்: இ, ஈ, ஐ, யகரமெய் இவை தாலுவில் (இடையண்ணத்தில்) பிறப்பவையாகலின், தாலவ்யம் எனப்படும். தாலவ்ய வெழுத்துக்களோடு, பல்லினடியிற் பிறக்குந் தகாரத்தையும், அடியண்ணத்திற் பிறக்குங் ககாரத்தையும் ஒரு சேர ஒலித்தல் அருமையாகலின், அவையுந் தாலவ்யமாகவே ஒலிக்கப் படுபவாயின.

இனி ஒப்பி, ஒச்சி என ஒருசொல்லே இரண்டு வடிவ மாகக் காண்கின்றது. இவ்வாறே ஒச்சிய, ஒக்கிய என்று இரண்டு வடிவமாய் வருதலும் காண்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 4. | இரீஇய | (அகம். 118) | இரிந்த |
| | உறீஇய | (ஐங். 246) | உறுவித்த |
| | கொளீஇய | (ஐங். 216) | கொள்ள |
| | தரீஇய | (நற். 291) | தந்த |
| | பழுநிய | (பதிற். 66) | பழுத்த |

என்பவற்றுள் கொளீஇய என்னும் சொல், இரீஇய முதலிய வற்றைப் போல, கொண்ட அல்லது, கொளுத்திய என்று பெய ரெச்சப் பொருளில் வருதற்கு உரியது. அஃது அவ்வாறன்றி, கொள்ள என்று வினையெச்சப் பொருளில் வந்துளது.

| | | | |
|---|---|---|---|
| 5. | கவினிய | (கலி. 45) | கவின்ற |
| | இருளிய | (கலி. 41) | இருண்ட |

என்பவற்றுள், கவினிய என்பது 'கவின்' என்னும் பெயர்ச் சொல்லடியாகப் பிறந்ததெனினும் அமையும்; பெயரடியில் வினைச்சொல் தோன்றுதல் உளதாகலின்.

| | | | |
|---|---|---|---|
| 6. | உரைஇய | (அகம். 218) | |
| | கிளைஇய | (அகம். 158) | கிளைத்த |
| | குவைஇய | (புறம். 118) | குவிந்த (திரண்ட) |
| | சினைஇய | (குறிஞ். 229) | சினந்த |
| | துனைஇய | (குறிஞ். 230) | துனைந்த |
| | நிலைஇய | (அகம். 238) | நிலைத்த |
| | வளைஇய | (குறிஞ். 176) | வளைந்த |
| | விரைஇய | (அகம். 118) | விரவிய |

இப்பெயரெச்சச் சொற்களிலும் பகுதிகள் உர, கிள, குவ, சின என்பன போல அகரவீற்றனவே என்று உய்த்துணர்ந்து கொள்க.

| | | | |
|---|---|---|---|
| 7. | பிரிபு | (நற். 1) | பிரிவு |
| | செய்பு | (நற். 1) | செய்வு (செய்தல்) |
| | அறிபு | (நற். 13) | அறிவு (அறிதல்) |

இத்தொழிற் பெயர்களிற் காணும் புகர விகுதி பிற்கால நூல்களில் அருகிக் காண்கின்றது; வுகர விகுதியே பயின்று வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 8. | நயந்துறைவி | (ஐங். 273) | நயந்துறைவோள் |

இவ்வினையாலணையும் பெயரினும் இது போன்ற உருவம் (உறைவி) இக்காலத்தில் வழங்குதல் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| 9. | ஆகியர் | (புற. 122) | ஆகுக (ஆக வேண்டும்) |
| | செலீஇயர் | (ஐங். 215) | செல்ல |
| | படீஇயர் | (புற. 202) | படுவர் (படுவாராக) |
| | வருதியர் | (குறிஞ். 39) | வருவீர் (வருவீராக) |
| | வெலீஇயர் | (புற. 202) | வெல்க |

இங்குக் காட்டிய வினைச் சொற்களுள், செலீஇயர் என்னும் சொல் ஒன்று ஒழிய ஏனையவெல்லாம் வியங்கோள் முற்றுக்களாய் வந்துள்ளன. செலீஇயர் என்பதுவும் சொன்னிலை

யில் அத்தகை யதேயாயினும், பொருள்நிலையில் வினையெச்ச மாயுளது. ஆசிரியர் தொல்காப்பியனார், செய்யியர் என்னும் வாய்பாட்டுச் சொல்லை வினையெச்சங்களோடு சேர்த்துக் கூறியிருக்கவும், பண்டைப் புலவர் செய்யுட்களில் இச்சொல், பெரும்பாலும் வினைமுற்றாகவே வந்துளது. பழந்தமிழில் வினைமுற்றுக்களா யிருந்தவை செந்தமிழில் வினையெச்சங் களாகக் கொள்ளப் பட்டனவாயினும், புலவர் பழைய வழக்குப் பற்றியே செய்யுட் செய்தமையின், இம்மாறுபாடு நேர்தலா யிற்றென அறிதலாகும்.

| | | | |
|---|---|---|---|
| *10.* | உயவுமார் | *(நற். 59)* | உயவும் |
| | கொண்மார் | *(கலி. 65)* | கொள்ள |
| | பெய்ம்மார் | *(புற. 115)* | பெய்ய |

இவற்றுள், உயவுமார் என்பதில், ஆர், அசைநிலையாகக் கொள்ளப்படும். உயவும் என்பதற்கு வருந்தும் என்பதுவே பொருள். மற்றவை அவ்வாறாயவையல்ல; கொண்மார் என்பது, கொள்ளுமவராய் = கொள்ள எனவும், பெய்ம்மார் என்பது, பெய்யுமவராய் = பெய்ய எனவும் பொருள் கொள்ளற்பாலன. இச்சொற்களிலுள்ள **மார்** என்பதில், ம்-பண்டு பன்மையைக் குறிப்பது. **'உண்மென'** = உண் + ம் + என (புறம். 178) என்று முன்னிலையிலும், 'தருதும்' = தருது + ம் (சீவக. 2937) என்று தன்மையிலும் மகரம் பன்மையைக் குறித்து வந்துளது காண்க. ஆர்- அவர் என்பதன் திரிபு.

| | | | |
|---|---|---|---|
| *11.* | வந்திசின் | *(பதி. 61)* | வந்தேன் |
| | கண்டிசின் | *(குறு. 249)* | காண்பாய் |
| | ஆன்றிசின் | *(குறிஞ். 34)* | (அமைந்தேன்) |

இவற்றுள், வந்திசின் ஆன்றிசின் என்பவை தன்மை வினைமுற்றாகவும், கண்டிசின் என்பது முன்னிலை வினைமுற் றாகவும் வந்துள்ளன. கண்டிசின் முதலிய சொற்களில், **சின்** என்பது அசைநிலை என்றனர் இலக்கண ஆசிரியர். உண்மையை

ஆராயுமிடத்து அஃது அசைநிலை அன்றென்பது புலனாகும். கண்டிசின் என்பது [1]**கண்டிகின்** (கண்டு+ஈகு+இன்) என்பதன் மரூஉ. இதில் ககாரம், தாலவ்யமாகிய இகரத்தின் சார்பினால், தாலவ்யமாகிய சகாரமாகத் திரிந்தது என்று அறிக. கண்டிகின் என்பது முன்னிலையொருமைவினை; இதிலுள்ள **இன்** என்பது **நீன்** என்னும் பழந்தமிழ் முன்னிலையொருமைப் பெயரைக் குறிப்பது. **கண்டிகும்** (கண்டு + ஈகு + ம்) என்பது இதன் பன்மைவினை. அதிலுள்ள மகரமெய் பன்மையைக் குறிப்பது. பழந்தமிழில் வழங்கிய நீன், நீம் என்னும் முன்னிலைப் பெயர்கள் செந்தமிழில் விலக்கப்பட்டமையின் அவற்றைக் குறிக்கும் **இன், ம்** என்பவற்றைச் **சின்** ([2]இசின்), **இகும்** என்னும் அசை நிலைகளாகக் கொண்டு, அவை முன்னிலைக்கண் வரும் அசைச் சொற்கள் என்றமைத்தனர். அசைநிலையாகக் கொள்ளப்பட்ட தனான் அவை முன்னிலைக் கண்ணேயன்றி ஏனை இரண் டிடங்களுக்கும் பிற்காலத்தில் வருபவாயின. இவ்வுண்மை,

> 'மியாஇக மோமதி இகுஞ்சின் என்னும்
> ஆவயின் ஆறும் **முன்னிலை யசைச்சொல்**' (இடை. 26)

என்றும்,

> 'அவற்றுள், இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடுந்
> தகுநிலை யுடைய என்மனார் புலவர்' (இடை. 27)

என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருப்பவற்றை ஆழ்ந்துநோக்கின் அறியப்படும்.

---

1. **கண்டிகின்** என்பது நீ கண்டீக (கண்டருள்க) என்னும் பொருளதாகும். இவ்வாறே கண்டிகும் என்பது நீயிர் கண்டீமின் (கண்டருளுமின்) என்னும் பொருளதாம்.

2. **இசின்** என்றே கூறுவர் புறநானூற்றுரையாசிரியர் முதலியோர். **இகும்** என்பதை நோக்கின், **இசின்** என்றலே அமைதியாகும்.

இனி, இவ்வினைமுற்றின் மேல், அவர் என்னும் சொல் (ஆர்) சேர்ந்தும் வந்துளது.

| | | |
|---|---|---|
| 12. | அறிந்திசினோர் (குறுந். 18) | அறிந்தோர்; அறிந்தவர் |
| | முந்திசினோர் (பதிற். 69) | முந்தினோர்; முந்தினவர் |

என்பன காண்க.

இனி, பழந்தமிழ்க் காலத்தில் வழங்கிய வினைமுற்று, பிற்கால வினைமுற்றுச் சொல்லோடு கூடி வருதலும் உண்டு.

| | |
|---|---|
| **இரக்கு** வாரேன் (பதி. 61) | - இரப்பேன்வாரேன் |
| **காண்கு** வந்திசின் (பதி. 64) | - காண்பேன்வந்தேன் |

இவற்றுள் **இரக்கு, காண்கு** என்னும் சொற்கள், முற்று வினைச் சொற்களேயாயினும், ஈண்டு **இரக்க, காண** என்று வினையெச்சப் பொருள்படுதல் அறிக. ஆயினும், இவ்வினைச் சொல்லை வினைமுற்றாகவே கொள்ள வேண்டும் என்றனர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | கண்டன்று | (கலி. 62) | - | கண்டது |
| | உய்த்தன்று | (நற். 77) | - | உய்த்தது |

இச்சொற்களில் காணும் **அன்**சாரியை, பிற்காலத்தில் வழக்காறற்றது. ஆதலின், **கண்டன்று** என்பது **கண்டது** என்றும், **உய்த்தன்று** என்பது **உய்த்தது** என்றும் வருகின்றன. கண்டனென், கண்டனெம்; கண்டனை, கண்டனிர் என்று தன்மை முன்னிலைகளிலும், கண்டனள், கண்டனள், கண்டனர், கண்டன என்று படர்க்கை நாற்பாலிலும் இச்சொல் அன்சாரியை பெற்றுவரும் வழக்கு நிலைத்திருப்ப, இவ்வொன்றன்பால் ஒன்றில் மட்டும் அன்சாரியை வழக்கற்றது வியப்பே. **கண்டன்று** என்பது போன்ற ஒன்றன் பால்வினை எதிர்மறைப்பொருள் படுதலும் கூடும் என்று கருதி, அதனை ஒழித்தனர் போலும்.

| | | | |
|---|---|---|---|
| 14. வந்தமாறு | *(அகம். 42)* | - | வந்தவாறு |
| வாராமாறு | *(ஐங். 222)* | - | வாராவாறு |

என்னும் உடன்பாடு எதிர்மறைச்சொற்கள் இரண்டன்கண்ணும் உள்ள **மாறு** என்னும் சொல், பிற்காலத்தில் **வாறு** என்றாகி, **ஆறு** என்று வழங்குகின்றது. **மாறு** என்பதிலுள்ள மகரம் வகர மாய்த் திரிந்து **வாறு** என்றாயிற்றுப்போலும். **வாறு** என்பதை, பின்னர், **ஆறு** எனக் கொள்ளுதல் கூடும்.

| | | | |
|---|---|---|---|
| 15. வாராதீமே | *(நற். 336)* | - | வாராதி |
| வந்தீமே | *(அகம். 218)* | - | வருதி |
| சினவாதீமோ | *(குறிஞ். 34)* | - | சினவாதி |

என்னும் சொற்களில் உள்ள **ஈம்** என்பது, பழந்தமிழில் முன்னிலைப் பெயராக வழங்கிய **நீம்** என்பதனைக் குறிப்ப தாகும். **வாராதி** என்பது போன்ற சொற்களிலுள்ள இகரவிகுதி **நீ** என்னும் பெயரைக் குறிப்பதுபோல, **வாராதீம்** என்பது போன்ற சொற்களிலுள்ள **ஈம்** என்பது பண்டு **நீம்** என்னும் பெயரைக் குறித்து நின்றது. செந்தமிழில், நீம் என்னும் பெயரை ஒழித்து அதற்கீடாக **நீயிர்** என்னும் பெயரை அமைத்ததனால், வாராதீம் என்பது போன்ற சொற்கள் வழக்கற, வாராதீர் என்பது போன்ற சொற்கள் வழங்கலாயின. வாராதீர் என்பதிலுள்ள ஈர் விகுதி, நீயிர் என்னும் பெயரிலுள்ள இர் என்பதேயாகும். நீம் என்பது வழக்கற்றதனால் அதனைக் குறிப்பதாகிய **ஈம்** என்பதன் உண்மையும் அறியப்படாதொழிந்தது. ஆகலின், இத்தகைய சொற்களை உரையாசிரியர்கள் **வினைத்திரிசொல்** என்பா ராயினர்.

| | | | |
|---|---|---|---|
| 16. அறிந்தீயாது | *(கலி. 58)* | - | அறியாது |
| இறந்தீவாய் | *(கலி. 59)* | - | இறப்பாய் |
| அருளீயல் | *(கலி. 61)* | - | அருளல் |
| மறாதீவாள் | *(கலி. 61)* | - | மறாள், மறுக்காள் |
| இகத்தந்தாய் | *(கலி. 59)* | - | இகந்தாய் |

'அறிந்தீயாது' என்பது இக்காலத்தில், அறிந்தருளாது என்னும் பொருளதாகும். இவ்வாறே பிறவுங் கொள்க. இச்சொற்களில் உள்ள ஈதல், தருதல் என்பவற்றின் பொருள் சிறவாமை யறிக.

இதுகாறுங் குறித்த சொற்களின் இயல்பினை நன்கு விளக்கிக்கூறப்புகின், மிக விரிந்து, 'மற்றொன்று விரித்தல்' ஆகுமாகலின், அங்கனங் கூறாது விடுத்துளேன். இனி, சில சொற்களில் காணும் எழுத்து மாறுபாட்டையும் அதனியல் பினையும் சிறிது ஆராய்கின்றேன்.

*அளியர் (கலி. 47) - எளியர்*

ஈண்டு, **அளியர்** என்னும் சொற்கு, ஆசிரியர் நச்சினார்க்கினியர், எளியர் என்று பொருள் கூறியிருக்கின்றார். 'அளிதோ தானே பாரியது பறம்பே' (புறம். 109) என்னுமிடத்தில், அளிதோ என்பது எளிதோ என்னும் பொருள் தருகின்றது.

'**அளிதோ** தானே பேரிருங் குன்றம்
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே' (புறம். 111)

என்னுமிடத்து, 'வேந்தர்க்கோ **அரிதே**' என்றிருத்தலை நோக்கின், **அளிதோ** என்பது **எளிதோ** என்னும் பொருளதாதல் எளிதின் அறியப்படும். இனி,

'**அளியள்** தான்நின் அளியல திலளே' (அகம். 118)

என்னுமிடத்தும் இப்பொருள் பொருந்துவதாகும்.

இவற்றை நோக்குமிடத்து, எளியள் என்னும் சொல்லின் முதற் கணுள்ள எகரம் அகரமாய்த் திரிந்திருக்கலாமோ என ஐயம் உண்டாகின்றது. **எண்மை, ஏழ்மை** என்னும் சொற்களை நோக்கின், **எளிது** என்னும் சொல்லே இயல்பான சொல்லாகும் எனக் கொள்ளுதல் கூடும். தமிழில், **'என்'** என்னும் வினைப்பகுதி தெலுங்கில் **'அன்'** என்றிருத்தல் இங்கே அறியத்தக்கது.

**இல** *(அகம். 12)* - எல.

எல, எலா, எல்லா, ஏலா எனப் பல சொற்கள் பயின்று வழங்குகின்றனவேனும், இல என்பது இப்பொருளில் அருகியே காண்கின்றது. இகர எகரங்கள் தம்முள் மாறி வருதல் இயல்பாயினும், எகரத்தை முதலினுடைய சொற்களே பயிலுதலின், **இல** என்பது **எல** என்பதன் திரிபு எனக் கொள்ளலாம்.

**உலமரல்** *(அகம். 18)* - அலமரல்

தொல்காப்பியத்தில், அலமரல் என்னும் சொல்லையே ஆசிரியர்,

'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி' *(உரி. 14)*

என்று எடுத்தோதியுள்ளார். ஆயினும்,

'ஒருபகல் வாழ்க்கைக் குலமரு வோரே' *(புற. 51)*

என்னும் புறப்பாட்டடியில், உலமரல் என்னும் சொல் வந்துளது. ஆசிரியர் தொல்காப்பியர் அலமரல் என்னும் சொல்லையே எடுத்தோதியிருத்தலானும், அதுவே பயின்று வருவதாகலானும், அகரம் உகரமாகத் திரிந்து உலமரல் என்றாயிருக்கலாம் போலும் எனத் தோன்றுகின்றது. இவ்வாறே உயிர்மெய்யை முதலிலுள்ள சொற்களிலும் எழுத்து மாறுபாடு காண்கின்றது. அவற்றைக் குறிக்கின்றேன்:

தளி *(கலி. 53)*
துளி *(அக. 332; குறுந். 291; கலி. 46)*

இவ்விரண்டுருவமும் கபிலர் பாட்டிலேயே காண்கின்றன.

துதைந்த *(கலி. 56)* - ததைந்த
தளிர் *(குறிஞ். 120)* - துளிர்

இன்னணம் இரண்டுருவங்கள் வழங்குதலை மேற்காட்டிய வற்றோடு ஒப்பிட்டுக்கொள்க.

| | | |
|---|---|---|
| **வடி**[1] | *(ஐங். 13)* / *(கலி. 64)* | *(மா)* வடு |

இதற்கீடாக, வடு என்னும் சொல்லே பிற்காலத்தில் வழங்க லாயிற்று.

மொழி முதலில் உள்ள உயிர்மெய்யில், மெய்யெழுத்துக் கெட்டு வருதலும் உண்டு. அவ்வாறு வந்தவை:

**இமில்** *(அகம். 248)* - திமில்
**உத்தி** *(கலி. 45)* - துத்தி

என்பன.

'ஒளிறுவெள் ளருவி' *(நற். 65)*

என்னுமிடத்தில், **ஒளிறு** என, றகரஉகரம் காண்கின்றது. இச்சொல், பிற்காலத்தில், **ஒளிர்** என்று ரகரமெய்யீறாகவே வழங்குகின்றது. ஆயினும், இச்சொல், றகரஉகரம் உடையதே யாகும். றகரஉகர வீற்றுச் சொற்கள், தொடர்மொழிகளில் ரகரவீறாக மாறும் வழக்குக் கன்னட மொழியிற் காண்கின்றது.

நேஸ**று**+ முடிதுது = நேஸர் முடிதுது - (ஞாயிறு தோன்றிற்று)

என்பது போல்வன அறிக.

இவ்வாறே, றகர உகரத்தின் முன் பிற மெய்யெழுத்துக்கள் வருமிடத்து, அந்த றகரம் ரகரமாதல் தெலுங்கிலும் உளது.

---

1. வடு + இ = வடி என்றாகும்; வடுவாயிருப்பது என்பது பொருள்.

நூறு + நாள்ளு = நூர்நாள்ளு - (நூறு நாட்கள்)
ஆறு + சு = ஆர்சு - (ஆற்று)

என்பன போல்பவை அறிக. இவற்றால் ஒளிறு என்னும் தொடக்கத்தன இயல்பில் றகரஉகர வீற்றுச் சொற்களே எனவும், அவை, தொடர் மொழிகளிலும், சொன்னிலையில் விகுதி பெறு மிடங்களிலும் ரகர வீறாக மாறின எனவும், மாறியவிடங்களிற் காணும் உருவங்களைக் கண்டு, அவையே இயல்பான வடிவம் எனக் கருதி, பிற்காலத்தில் ரகரவீற்றனவாகக் கொள்ளப்பட்டன எனவும் உய்த்துணர்தல் கூடும். 'ஒளிறுவெள் ளருவி' என்னும் தொடரில், ஒளிறு என்பதில் உள்ள றகரஉகரம் ஒரு மாத்திரை யளவில் ஒலிக்கப்படாமல், ஒளிர்வெள்ளருவி என்பதுபோலவே ஒலிக்கப்படுதல் நுணித்தோர்க. தொடர்மொழி முதலியவற்றில் றகரம் ரகரமாக மாறுவதன் காரணம் என்னையெனின், இவ்விடங்களில் றகரம் ஒலிக்கும் முயற்சி குறைபடுதலேயாம் என்க. றகர ரகரங்கள் இரண்டற்கும் பிறப்பிடம் ஒன்றேயாதலும், நுனிநா மெய்யுற வொற்றுதலும், வருடுதலும் ஆகிய முயற்சியே வேறுபாட்டிற்குக் காரணமாதலும் அறியத்தகும்.

சில சொற்களில் ழகரத்துக்கு டகரம் காண்கின்றது.

எடுப்பி (ஐங். 72) எழுப்பி

என்பது காண்க. 'இன்றுயி லெடுப்பியோயே' (குறுந். 107) என்னுமிடத்தும் இவ்வாறு வந்திருத்தல் அறிந்துகொள்க.

ழகரம் டகரமாகி வழங்குதல் தெலுங்கு மொழியில் பெருவழக்கு.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| ஏழு | ஏடு |
| கூழு | கூடு |
| நீழல் | நீட |

| | |
|---|---|
| ஊழியம் | ஊடியமு |
| பவழம் | பகடமு |
| வீழ் (வீழ்து) | ஊட |
| பாழு | பாடு |

என்பன போல்பவை பல.

சில சொற்களில் ககர ழகரம் மாறிக் காண்கின்றது.

தொழுதி (பதிற். 62) - தொகுதி
கன்முகை (ஐங். 246) - கன்முழை
என்பன காண்க.

சில சொற்களில் ரகரம் ழகரம் இவ்விரண்டும் விரவி வருதல் உளது.

இமிரும் (ஐங். 15)

இச்சொல், இமிழும் எனப் பயின்று வருகின்றது. தமிழ் மொழியில் ழகரத்தையுடைய சொற்கள் தெலுங்கில் ரகாரத்தை யுடையவாய் வழங்குதல் ஈண்டு அறியத்தகும்.

| | | |
|---|---|---|
| பொழுது | - | பொர்து (ப்றொத்து) |
| கொழுவு | - | கொர்வு (க்றொவ்வு) |

என்பன போல்பவை பல.

ஈர்க்கும். (அகம். 238)

இது, ஈழ்க்கும் என்பதிலுள்ள ழகாரம் ரகாரமாய்த் திரிந்து வந்த சொல். விழு என்பது வீழ் என்றும், முழுகு என்பது மூழ்கு என்றும் வருதல்போல, இழு என்பது ஈழ் என முதல் நீண்டு வரும். வந்தவழி ழகாரம் ரகாரமாயிற்று; எழுக என்பது ஏர்க என்றாயது போல,

'தூமலர்க்கண் ஏர்க துயில்' (புறப்பொருள் வெண்பா. பாடா: 9)

என்று வந்துள்ளது அறிக.

நகார முதன்மொழி ஞகார முதன் மொழியாய் வழங்கு கின்றது.

**ஞெகிழ** (ஐங். 234)

இது, நெகிழ என்பதன் திரிபாதல் அறிக.

சில சொற்களில் **ங்க** என வழங்கிய ஒலி பிற்காலத்தில் **ங்ங** என்றொலிப்பதாயிற்று.

யாங்கனம் (புறம். 8)

இது பிற்காலத்தில் யாங்ஙனம் என்று வழங்குதல் அறிக. இவ்வாறு ங்க-ங்ங என்று ஒலித்தல் மலையாள மொழியில் வழக்காறு.

சில சொற்களில் ரகரஒலி கெடுதல் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| அம்பல் | (கலி. 39) | - | அரும்பல் |
| தெருமந்து | ('' '') | - | (தெருமர்ந்து) |
| வந்து | (குறுந். 312) | - | (வர்ந்து) |
| மன்று | (ஐங். 246) | - | (மான்று) |

என்பன காண்க. 'அம்பல் என்பது முகிழ்த்தல்' என்று களவிய லுரையில் (சூ. 22 உரை) காணும் பொருளை நோக்கின், அம்பல் என்பது அரும்பல் என்னும் சொல்லின் மரூஉ என்பது நன்கு விளங்கும். இனி, **தெருமந்து** என்னும் சொல்,

'அலமரல் **தெருமரல்** ஆயிரண்டுஞ் சுழற்சி' (உரி. 14)

என்பதனால், தெருமரு (தெருமர்) என்னும் பகுதியடியாகப் பிறந்ததாகும். அஃது இறந்தகாலத்தில், தெருமருந்து (தெருமர்ந்து) என்று வருதல் வேண்டும். தெருமர்ந்து என்பது தெருமந்து என்று மருவியுளது. வந்து என்னும் இறந்தகால வினையெச்சமும் இவ்வாறு வந்ததேயாகும். என்னை யெனின் கூறுவல்:

வருதல், வருகை, வரல், வரவு, வரத்து என்னும் தொழிற்பெயர்களை நோக்கின், இவற்றின் பகுதி வரு (வர்) என்பதுவேயாம் எனப் புலப்படும். வரின், வாராத, வாராமல் என்னும் எச்சவினைகளிலும், வருகின்றான், வருவான் என்னும் நிகழ்கால எதிர்கால வினைகளிலும் வரு என்னும் பகுதி தெளிவாகக் காண்கின்றது. இங்கனம் காணுதலின், ஏனை இறந்தகால வினையொன்றில் மட்டும் ரகாரம் இல்லாதிருத்தல், அமையாதன்றே! அதன்கண் நின்ற ரகாரம், ந்த என்னும் இணையொலியின் வன்மையால் கெட்டொழிந்தது என்க.

[1]மன்று என்னும் சொல்லிலும் இவ்வாறே ரகாரஒலி கெட்டுள்ளமையறிக. இங்கனம் ரகாரங் கெட்ட சொற்கள் தெலுங்கிற் பல காண்கின்றன.

| **தமிழ்** | **தெலுங்கு** |
|---|---|
| மருந்து | மந்து |
| விருந்து | விந்து |
| திருத்து | **தித்து** |
| பருப்பு | பப்பு |
| செருப்பு | செப்பு |
| நெருப்பு | நிப்பு |

என்பனபோலப் பெயர்களிலும்,

---

1. **மன்று** என்னும் சொல்லைக் குறித்துத் 'தமிழ்ப் பொழி'வில் (துணர். 10, மலர். 9) விரிவாக யான் எழுதியிருத்தல் காண்க.

பொருந்தி - பொந்தி

என்பதுபோல வினைகளிலும் ரகாரங் கெட்டுவருதல் அறிக. தமிழிலும் இவ்வாறே ரகாரங் கெட்டு வருவன வேறு சில வுள.

பெருமான் - பெம்மான்
நெருநல் - நென்னல்
உருண்டை உண்டை

என்பவை போல்வன காண்க. இனி,

சில சொற்களில் ககரத்துக்குச் சகரம் வருதல் உளது.

சொலிய (*அகம். 248*) - கொலிய = கொல்ல

என்பது காண்க. இவ்வாறே,

'புறவி னல்லல் **சொல்லிய**' (*புறம். 46*)

'படுகடுங் களிற்றின் வருத்தஞ் **சொலிய**' (*அக. 8*)

என்று வருதல் கண்டுகொள்க.

ஓரே சொல்லில் சகர யகரம் இரண்டும் விரவி வருகின்றது.

பயப்ப (*ஐங். 277*) - பசப்ப
பயந்தன (*'' 264*) - பசந்தன

என்பன காண்க. இனி,

இக்காலத்தில், **ற்ற** என்னும் இரண்டு றகாரத்தையுடைய சொல், முற்காலத்தில் தனி றகாரம் உடையதாய் வழங்கியது.

பொ**றை** (*நற். 59*) பொ**ற்றை**

என்பது காண்க. இதனை உய்த்தறியுமிடத்து, றகாரமெய் ற்ற் (t) என்னும் ஒலியை உடையதுவே புலனாதல் கூடும். தமிழில், ற்ற-ஒலியுடைய சொற்கள் தெலுங்கில் ட்ட - ஒலியவாய் வழங்குதல் காண்க.

| | | |
|---|---|---|
| **சுற்று** | - | சுட்டு |
| **பற்று** | - | பட்டு |

என்பன போல்பவை பல. இவ்வாறன்றி, தனி றகாரமுடைய சொல்லும் தெலுங்கில், ட்ட என்னும் ஒலியுடையதாய் வழங்குகின்றது. உறி-உட்டி என்பது காண்க. இதனானும் பொறை என்பது பொற்றை என்றாதல் வலியுறும். இதனால், பிற்காலத்தில் இரட்டித்த றகாரத்திற்குள்ள ஒலி முற்காலத்தில் தனி றகாரத்திற்கு உளதாயிருந்தது என அறியலாகும்.

| | | |
|---|---|---|
| பாகு | - | பாக்கு |
| காபு | - | காப்பு |

என்பவை ஈண்டு ஒப்பிடத்தக்கன.

சில சொற்களில் தகாரம் சகாரமாதல் உளது.

[1]*ஊசல் (கலி. 37)* - *(ஊய்தல்)*

என்பது காண்க. இச்சொல்லின் றன்மையை ஆராயுமிடத்து, ஊய்தல் என்பதுவே இயல்பான சொல் எனவும், தகரஞ் சகரமாய்த் திரிந்தும், யகரம் கெட்டும் ஊசல் என்றாயிற்று எனவும் தோன்றும். [2]வாய்தில் என்பது வாய்தல் என்றாக, வாசல் என்று வழங்குதல் ஈண்டைக்கு ஒப்பிடத்தகும். 'வாய்தலிற் கதவு'

---

1. **ஊசல்** என்னும் சொல்லைக் குறித்துத் '**தமிழ்ப்பொழி**'வில் (துணர். 10, மலர்: 4) விரிவாக யான் எழுதியிருப்பது கண்டுகொள்க.

2. வாய்தில் (வாய் + து + இல்) என்பது இல்லின்வாயது என்னும் பொருளது. வாதில் என்றே மலையாள மொழியில் வழங்குதலை நோக்கின், வாய்தில் என்பதே இயல்பான சொல் என விளங்கும்.

(கந்த. வள்ளி: 164), 'நின்றிருக் கோயிலின் வாய்தல்' (சுந்தர. தே. 55:8) என்று வ்ந்துள்ளது காண்க. ஊய்தல் என்பதன்கண் நகரமெய் தோன்றி, அது ஞகரமாகத் திரிய, ஊஞ்சல் என்னும் சொல் அமைவுறும். இனி, ஊயல் என்பதுவே ஊசல் என்றாயிற்று எனினும் அமையும். நிற்க, தமிழிற் பல சொற்கள் குறில் முதலவாயும் நெடில் முதலவாயும் வழங்குதல் உண்டு.

| | | |
|---|---|---|
| நிழல் | - | நீழல் |
| பொழுது | - | போழ்து |
| விழுது | - | வீழ்து |
| கொவ்வை | - | கோவை |

என்பன காண்க. பகுதிகளும் இவ்வாறு வருதல் உண்டு என்பது மேலே (பக்கம். 117) காட்டப்பட்டது. ஆகலின், **உய்** என்னும் பகுதியடியாகப் பிறந்த உய்யல் என்பது உய்தல், உய்ந்தல் என்றும், **ஊய்** என்னும் பகுதியடியாகப் பிறந்த ஊயல் (ஊசல்) என்பது ஊய்தல், ஊய்ந்தல் (ஊஞ்சல்) என்றும் வருதல்கூடும். குறில் முதலதாகிய உய் என்னும் பகுதி **செலுத்து** என்னும் பொருளதாகலின், நெடில் முதலதாகிய **ஊய்** என்னும் பகுதியும் அப்பொருளுடையதேயாகும். ஆகவே, ஊயல் (ஊசல்) என்பது செலுத்துதல் என்னும் பொருளதாம். இச்சொல், தெலுங்கில், உய்யல, ஊயல என்று குறில் நெடில் இரண்டினையும் முதலில் உடையதாய் வழங்குதல் ஈண்டைக்கு ஒப்பிடத்தகும்.

சில சொற்களில் யகரமெய் கெட்டு வழங்குதல் உளது.

பொய்மை (ஐங். 246) (பொம்மை)

இது யகரமெய் கெட்டுப் **பொம்**மை என்று வழங்குகின்றது. பொய்மை என்பது (பொய் + மெய்) பொய்யான வுருவம் என்னும் பொருளது. மெய் என்பது தொடர்மொழிகளில் **மய்** (மை) என்று வருகின்றது. ஒருமை, பன்மை என்பன காண்க. ஒருமை (ஒருமெய்) - ஒருருவம்; பன்மை (பல்மெய்) - பலவுருவம். **மை மெய்** (மெயி) என்னும் இரண்டு சொல்லும் தெலுங்கு

மொழியில் உள்ளன; 'வேமரு நடுநெத்தி மூர்க்கொனுசு **மை**புல கிம்ப' (உத்தர ராமாயணம். ஆஸ்வாஸம் 4) என்பதும், 'ஸுரவர்த்தகி மெயி (கா(டி' (ஹரிவம்ஸம். உத்தரபாகம். ஆஸ்வாஸம் 10) என்பதும் காண்க. தமிழில், மொழியின் முதற்கண் **மெய்** என்றும், இறுதிக்கண் **மை** என்றும் நிற்கின்றது. இத்துணையே வேறுபாடு.

சில சொற்களில் பிற்காலத்தில் கு-சேர்ந்து வழங்குதல் உளது.

பீர் (கலி. 53) - பீர்க்**கு**

என்பது காண்க. இவ்வாறே ஆர்-ஆர்க்கு என்று வழங்குதல் அறிக. தொல்காப்பியத்தில் **பீர்** என்பதுவே காண்கின்றது.

'ஆரும் வெதிரும் சாரும் **பீரும்**' (புள்ளி. 68)

என்பது அறிக. இச்சொல், கன்னடத்தில் **பீர்** என்றும், தெலுங்கில் **பீர** என்றும் வழங்குகின்றது. இது கபிலர் செய்யுளிலேயே **பீரை** (புறம். 116) என்று ஐகாரம் பெற்றும் வந்துளது. இவற்றால், **கு** - சேர்ந்து பீர்க்கு என்று வழங்கியது பிற்காலத்திலேயே என்பது நன்கறியப்படும்.

சில சொற்கள் **து**வ்விகுதி பெற்று வருதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| கால் | (கலி. 45) | |
| காற்று | (கலி. 45) | - (கால் + து = கால்வது) |
| பெண் | ... | |
| பெண்டு | (ஐங். 283) | - (பெண் + து = பெட்பினது) |

என்பன காண்க. இருள், இருட்டு என்பதும் இவ்வாறு வந்ததே. தெலுங்கிலும் கன்னடத்திலும், **கால்** (காற்று) என்பது முறையே, **காலி, காளி** என்றும், இருள் என்பது இருலு, இருள் என்றும், பெண் என்பது கன்னடத்தில் பெண் என்றும் வழங்குதலை நோக்கின், இச்சொற்களில் து-விகுதி சேர்ந்தது பிற்காலத்திலேயேயாம் என்பது நன்கு உணரப்படும்.

சில சொற்களில் புவ்விகுதி சேர்ந்து வருதல் உண்டு.

*புறம்பு (கலி. 51)* - *புறம் + பு*

என்பது காண்க. போர்-போர்பு (*சீவக. 59*), மார்-மார்பு என்பனவும் இத்தன்மையனவே.

குற்றுகரவீற்றுச் சொற்கள் அம் விகுதி பெற்று வருதல் உண்டு.

*புற்றம் (நற். 336)* - *புற்று + அம்*
*குன்றம் (நற். 222)* - *குன்று + அம்*

நெற்றம் (நெற்று), நோக்கம், மன்றம் முதலியனவும் இவ்வாறமைந்தனவே.

சில சொற்களில் முதலற்கணுள்ள இகரஅகரம் இரண்டும் ஒருங்கு சேர்ந்து ஏகாரமாய்த் திரிந்துவருதல் உண்டு.

**சே**ந்து *(கலி. 39)* - **சிவ**ந்து

என்பது காண்க. ஏலும் - இயலும்; தேங்கி - தியங்கி என்பனவும் இத்தன்மையவே. இலது என்பது தெலுங்கில், லேது என்றா யிருத்தல் ஈண்டைக்கு அறியத்தகும். இனி, செவந்து என்பதே சேந்து என்றாயிற்று எனினும் அமையும். அப்பொழுது, இரண்டுகுறில் ஒரு நெடிலாயிற்று எனல் வேண்டும்.

**முன்றில்** (புறம். *114*) என்னும் சொல்லைக் குறித்து ஆசிரியர் தொல்காப்பியனார், 'முன் என்னும் சொற்குமுன், இல் என்னும் சொல் வருமாயின் இடையே றகரவொற்றுத் தோன்றும்' என்று *(எழுத். 355)* விதி கூறியுள்ளார். இதனை மரூஉவின் தொகுதிகளுள் ஒன்றாகக் கொள்வர் உரையாசிரியர்கள். அதனால், **இல்முன்** என்பது **முன்றில்** என்றாயிற்று என்றவாறாகும். முன் + இல்

என்பவை புணரின், முன்னில் என்றாதல் அமையுமே; இடையே றகரவொற்றுப் பெறுதல் எற்றிற்கு?

இதனை ஆராயுமிடத்து, தொல்காப்பியனார் கூறிய விதி, சொல்நிலையைக் கண்டு கூறியதாகுமேயன்றி அதன் உண்மையைக் கூறியவாறாகாது என்பது புலனாகும். (முன் + து = முன்று (முன்னது); முன்று + இல் = முன்றில் என்று வந்துளது. ஆகலின், இச்சொற்கு இல்லின் முன்னது; அஃதாவது, இல்லின் முன்னிடத்தது என்பதுவே பொருளாகும். து-சேர்ந்து இதுபோன்ற பொருளைத் தருதலை,

குண்டுகட்கு - (குண்டு + கண் + து)

என்னும் சொல்லிலும் காணலாம்.

**செலின்** என்பது பிற்காலத்தில் வினையெச்சமாயிருப்பினும், பழந்தமிழ்க் காலத்தில் வினைமுற்றேயாம். செலின் (செல் + இன்) என்னும் சொற்கு, நீ செல் என்பது பொருள்; சென்மின் (செல் + ம் + இன்) என்னும் சொற்கு (நீர்) செல்லும் என்பது பொருள். இங்கு, மகரம் வந்து பன்மையைக் காட்டிற்று. செந்தமிழில், **நீன்** என்னும் பெயர் ஒழிக்கப்பட்டமையின் அதனைக் குறிக்கும் **இன்** விகுதியும் ஒழிக்கப்பட்டது. பகுதிகளே முன்னிலையொருமையேவலைக் குறித்தல் உளதாகலின், அவற்றோடு இன் சேர்ந்த வுருவம் அப்பொருளில் கொள்ளப்படாதாயிற்று. ஆகலின், பகுதியோடு **இன்** சேர்ந்து வருஞ் சொற்களை முன்னிலைப்பன்மை யேவல் வினையாக மலையாள மொழியில் வழங்குகின்றனர். **செல்லின்** என்பதற்கு, **செல்லுங்கள்** என்பது அம்மொழியிற் பொருளாகும். கபிலர் காலத்தில், செலின் என்பது வினையெச்சமாகவே கொள்ளப்பட்டிருந்ததாயினும், அவர் பாட்டுக்களிலேயே இப்பொருளும் அமைவுறும் இடனும் உளது.

'சேயிழை பெறுகுவை வாணுதல் **விறலி**
............பாடினை செலினே' (புறம். 105)

என்பது காண்க. கபிலர், **செலின்** என்னும் சொல்லை, வினையெச்சமாகக் கருதியே பாடினாராயினும் ஈண்டு, இதன் தொல்பொருளும் அமைவுறுகின்றது என்பது அறிவித்ததற்கே எடுத்துக்காட்டப்பட்டது.

*இன்னினி (ஐங். 222)*

என்பது, இனி + இனி என்று பிரிக்கப்படும். ஒள்ளொளி என்பதும் இது போன்றதே. ஆயினும், **இனி** என்பதன் தொல்லுருவம் **இன்** என்பதுவே என்று உய்த்துணர்தல் கூடும். '**இன்னே** (இன் + ஏ) வருகுவர்' (முல்லை. 16) என்னுமிடத்தில், இன் என்பதுவே வந்துளது அறிக. கன்னட மொழியில், **இனி** என்னும் பொருளில் **இன்** என்றேயிருப்பது (பம்ப பாரதம், 10:5). இவ்வூகத்தை வலியுறுத்துகின்றது. இனி, தமிழிலும் மெய்யீற்றுச் சொற்கள் யாதேனுமோருயிரைப் பெற்று வருதல்.

| | | |
|---|---|---|
| சிதல் | - | சிதலை |
| பீர் | - | பீரை |
| கண் | - | கணு |
| உருள் | - | உருளை |

என்பவற்றை நோக்கின் நன்கு தெளிவுறும்.

***மீமிசை*** *(அகம். 318)*

இதனை ஒருபொருட் பன்மொழி என்று கூறுகின்றனர். ஆனால், சிறிதளவேனும் பொருள் வேறுபாடின்றி, இரண்டு சொற்கள் ஒரு பொருளைக் குறித்ததற்குச் சேர்ந்துவருதல் முறைமையன்று. ஆகலின் இவ்விரண்டு சொற்களுக்குந் தனித் தனியே சிறப்புப்பொருள் இருத்திருத்தல் வேண்டும். அதனை நோக்குதும். மீ என்பது மரூஉமொழி. அஃது ஓர் இடத்தை வரைந்து உணர்த்துவது. இது,

'மீ என மரீஇய இடம்வரை கிளவியும்' (உயிர்மயங்கு. 48)

என்பதனால் அறியலாகும். 'மேக்கு' என்னும் சொல், மீ எனத் திரிந்தது என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

'மேக்குமேற் றிசைமே லும்பேர்' (சூடாமணி. 11:9)

என்பதனால், இது, மேற்குத் திசையையும் மேலிடத்தையும் குறிப்பது என அறியக்கூடும். மிசை என்பது மேலிடம். இவற்றால், மீமிசை என்பது முதற்கண், மேற்குத் திசையிலுள்ள மேலிடத்தைக் குறித்து வழங்கியிருக்கலாம் எனவும், பின்னர் மேலிடத்தை மட்டுமே குறிக்குமளவில் நிற்பதாயிற்று எனவும் கொள்ளுதல் அமையும்.

அசைநிலைச் சொற்கள் எனக் கூறப்பட்டுள்ளன வெல்லாம், பண்டை நாளில், பிற சொற்களைப் போலச் சிறப்புப் பொருளுடையனவே என்றும், அவற்றுள், **மதி** என்பது சாலும் (போதும்) என்னும் பொருளையும், **தில்** என்பது சிறிது என்னும் பொருளையும், **கொல்** என்பது சொல் என்னும் பொருளையும் தருபவை என்றும் 'பரணர்' என்னும் நூலில் (பக்கம். 181-4) விரிவாக எழுதியுள்ளேன். ஆகலின், இங்கு அவற்றைக் கூறாது விடுத்து, ஓரும் என்னும் சொல்லின் பொருளைக் குறிக்கின்றேன்.

ஓரும் - (அகம். 12)

ஓரும் என்பது உணரும் என்னும் சொல்லின் மரூஉ. இது தனக்குரிய உணர்தற் பொருளில் வருதலே பெருவழக்கு. அப்பொருள் சிறவாதவிடத்தே அசைநிலை எனப்படுகின்றது. இது நிற்க.

எனவ (நற். 253)

இதில், **யான்** என்பதன் திரிபாகிய என் என்பதிலுள்ள னகர மெய்யை யூர்ந்து வந்த அகரத்தை ஆசிரியர் தொல்காப்பியனார்,

'ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான' (தொகைமரபு. 19)

என்று விதிகூறி அமைத்தார். ஆயினும், அந்த அகரம் ஆறானுருபு என்றும், எனவ என்பதன் ஈற்றிலுள்ள அகரம் பலவின்பாலைக் குறிப்பது என்றும் கொள்ளுதல் அமைதி. தொல்காப்பியனார் அகரத்தை ஆறனுருபாகக் கொள்ளாமையின் இவ்வாறு விதி கூறினாராவர். **எனவ** என்பது என்னுடையவை என்னும் பொருளதாகும். ஆயின், நச்சினார்க்கினியர், 'நினவ கூறுவல் எனவ கேண்மதி' (புறம். 35) என்றாற்போல், ஆறாவதற்கு உரிய அகரவுருபின் முன்னரும் ஓர் அகரவெழுத்துப் பேறு நிலை மொழிக்கண் வருதல் உளதாகக் (ஆசிரியர்) கருதினார்' (எழுத். 115 உரை) என்றதனான், நினவ என்பதிலுள்ள ஈற்றகரம் ஆறனுரு பாகும். ஆகலின், **எனவ** என்பதிலும் ஈற்றகரம் ஆறனுபாகவே கொள்ளப்படுவதன்றிப் பலவின்பால் விகுதியாகக் கொள்ளப் படாதால் எனின், மேற்காட்டிய 'நினவ.....மதி' என்னும் அடிக்கு, 'நின்னுடையன சிலகாரியஞ் சொல்லுவேன்; என்னுடை யன சில வார்த்தை கேட்பாயாக' என்றே உரையாசிரியர் பொருள் கூறியிருத்தலின், நச்சினார்க்கினியர் கூறியவாறு, நினவ என்பதன் ஈற்றகரம் ஆறனுருபின் பொருளதன்று என அறிந்து கொள்க. இவ்வாறே, 'எனவ கேளாய்' (நற். 253) என்னுமிடத்தும், எனவ என்பதிலுள்ள ஈற்றகரம் ஆறனுருபன் றென்பது அறியப்படும். இனி,

| | |
|---|---|
| ஏத்துகு | (கலி. 40) |
| நுகர்கு | (குறிஞ். 181) |
| விடுகோ | (நற். 222) - (விடுகு + ஓ) |

என்னும் சொற்களில் குகரமே தன்மையொருமையைக் காட்டு கின்றது. ஆகலின், 'இழக்குவென்' (ஐங். 269) என்பதில் **இழக்கு** என்பதுவே தன்மையொருமையைக் காட்டும். அதன் மேல், **என்** என்னும் விகுதி சேர்ந்து வருதல் மிகையாமன்றே. இவ்விகுதி யான் என்னும் தன்மையொருமைப் பெயரைக் குறிப்பது. இவற்றால் பண்டைக்காலத்தில் இத்தகைய விகுதிகள் வினைச்

சொற்களில் சேர்ந்துவருதல் இல்லை எனவும், பின்னரே அவை சேர்க்கப்பட்டன எனவும் ஊகித்தறிந்து கொள்ளுதல் கூடும். இதுகாறுங் கூறிய சொற்களை விளக்கிக் கூறப்புகின் மிக விரியுமாகலின், அஞ்சி இவ்வளவில் சுருக்கி எழுதலானேன். இனி, பொருணிலைமை மாறி வந்துள்ள சொற்கள் சிலவற்றை ஆராய்கின்றேன்:

## 1. இயம்பல்

இயம்பல் என்னும் சொற்கு ஒலித்தல் என்பது பொருள். இது,

> 'துவைத்தலும் சிலைத்தலும் **இயம்பலும்** இரங்கலும்
> **இசைப்பொருட்** கிளவி என்மனார் புலவர்' (உரி. 62)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறியலாகும். இச்சொல் இப்பொருளிலேயே,

> 'அருவி, விடரகத் தியம்பும் நாட' (குறுந். 42)

என்னுமிடத்து வந்துளது; ஆயினும், சொல்லுதல் என்னும் பொருளிலேயே பிற்காலத்தில் பயின்று வருவதாயிற்று. இதனை நோக்குமிடத்து, ஒலித்தல் என்னும் பொருளில் வழங்கிய இச்சொல், பின்னர், மிக்க ஓசையுண்டாகப் பேசுதலைக் குறிக்க வழங்கி, அதன்பின்னர், சொல்லுதல் என்னும் பொருளில் வந்திருத்தல் வேண்டும் என்று தோன்றுகின்றது.

## 2. எற்பாடு

எற்பாடு என்பது ஞாயிறு படுதல், பொழுதடைதல் என்னும் பொருளது. எல்-ஞாயிறு; படுதல்-வீழ்தல், இன்றாதல். ஆகவே, ஞாயிறு வீழுங்காலத்தைக் குறிப்பதாயிற்று.

> 'நற்கோட் சிறுதினைப் படுபுள் ளோப்பி
> **எற்பட** வருதியர் எனநீ விடுத்தலின்' (குறிஞ்சிப். 38, 39)

என்னுமிடத்து, **எற்பட** என்பது ஞாயிறுவீழ, பொழுதடைய என்னும் பொருள்தருமே யன்றிப் பிறிதுபொருள் தாராது.

> '**எற்பட பொழுதின்** இளநிலா முன்றில்
> தாழ்தரு கோலந் தகைபா ராட்ட' *(சிலப். 14: 83, 48)*

என்னுமிடத்தும், 'எற்படுபொழுது' ஞாயிறு வீழும் பொழுதினையே குறித்தல் அறிக. இவ்வாறு வருவன பல. ஆயின், **படுதல்** என்னும் சொற்கு **உண்டாதல்** என்னும் பொருளுமிருத்தலின், எற்பாடு என்பதற்கு ஞாயிற்றின் உதயம் என்றும் பிற்காலத்தில் பொருள் கூறலாயினர். அஃது அமையுமாயினும், நெய்தல் நிலத்துக்குரிய சிறுபொழுதாகிய ஏற்பாட்டை ஞாயிற்றின் உதயம் என்றல் ஒரு சிறிதும் அமைவுடையதாதல் இன்று.

### *3.* கானல்

கானல் என்பது கடற்கரைச் சோலையைக் குறிக்கும்.

> 'தன்னொடு புணர்த்த இன்னமர் **கானல்**' (நற். 267)

என்னுமிடத்தில், கானல் என்பது இப்பொருளதாதல் அறிக. இச்சொல், பிற்காலத்தில் இப்பொருளினீங்கிப் பேய்த்தேரைக் குறித்து வழங்குவதாயிற்று. இச்சொல், மரங்களில்லாத கடற்கரை மணல்வெளிக்கும் பெயராக வழங்கி, பின்னர் அங்குத் தோன்றும் பேய்த்தேருக்கும் வழங்கலாயிற்றுப் போலும்.

### *4.* துகில்

> 'அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவி' (குறிஞ்சிப். 55)

என்று வந்திருத்தலின், துகில் என்பது வெள்ளிய ஆடையைக் குறிப்பது எனத் தெரிகின்றது.

'துகிலினொ டிகலுவ சுதைபுரை நுரை'
(கம்ப. பால. நாட்: 45)

என்று கம்பநாடரும் இப்பொருளில் இச்சொல்லை வழங்கி யுள்ளார். ஆயினும்,

'கோபத் தன்ன தோயாப் பூந்துகில்' (முருகாற். 15)

என்னுமிடத்துச் செந்நிறத்தாடையைக் குறித்து வந்துளது. அதனால் நச்சினார்க்கினியர், 'துகில், வெண்மை செம்மை இரண்டிற்கும் பொது' (சீவக. 34) என்றார். ஆயின்,

'பட்டுந் துகிலும் உடுத்து' (நாலடி. 264).

என்னுமிடத்தில், சிறந்த ஆடை என்னும் பொருளில் வந்துளது. இச்சொல் (துகில்), துகூலம் என்னும் வடசொல்லின் திரிபு எனத் தெரிகின்றது. துகூலம் என்பது, வடமொழியில், வெள்ளாடை என்னும் பொருளதாதலின், அது தமிழ் மொழியிலும் முதற்கண் வெள்ளாடையை யுணர்த்தி, பின்னர்ச் சிறந்த ஆடையை யுணர்த்திநின்று, நாளடைவில் செவ்வாடையையும் உணர்த்து வதாயிற்று எனக் கொள்ளலாம்.

## 5. நகர்

நகர் என்னும் சொல் பண்டைச் செய்யுட்களில் வீடு என்னும் பொருளிலேயே வந்துளது.

......மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர்' (குறிஞ்சிப். 201, 202)

என்னுமிடத்தில், நகர் என்பது வீடு என்னும் பொருளில் வந்துள தறிக. ஆயின், இச்சொல் பிற்காலத்தில், பேரூர் என்னும் பொருளில் வழங்குகின்றது. தெலுங்கு மொழியில், **நகர்** என்பதன் திரிபாகிய **நகரி** என்னும் சொல், அரண்மனை என்னும் பொருளில் வழங்குகின்றது.

## 6. பாக்கம்

பாக்கம் என்னும் சொல் ஒன்றன் **பகுதியது** என்னும் பொருளது. இது,

'கறங்குவெள் ளருவிப் பிறங்குமலைக் கவாஅன்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் **பாக்கத்து**' *(அகம். 118)*

என்று, கபிலர் செய்யுளில் குறிஞ்சிநிலத்தூருக்குப் பெயராய் வந்துளது. ஆயின்,

'பாக்கம் பெறலரும் பட்டினம்' *(நம்பியகப். 24)*

என்பதனால், பாக்கம் என்பது நெய்தல் நிலத்தூருக்குப் பெயராக **நம்பியகப் பொருள்** அறுதி செய்துளது.

## 7. புரையோர்

புரையோர் என்பது உயர்ந்தோர் என்னும் பொருளது. இது,

'புரை உயர்பாகும்' *(உரி. 4)*

என்னும் தொல்காப்பியத்தான் அறியப்படும்.

''**புரையோர்** கேண்மை' *(நற். 1)*

என்னுமிடத்தில், இஃது இப்பொருளில் வந்துள தறிக.

ஆயின், இது பிற்காலத்தில், தாழ்ந்தோரையும் குறித்து வருவதாயிற்று. புரை என்பது உட்டுளையது என்னும் பொருளது மாதலின், உள்ளீடில்லாதவர் என்னும் பொருளில் கீழ்மக்களைக் குறித்து வந்ததுபோலும்.

## 8. புலம்பு

புலம்பு (நற். 267) என்னும் சொல் தனிமை என்னும் பொருளது. இது,

'புலம்பே தனிமை' *(உரி. 35)*

என்பதனால் அறியப்படும். ஆயின் இது பிற்காலத்தில், அழுது குறைகூறுதல் என்னும் பொருளில் வழங்குவதாயிற்று. உற்றார் முதலியோரைப் பிரிந்து தனித்திருப்பவர் பலபடச் சொல்லி அழுதலும் செய்வராகலின், அதனைக் குறிக்கலாயிற்று எனக் கொள்க.

## 9. வாங்குதல்

வாங்குதல் என்னும் சொல் வளைத்தல் என்னும் பொருளில் பண்டு வழங்கப்பட்டது.

'இமையவில் **வாங்கிய**' *(கலி. 38)*

என்னுமிடத்தில் இஃது இப்பொருளதாதல் அறிக. ஆயினும் இது பிற்காலத்தில், பிறரிடமிருந்து பெறுதல், விலைக்குப் பெறுதல் என்னும் பொருளிலே வருவதாயிற்று.

## 10. வெய்யள்

வெய்யள் என்பது விருப்பமுடையள் என்னும் பொருளில் பண்டு வழங்கியது.

''வெம்மை வேண்டல்' *(உரி. 38)*

என்பதனால் இஃது அறியப்படும்.

'மலர்ந்த மார்பிற் பாயல்
துஞ்சிய **வெய்யள்**' *(ஐங். 205)*

என்னுமிடத்து இப்பொருளதாதல் அறிக. ஆயின், வெம்மை

என்னும் சொல், வெப்பம் என்னும் பொருளும் உடையதாகலின், வெய்யள் என்பது பிற்காலத்தில், கொடியள் என்னும் பொருளில் வழங்குவதாயிற்று. நிற்க.

கோதை, தொடி, பரி, மன்று, வஞ்சினம் முதலிய சொற்களைக் குறித்து, 'பரணர்' என்னும் நூலில் (பக்கம். 208-13) எழுதியுள்ளேனாகலின் அவற்றை ஈண்டு எழுதாது விடுத்துளேன். அவற்றை அந்நூலிற் கண்டுகொள்க.

இனி, கபிலர் செய்யுட்களில் வந்துள்ள சொற்களுள் கன்னடம், தெலுங்கு, மலையாளம் இம்மொழிகளின் சொற்க ளோடு ஒத்துள்ள சொற்கள் சிலவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்:

| தமிழ் | வந்துள்ள இடம் | கன்னடம் | தெலுங்கு | மலையாளம் |
|---|---|---|---|---|
| [1]அணங்கு (அணங்கியோன்) | (ஐங். 250) | அணுகு | அணுங்கு | - |
| [2]அரமகள் | (ஐங். 204) | அரமகள் | - | - |

1. இச்சொற்கு, கன்னடத்திலும், தெலுங்கிலும் விருப்பம் என்னும் பொருளே உளது; தமிழில், வருத்தம் என்னும் பொருள் வழங்கினும்,

'இவள், பூண்டாங் கிளமுலை அணங்கி யோனே' (ஐங். 250)

என்னுமிடத்தில், விருப்பம் என்னும் பொருளும் பொருந்துவதாகக் காண் கின்றது. இதனை ஆராயுமிடத்து, இச்சொல் விருப்பம் என்னும் பொருளிலேயே முதலில் வழங்கியிருக்கலாம் எனவும், விருப்பமுள்ள பொருள் வருந்துமாகலின், வருத்தம் என்னும் பொருள் பின்னர் ஏற்பட்டதாகும் எனவும், அதுவே வழங்குவதாயிற்று எனவும் தோன்றுகின்றது. அணங்கு என்பது தெய்வப் பெண்ணுக்குப் பெயராய் வழங்குதலை நோக்கின், விருப்பம் என்னும் பொருளிலேயே இது முதலில் வழங்கியிருத்தல் வேண்டும் என்பது வலியுறுதல் கூடும்.

2. அரமகள் என்பது, அரசு + மகள் என்னும் சொற்களின் தொகை நிலைச் சொல் என்பது கன்னட இலக்கண நூல்களால் (கர்னாடக சப்த மணிதர்ப்பணம், 187; கர்னாடக பாஷா பூஷணம், 148) தெரிகின்றது. ஆயின், தமிழில், அமரமகள் என்பதில் மகரம் கெட்டது எனக் கொள்ளப்படுகின்றது. அமர என்பதன் இடைநிலை எழுத்துக் கெட்டது என்று கொள்ளுதலினும், அரசு என்பதன் ஈற்றுக்குற்றுகரம் கெட்டது என்று கோடலே அமைதியாகும். வரையரமகள் என்பதற்கு, வரையரசன் மகள் என்று பொருள் கொள்ளுதலே

| | | | | |
|---|---|---|---|---|
| அலரி | (குறிஞ். 117) | அலர் | அலரு | அலரி<br>அலர் |
| அவரை<br>(மொச்சை) | (ஐங். 271) | அவரெ | - | அமர<br>அவர |
| அளிந்தவை | (கலி. 41) | - | - | அலிஞ்ஞுவ |
| அறை | (குறு. 38) | அறெ | - | - |
| ஆன் | (நற். 291) | ஆவு | ஆவு[1] | ஆனக்கிடாவு<br>(ஆன்கன்று) |
| இல=எல | (அக. 12) | எலெ | - | - |
| ஈர் | (அக. 238) | ஈழ் | ஈட்சு[2] | - |
| ஈன் | (ஐங். 216) | ஈன் | ஈன் | - |
| | | (அஃறிணைகளுக்கே வுழங்கும்) | | |
| உய் | (குறு. 361) | உய் | - | - |
| உரல் | (கலி. 40) | ஒரல் | றேலு | உரலு |
| உரும் | (நற்.65) | - | உறுமு<br>(இடியோசை) | - |
| [3]எல்லா | (கலி. 42) | எலெ | - | - |
| ஓம்பு | (அக. 18) | ஒவு | ஒமு | ஒம்பு |
| கரை | (நற். 65) | கரெ | - | கர |
| கிளி | (ஐங். 283) | கிளி | சிலுக[4] | கிளி |

பொருத்தமாகவும் காண்கின்றது. இதனைக் குறித்து, 'பரணர்' என்னும் நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன். ஆண்டுக் கண்டுகொள்க.

1. தெலுங்கில் ஆவு என்னும் சொல்லே தனிமொழியில் வழங்குகின்றது. ஆயினும் தொகைச் சொற்களில் ஆன் என்னும் சொல் காண்கின்றது. கலாபி (கல + ஆன் + பி) = (நீரிற்) கலந்த ஆன்பி) என்னும் சொல்லைக் காண்க.

2. தெலுங்கில் ஈட்சு என்றும், கன்னடத்தில் ஈழ் என்றும் பகுதியிருத்தலானும், தமிழில் இழு என்னும் பகுதியிருத்தலானும், அது, முதல் நீண்டு ஈழ் என்று வருதலே முறையாதலானும், ஈர்க்கும் என்பது ஈழ்க்கும் என்பதன் திரிபேயாகும். இதன் விளக்கத்தை யான் எழுதியுள்ள 'பரணர்' என்னும் நூலில் (பக்கம். 178, 9 ) காண்க.

3. இச்சொல், தென்னாட்டில் மகளிரை விளக்குமிடத்து எள்ளா என்று வழங்குகின்றது. ஆடவருள், தாழ்ந்தோரையும் ஒத்த பருவமுள்ள நண்பரையும் விளிக்குமிடத்து ஏலே எனவும், எலே எனவும் திரிந்து வழங்குகின்றது.

4. கிளிகள் என்னும் பன்மைச் சொல்லினின்று, தெலுங்கில் பன்மையை உணர்த்தும் ள்(லு) நீங்க, கிளிக என ஒருமைச் சொல்லாகும் என்றும், அதில், முதற்கணுள்ள சகரம் சகரமாகத் திரிந்து சிலுக என்றாயிற்று என்றும் தெலுங்கர் சிலர் கூறுகின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| [1]குத்து | (கலி. 38) | குத்து | குர்ச்சு | குத்து |
| [2]குரல் (தினைக்கதிர்) | (நற். 13) | - | கொரலு (தினை) | - |
| கை | (நற். 267) | கெய் | செயி செய்யி | கை |
| சாலும் | (கலி. 65) | சால்கும் | சாலுன் | - |
| சுடர் (விளக்கு) | (அக. 158) | சுடர் | - | சுடர் (ஒளி) |
| சூரல் | (ஐங். 275) | - | - | சூரல் |
| செத்து | (ஐங். 267) | கெத்து | - | - |
| [3]சேரி | (நற். 77) | கேரி (தெரு) | - (ஒரு கக்ஷியினர், சிற்றூர்) | சேரி |
| ஞமலி (நாய்) | (குறிஞ். 131) | நவில் (மயில்) | நெமிலி (மயில்) | - |
| ஞான்று | (குறுந். 25) | - | நா(ண்)டு | (முனி) ஞான்னு |
| நகர் | (கலி. 53) | - | நகரி | - |

1. கத்தியால் குத்துதற்கும் கைவிரலை மடக்கிக்கொண்டு குத்துதற்கும் தமிழில், குத்து என்னும் சொல்லே வழங்குகின்றது. கையால் குத்துதற்கு, கன்னடத்திலும் தெலுங்கிலும் குர்த்து என்னும் சொல் வழங்குகின்றது. அப்பொருளில் அதுவே இயல்பான சொல்லாயின், அதிலுள்ள ரகரமெய், தமிழில் கெட்டது எனக் கொள்ளல் வேண்டும்.

2. கொரலு என்பது தெலுங்கில் தினைக்குப் பெயராயிருத்தலானும், பழைய தமிழ் நூல்களில் அச்சொல், தினைக்கதிர்க்கே பயின்றுவந்திருத்தலானும், குரல் என்பது தமிழில் முதன் முதல் தினைக்கதிர்க்கே பெயராயிருந்தது என்றும், பின்னர் எல்லாக் கதிர்களுக்கும் பெயராயிற்று என்றும் கொள்ளலாம்.

3. சேரி என்னும் சொற்குக் கன்னடத்தில், தெரு என்னும் பொருள் உளது. தமிழிலும், சிலவிடங்களில் தெரு என்னும் பொருள் அமைந்துளது. 'ஊருஞ் சேரியும்' (அகம். 220) என்று வந்துளது காண்க. பார்ப்பனச்சேரி, பரத்தையர் சேரி என்பது அறிக. இதனால், இச்சொல், முதலில் தெரு என்னும் பொருளில் வழங்கி, பின்னர், ஊர் என்னும் பொருளில் வழங்கியிருத்தல் கூடும் எனத் தோன்றுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| நரல் | (கலி. 40) | நரல் | - | - |
| நல்லள் | (ஐங். 204) | நல்லள் (மனைவி) | - | நல்லவள் |
| நாஞ்சில் | (அக. 42) | நேகில் | நா(ங்)கிலி | நாஞ்சில் (ஒருவகை மீன்) |
| நாணிலி | (கலி. 42) | நாணிலி | - | - |
| நாண் | (குறிஞ். 184) | நாண் | நான | நாணம் |
| நுதல் | - | நொஸல் | நொஸலு | - |
| நுரை | (கலி. 48) | நொரெ | நுருங்கு | நுர |
| பசப்பு | (கலி. 42) | - | பச(ப்)பு (மஞ்சள்) | - |
| [1]பனி | (கலி. 54) | பனி | - | பனி (நோய்) |
| பன்றி | (நற். 336) | பந்தி | பந்தி | பன்னி |
| பார்க்கும் | (நற். 336) | பார்க்கும் | - | பார்க்கும் |
| புலி | (அக. 318) | புலி | புலி | புலி |
| பூ | (ஐங். 290) | பூ | பூவு | பூவு |
| [2]மஞ்சு | (நற். 222) | மஞ்சு | மஞ்சு | மஞ்ஞு |
| மலை | (கலி. 42) | மலெ | மல | மல |
| மறி | (கலி. 50) | மறி | - | - |
| முலை | (நற். 225) | மொலெ | மொல (அரை) | முல |
| [3](வல்லமை) (வல்லோன்) | (நற். 77) | பல்மெ | - | வல்லம |

1. பனி என்னும் சொற்கு நோய் என்னும் பொருள் தமிழ் மொழியிலும் உண்டு என்பது, 'பனியென வரூஉம்' (எழுத். சூ. 241) என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையான் அறியப்படும். ஆயினும் இக்காலத்தில் அப்பொருளில் வழங்குதல் இல்லை.

2. இச்சொற்கு, கன்னடம் முதலிய மொழிகளில் பனி என்னும் பொருளேயிருத்தலானும், தமிழிலும் வெண்மேகங்களுக்குப் பெயராய் வழங்கியிருத்தலானும், இச் சொல், முதலில் பனி என்னும் பொருளில் வழங்கிப் பின்னர், பனிமேகங்களுக்குப் பெயராகி, நாளடைவில் கார்முகிலுக்கும் பெயராகியிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

3. வல்லமை என்பதற்குக் கன்னடத்திலும் மலையாளத்திலும் அறிதல் என்னும் பொருள் இருத்தலானும், தமிழிலும் வல்லோன் என்பது நன்கு அறிந்தவன் என்னும் பொருளில் பயின்றுவருதலானும் வன்மை என்பதற்கு அறிதல், தேர்ச்சியுறுதல் என்னும் பொருளே பண்டு வழங்கியிருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விரல் | (கலி. 54) | பெரல் | வ்ரேலு | விரல் |
| வெதிர் | (ஐங். 278) | பிதிர் | வெதிரு | |
| வெரிந் (வெந்) | (அக. 42) | பெந் | வெந்து | |
| [1]வைகறை | (குறுந். 312) | பைகு | | வைகுந்நேரம் |

## வடசொற்கள்*

இனி, கபிலர் செய்யுட்களுள் வந்துள்ள வடமொழிச் சொற்களை (தற்பவ, தற்சமங்களை) ஈண்டுக் குறிக்கின்றேன்.

| வடசொல் | | | வந்துள்ள இடம் |
|---|---|---|---|
| அசோகம் | - | அஶோக | கலி. 57 |
| அந்தி | - | ஸந்த்யா | குறிஞ்சிப். 225 |
| அமயம் | - | ஸமய | ,, 45 |
| அமுதம் | - | அம்ருத | நற். 65 |
| அரக்கர் | - | ரக்ஷஸ் | கலி. 38 |
| அரக்கு | - | லாக்ஷா | குறிஞ்சிப். 96 |
| அரணம் | - | ஶரண | அகம். 158 |
| ஆகுலம் | - | ஆகுல | கலி. 65 |
| ஆவணம் | - | ஆபண | பதிற். 68 |
| இமையம் | - | ஹிம | கலி.38 |

1. வைகறை என்பது, வைகு + அறை எனப் பிரிந்து, வைகு அற்றுப் போகுங் காலம் எனப் பொருள்படுவதாகும். ஆகலின் வைகு என்பது இரவு என்னும் பொருளுடையது எனப் போதரும். இதனைக் குறித்து, 'பரணர்' என்னும் நூலில் (பக்கம். 216) விளக்கமாக எழுதியுள்ளேன். ஆண்டுக் கண்டு கொள்க.

★ சில சொற்கள் பல செய்யுட்களில் வந்திருத்தல் உண்டு. அவற்றை மீண்டும் குறிக்கவில்லை.

| வடசொல் | | வந்துள்ள இடம் | |
|---|---|---|---|
| உமை | - | உமா | கலி. 38 |
| ஏமம் | - | க்ஷேம | குறிஞ். 32 |
| ஐயர் | - | ஆர்ய | குறிஞ். 17 |
| கடம்பு | - | கதம்ப | '' 176 |
| கடாம் | - | கட(கவுள்) | கலி. 57 |
| கணம் | - | கண | அகம். 82 |
| கலாவம் | - | கலாப | குறுந். 225 |
| கவளம் | - | கபல | புற. 114 |
| காமம் | - | காம | நற். 353 |
| கானம் | - | கஹந, காநந | புற. 202 |
| குஞ்சரம் | - | குஞ்ஜர | இன்னா. 14 |
| குணம் | - | குண | நற். 291 |
| குலம் | - | குல | ஐங். 259 |
| குவளை | - | குவலய | குறிஞ்சி. 63 |
| கூகை | - | கூக | குறுந். 153 |
| கூந்தல் | - | குந்தல | '' 208 |
| கைதை | - | கேதக | குறிஞ். 83 |
| கோட்டி | - | கோஷ்ட்டி | இன்னா. 29 |
| கோடி | - | கோடி | புற. 202 |
| கோவலர் | - | கோபால | குறிஞ். 221 |
| சமம் | - | ?சமர | பதிற். 66 |
| சாந்து | - | ?சந்தந | நற். 1 |
| சடை | - | ஜடா | கலி. 38 |
| சாபம் | - | சாப | புற. 14 |
| சிந்துவாரம் | - | ஸிந்துவார | குறிஞ். 89 |
| செவி | - | ஶ்வர | நற். 376 |
| தண்டம் | - | தண்ட | இன்னா. 13 |

| வடசொல் | | | வந்துள்ள இடம் |
|---|---|---|---|
| தம்பலம் | - | தாம்பூல | கலி. 65 |
| தவம் | - | தபஸ் | இன்னா. 24 |
| தாமரை | - | தாமரஸ | நற். 1 |
| தாயம் | - | தாய | புற. 202 |
| திசை | - | திஶா | புற. 117 |
| திலகம் | - | திலக | குறிஞ். 74 |
| துவரை (ஊர்) | - | த்வாரா | புற. 201 |
| துழாய் | - | துளஸி | குறிஞ். 90 |
| தூமம் | - | தூம | புற. 117 |
| தெய்வம் | - | தெய்வ | கலி. 39 |
| நந்தி | - | நந்த்யாவர்த்த | குறிஞ். 91 |
| நரந்தம் | - | நாரங்க | ,, 94 |
| நாகம் | - | நாக | இன்னா. 30; (கலி. 39) |
| பசு | - | பஶு | ஐங். 271 |
| பதம் | - | ?பத | கலி. 60 |
| பந்தம் | - | பந்த | இன்னா 2. |
| பலி | - | பலி | ஐங். 259 |
| பிசாசர் | - | பிஶாச | கலி. 65 |
| போகம் | - | போக | புற. 8 |
| மகர(வாய்) | - | மகர | கலி. 54 |
| மண்டிலம் | - | மண்டல | புற.8 |
| மத (யானை) | - | மத | கலி-38 |
| மந்திரம் | - | மந்த்ர | இன்னா. 2 |
| மனம் | - | மனஸ் | ஐங். 243 |
| மாயம் | - | மாயா | பதிற். 62 |
| மாலை | - | மாலா | குறிஞ். 177 |
| முகம் | - | முக | குறுந். 121 |
| முத்தம் (முத்து) | - | முக்தா | பதிற். 67 |

| | | | |
|---|---|---|---|
| முரசு | - | முரஜ | பதிற். 64 |
| முனிவன் | - | முநி | புற. 201 |
| யாமம் | - | யாம | நற். 353 |
| வாரணம் | - | வாரண | கலி. 42 |
| வாரணவாசி | - | வாராணஸீ | கலி. 60 |

இனி,

| | |
|---|---|
| உலகு | மணி |
| நீர் | மீன் |
| மயில் | |

இச்சொற்கள் திராவிட மொழிகளைச் சேர்ந்தவை எனப் படுதலின் இவற்றை மேலே குறித்திலேன்.

'கன்றுதன் பயமுலை மாந்த' (குறுந். 225) என்னுமிடத்தில், பயம் என்பது பால் என்னும் பொருளில் வந்துளது. இது பயஸ் என்னும் வடசொல்லின் திரிபாகலாம். இனி, பயம் என்பதற்கு, 'பயனுடைய' என்று பொருள்கொண்டு தமிழ்ச்சொல் என்பர். பயனாவது பால். நிற்க.

'குருமயிர்ப் புருவை யாசையி னல்கும்' (ஐங். 238)

என்னுமிடத்தில், ஆசை என்னும் வடசொல் வந்துளது. ஆனால், இப்பாடம்,

'குருமயிர்ப் புருவை நசையி னல்கும்'

என்றிருந்திருக்குமோ எனக் கருத இடனுண்டு. என்னையெனின், இகர ஈகார ஐகாரவீற்றுச் சொற்களில் அவற்றைச் சார யகரமெய் இட்டு எழுதும் வழக்கு ஏடுகளில் உண்டு. ஆகலின், 'குருமயிர்ப் புருவை' என்பது குருமயிர்ப் புருவைய்' என்று எழுதப் படலாம். அவ்வாறாயின், 'குருமயிர்ப் புருவையநசையினல்கும்'

என்பதுவே, 'குருமயிர்ப்புருவையாசையினல்கும்' என்றாதல் கூடும். 'குருமயிர்ப் புருவை யாசையி னல்கும்' என்னும் பாடத்தினும், குருமயிர்ப் புருவை நசையி னல்கும்' என்னும் பாடம் இன்னோசை யதாதல் அறிக. இதனுண்மை ஆராயத்தக்கது. நிற்க.

இதுகாறும், கபிலரைக் குறித்து வழங்குங் கதைகளும், அவர்தம் வரலாறும், அவர் செய்யுட்களும், அச்செய்யுட்களிற் காணும் பலதிறப்பட்ட பொருள்களும், அணி முதலிய இலக்கணச் சிறப்புக்களும், பலவகைச் சொற்களினியல்பும், பிறவும் ஓராற்றான் ஆராயப்பட்டன. இவ்வாராய்ச்சியினால் கபிலரது வரலாறும், அவர்தம் செய்யுட்களின் திறமும், பிறவும் நன்கு விளங்குவனவாகும்.

★ ★ ★

# பிற்சேர்ப்பு

## I

## தமிழ் நாவலர் சரிதை

தமிழ் நாவலர் சரிதை என்னும் நூல், தமிழ்ப் புலவரனைவரது வரலாறும் ஒருங்கே கூறுவதன்று; புலவர் சிலர் ஒவ்வொருகால் பாடிய செய்யுட்களைத் தொகுத்து, அவற்றின் வரலாற்றைக் கூறிச்செல்வது. இந்நூலால் தமிழ்ப் புலவர் சிலரது வரலாற்றுக் குறிப்பு மட்டுமே அறியப்படும். ஆயினும், இந்நூல் கூறும் வரலாறெல்லாம் உண்மை என்று துணிதல் இயலாது. இதனை இந்நூற் பதிப்பாளர், திரு. தி.த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், தம் முகவுரையில் (பக்கம். 5-9) விளங்க எழுதியுள்ளார்.

தமிழ் நாவலர் சரிதையுள் அவ்வையார் வரலாற்றில், பாரிமகளிருக்கு அவ்வையார் மணஞ் செய்வித்த செய்தி கூறப்பட்டிருத்தலின், அஃது ஈண்டு ஆராய்வதற்கு உரியதாகின்றது. அதனை ஆராய்தற்குமுன், அவ்வையார் இயற்றியன என்று குறிக்கப்பட்டுள்ள செய்யுட்களைக் குறித்துச் சிறிது ஆராய்தல் வேண்டப்படுவதாகலின், முதற்கண் அவற்றை எடுத்துக் கொள்கின்றேன்:

அவ்வையார் இயற்றிய செய்யுட்கள் என்று தமிழ் நாவலர் சரிதையிற் குறிக்கப்பட்டுள்ளவை [1]நாற்பத்தொன்று. அவற்றுட் காணும் ஆசிரியப் பாக்கள் ஆறனுள் 2 செய்யுட்கள் புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ளன; 2 செய்யுட்கள் தொல்காப்பியவுரையில் காட்டப்பட்டுள்ளன.

வெண்பாக்கள் முப்பத்திரண்டனுள் ஐந்தடிச் செய்யுள் 1; நான்கடி இன்னிசை வெண்பா 1; நேரிசை வெண்பா 26;

குறட்பா 4. இவற்றுள் 2 நேரிசை வெண்பாக்கள், 'பொய்யா மொழியார் பாதிபட அவ்வையார் பாதி பாடியவை ' என்னுந் தலைப்பின்கீழ்க் குறிக்கப்பட்டுள்ளன;

ஒரு வெண்பா, தொல்காப்பியச் செய்யுளியலுரையில் எடுத்தாளப்பட்டுளது.

கலித்துறைச் செய்யுள் இரண்டனுள் ஒன்று ஆறடியினை யுடையது.
விருத்தச் செய்யுள் ஒன்றே; அஃது எண்சீரடியினை உடையது.

இனி, இவற்றைக் குறித்துச் சிறிது ஆராய்தும்: நேரிசை வெண்பாவின் இலக்கணம், யாப்பருங்கலத்திலும் யாப்பருங் கலக்காரிகையிலும் கூறப்பட்டுள்ளதேயன்றி, தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. தொல்காப்பியனார்,

'நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின' (செய். 118)

என்று வெண்பாவின் வகைகளைக் கூறிப், பின்னர்

'நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டின் அளவெழு சீரே' (செய். 159)

---

1.

| | | |
|---|---|---|
| அகவற்பா. | | 6 |
| வெண்பா. | 5 அடி. | 1 |
| ,, | 4 அடி. | 27 |
| குறட்பா | | 4 |
| ஆசிரிய விருத்தம் | | 1 |
| கலித்துறை | 6 அடி | 1 |
| ,, | 4 அடி | 1 |
| | ஆக | 41 |

என்று, நெடுவெண்பாட்டிற்கும் குறுவெண்பாட்டிற்கும் அளவு கூறியுள்ளார்; இத்துணையே யன்றி, பிற்காலத்தவர் இவ் வெண்பாவினை வகுத்துப் பெயரிட்டாங்குப் பெயரிட்டிலர். ஆகலின், தொல்காப்பியனார் கொள்கைப்படி, குறள் வெண்பா, இன்னிசைச் சிந்தியல்வெண்பா, (தனிச் சொற்பெறாத) இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்னும் பெயரான் பிற்காலத்தில் வழங்கும் நான்கு வெண்பாக்களே அமைவுறும்; ஏனைய அமைவனவல்ல.

இவற்றால், ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் நேரிசை வெண்பா என்பதொன்று வழங்கிற்றிலது என்பதும், ஒரூஉத்தொடை பெற்றுவருஞ் செய்யுள் நேரிசையுடையதாகலின் அதனைப் பிற்காலத்தவர் [1]நேரிசைவெண்பா என்னும் பெயரான் முதற்கண் வழங்கலாயினர் என்பதும், பின்னர் இரண்டாமடிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வருவதொன்றே நேரிசைவெண்பா என்னும் பெயரான் நிலைபெறுவதாயிற்று என்பதும் அறியலாகும்.

இனி, [2]'இனியவை நாற்பது', 'இன்னாநாற்பது' முதலிய நூல்கள் தோன்றிய காலத்தும் நேரிசைவெண்பா வழங்கிலது என்பதும், அதற்கும் பிற்காலத்திலேயே வழங்கலாயிற்று என்பதும் அந்நூல்களால் அறியப்படும். திணைமொழி ஐம்பதில் நேரிசை வெண்பாக்கள் இரண்டே (5, 33) உளவாயிருப்ப, திணைமாலை நூற்றைம்பதில் 149 (113 ஒழிய) செய்யுட்கள்

---

1. இஃது இளம்பூரண அடிகள், 'நெடுவெண் பாட்டே' (தொல். செய். 118) என்னும் சூத்திரத்திற்கு எழுதியிருக்கும் உரையானும், அவர் காட்டியுள்ள மேற்கோட் செய்யுட்களானும் நன்கு அறியப்படும்.

2. **இனியவை நாற்பது, இன்னா நாற்பது** என்னும் இரண்டு நூல்களில் நேரிசை வெண்பாச் செய்யுள் ஒன்றாதல் வந்திலது. **திணைமொழி ஐம்பதில்** 5, 33 இவ்விரண்டு பாட்டுக்களே நேரிசை வெண்பாவாகக் கொள்ளத்தக்கவை. **ஆசாரக்கோவை** நூறு பாட்டுள்ளும் ஐந்து (37, 76, 79, 85, 92) பாட்டுக்களே நேரிசை வெண்பாவாகும்; எதுகைக்கண், றகர ரகரங்களின் வேறுபாடு கருதாது

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

வந்திருத்தலை நோக்கின் இவ்வுண்மை வலியுறும். இதனால், 'திணைமாலை நூற்றைம்பது' என்னும் நூல், திணைமொழி ஐம்பதினும் நெடுங்காலத்திற்குப் பிற்பட்டதென்பது தானே போதரும். நிற்க.

தமிழ் நாவலர் சரிதையில், அவ்வையார் செய்யுட்களாகக் குறிக்கப்பட்டுள்ள நான்கடி வெண்பா இருபத்தேழனுள் 26 பாட்டுக்கள் நேரிசை வெண்பாவா யமைந்திருத்தலை நோக்கின், இவை சங்க காலத்தில் வாழ்ந்திருந்த அவ்வையார் செய்தவை யாகா என்பது எளிதின் அறியப்படும். இனி, எண்சீரடியாசிரிய விருத்தம் சங்க காலத்தில் தோன்றிற்றிலது என்பது கூறாமலே விளங்கும். இவை நிற்க.

'பொய்யாமொழியார் பாதிபாட, அவ்வையார் பாதி பாடியவை' என்று இரண்டு செய்யுட்கள் குறித்திருத்தலை மேலே கூறியுள்ளேன். பொய்யாமொழியார், கடைச்சங்கம் அழிவுற்று

---

எண்ணின் *68, 80* இவ்விரண்டு பாட்டுக்களையும் சேர்க்கலாம். அவ்வாறு சேர்ப்பினும் ஏழுபாட்டுக்களே ஆகின்றன. **கார்நாற்பதில்** நேரிசை வெண்பா என்று கொள்ளத்தக்கன எட்டுப்பாட்டுக்களே *(2, 9, 13, 16, 20, 21, 27, 30)* யாகும். **களவழிநாற்பதிலும்** ஒன்பது பாட்டுக்களே *(4, 5, 10, 13, 14, 18, 19, 32, 38)* காண்கின்றன. மேற்கூறிய இவ்வெல்லா நூல்களிலும் நேரிசை வெண்பாக்களாக எண்ணப்பட்டவற்றுட் பல, இரண்டாமடிக்கண் ஒரூஉத் தொடை பெற்றவை யாகும். இனி, இரண்டாமடிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வந்தனவேயன்றி, ஏனையடிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வந்த செய்யுட்களும் இந்நூல்களிற் பல உள்ளன. **திணைமொழி ஐம்பதில்** *13*-ஆம் பாட்டு முதலிரண்டடியிலும் ஒரூ உத்தொடையமையப் பெற்றது; *49*-ஆம் பாட்டு இரண்டாமடியில் மட்டும் அமையப்பெற்றது. **கார்நாற்பதில்** *19, 22, 29, 36* இந் நான்கு செய்யுட்கள் முதலடியில் ஒரூஉத் தொடை பெற்றவை. **களவழி நாற்பதில்** *8, 16, 20, 22, 25* இவை ஐந்தும் முதலடிக் கண் ஒரூஉத்தொடை பெற்றவை; *11, 40* இவ்விரண்டும் இரண்டாமடிக்கண் ஒரூஉத் தொடை பெற்றவை; *28*-ஆம் பாட்டு மூன்றாமடிக்கண் பெற்றது; *34*-ஆம் பாட்டு நான்காமடிக்கண் பெற்றது; *10, 29, 37* இம்மூன்று பாட்டுக்களும் முதலிரண் டடிக்கண் பெற்றன; *1, 21* இவ்விரண்டு பாட்டுக்களும் இரண்டாவது மூன்றாவது அடிக்கண் பெற்றன; *35*-ஆம் பாட்டு, ஒன்று இரண்டு நான்கு இவ்வடிகளிற் பெற்றன; *6*-ஆம் பாட்டு, ஒன்று முதல் நான்கு அடிகளிலும் பெற்றது. இவ்வாறே பிறநூல்களிலும் காணலாகும்.

நெடுங்காலமாயின பின்பு தோன்றியவர் என்பது அனைவரும் அறிந்ததே. அவரும் அவ்வையாரும் ஒரு செய்யுளை ஒருங்கே பாடி முடித்தல் யாங்கனம் இயலும்? அன்றியும், பொய்யா மொழியார் பாடியது என்று குறித்துள்ள,

> 'தண்ணீருங் காவேரி தார்வேந்த னுஞ்சோழன்
> மண்ணாவ துஞ்சோழ மண்டலமே'

என்னும் அடிகள் கம்பர் இயற்றியவை என்பது [1]தனிப் பாடற்றிரட்டினால் அறியப்படுகின்றது. 'சிறப்பார் மணிமுடி', 'கூரிய வாளால்', 'விரக ரிருவர்' என்னும் செய்யுட்களைக் குறித்துத் தமிழ் நாவலர் சரிதையிற் காணும் வரலாற்றுக்கும் தனிப்பாடற்றிரட்டிற் காணும் வரலாற்றுக்கும் வேறுபாடு காண்கின்றது. இவ்வாறே வேறு சிலவும் உள. நிற்க.

புறநானூறு முதலிய பழைய நூல்களில் உள்ள அவ்வையார் செய்யுட்களை நோக்கின், அவ்வையார் புலமை மிக்க பெண்பாலார் என்னுமளவே போதரும்; தமிழ்நாவலர் சரிதையில் உள்ள அவ்வையார் செய்யுட்களை நோக்கின், அவ்வையார் கடவுட்டன்மை வாய்ந்தவர் எனவும், கடவுளரையும் பணி கொள்ளும் ஆற்றல் மிக்கவர் எனவும் போதரும். சங்கப் புலவரு ளொருவராதல் இத்தகைய கடவுட்டன்மை வாய்ந்திருந்தார் என அவர் செய்யுட்களால் அறியப்படவில்லை. இதனானும் தமிழ் நாவலர் சரிதையிற் காணும் அவ்வையார் செய்யுட்கள் சங்க காலத்து அவ்வையார் இயற்றின அல்ல என்பது அறியப்படும்.

இனி, 'அவ்வையார் தமக்கு நெல்லிப்பழங் கொடுத்த அதிகமானைப் பாடிய' செய்யுட்களாக, இரண்டு செய்யுட்கள் தமிழ் நாவலர் சரிதையில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், 'வலம்படு வாய்வாள்' என்னும் செய்யுள் அகவற்பா; அது புறநானூற்றில் காண்கின்றது. மற்றையது வெண்பா; அச்செய்யு ளில் நெல்லிக்கு **ஆமலகம்** என்னும் வடசொல் வந்துளது.

---

1. ஔவையார் பாடல். 16

அதனானும், ஒரே செய்தியை இருவகைப்பாக்களிற் கூறுதல் வேண்டாமையயானும் அவ்வெண்பாவும் சங்க காலத்து அவ்வையார் பாடியதன்று என்பது எளிதிற்றுணியப்படும்.

'மதுர மொழியி னுமையாள் சிறுவன்' என்னும் செய்யுளையும் அதன் வரலாற்றையும் அறியின், அவ்வையார் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் வாழ்ந்திருந்தார் என்பது போதரும். சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. எட்டு ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் என்பது ஆராய்ச்சியால் அறியப் பட்டுள்ள செய்தி.[1] சங்க காலத்திருந்த அவ்வையார் சுந்தரமூர்த்தி நாயனார் காலம் வரையும் வாழ்ந்திருந்தார் என்பது வியப்பினைத் தரும். ஆயின், அதிகன் ஈந்த நெல்லிக்கனியால் அவ்வையார் சாவாது உலகில் வாழ்ந்திருந்தார் எனின், அவர் இன்றும் வாழ்ந்திருத்தல் வேண்டுமே. 'நெல்லித் தீங்கனி......சாதல் நீங்க எமக்கீத் தனையே' என்பதற்கு, அந்நெல்லிக்கனி தின்றால் வாணாள் சிறிது நீளும் என்பதுவே கருத்தாகும்.

இனி, தமிழ் நாவலர் சரிதையிற் காணும் அவ்வையார் செய்யுட்களில், சங்க காலத்திற் பயிலாதனவாகிய - பிரமன், கோடானுகோடி, கங்காளன், கண்ணாலம், அகளங்கா என்பன போன்ற - வட சொற்கள் பல வந்துள்ளன; **சபித்து, சங்கியாதே** என்று வடசொல்லடியிற் பிறந்த வினையெச்சங்களும் காண் கின்றன. அன்றியும், 'அதிர வரு**கின்ற**' என்று, கின்று இடை நிலையோடு கூடிய எச்சச் சொல்லும் வந்துளது. இவ்வெல்லா வற்றையும் ஒருங்குநோக்கின், இச்செய்யுட்களெல்லாம் சங்க காலத்து அவ்வையார் இயற்றின ஆகா என்பது தெற்றென விளங்கும்.

இனி, பாரிமகளிரின் மணநிகழ்ச்சியைக் குறிக்குஞ் செய்யுட்களைச் சிறிது நோக்குதும்:

'அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குக் கலியாணம் பண்ணுவிக்கிறபோது ஓலையெழுத விநாயகனை அழைத்த

---

2. தமிழ் வரலாறு, பிற்பாகம்: பக்கம். 64-66

வெண்பா' என்னும் தலைப்பின்கீழ், 'ஒருகை இருமருப்பு மும்மதத்து.....சபித்து' என்னும் செய்யுள் எழுதப்பட்டுளது. 'சேரசோழபாண்டியர்க்கு, விநாயகன் எழுதப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ், 'சேரலர்கோன் சேரன்.......' என்னும் தொடக்கத்து மூன்று செய்யுட்களும், 'மூவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது' என்னும் தலைப்பின்கீழ், 'திங்கட் குடையுடை' என்னும் செய்யுளும், 'அந்தக் கலியாணத்தில், பெண்ணையாற்றைப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ், 'முத்தெறியும் பெண்ணை' என்னும் செய்யுளும், 'அப்போது வருணனைப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ், 'கருணையால் இந்தக் கடலுலகம்' என்னும் செய்யளும் எழுதப்பட்டுள்ளன.

இவற்றுள், 'சேரலர்கோன்' என்னும் செய்யுளில், 'பாரிமகள், அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்' என்றிருத்தலின், பாரி மகளிரிருவருள் அங்கவை என்பவளையே அவ்வையார் தெய்வீகனுக்கு மணம் புரிவித்தனர் என்பர். ஆயின், தனிப்பாடற்றிரட்டில், 'சங்கவையையும்கூடத் தான்' என்னும் பாடம் காண்கின்றது. தமிழ் நாவலர் சரிதையிற் காணும் பாடத்தினும் தனிப்பாடற்றிரட்டிற் காணும் பாடம் அமைவுடையதாகத் தோன்றுகின்றது. என்னையெனின்,

'சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் **தான்வருக உட்காதே** - பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்
**சங்கியா தேவருக தான்'**

என்று தமிழ்நாவலர் சரிதையிற் காணும் பாட்டில், **'தான் உட்காதே** வருக' என்றும், **'தான் சங்கியாதே வருக'** என்றும், வருக என்னும் வியங்கோள்வினை இருகால் வந்துளது. ஏனைய இரண்டு பாட்டிலும், 'புகார் மன்னன்... நகாதே கடுக **வருக'** என்றும், 'வையைத் துறைவன்... தேம்பாதே... **வருக** இசைந்து' என்றும், வருக என்னும் வியங்கோள்வினை ஒவ்வொருகாலே வந்துள் ளதை நோக்கின், 'சேரலர்கோன்' என்னும் செய்யுளிலும்,

'ஊரளவுந் தான்வருக உட்காதே' என்று இரண்டாமடியிற் கூறியதுவே சாலும் என்பது போதரும். இம்முதற் செய்யுளில், 'ஊரளவுந் தான்வருக' என்று இரண்டாமடியிலும், இரண்டாஞ் செய்யுளில், 'கடுக வருக' என்று மூன்றாமடியிலும், மூன்றாம் செய்யுளில், 'ஈண்டு வருக' என்று நான்காமடியிலும், **வருக** என்னும் சொல் வந்துளது காண்க. அன்றியும், '**அங்கவை சங்கவை**யைத் தெய்வீகனுக்குக் கலியாணம் பண்ணுவிக்கிற போது' என்னும் குறிப்பில் இருவர் பெயருங் காணுதலின், பாட்டிலும் இருவர் பெயரும் இருத்தல் வேண்டுமன்றே. இவற்றால், தனிப்பாடற்றிரட்டின் பாடமே அமைவுடையதாகல் அறிந்துகொள்க.

இனி, விநாயகர் வந்து மணவோலை எழுதியதுவும், பனந்துண்டம் பழந்தந்ததுவும், பெண்ணையாறு தண்ணீர் தவிர்ந்து நெய்யும் பாலும் கொண்டு வந்ததுவும், வருணன் நீர்மாரி தவிர்ந்து பொன்மாரி பொழிந்ததுவும் ஆகியவற்றை ஆழ்ந்து நோக்கின், இக்கதை பிற்காலத்தவர் புனைந்துரைத்த கற்பனைக் கதையே என்பது எளிதின் உணரப்படும். சங்க நூல்களில் விநாயகரைக் குறித்த செய்தியே காண்கிலாமை ஈண்டு அறியத் தக்கது. ஆகலின், இந்நூல் கூறுஞ் செய்தியைத் துணிந்து மேற்கொண்டு, பாரிமகளிரைத் தெய்வீகனுக்கு அவ்வையார் மணம்புரிவித்தனர் என்று கூறுதல் அமையாதென்று விடுக்க.

★ ★ ★

# பிற்சேர்பு

# II

## கபிலர் பாட்டுக்களும் உரைகளும்

கபிலர் இயற்றிய செய்யுட்களுள் குறிஞ்சிப்பாட்டிற்கும் குறிஞ்சிக்கலிக்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரை யுளது. ஐங்குறு நூற்றுக்குப் பழையவுரை ஒன்றுளதாயினும், அது, பெரும்பாலும் உள்ளுறை யுவமம் முதலியவற்றை மட்டுமே விளக்கிச் செல்வதாயுள்ளது; பாட்டுக்களின் பொருள்களைத் தெளிவாகத் தெரிப்பதில்லை. ஆயினும், அஃதில்லாவிடின் பாட்டுக்களின் உள்ளுறை முதலியவற்றை அறிதல் அரிதேயாகும். பதிற்றுப்பத்திற்குப் பழையவுரை ஒன்று உளது. இஃது, அருஞ் சொற்களையும் அருந்தொடர்களையும் பாட்டுக்களின் பெயர்க் காரணங்களையும் விளக்கிச் செல்வது; சிலவிடங்களில் இலக் கணக் குறிப்பும் உடையது. இவ்வுரை இல்லாவிடின், பல சொற்களுக்கு இக்காலத்திற்கு பொருள் விளங்குதல் அரிதாகும். அகநானூற்றில் சேர்க்கப்பட்டுள்ள கபிலர் பாட்டுக்களுள் ஐந்து பாட்டுக்களுக்கு மட்டுமே பழையவுரை யுளது; அதுவும் குறிப்புரையே.

புறநானூற்றுப் பாட்டுக்களுள், கபிலர் இயற்றிய பாட்டுக் களாகக் காண்பவை 28. அவற்றுள் 26 பாட்டுக்களுக்குப் பழைய வுரையுளது. இவ்வுரை, தெளிவான பொழிப்புரை; வேண்டிய விடங்களில் விளக்கமும், முடிபுகளும், இலக்கணக் குறிப்புகளும் உடையது. இத்தகைய சிறந்தவுரையை எழுதிய பெரியார் இவர் எனத் தெரியவில்லை. இவர், இந்நூல் முழுவதற்கும் உரை யெழுத நேர்ந்திலாமை பெரிதும் வருந்தத்தக்கதே. இவ்வுரை யாசிரியர், நச்சினார்க்கினியர்போல வேண்டியவாறு சொற்களைக்

கொண்டுகூட்டிப் பொருளுரைப்பவரல்லர்; சொற்கிடக்கைப்படி உரை எழுதி, பின்னர், முடிபுகூறி விளக்கும் இயல்பினர். உரையெழுதுந் தன்மையில் இவர், அடியார்க்கு நல்லாரை ஒப்பர். இவர் எழுதியிருக்கும் உள்ளுறை முதலியன சிறப்புடையனவாகும். இவ்வுரையாசிரியரை நாம் பெரிதும் பாராட்டக் கடப்பாடுடையம்.

நற்றிணை குறுந்தொகைகளுக்குப் பழையவுரை இல்லை.

இன்னாநாற்பதிக்குப் பழையவுரை ஒன்று உளது. அது பொழிப்புரையே. நிற்க.

தமிழ் நூல்களில் அளவிடற்கரிய பயிற்சியும், உரையெழுதும் ஆற்றலும், தமிழ்மொழியிடத்து நன்மதிப்பும் மிக்க உரையாசிரியர் ஆசிரியர் நச்சினார்க்கினியரொருவரேயாவர். பழைய செய்யுட்களுக்கு இவர் உரை எழுதியிராவிடின், அவற்றுள் பெரும்பாலான இறந்தொழிந்திருக்கும். பத்துப்பாட்டுக்களுள் சில பாட்டுக்கள் இவருரையினாலேயே நிலவி நின்றுள்ளன என்பதை அறியுமிடத்து, மேற்கூறியது புனைந்துரையன்று என்பது நன்கு விளங்கும். சீவக சிந்தாமணிக்கு இவருரையில்லாவிடின் அதன் ஆழ்ந்த பொருள்களையும் கருத்துக்களையும் இக்காலத்தில் அறிந்துகொள்ளுதல் எளிதின் இயலாது. இவற்றையெல்லாம் கருதியே, 'நச்சினார்க்கினியனெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்று முன்னோர் கூறுவாராயினர். பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாகத் தமிழ்மொழி பயில்வோரும் ஆசிரியர் நச்சினார்க்கினியருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடப்பாடுடையராவர்.

ஆயினும், நச்சினார்க்கினியர் பலவிடங்களில், செய்யுட்களையும் சொற்களையும் தம் விருப்பம்போல் முன்னும் பின்னும் கொண்டுகூட்டியும், சில இடங்களில் மூலத்துக்குப் பொருந்தாதவுரையை எழுதியும், அதற்காக இலக்கணச் சூத்திரங்கட்கு அமையாதவுரையை வகுத்தும், வேண்டியாங்கு முடித்துள்ளார். அதற்குக் காரணம், 'இவ்வாறு கூறின் செய்யுட்பொருள் சிறக்கும்'

என்று அவர் கருதினமையேயாகும். அன்றியும், தொல்காப்பிய விதிக்கு மாறாயுள்ள பாட்டுக்களையும், அடிகளையும், சொற்களையும் தொல்காப்பிய விதியின் அமைந்தனவே என்று அமைத்துக்காட்டுவான் வேண்டி, அவற்றின் பொருள்களை வேறுபடக் கூறுவர்; அங்கனம் கூறுதல் அரிதாகுமிடத்துத் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு வேறுபொருள் கூறுவர். இவ்வாறு இலக்கியத்திற்காதல், இலக்கணத்திற்காதல் வேறு பொருள் கூறி, அவ்விரண்டனையும் மாறுபடாவாறு அமைத்துக் காட்டுதல் அவருக்கியல்பு. இச்செயல் நன்மையையபோலத் தோன்றினும், இலக்கிய இலக்கணங்களின் உண்மைப்பொருளை அறிய இயலாமற் செய்தலின், நன்றின்பாற்படாதென்க. இதனால், ஆசிரியர் நச்சினார்க்கினியருரையை ஆராய்ந்து உண்மை காண்டல் இன்றியமையாததாகும். ஆகலின், குறிஞ்சிப்பாட்டிற்கு அவர் எழுதியுள்ள உரையை ஈண்டு ஆராய்கின்றேன்.

## குறிஞ்சிப் பாட்டின் உரை

'அகலு ளாங்கண் அறியுநர் வினாயும்'

என்னும் 4-ஆம் அடியில், **வினாயும்** என்பதில் உள்ள உம்மையை, 6-ம் அடியில், 'கடவுட்**பேணி**' என்றிருப்பதில், பேணி என்பதனோடு கூட்டினார். இங்ஙனம் கூட்டாவிடின், பொருள் அமையாதிருத்தலில்லை.

'விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
அகலு ளாங்கண் அறியுநர் **வினாயும்**
**பரவியும் தொழுதும்** விரவுமலர் **தூயும்**
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையும் **ஓச்சியும்** அலவுற்
றெய்யா மையலை நீயும் **வருந்துதி**' (3-8)

என்னும் அடிகளைக் காண்க. இவற்றுள், 'அறியுநர் வினாயும், வேறு பல் உருவிற் கடவுட்பேணிப் பரவியும், தொழுதும், விரவுமலர் தூயும், நறையும் விரையும் ஓச்சியும், அலவுற்று நீயும்

வருந்துதி' என்று கூட்டிப் பொருள் கூறுதலே அமைதி. நச்சினார்க்கினியர் கூறும் பொருளே இப்பாட்டியற்றிய ஆசிரியரது கருத்தாயிருப்பின், அவர், 'அகலு ளாங்கண் அறியுநர் வினாஅய்.........வேறுபல லுருவிற் கடவுட் பேணியும்' என்று கூறியிருப்பரல்லரோ? அன்றியும், ஆசிரியர் ஒரு சொல்லில் உள்ள உம்மையை இரண்டடிகளுக்குப் பின் உள்ள சொல்லோடு சேர்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே செய்யுட் செய்வரோ? இனி, 'பேணியும் என்னும் உம்மை சிறப்பு; ஏனைய எண்ணும்மை' என்று நச்சினார்க்கினியர் கூறினார். வினாயும், தொழூதும், தூயும் என்று வந்துள்ளனவெல்லாம் எண்ணும்மையே யாதல் அறிக.

*24-ம் அடியில்,*

'ஏனை யுலகத்தும் இயைவதால்'

என்னுமிடத்து, 'ஏனை யுலகத்தும்' என்னும் தொடருக்கு, 'மறுபிறப்பினும்' என்று பொருள் கூறினார். இப்பொருள் சிறப்புடையதே என்னத் தட்டில்லையாயினும், 'ஏனை யுலகத்தும்' என்பதற்கு, வேறுலகத்தும் என்று பொருள் கூறுதலே நேர். 'செல்லும் **உலகத்து**' (புறம். 18) என்று வந்திருத்தலையும், அதற்கு, 'போகக்கடவ **மறுமையுலத்தின்கண்**' என்று உரையெழுதியிருத்தலையும் அறிக.

*30-ஆம் அடியில்,*

'**கொடுப்பின்**நன் குடைமையும்'

என்பதற்கு, '**கொடுத்தபின்பு** எல்லாவற்றானும் நன்றாகி முடிதலையும்' என்று உரை கூறினார். **கொடுப்பின்** என்னும் வினையெச்சச் சொற்கு, **கொடுத்தபின்பு** என்னும் பொருள் யாங்கனம் அமையும். 'கொடுப்பின்' என்பதற்குத் 'தமர், வதுவை செய்துகொடுத்தால்; அஃதாவது, பெண்ணின் தமர் தலைவனுக்கு மணஞ் செய்துகொடுத்தால்' என்னும் பொருளே நேர்மையானது,

'தமர் வதுவை செய்துகொடுத்தால் நலனுடையதாதலையும், ஒத்த குடிப்பிறப்புடைமையையும், வண்ணத்தையும், துணையையும் ஒப்பிட்டு ஆராயாமல் யாமே செய்துகொண்ட மணம்' என்பதே இங்குக் கூறப்பட்ட செய்தி.

'கொடுப்பின்நன் குடைமையும் குடிநிர லுடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணா
தெமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை' *(30-32)*

என்னும் அடிகளை நோக்குக.

இனி,

'கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலியஞ் சிதணம் ஏறி யவண
சாரற் சூரல் தகைபெற வலந்த
தழலும் தட்டையும் குளிரும் பிறவும்' *(40-43)*

என்னும் அடிகளில், 'சாரற் சூரல் தகைபெற வலந்த' என்பதனை இதணத்துக்கு அடையாக்கி, 'மலைப்பக்கத்துப் பிரம்பாலே அழகுபெறத் தெற்றின இதணத்தே ஏறி' என்று முதலில் உரைகூறி, பின்னர், 'இனிச் சூரலாலே பிணித்த தழல் என்றுமாம்' என்று இரண்டாமுறை கூறினார். முதலுரையில், **வலந்த** என்னும் பெயரெச்சத்தை மேல்நின்ற **இதணம்** என்னும் பெயர்ச் சொல்லோடு கூட்டியிருப்பது அமைவதன்று. யாற்றொழுக்காகச் செல்லும் இவ்வடிகளை நோக்கின், இரண்டாமுறையே பொருத்தமாகும் என்பது எவர்க்கும் புலனாகும். ஆசிரியர், 'சேணோன் இழைத்த...... இதணம் ஏறி' என்று கூறி, பின்னர், அதன்பின் நடந்த செய்தியைக் கூறுவதனால், 'வலந்த' என்பதனை மேலேயுள்ள இதணம் என்பதனோடு கூட்டுதல் அமைவுடைத்தன்று.

'கிளிகடி மரபின ஊஉழ் வாங்கி
உரவுக்கதிர் தெறூஉம் உருப்பவி ரமயத்து' *(44-45)*

என்னுமிடத்தில், **ஊழூழ் வாங்கி** என்பதை, 'உருப்பவி ரமயத்து' என்பதன் முன்கூட்டி, 'வெம்மை விளங்குகின்ற பொழுதிலே ஊழூழ் வாங்கி' என்றார். 'உருப்பவி ரமயத்து' என்பதனோடு 'அருவி (55) ஆடி (56)' என்று, முன்னர் வருவனவற்றைக் கூட்டிப் பொருள் கூறுதலே நேர். என்னையெனின், 'உரவுக்கதிர் தெறூஉம் உருப்பவி ரமயம்' எனவே, நண்பகற் போழ்து ஆயிற்று. பயிர்களில் நண்பகற்போழ்து பறவைகள் வீழ்தல் அரிதாகலும், அக்காலத்தில், கொல்லை காப்பவர் நிழலில் தங்கியிருத்தல், நீர் விளையாடுதல் முதலியவை நிகழ்த்துதல் வழக்காறாகலும் அறியத்தக்கன. இவற்றால் நச்சினார்க்கினியர், 'உருப்ப விரம யத்துக் கிளிகடி மரபின வாங்கி ஓட்டி' என்று இயைத்தது அமைவுடையதன்று என்பது எளிதின் உணரப்படும்.

*48-ஆம் அடியில்,*

**'அகலிரு வானத்து'**

என்பதற்கு, 'ஏனைப்பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே' என்று பொருள் கூறினார். இஃது, ஓராற்றாற் சிறப்புடைப் பொருளேயாயினும், ஈண்டு, இப்பொருள் வேண்டற்பாலதன்று. 'அகலமான கரிய ஆகாயத்திடத்தே' என்னும் பொருளே அமையும். 'இவ்வாறு கூறின் பொருள் சிறக்கும்' என்று கருதி, இவர் உரைகூறுமிடங்களுள் இஃது ஒன்றென்க.

'மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்
அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்' (95-96)

என்னுமிடத்து,

'அரக்கு விரித்தன்ன பிறவும் பரேரம்புழகுடன்'

என்று இயைத்துப் பொருள் கூறினார். 'அரக்கு விரித்தன்ன பரேரம்புழகு' என்று, அரக்கு விரித்திருத்தலைப் பரேரம்புழகிற்கு உவமையாக ஆசிரியர் கூறியிருப்ப, உரையாசிரியர் தம்

உளம்போனவாறு, 'அரக்கு விரித்தன்ன பிறவும்' என்று கூட்டியது சிறிதும் பொருந்தாதன்றே. ஈண்டு, அரக்கு விரித்திருப்பதற்கு உபமேயமாகும் பூ யாது? ஓர் உவமானங் கூறின் அதற்குப் பொருந்தியதொன்றனை உபமேயமாகக் கூறாது, பிறவும் என்று ஆசிரியர் கூறிவிடுவரோ? இவர் (நச்சினார்க்கினியர்) தாமும், 'பரேரம்புழகு-செம்பூவுமாம்' என்று பொருள் கூறி, 'புன முருங்கையும் என்பர்' என்று, பிறர் கூறும் பொருள் எழுதினார். அரக்கு, இப்பூக்களிரண்டனுள் ஒன்றற்கு உபமானமாதல் அறிக. இவற்றால் நச்சினார்க்கினியர், 'அரக்கு விரித்தன்ன பிறவும்' என்று கூட்டி, 'சாதிலிங்கத்தைப் பரப்பினாற் போன்ற பிற பூக்களையும்' என்று பொருள் கூறியது செய்யுள் நடைக்கும், அணியியல் முறைக்கும் சிறிதும் அமையாததேயாம் என்பது தெளிவாதல் காண்க.

**'எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்**
*தண்ணறுந் தகரம் கமழ மண்ணி*
*ஈரம் புலர விரலுளர்ப் பவிழாக்*
*காழகி லம்புகை கொளீஇ யாழிசை*
*அணிமிகு வரிஞிமி றார்ப்பத் தேங்கலந்து*
*மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்*
*மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்*
*வண்ணவண் ணத்த மலராய்பு விரைஇய*
*தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி*
*நலம்பெறு சென்னி நாமுற் மிலைச்சி'* *(107-116)*

என்னும் இவ்வடிகளுள், 'எண்ணெய் நீவிய' (107) என்பதனோடு 'நலம்பெறு சென்னி' (116) என்பதனைச் சேர்த்தும், 'சுரிவளர்' (107) என்பதனோடு 'மாயிருங் குஞ்சியின்' (112) என்பதனைக் கூட்டியும், 'நறுங்காழ்' (107) என்பதனோடு 'காழகி லம்புகை' (110) என்பதனை இயைத்தும், உரையாசிரியர் பொருள் கூறியுள்ளார். இதனால், 'எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்' என்னும் அடியில் உள்ள சொற்களை வெவ்வேறு பிரித்து, மூன்றிடங்களிற் கொண்டுகூட்டியிருப்பதை அறியலாகும். பல

அடிகளையுடைய நெடிய பாட்டொன்றனை இயற்றும் ஆசிரியர், ஓரடியிலுள்ள சொற்களுள் ஒவ்வொரு சொல்லையும் வெவ்வேறு அடிகளில் உள்ள சொற்களோடு இயைத்துப் பொருள் கூறும்படி இயற்றுவாரோ? 'எண்ணெய் நீவிய சுரிவளர்' என்பதைக் குஞ்சிக்கு அடைமொழியாகக் கொள்ளுதலே நேர். அங்கனம் கொள்ளின், அடிகளைச் சிதைத்துச் சொற்களை வெவ்வேறிடங் களிற் கூட்டுதல் நேராது.

மேற்குறித்த அடிகளுள், 'வரிமிஞிறு' *(111)* என்பதில், வரி என்பதற்கு, பாட்டு என்று பொருள் கூறினார். **'அணிமிகு வரிமிஞிறு'** என்றிருத்தலின், **வரி** என்பதற்குக் **கோடு, கீற்று** என்று பொருள் கூறுதல் தகும். 'வண்ண வண்ணத்த மலர்' *(114)* என்பதற்கு, 'பல நிறங்களையுமுடைய மலர், பல சாதிகளை யுடைய மலர்' என்று பொருள் கூறினார். வேறுவேறு **நிறங்களை யுடைய மலர்** என்பதே நேரான பொருளாகும்.

'மடமதர் மழைக்கண் இளையீர் இறந்த
கெடுதியும் உடையேன் என்றனன் அதனெதிர்
சொல்லே மாதலின் அல்லாந்து கலங்கி' *(141-143)*

என்னும் இவ்வடிகளில், அல்லாந்து என்பதனை அதனெதிர் என்பதற்கு மேலே கூட்டி, அதற்கு (அல்லாந்து என்பதற்கு) மகிழ்ந்து என்று பொருள் கூறினார். இங்ஙனம் கொண்டுகூட்டியது வேண்டற்பாலதன்று. யாற்றொழுக்காகவே சிறந்த பொருள் தருமிடத்து, இங்ஙனம் மாற்றுதல் வேண்டாததேயாம். அல்லாந்து என்பது துன்பமுற்று என்னும் பொருளதாகும். 'ஆக்கமிழந்தே மென் றல்லாவார்' (திருக்குறள். 593) என்புழி, இச்சொல் இப்பொருளில் வந்துளது காண்க. 'அவன் வினாய வினாவிற்கு யாங்கள் விடையிறாதிருந்தமையின், அவன் துன்பமுற்று நெஞ்சு கலங்கி' என்பது நேரான பொருள்.

'மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து

*தாறடு களிற்றின் வீறுபெற ஓச்சிக்*
*கல்லென் சுற்றக் கடுங்குர லவித்து'* (148-151)

என்னும் இவ்வடிகளில், 'சுரும்பு நயந்திறுத்த' என்பதை, நயந்திறுத்த சுரும்பு என்று மாற்றி, 'வண்டினத்தோட தன்னிடத்து மணத்தை விரும்பித் தங்கின சுரும்பினங்களைத் தாது விரிந்த பூக்களையுடைய தழை பரந்ததோர் கொம்பை முறித்து, தன்னைச் செலுத்துகின்ற பரிக்கோலைக் கைகடந்த மதக்களிறுபோலே வெற்றியுண்டாக ஓட்டி, கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டை நாய்களுடைய கடிய குரல்களை அடித்து மாற்றி' என்று உரை எழுதினார். 'தலைவன், ஓர பூங்கொம்பினை முறித்துத் தன்னோடு வந்த நாய்களை ஓச்சி, அவற்றின் குரலை அவித்தான்' என்பதே ஈண்டுக் கூறப்பட்ட செய்தி. பூங்கொம்பிலுள்ள வண்டுகளையும் சுரும்புகளையும் ஓச்சி வெற்றிபெறுதல் ஈண்டைக்குரிய செய்தியன்று. இவற்றால், நச்சினார்க்கினியர் கூறிய பொருள் ஈண்டு அமைதலின்றாதல் அறிக. 'வண்டுகளோடு சுரும்புகளும் இறுத்த பூங்கொம்பினை முறித்து ஓச்சி நாய்களின் கடுங்குரலை யவித்து' எனச் செம்பொருள் படுதல் காண்க. பழக்கமில்லாதவராகிய தலைவியையும் தோழியையும் கண்டு நாய்கள் குரைத்தலும், தலைவன் ஆங்கோர் கொம்பினை முறித்து ஓச்சி அவற்றின் குரலை அவித்தலும் இயல்பின் நேரக் கூடியனவே. பூவினையும், பூங்கொம்பினையும், பூமாலை யினையும் கூறுமிடத்து, வண்டுகள் தங்கியிருக்கும் என்று கூறுதல் கவிமரபு.

*'உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை*
*அண்ணல் யானை அணிமுகத் தழுத்தலிற்*
*புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்*
*புள்ளி வரிநுதல் சிதைய நில்லா*
*தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள்*
*அணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்*
*திணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய*
*துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்'*
(170-177)

என்னும் இவ்வடிகளில், 'புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து (172) நெடுவேள் அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப (175) இழிதர (172) அயர்ந்து (174) நில்லாது (173) புறங்கொடுத்த பின்னர்' எனச் சொற்களைப் பலவாறு கூட்டிப் பொருள் கூறினார். 'பகழி வாங்கி யானை அணிமுகத்து அழுத்தலின் குருதி பாய்ந்து இழிதர நில்லாது புறங்கொடுத்த பின்னர், அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்பக் கடம்பின் அரை வளைஇய மாலையிற் கைபிணி விடேஎம்' என்று நேரே அமைந்திருத்தல் காண்க. ஆசிரியர், 'குருதி இழிதர நில்லாது புறங்கொடுத்த பின்னர்', என்று முதலில் ஒரு செய்தியைக் கூறி, அதன்பின் நடந்த செயலாக, ஆடுகளங் கடுப்பத் துணையறை மாலையிற் கைபிணி விடாமல் இருந்த தனைக் கூறியிருப்ப, உரையாசிரியர் 'ஆடுகளம் கடுப்ப' என்பதனை முதலிலே கொண்டு கூட்டியது தகுதியன்றாதல் அறிக. 'மகளிராடுங் களம், கடப்பமாலை வளைத்தாற்போல, மிகவும் கடப்ப மாலை வளைத்த என்பாரும்உளர்' என்று அவர்தாமே எழுதியிருத்தல் அறியத்தக்கது. 'தலைவி முதலாயினோர் யானை யைக் கண்டு வெருவி, ஆங்கு வந்த தலைவன்பால் விரைந்து அடைந்து நடுங்குகையில், அவன் அம்பெய்து யானையைத் துரத்த, அவர்கள் பின்னரும் அச்சம் நீங்காமையின் ஒருவர் கையை ஒருவர் பிடித்த பிடி விடாமல், என்பதே இவ்வடிகளில் ஆசிரியர் கூறியுள்ள செய்தி. இனி,

'துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத்திரை
அடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
அஞ்சி லோதி அசையல் யாவதும்
அஞ்ச லோம்புநின் அணிநலம் நுகர்கென
மாசறு சுடர்நுதல் நீவி நீடுநினைந்
தென்முகம் நோக்கி நக்கனன்'. *(177-183)*

என்னும் பகுதிக்கு,

'மாலைபோலே கைகோத்தலை விடேமாய் யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே, அதனிடத்துப்

பரக்கின்ற திரைமோதி இடிகரையினின்ற வாழைபோலே கால் தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அது கண்டு பெரிய தகுதிப் பாடுடையவன், ''அழகிய சிலவான மயிரினையுடையாய், இங்ஙனம் கால் தளர்ந்து ஒழுகாதே'' என்று எடுத்து, ''யான், நின் அழகிய நலத்தை நுகர்வேன்; நின்னை நீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப் பரிகரி'' எனச் சொல்லி, குற்றமற்ற ஒளியினை யுடைய நுதலைத் துடைத்து, நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டும் என்று நினைந்து, என் முகத்தைப் பார்த்துச் சிரித்தான்' என்று பொருள் கூறியுள்ளார்.

யானை அகன்றபின்னர்த் தலைவி முதலாயினோர், கைகோத்தலை விடாமல், **ஒருங்கே ஆற்றுவெள்ளத்தில் ஒழுகியது** ஏன்? 'வாழையின் நடுங்க' என்பதற்கு 'வாழைபோலே கால் தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக' என்று பொருளெழுதி, அதற்கேற்ப, 'இங்ஙனம் கால் தளர்ந்து ஒழுகாதே என்று **எடுத்து'** என்று, **எடுத்து** என்பதைத் தந்துரைத்துள்ளார். ஆசிரியர் கருத்து இதுவேயாயின், வெள்ளத்தினின்று எடுத்து விடுத்ததைக் கூறாத தொழிவரோ? தலைவி முதலாயினோர் வெள்ளப்பெருக்கில் ஒழுகினராயின், தலைவன் அவரை அதனின்று எடுத்துவிடானாய், 'அஞ்சிலோதி, அசையல்; அஞ்சல் ஓம்பு. யான், நின் நுகர்வேன்' என்று கூறி நுதல் நீவி, தோழியை நோக்கி நகுதல் செய்வானோ? தோழியும் வெள்ளத்தில் ஒழுகும்போழ்து, தலைவன் அவளை எடுக்காமல், **நீடு நினைந்து** அவள் முகத்தை நோக்கி **நகுதல்** யாங்கனம் நிகழும்? இவற்றால், இப்பொருள் ஈண்டைக்கு இயையாமை தெளிவாகும். தலைவி முதலாயினோர் யானையை வெருவியோடிய நடுக்கத்தினால், அது நீங்கிப் போயினபின்னும், ஒருவர்கையை ஒருவர் விடாமல், புதுவெள்ளம் பாய்தலினால் வலிய அலைகள் மோதும் இடிகரையில் நின்ற வாழை போன்று நடுங்கிக் கொண்டிருப்ப, தலைவன், தலைவியின் முகம் நோக்கி, 'நீ சிறிதும் அஞ்சாதே; யான் நின்நலனை நுகர்வேன்' என்று நுதல் தடவித் தேற்றிக்கூறினான் என்பதே நேரான பொருள். **'நுரையுடைக் கலுழி'** என்றதனால், புதுவெள்ளம் என்பது அறியப்படும். இங்கனம் செம்பொருள் படுவதாகவும், ஆசிரியர்

நச்சினார்க்கினியர், **புனல்தரு புணர்ச்சி**யும் ஈண்டுக் கூறல் வேண்டும் என்று உட்கொண்டுபோலும், மேற்குறித்தவாறு பொருள் கூறினராவர். முன்னர், 'அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி' *(212)* என்று ஆசிரியர் கூறுதலால், களிறுதரு புணர்ச்சியே நிகழ்ந்த செய்தி என்பது நன்கு தெளிவாதல் காண்க.

மேற்காட்டியனவெல்லாம் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உணராமற் பிழைபட எழுதியன அல்ல; அவர், 'இங்கனம் பொருள்கூறின் சிறக்கும்' என்று கருதிச் செய்த மாற்றமேயாகும். சிலவிடங்களில், கொண்டு கூட்டி உரையெழுதுவதனால் உரை சிறந்து காட்டுதலும் உண்டு. அவற்றுள் ஒன்றனை யீண்டுத் தருகின்றேன் :

'காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்
நீதுயி லெழினும் நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோள் இன்றுயில் என்றும்
பெறாஅன் பெயரினும் முனிய லுறாஅன்
இளமையின் இகந்தன்றும் இலனே வளமையின்
தன்னிலை தீர்ந்தன்றும் இலனே' *(240-245)*

என்னுமிடத்து, **என்றும்** *(242)* என்பதனை, 'வளமையின்' *(244)* 'என்றும்' *(242)* 'தன்னிலை தீர்ந்தன்றும் இலன்' *(245)* என்று கூட்டி, 'நற்குணங்களைத் திரித்தற்குரிய செல்வச் செருக்கான் **எந்நாளும்** தன் குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியதும் இலன்' என்று பொருள் கூறினார். ஈண்டும், கொண்டுகூட்டிப் பொருள் கூறுதல் வேண்டுவதன்றாயினும், இவ்வாறு கூறிய பொருள் சிறந்துளதாதல் அறிக.

★★★

## குறிஞ்சிக் கலியுரை

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர் குறிஞ்சிக்கலிக்கு எழுதியிருக்கும் உரையையுஞ் சிறிது ஆராய்தும்; குறிஞ்சிக்கலி இரண்டாம்பாட்டில்,

> 'இருளிடை என்னாய்நீ இரவஞ்சாய் வந்தக்கால்
> பொருளில்லா னிளமைபோற் புல்லென்றாள் வைகறை
> அருள்வல்லா னாக்கம்போல் அணிபெறும் அவ்வணி
> **தெருளாமற் காப்பதோர் திற**னுண்டேல்
> உரைத்தைக்காண்'

என்னும் இரண்டாந்தாழிசையில், 'தெருளாமற்...திறன்' என்னும் பகுதிக்கு, 'பிறரான் வந்த அழகென்று **புறஞ்சொல்லுதலைப் போக்குவதொரு பொருள்'** என்று உரை கூறியுள்ளார். ஈண்டு, **'தெருளாமல்'** என்னுஞ் சொற்கு, **புறஞ்சொல்லுதலை** என்று எழுதியிருக்கும் பொருள் அமைவுடையதாகத் தோன்றவில்லை. **'தெருளாமல்'** என்பது பிறர் **தெளியாமல்,** அஃதாவது அறிவுறாமல் என்னும் பொருளதாகும். 'நீ வந்தக்கால், புல்லென்ற தலைவி அழகுபெறும்; அவ்வழகு பிறரான் வந்ததென்று அயலார் **தெளிவுறாதவாறு** காப்பதொரு திறனுண்டேல் சொல்லிக்காண்' என்பது இத்தாழிசையின் பொருளாதல் அறிக. இவற்றால், 'தெருளாமல்' என்பதற்கு எழுதப்பட்டுள்ள உரை நேரிதன்மை அறியப்படும். இனி இப்பாட்டின் மூன்றாந் தாழிசையில்,

> 'மறந்திருந்தா ரென்னாய்நீ மலையிடை வந்தக்கால்'

என்னும் முதலடியில், 'மறந்திருந்தார் என்னாய்' என்னும் பகுதிக்கு, 'கொலைத்தொழிலிற் குறைவின்றித் திருந்திய கானவர்' என்று உரை எழுதப்பட்டுளது. இதில், 'திருந்தார்' என்னும் எதிர்மறைச் சொற்கு, திருந்திய கானவர் என்று உரை எழுதப் பட்டுளது. இதில், **'திருந்தார்'** என்னும் எதிர்மறைச் சொற்கு, **திருந்திய கானவர்** என்னும் உடன்பாட்டுப் பொருள்

காண்கின்றது[1]. இஃது அமைவுடையதாதல் இல்லை. மறத்திற்றிருந்தாதவர் எனின் அமையும்.

6-ஆம் பாட்டில்,

'நன்மலை நாடன்,
மறந்தான் மறக்கினி யெல்லா நமக்குச்
சிறந்தன நாம்நற் கறிந்தன மாயின்
அவன்திறம், கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாநாம்
வள்ளை யகவுவம் வா

என்னும் அடிகளை,

'நன்மலை நாடன் மறந்தான்; இனி மறக்க. எல்லா, ஆயின், நாம் நமக்குச் சிறந்தன நற்கறிந்தனம்; கொல்யானைக் கேட்டால் வெதிர்நெற் குறுவாம் நாம் அவன்திறம் வள்ளையகவுவம் வா' என்று மாற்றி,

'நல்ல மலைநாட்டை யுடையவன், நாம் வருந்த நம்மை மறந்தான்; இனி அவன் மறப்பானாக. இகுளையே, **ஆராய்ந்து பார்க்கின்,** நாம் நமக்கு அவன் சிறந்தபடியை **மீளவும்** அறிந்தேம். இனிக் கொன்ற யானையின் கொம்பாலே மூங்கில் நெல்லைக் குறுதற்கு நாம் அவன் செய்த கொடுமையின் கூற்றை வள்ளைப் பாட்டாகப் பாடுவோமாக, வா' என்று உரை எழுதியுள்ளார்.

இவ்வுரையில், **ஆயின்** என்பதற்கும், **சிறந்தன நற்கறிந்தனம்**

---

1. முதற்றாழிசையின் முதலடியில், 'ஆரிடை என்னாய்நீ அரவஞ்சாய் வந்தக்கால்' என்றும், இரண்டாந்தாழிசையின் முதலடியில், 'இருளிடை என்னாய்நீ இரவஞ்சாய் வந்தக்கால்' என்றும் வழியின் அருமையைக் கூறியிருத்தலின், மூன்றாந் தாழிசையின் முதலடியிலும், வழியினருமை யைக் கூறுதலே முறையாகலின், '**மறந்திருந்தா றென்றாய்நீ** மலையிடை வந்தக் கால்' என்று பாடம் இருந்திருக்கலாம் போலும் என ஐயம் உண்டாகின்றது. மறம் திருந்து ஆறு - கொடுமைமிக்க வழி என்க, கொடுமை, கானவர் கொடுமை

என்பதற்கும் எழுதியிருக்கும் உரை ஈண்டைக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. 'நாடன் மறந்தான்; மறப் பானாக. இனி, தோழீ, நமக்குச் **சிறந்த செயல்களை** நாம் நன்றாக அறிந்தனமாயின், அவன் திறங்களை வள்ளைப்பாட்டாகப் பாடுவாம், வா' என்று பொருள் கூறுதலே அமைவுடையதாதல் அறிக.

இப்பாட்டில்,

'என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்
தாழிருங் கூந்தலென் தோழியைக் கைகவியாச்
சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர
ஞாயிற்று முன்னர் இருள்போல் மாய்ந்ததென் '
ஆயிழை மேனிப் பசப்பு'

என்னும் சுரிதகத்திற்கு உரையெழுதி, இறுதியில்,

'என்று, யாம் அவ்வாறு பாடவும் அவன் சிறுபுறஞ் **சாராமையின்**, நம்மேனியிற் பசப்பு **மாயாமல் நின்றது** எனப் பிரிந்தவழிக் கலங்கினாள்' என்று குறித்துள்ளார். இக்குறிப்பிற்குப் பாட்டில் யாதொன்றும் காணப்படவில்லை. ஆயின், இப்பாட்டு,

இது, முன்பு பெற்றவழி மலிந்ததனைப் பின்பு பிரிந்த வழிக் கலங்கிக் கூறியது. என்னை? தலைவன், அருமை செய் தயர்த்தவழித் தோழி தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தலைவனை இயற்பழிப்பத், தலைவி இயற்பட மொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைவன் முன்னொருகால் வந்து சிறுபுறஞ் சாரத், தான் ஆற்றினமை குறித்துப் பின்னொருகால் அவ்வாறு பாட, அவன் சிறுபுறஞ் சாராமையிற் கலங்கி நெஞ்சொடு கூறியதாகலின்' என்றதனால், 'முன்பு பெற்றவழி மலிந்ததனைப் பின்பு பிரிந்த வழிக் கலங்கிக் கூறிய' துறை யதாகலின், அதற்கேற்ப இவ்வாறு குறிப்பெழுதினாராவர் எனின், இப்பாட்டின் பொருள், பெற்றவழி மலிந்ததாகவே காணுதலின், 'பிரிந்தவழிக் கலங்கியது' என்றல் பொருந்தாது என்க. அன்றியும்,

இத்துறையும் நச்சினார்க்கினியர் எழுதியதெனவே தோன்றுகின்றது.[1] நிற்க.

---

1. தொகைநூல்களிலுள்ள பாட்டுக்களுக்கெல்லாம் துறை எழுதினோர் அவ்வந் நூல்களைத் தொகுத்தவரே யாகல் வேண்டுமன்றி, அவ்வப் பாட்டுக்களை இயற்றினோரல்லர். 'தத்தம் புதுநூல்வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின், அவர் சூத்தரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்றுணர்க' (தொல். புறத்திணை: சூ. 35) என்று நச்சினார்க்கினியர் எழுதியிருப்பதனால், துறை எழுதினோர் பாட்டுக்களை இயற்றிய ஆசிரியரல்லர் என்பதும், பிறரேயாவர் என்பதும் வலியுறும்; உரையில்லாத பாட்டுக்களுக்கும் துறை எழுதப்பட்டிருத்தலின், உரையாசிரியர் எழுதியதன்று என்பது துணிபு. அன்றியும், பழைய உரையில்லாத நற்றிணை முதலியவற்றிற்கும் துறை எழுதப்பட்டிருப்பதும் இதனை வலியுறுத்தும். துறைகள் ஆசிரியர்களாலும் உரையாசிரியர்களாலும் எழுதப்பட்டனவல்ல எனத் தெரிதலின், அவை அந்நூல் தொகுத்தாராலேயே எழுதப்பட்டிருத்தல் வேண்டுமன்றே? அதனானே, நச்சினார்க்கினியர் தாம் எழுதிய தொல்காப்பியப் பொருளதிகார உரையில், புறநானூறு முதலியவற்றிலுள்ள பாட்டுக்களின் துறைகளை விடுத்து, அப்பாட்டுக்களை வேறு வேறு துறைகளுக்கு உதாரணமாகக் காட்டி எழுதினர். அவர், அந்நூல்களுக்கெல்லாம் (புறநானூறு முதலியவற்றிற்கு) உரை எழுத நேராமையின், அந்நூல்களில் உள்ள எல்லாப் பாட்டுக்களுக்கும் தமது கருத்திற்கேற்பவே துறை எழுதுதல் இயலாதாயிற்று. அவ்வாறன்றி, இந்நூலுக்கு (கலித்தொகைக்கு) அவர்தாமே உரை எழுதினாராகலின், தமது கருத்திற்கேற்பவே துறைகளைத் திருத்தி எழுதினாராவர். நற்றிணை முதலிய தொகை நூல்களின் பாட்டுக்களுக்குத் துறை சுருக்கமாகவே எழுதப்பட்டிருக்கின்றது; இலக்கண விதியும் ஒரே வழியன்றிப் பலவிடங்களில் எழுதப்படவில்லை. இக்கலித்தொகையின் பாட்டுக்களுக்குத் துறை மிக்க விரிவாயெழுதப் பட்டிருப்பதை மேல்நோக்காகக் காண்போரும் அறிவர். உதாரணமாக, இக்குறிஞ்சிக்கலியின் 10, 19, 29-ஆம் பாட்டுக்களின் துறையை நோக்குக; **நெய்தற்கலியின் 25-ஆம் பாட்டின் துறையையும்** காண்க. இலக்கணவிதி எழுதப்பட்டிருப்பதை இக்குறிஞ்சிக்கலியின் 1, 3, 10, 19, 20, 28 முதலிய பாட்டுக்களின் துறைகளிலும் காணலாகும். இவற்றால், இந்நூலின் பாட்டுக்களுக்குத் துறைகள் ஆசிரியர் நச்சினார்க்கினியராலேயே புதியனவாக எழுதப்பட்டனவாகும் என்பது போதரும். ஆயினும், முன்னரே எழுதப் பட்டிருந்த துறைகளுள், நமது கருத்திற்கு இயைந்தனவற்றை மாற்றாது அங்ஙனமே விடுத்திருக்கலாம்; மாற்றுமிடத்தில் காரணம் கூறவேண்டுதலின் விரிவாக எழுதவேண்டுவதாயிற்று எனக் கொள்க. இக்கூறியவற்றால், கலித்தொகையில் பல பாட்டுக்களின் துறை ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியதே என்பது தெளிவாகும். அவர் தொல்காப்பியத் துறைகளுக்கு இலக்கியங்காட்ட எண்ணி, இப்பாட்டின் உரையிறுதியில் பொருள் வேறுபடக் கூறியதற்கேற்பத் துறையையும் மாற்றி எழுதவேண்டுவதாயிற்று எனக்கொள்க.

7-ஆம் பாட்டில்,

'மைபடு சென்னிப் பயமலை நாடனை'

என்னும் அடிக்கு, '**மேகம் உண்டாகின்ற** தலைமையினை யுடைய பயனையுடைத்தாகிய மலைநாட்டை யுடையானை' என்று உரை எழுதியிருக்கின்றார். ஈண்டு, '**மைபடு** சென்னி' என்பதற்கு '**முகில்கள் சேர்கின்ற** உச்சியையுடைய' என்று பொருள் கூறுதல் சிறக்கும். சென்னி-தலை; உச்சி. 'மைபடி (டு) குடுமிய குலவரை' (பரிபா. 15) என்பதற்கு, 'மேகங்கள் படியுஞ் சிகரத்தையுடையவாகிய குலவரைகள்' என்று உரை எழுதி யிருத்தல் காண்க.

8-ஆம் பாட்டில்,

'கூருநோய் சிறப்பவும் நீசெய்த வருளின்மை
சேரியும் மறைத்தாளென் றோழி அதுகேட்டாங்
கோரும்நீ நிலையலை எனக்கூறல் தானாணி'

என்னும் தாழிசையில், 'அது கேட்டாங்கோரும்....நாணி' என்பதற்கு, 'அவ்வருளின்மையைக் கேட்கும்பொழுதே நீ நிலைபேறுடையையல்லை என்று **யான் பிறர்க்குக் கூறுதலைத்** தான் நாணிக்காண்' என்று உரை எழுதி, 'ஓரும் அசை' என்றும் குறித்துள்ளார்.

முதல் தாழிசையில்,

'**என்னையும் மறைத்தா**ளென் றோழி அதுகேட்டு
நின்னை**யான் பிறர்முன்னர்ப் பழிகூறல்** தானாணி'

என்றும்,

இரண்டாந் தாழிசையில்,

'**சேரியும் மறைத்தா**ளென் றோழி அதுகேட்டாங்
கோரும்நீ நிலையலை எனக்கூறல் தானாணி'

என்றும்,

மூன்றாந் தாழிசையில்,

'**ஆயமும் மறைத்தா**ளென் றோழி அதுகேட்டு
மாயநின் பண்பின்மை **பிறர்கூறல்** தானாணி'

என்றும், தலைவன் செய்த அருளின்மையைத் தோழிக்கும், சேரிக்கும், ஆயத்தாருக்கும் தெரியாமல் தலைவி மறைத்தாள் என்று நூலாசிரியர் கூறியுள்ளார். அவ்வாறு மறைத்ததற்குக் காரணமும் ஆங்காங்கே கூறப்பட்டுளது. ஆகலின், மேற்குறித்த இரண்டாந்தாழிசையில், 'கேட்குமப் பொழுதே நீ நிலைபேறுடையயல்லையென்று **யான்** பிறர்க்குக் **கூறுதலைத்** தான் நாணிக்காண்' என்று எழுதியிருப்பது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. 'அருளின்மையைக் கேட்ட சேரியோர் பிறர்க்குக் கூறுவராகலின், அதற்கு நாணினள்' என்பது பொருத்தமேயன்றி, தோழி பிறர்க்குக் கூறுவாள் என்று நாணி, சேரியை மறைத்தாள் என்பது பொருந்துவதன்று.

'என்னையும் மறைத்தாளென் றோழி அதுகேட்டு
நீன்னை**யான்** பிறர்முன்னர்ப் பழிகூறல் தானாணி'

என்று, முதல்தாழிசையில் கூறியிருத்தலைக் காண்க.

இவற்றால், அருளின்மையைக் கேட்ட சேரியோர், பழி கூறுவதற்கு நாணினள் என்று கோடலே அமைவுடையதாகும். ஆகலின், 'யான் பிறர்க்குக் கூறுதலைத் தான் நாணிக்காண்' என்று எழுதிய வுரை பொருந்தாமை காண்க. **கேட்டாங் கோரும்** என்பதில், ஆங்கு என்னும் சொல்லை அசைநிலையாக்கி, **கேட்டோரும்** (கேட்ட சேரியோர்) என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். 'பெறலருங் **குரைத்தே**', 'என்**றிசி** னோரே' என்பவை

களில், சொல்லின் இடையே அசைநிலை அமைந்திருத்தலை யறிக. இனி ஆங்கு, ஓரும் என்பன இரண்டனையும் அசைநிலை யாக்கிப் பொருள் கூறுதலும் ஆம். எவ்வாறாயினும் இத் தாழிசையில், தோழி பிறர்க்குக் கூறுவாள் என்று தலைவி நாணினாளாக நச்சினார்க்கினியர் பொருள் கூறியது அமையா தென்க.

10-ஆம் பாட்டின் தரவின் உரையின்கீழ்,

'பூப் புலம்ப வேட்டம் போகிய தும்பி, தலைவி தனித்திருக்க முன் வரைந்துகொண்ட மனையிடத்தே வேட்கை சென்று போன தலைவனாகவும், அத்தும்பி வருத்தத்தை நிகழ்த்துவனவாய்த் தம்மிற் பகைத்த புலியையும் யானையையும் தனக்குத் தேனைத் தரும் வேங்கைப்பூவாகக் கருதிச் சுழல்கின்ற தன்மை, தம்மேல் அன்பின்றியிருக்கவும் தனக்கு இன்பமுளதாகக் கருதிப் பகற்குறியும் இரவுக்குறியும் பெறுதற்கு மறுகுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமம் கொள்க' என்று எழுதி, **'பின்முறையாக்கிய** என்ற சூத்திரத்து, **தொன்முறை மனைவி** என்றதனால், தொன்முறை மனைவி உண்மையும் உணர்க' என்று விதியும் குறித்துள்ளார்.

இவற்றால், தலைவன் களவில் ஒழுகுங்காலத்திலேயே, முன்வரைந்து கொண்ட மனைவியை யுடையன் எனத் தெரி கின்றதன்றே! அக்காலத்தில் (களவுக்காலத்தில்) தொன்முறை மனைவியை யுடையனாயிருக்கும் வழக்குப் பண்டைச் செய்யுட் களில் அறியப்படுதல் இன்று. ஆயின், 'பின்முறையாக்கிய' என்னும் சூத்திரத்தான், தொன்முறை மனைவி உண்டென்பது அறியப்படுமால் எனின், அது கற்பியற் சூத்திரமாகலின், களவுக் காலத்திலேயே தலைவன் தொன்முறை மனைவியை உடையன் என்பது அதனாற் பெறப்படாதென்க. ஆயின்,

'வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யானைப் புகர்முகங் குறுகியும்
…………… மறிதரும்'

என்பதன் உள்ளுறைபொருள்தான் யாதோ எனின், இத்தரவு அல்லகுறிப்பட்டு மீண்ட தலைவனை நோக்கித் தோழி கூறிய தாகலின், தலைவன் அல்ல குறிப்பட்டு மறிதந்ததையே அவள் உள்ளுறையாகக் கூறினாள் என்க. தும்பி, வேங்கைச்சினையென்று கருதிப் புலியை முற்றியும், யானையின் முகத்தைக் குறுகியும் மறிதரல் போன்று, தலைவன் உண்மையில் நிகழ்ந்த குறி என்று கருதி, அல்லல்குறிப்பட்டு மறி தந்தான் எனக்கொள்க.

*11*-ஆம் பாட்டில்,

'சொல்லுஞ்சொல் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்'

என்னும் அடியில், **'பன்மாணுஞ்** சொல் கேட்டீ' என்று இயைத்து, **'பல காரியங்களும்** மாட்சிமைப்படுஞ் சொல்லைக் கேட்பாயாக' என்று பொருள் எழுதியுள்ளார். ஈண்டு, **'பல தடவையும்** அவன் சொல்லுஞ் சொல்லைக் கேட்பாயாக' என்று பொருள் கூறுதலே நேர். **பன்மாண்-பல தடவை.** இச்சொல் இப்பொருளில் வந்திருக்கும் இடங்களை, இந்நூற்பதிப்பாசிரியர் **இ.வை. அனந்தராமஐயரவர்கள்** எடுத்தெழுதியிருத்தலை ஆண்டு நோக்கி அறிந்துகொள்க.

*13*-ஆம் பாட்டில்,

**அதனால்** என்னும் தனிச்சொல்லை அசை என்று குறித்தார். அஃது, **'அவ்வாறாதலால்'** என்று காரணப் பொருளில் வந்துளது அறிக.

*16*-ஆம் பாட்டில்,

'சோர்ந்துவீழ் கதுப்பினாள்'

என்பதற்கு, 'நீ வரைந்துகோடலைக் குலைந்து, ஆயத்தார் விரும்புகின்ற மயிரினை யுடையாள்' என்று உரை எழுதி, பின்னர்,

'மாலை முதலியன பாரத்தாற் குலைந்து வீழ்கின்ற கதுப்புமாம்' என்று குறித்துள்ளார். ஈண்டு, 'சோர்ந்து வீழ்' என்பதற்கு, முதலில் எழுதியுள்ள உரை பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இப்பாட்டின் உரைமுடிவில்,

'ஏவன்மரபி னேனோரும்'

என்னுஞ் சூத்திரத்தில், நால்வகை வருணத்தாரும் களவொழுக் கத்திற்கு உரியர் என்றலின் அந்தணன் களவொழுக்கம் கூறினார்' என்றார். இங்குக் குறித்த '**ஏவன் மரபின்**'[1] என்னுஞ் சூத்திரத் திற்கு இவர் எழுதியிருக்கும் உரை ஒரு சிறிதும் பொருந்தாது என்பதை இளமாணாக்கரும் எளிதின் அறிவர். ஆகலின், ஈண்டு அதனை எழுதாது விடுக்கின்றேன்.

20-ஆம் பாட்டில்,

'நல்லாய்கேள்'

என்பதனை, தலைவன் தலைவியை விளித்துக் கூறியதாகக் கொள்ளாமல், தலைவன் தன்னுள்ளே கூறியதாகக் கொண்டு உரை எழுதியிருப்பது அமைதியன்று. மேல், தலைவியிடத்துப் பலவற்றைக் கூறுந்தலைவன், அவளை விளித்துக் கூறுதலே முறைமையாதல் அறிக.

26-ஆம் பாட்டில்,

'செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ
ஐவா யரவி னிடைப்பட்டு நைவாரா
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று'

என்னும் அடிகளை, 'ஐவாயரவினிடைப்பட்டு நைவாரா செய்வ தறிகல்லேன் யாது செய்வேன்கொலோ, மையின்மதியின்.........

1. இச்சூத்திரத்திற்கு, 'ஏவல்மரபிற்குரிய பிறரும் கைக்கிளை பெருந்திணை களுக்குத் தலைவராதற்குரியர் என்பதுவே பொருளாதல் அறிக.

கண்டன்று' என்று மாற்றி, 'ஐந்து வாயினையுடைய பாம்பினது பார்வையிலே அகப்பட்டு வருத்தம் வந்து, மேற்செய்யுங் காரியம் அறிகல்லேன்; இனி யாது செய்வேன் கொல்? என நெஞ்சொடு கிளந்து, மறுவில்லாத மதிபோல விளங்கும் முகத்தினையுடைய மகளிரை வலிதிற் புணர்தலும் ஒரு மணமென நூல் கண்டது எனத் துணிந்து கூறினான்' என்று பொருளெழுதி, **'ஐவாயர வென்றது தலைவியை'** என்று குறித்துள்ளார். இது பொருந்து வதன்று. ஈண்டு, 'ஐவாயரவி......முகத்தார்' என்னும் பகுதி, 'வியப்பினைத் தரும் வாயினையுடைய அரவினிடைப்பட்டு நையாததும், மறுவில்லாததுமாகிய மதிபோன்ற முகத்தினை யுடைய மகளிரை' என்று செம்பொருள் படுதல் காண்க. இனி, 'ஐவாய்' என்பதற்கு, அகலமாகிய வாய் எனினும் அமையும். இதில், மதிக்கும் முகத்திற்கும் கூறியுள்ள வேற்றுமை மிக்க நயமுடையதாதல் அறியத்தக்கது.

இன்னும், இக்குறிஞ்சிக்கலியின் 12-ஆம் பாட்டின் தரவிலும், 25-ஆம் பாட்டின் சுரிதகத்திலும் சொற்களைத் தம் உளம் போனவாறு கூட்டிப் பொருள் எழுதியுள்ளார். அவற்றையும் வேறு சிலவற்றையும் விரிவஞ்சி ஈண்டு எழுதாது விடுத்துளேன். அவற்றை நோக்கியறிந்து கொள்க.

### அகநானூற்றின் உரை

அகநானூற்றின் உரையாசிரியர், அந்நூல் 2-ஆம் பாட்டின் உரையிறுதியில், 'நெடுவெண் டிங்கள் என்றார், ஆதித்தனுக்கு மேலாகலான்' என்று எழுதியுள்ளார். இக்கொள்கை, [1]விஷ்ணு புராணத்துள்ளுங் காணப்படுகின்றது. இதனைப் பின்பற்றிப் பாடினோரும் பலர் உளர்.[2] ஆயினும், இக்கொள்கை தவறானதே என்பது இக்காலத்தில் அறிவுநூல் கற்றோர் அனைவரும் அறிவர். **'ஸூர்ய ஸித்தாந்தம்** என்னும் நூலில்,

'மந்தாமரேஜ்ய பூபுத்ர
ஸூர்ய **ஶீ**க்ரேந்துஜேந்தவ :

பரிப்ரமந்த்யதோ஽ தஸ்தா:
... ... ... ...

(பூகோலாத்யாயம். 31)

என்று கூறப்பட்டுளது. அஃதாவது, மந்த-சனி, அமரேஜ்ய-குரு, பூபுத்ர-செவ்வாய், ஸூர்ய-சூரியன், ஶுக்ர-சுக்கிரன், இந்துஜ-புதன், இந்தவ:-சந்திரன் (ஆகியவர்கள்), அதோ அதஸ்தா:-ஒருவரினும் ஒருவர் கீழிடத்தவராய், பரிப்ரமந்தி-சுழன்று திரிகின்றனர் என்பதாம்.

இதனால், எல்லாக் கிரகங்களுக்கும் மேலாகச் சனியும், அவனுக்குக் கீழ் வியாழனும், அவனுக்குக் கீழ்ச் செவ்வாயும், அவனுக்குக் கீழ்ச் சூரியனும், அவனுக்குக்கீழ்ச் சுக்கிரனும் அமைந்திருக்கின்றனர் என அறியலாகும். ஆகவே, 'நெடுவெண் டிங்கள் என்றார், ஆதித்தனுக்கு மேலாகலான்' என்று குறிப்புரை காரர் எழுதியது புராணக்கொள்கையே யாகும் என அறிக.

★ ★ ★

---

1. 'பூமேர் யோஜந லக்ஷே து ஸௌரம் மைத்ரேய மண்டலம்
லக்ஷாத் திவாகரஸ்யாபி மண்டலம் ஶஶிந: ஸ்திகம்.'
(அம்ஶம். 2. அத். 7: சு. 5)

2. 'திங்க ளாதவற் கிரட்டியோ சனையுறச் சிறந்திடும் அரக்காம்பல்.
(விவேக சிந்தாமணி. 56)

## நற்றிணை உரை

நற்றிணையை ஆராய்ந்து உண்மைப்பாடங் கண்டறிந்து, அதற்குச் சிறந்ததோருரை எழுதிப் பதிப்பித்த பின்னத்தூர், திரு. **அ. நாராயணசாமி** ஐயரவர்களின் புலமையும், உரையெழுதும் ஆற்றலும் பாராட்டத்தக்கனவே. ஆயினும் அந்நூலிற் சிலவிடங்களில் பிழையான பாடமும் அமைதியில்லாத உரையும் காண்கின்றன. பழைய செய்யுட்களை ஆராய்தலிலும், அவற்றிற்கு உரையெழுதுதலிலும், ஒரே வழிச் சில தவறு நேர்தல் இயல்பேயாகும். இனி, அந்நூலுரையிற் காணும் பொருந்தாவுரைகளுள் ஒன்றனை ஈண்டுக் குறிக்கின்றேன்.

59-ஆம் பாட்டில்,

'வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து
நம்வயிற் புரிந்த கொள்கையொடு நெஞ்சத்
துள்ளின ளுறைவோ ளூரே முல்லை
நுண்முகை யவிழ்ந்த புறவிற்
பொறைதலை மணந்தன் றுயவுமா ரினியே'

என்னும் அடிகளுள் ஈற்றிரண்டடிகளுக்கு, 'நுண்ணிய அரும்பு மலர்ந்த புறவின் கண்ணதாகிய ஊரிலிருந்தாலும் அவளுள்ளம் இதுகாறும் பொறுமையுடையதா யிராநின்றது. இன்று செல்லாவிடில் நனி வருந்தா நிற்கும்' என்று பொருளெழுதியுள்ளார். இவற்றுள், 'புறவின்கண்ணதாகிய வூரிலிருந்தாலும் அவளுள்ளம் இதுகாறும் பொறுமையுடையதா யிராநின்றது' என்னும் உரை பொருந்துவதாகத் தோன்றவில்லை. 'புறவிற் பொறை தலை மணந்தன்று' என்பதற்கு, '(அவ்வூர்) காட்டின்கண் பொற்றைகள் கூடியதாயுளது' என்னும் பொருளே நேரானது. 'அறையும் **பொறையும் மணந்த** தலைய' (புறம். 118), **'குன்றுதலை மணந்த'** (பதிற். 31) என்பன காண்க.

★★★

## குறுந்தொகை யுரை

குறுந்தொகைப் பதிப்பில் பற்பல செய்யுட்களில் தவறான பாடங்களும் பிழையான உரைகளும் காண்கின்றன. ஆகலின் அந்நூலின் உரையை ஆராயாது விடுக்கின்றேன். அதனையும், கபிலர் இயற்றியுள்ள ஏனை நூல்களின் உரைகளையும் நோக்கி உண்மை யறிந்துகொள்க.

★★★

# பிற்சேர்பு

## III

## கபிலர் பாட்டுக்கள்

### காரி

1. கடல்கொளப் படாஅ துடலுந ருக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
அழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
யரிவை தோளள வல்லதை
நினதென இலைநீ பெருமிதத் தையே. (புறம். 122)

திணை - பாடாண்
துறை - இயன்மொழி

2. நாட்கள் உண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கும் எளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே. (புறம். 123)

திணை - பாடாண்
துறை - இயன்மொழி

3. நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே. (புறம். 124)

திணை - பாடாண்
துறை - இயன்மொழி.

4. ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (புறம். 121)

திணை - பொதுவியல்
துறை - பொருண்மொழிக் காஞ்சி.

5. யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய [1]செறிகோட் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறும் அடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே. (குறுந். 198)

என்பது, தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.

---

1. செறிகோற்

6. இரண்டறி கள்விநங் காத லோளே
முரண்கொள் துப்பிற் செல்வேன் மலையன்
முள்ளூர்க் கானம் நண்ணுற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே. (குறுந். 312)

என்பது, இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்கு வரைவிடை வேட்பக் கூறியது.

7. மலையன் மாவூர்ந்து போகிப் புலையன்
பெருந்துடி கறங்கப் பிறபுலம் புக்கவ
ரருங்குறும் பெருக்கி அயாவுயிர்த் தாஅங்
குய்த்தன்று மன்னே நெஞ்சே செவ்வேர்ச்
சினைதொறுந் தூங்கும் பயங்கெழு பலவின்
சுளையுடை முன்றின் மனையோள் கங்குல்
ஒலிவெள் ளருவி யொலியிற் றுஞ்சு
மூரலஞ் சேரிச் சீறூர் வல்லோன்
வாளரம் பொருத கோணே ரெல்வளை
யகன்றொடி செறித்த முன்கை யொண்ணுதல்
திதலை யல்குற் குறுமகள்
குவளை யுண்கண் மகிழ்மட நோக்கே. (நற். 77)

இது, பின்னின்ற தலைவன் நெஞ்சிற் குரைத்தது.

8. நீர்பெயர்ந்து மாறிய செறிசேற் றள்ளல்
நெய்த்தலைக் கொழுமீ னருந்த இனக்குருகு
குப்பை வெண்மணை லேறி யரைச
ரொண்படைத் தொகுதியி னிலங்கித் தோன்றுந்
தண்பெருும் பௌவநீர்த் துறைவற்கு நீயுங்

1. செறிகோற்.

*கண்டாங் குரையாய் குணமோ பாண*
*மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்*
*தெல்லித் தரீஇய இனநிரைப்*
*பல்லான் கிழவரின் அழிந்தவிவ ணலனே. (நற். 291)*

இது, வாயிலாகப் புக்க பாணற்குத் தோழி தலைமகளது குறிப்பறிந்து நெருங்கிச் சொல்லியது.

9. *விழவும் [1]ஊழ்த்தன்று முழவுந் தூங்கின்*
*றெவன்குறித் தனள்கொல் என்றி யாயின்*
*தழையணிந் தலமரு மல்குல் தெருவின்*
*இளையோ ளிறந்த வனைத்தற்குப் பழவிற*
*லோரிக் கொன்ற வொருபெருந் தெருவிற்*
*காரி புக்க நேரார் புலம்போற்*
*கல்லென் றன்றால் ஊரே யதற்கொண்டு*
*காவல் செறிய மாட்டி யாய்தொடி*
*யெழின்மா மேனி மகளிர்*
*விழுமாந் தனர்தங் கொழுநரைக் காத்தே. (நற். 320)*

இது, பரத்தை தனக்குப் பாங்காயினார் கேட்ப நெருங்கிச் சொல்லியது.

## பேகன்

10. *மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்*
*மாரி யான்று மழைமேக் குயர்கெனக்*
*கடவுட் பேணிய குறவர் மாக்கள்*
*பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்*
*புனைத்தினை யயிலும் நாட சினப்போர்க்*
*கைவள் ளீகைக் கடுமான் பேக*
*யார்கொல் அளியள் தானே நெருநற்*

1. உழந்.

சுரனுழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி
நளியிருங் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னும்நின் மலையும் பாட இன்னா
திகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே. *(புறம். 143)*

திணை - பெருந்திணை
துறை - குறுங்கலி; தாபதநிலையுமாம்.

## பாரி

*11.* சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினும் இனிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே. *(புறம். 105)*

திணை - பாடாண்
துறை - விறலியாற்றுப்படை

*12.* நல்லவுந் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லுனுங்
கடவன் பாரி கைவண் மையே. *(புறம். 106)*

திணை-பாடாண்
துறை-இயன்மொழி

13. பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே. (புறம். 107)

திணை - பாடாண்
துறை - இயன்மொழி

14. புள்ளுப்பதி சேரினும் புணர்ந்தோர்க் காணினும்
பள்ளி யானையின் வெய்ய வுயிரினை
கழிபட வருந்திய வெவ்வமொடு பெரிதழிந்
[1]தெனவ கேளாய் நினையினை நீநனி
உள்ளினும் பனிக்கு மொள்ளிழைக் குறுமகள்
பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி
பலவுறு குன்றம் போலப்
பெருங்கவி னெய்திய அருங்காப் பினளே. ( நற். 253)

இது, செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

15. குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலின் அம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே அறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரேன் என்னான் அவர்வரை யன்னே. (புறம். 108)

திணை - பாடாண்
துறை - இயன்மொழி

16. அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்

---

1. என்வாய்க்.

உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே. *(புறம். 109)*

திணை - நொச்சி (காஞ்சி)
துறை - மகண்மறுத்தல்

*17.* கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே. *(புறம். 110)*

திணை - நொச்சி
துறை - மகண்மறுத்தல்

*18.* அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே

நீலத், திணைமலர் புரையும் உண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே. (புறம். 111)

திணை - நொச்சி
துறை - மகண்மறுத்தல்

19. கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழஞ்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா
தொருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி
யினையை யாதலின் நினக்கு மற்றியான்
மேயினே னம்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை
யிடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக உயர்ந்த பாலே. (புறம். 236)

திணை - பொதுவியல்
துறை - கையறு நிலை

20. மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பொட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே இனிய
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே. (புறம். 113).

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை.

21. ஈண்டுநின் றோர்க்குந் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுமென் றிட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே. *(புறம். 114)*

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

22. ஒருசா ரருவி யார்ப்ப ஒருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகும் மன்னே பல்வே
லண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய இனியோன் குன்றே. *(புறம். 115)*

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

23. தீம்[1]பெருங் குண்டுசுனைப் பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மல்குல்
ஏந்தெழின் மழைக்கண் இன்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை யேறி உமண
ருப்பொ யொழுகை எண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை

---

1. தீநீர்ப்.

பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவுங்
கலையுங் கொள்ளா வாகப் பலவுங்
கால மன்றியும் மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
அண்ண னெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வாரே. (புறம். 116)

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

24. மைம்மீன் புகையினும் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க
ணாமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே. (புறம். 117)

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

25. அறையும் பொறையும் மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ

கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரிதண் பறம்பு நாடே. (புறம். 118)

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

26. கார்ப்பெயல் தலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலின் இன்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னோடே. (புறம். 119)

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

27. வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழும் மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப அவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதை பழுநிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்

பெருந்தோள் தாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
ஆடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவ
ரோடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற னாடே. (புறம். 120)

திணை - பொதுவியல்
துறை - கையறுநிலை

## விச்சிக்கோன்

28. பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களஞ்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக்கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே
வரிசையில் வணக்கும் வான்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போ
ரடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே. (புறம். 200)

திணை - பாடாண்
துறை - பரிசிற்றுறை.

## இருங்கோவேள்

29. இவர்யா ரென்குவை யாயின் இவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழன் இவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனெனே
நீயே, வடபால் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியிற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர இவரைக் கொண்மதி வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வே
லுடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே. (புறம். 201)

திணை - பாடாண்
துறை - பரிசிற்றுறை

30. வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழும் நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி

இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாயம் நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவின் நுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
யிகழ்ந்ததன் பயனே இயறே ரண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
றேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே. (புறம். 202)

திணை - பாடாண்.
துறை - பரிசிற்றுறை

## செல்வக் கடுங்கோ வாழியாதன்

31. வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னும் ஊக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி

அகலிரு விசும்பினானும்
பகல் [1]விளங் குதியாற் பல்கதிர் விரித்தே. (புறம். 8)

திணை - பாடாண்.
துறை - இயன்மொழி; பூவைநிலையுமாம்.

32. கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய எழுமுருக்கிப்
பொன்னியற் புனைதோட்டியான்
முன்புதுரந்த சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கலம் நல்கவும் குரிசில்
வலிய வாகும்நின் றாடோய் தடக்கை
புலவுநாற் றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்
காரணங் காகிய மார்பிற் பொருநர்க்
கிருநிலத் தன்ன நோன்மைச்
செருமிகு சேஎய் நிற் பாடுநர் கையே. (புறம். 14)
திணை - பாடாண்.
துறை - இயன்மொழி

33. பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
வாடை துரக்கு நாடுகெழு பெருவிறல்
ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன நல்லோள் கணவன்

---

1. விளங்கலை.

பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென
இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கான் ஈத்தொறும் மகிழான்
ஈத்தொறும் மாவள் ளியனென நுவலும் நின்
நல்லிசை தரவந் திசினே ஒள்வாள்
உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை
விழவி னன்ன நின் கலிமகி ழானே. (பதிற். 61)

துறை - காட்சி வாழ்த்து.
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - புலாஅம் பாசறை

34. இழையணிந் தெழுதரும் பல்களிற்றுத் தொழுதியொடு
மழையென மருளு மாயிரும் பஃறோல்
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவியொடு
மைந்துடை யாரெயில் புடைபட வளைஇ
வந்துபுறத் திறுக்கும் பசும்பிசி ரொள்ளழல்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ்
பொல்லா மயலொடு பாடிமிழ் புழிதரு
மடங்கல் வண்ணங் கொண்ட கடுந்திறல்
துப்புத்துறை போகிய கொற்ற வேந்தே
புனல்பொரு கிடங்கின் வரைபோ லிஞ்சி
அணங்குடைத் தடக்கையர் தோட்டி செப்பிப்
பணிந்துதிறை தருபநின் பகைவ ராயின்

புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி
வளனுடைச் செறுவின் விளைந்தவை யுதிர்ந்த
களனறு குப்பை காஞ்சிச் சேர்த்தி
அரிய லார்கை வன்கை வினநர்
அருவி யாம்பன் மலைந்த சென்னியர்
ஆடுசிறை வரிவண் டோப்பும்
பாடல் சான்ற அவ ரகன்றலை நாடே. (பதிற். 62)

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - வரைபோலிஞ்சி

35. பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே
நிலம்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கு முருமிற் சீறி
ஒருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
ஆடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையேம் என்றனர் நீயும்
நுந்நுகங் கொண்டினும் வென்றோய் அதனாற்
செல்வக் கோவே சேரலர் மருக
காறிரை யெடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனின்
அடையடுப் பறியா அருவி யாம்பல்

ஆயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே. (பதிற். 63)

| | |
|---|---|
| துறை | - செந்துறைப் பாடாண்பாட்டு |
| வண்ணம் | - ஒழுகுவண்ணம் |
| தூக்கு | - செந்தூக்கு |
| பெயர் | - அருவியாம்பல் |

36. வலம்படு முரசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்தி லம்ம
அறங்கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
உரைசால் வேள்வி முடிந்த கேள்வி
யந்தண ரருங்கல மேற்ப நீர்பட்
டிருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்துக்
களிறுநிலை முனைஇய தாரருந் தகைப்பிற்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவி
அலங்கும் பாண்டி லிழையணிந் தீமென
ஆனாக் கொள்கையை யாதலின் அவ்வயின்
மாயிரு விசும்பிற் பன்மீ னொளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றா
ருறுமுரண் சிதைந்த நின் னோன்றாள் வாழ்த்திக்
காண்கு வந்திசின் கழறொடி யண்ணல்
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்த
லிதழ்வனப் புற்ற தோற்றமொ டுயர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி அதனாற்
பசியுடை யொக்கலை யொரீஇய
இசைமேந் தோன்றல்நின் பாசறை யானே. (பதிற். 64)

| | |
|---|---|
| துறை | - காட்சிவாழ்த்து |
| வண்ணம் | - ஒழுகுவண்ணம் |
| தூக்கு | - செந்தூக்கு |
| பெயர் | - உரைசால் வேள்வி |

37. எறிபிண மிடறிய செம்மறுக் குளம்பிற்
பரியுடை நன்மா விரியுளை சூட்டி
மலைத்த தெவ்வர் மறந்தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெரும
வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ
பூணணிந் தெழிலிய வனைந்துவர லிளமுலை
மாண்வரி யல்குல் மலர்ந்த நோக்கின்
வேய்புரை பெழிலிய விளங்கிறைப் பணைத்தோட்
காமர் கடவுளு மாளுங் கற்பிற்
சேணாறு நறுநுதற் சேயிழை கணவ
பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை
பூணணிந்து விளங்கிய புகழ்சால் மார்பநின்
**நாண்மகி ழிருக்கை** யினிதுகண் டிகுமே
தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறுசெய் மாரியி னளிக்கு நின்
சாறுபடு திருவின் நனைமகி ழானே. (பதிற். 65)

துறை - பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - நாண்மகிழிருக்கை

38. வாங்கிரு மருப்பிற் றீந்தொடை பழுநிய
இடனுடைப் பேர்யாழ் பாலை பண்ணிப்
படர்ந்தனை செல்லும் முதுவா யிரவல
இடியிசை முரசமொ டொன்றுமொழிந் தொன்னார்
வேலுடைக் குழூஉச்சமந் ததைய நூறிக்
கொன்றுபுறம் பெற்ற பிணம்பயி லழுவத்துத்
தொன்றுதிறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பதம் நல்கும் என்ப கறுத்தோ

றுறுமுரண் டாங்கிய தாரருந் தகைப்பின்
நாண்மழைக் குழூஉச்சிமை கடுக்குந் தோன்றல்
தோன்மிசைத் தெழுதரும் விரிந்திலங் கெஃகின்
தார்புரிந் தன்ன வாளுடை விழவிற்
போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்பப்
பூத்த முல்லைப் **புதல்சூழ் பறவை**
கடத்திடைப் பிடவின் றொடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின்
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பி னாடுகிழ வோனே. (பதிற். 66)

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கு
பெயர் - புதல்சூழ் பறவை.

39. கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
தெண்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்குகதிர் வயிரொடு வலம்புரி யார்ப்பப்
பல்களிற் றினநிரை புலம்பெயர்ந் தியல்வர
அமர்க்க ணமைந்த அவிர்நிணப் பரப்பிற்
குழூஉச்சிறை யெருவை குருதி யாரத்
தலைதுமிந் தெஞ்சிய ஆண்மலி யூபமொ
டுருவில் பேய்மகள் கவலை கவற்ற
நாடுட னடுங்கப் பலசெருக் கொன்று
நாறிணர்க் கொன்றை **வெண்போழ்க் கண்ணியர்**
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு

வளைதலை மாத்த தாழ்கரும் பாசக
ரெஃகா டுனங் கடுப்ப மெய்சிதைந்து
சாந்தெழின் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தண் மாறா தூதிய
கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப்
பறைபண் ணழியும் பாடுசால் நெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே. (பதிற். 67)

| | | |
|---|---|---|
| துறை | - | பாணாற்றுப்படை |
| வண்ணம் | - | ஒழுகுவண்ணம் |
| தூக்கு | - | செந்தூக்கு |
| பெயர் | - | வெண்போழ்க் கண்ணி. |

40. கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு
வேறுபுலத் திறுத்த கட்டூர் நாப்பட்
கடுஞ்சிலை கடவுந் தழங்குகுரன் முரசம்
அகலிரு விசும்பி னாகத் ததிர
வெவ்வரி நிலைஇய எயிலெறிந் தல்ல
துண்ணா தடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுக லூக்கத்தர் மெய்தயங் குயக்கத்
தின்னா ருறையுள் தாம்பெறி னல்லது
வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கும் ஆவணம் புக்குடன்
அருங்க ணொடைமை தீர்ந்தபின் மகிழ்சிறந்து
நாம மறியா **ஏம வாழ்க்கை**
வடபுல வாழ்நரிற் பெரிதமர்ந் தல்கலும்
இன்னகை மேய பல்லுறை பெறுபகொல்
பாய லின்மையிற் பாசிழை ஞெகிழ
நெடும ணிஞ்சி நீணகர் வரைப்பின்
ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல எழுதிச்
செவ்விரல் சிவந்த அவ்வரிக் குடைச்சூல்

*அணங்கெழி லரிவையர்ப்ப பிணிக்கு*
*மணங்கமழ் மார்ப நின் றாணிழ லோரே. (பதிற். 68)*

| | | |
|---|---|---|
| *துறை* | - | *செந்துறைப் பாடாண்பாட்டு* |
| *வண்ணம்* | - | *ஒழுகுவண்ணம்* |
| *தூக்கு* | - | *செந்தூக்கு* |
| *பெயர்* | - | *ஏம வாழ்க்கை.* |

*41.* *மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி*
*வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்கக்*
*கடல்போற் றானைக் கடுங்குரன் முரசங்*
*காலுறு கடலிற் கடிய வுரற*
*எறிந்துசிதைந்த வாள்*
*இலைதெரிந்த வேல்*
*பாய்ந்தாய்ந்த மா*
*ஆய்ந்துதெரிந்த புகன்மறவரொடு*
*படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்*
*கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே*
*நின்போல், அசைவில் கொள்கைய ராகலி னசையா*
*தாண்டோர் மன்றஇம்* ***மண்கெழு ஞாலம்***
*நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்*
*பயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப*
*விசும்புமெய் யகலப் பெயல்புர வெதிர*
*நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த*
*இலங்கு கதிர்த் திகிரி முந்திசி னோரே. (பதிற். 69)*

| | | |
|---|---|---|
| *துறை* | - | *வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு.* |
| *வண்ணம்* | - | *ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்* |
| *தூக்கு* | - | *செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்* |
| *பெயர்* | - | *மண்கெழு ஞாலம்.* |

42. களிறுகடைஇய தாள்
மாவுடற்றிய வடிம்பு
சமந்ததைந்த வேல்
கல்லலைத்த தோள்
வில்லலைத்த நல்வலத்து
வண்டிசை கடாவாத் தண்பனம் போந்தைக்
குவிமுகி ழூசி வெண்டோடு கொண்டு
தீஞ்சுனை நீர்மலர் மலைந்துமதஞ் செருக்கி
உடைநிலை நல்லமர் கடந்து மறங்கெடுத்துக்
கடுஞ்சின வேந்தர் செம்ம றொலைத்த
வலம்படு வான்கழல் வயவர் பெரும
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ்சொற் கேளாப் புரைதீ ரொண்மைப்
பெண்மை சான்று பெருமட நிலைஇக்
கற்பிறை கொண்ட கமழுஞ் சுடர்நுதற்
புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்
மாடோ ருறையு முலகமுங் கேட்ப
இழுமென இழிதரும் பறைக்குர லருவி
முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்று
மயிரை நெடுவரை போலத்
தொலையா தாகநீ வாழு நாளே. (பதிற். 70)

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் - ஒழுகுவண்ணம்
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்
பெயர் - பறைக்குர லருவி

## பதிகம்

மடியா வுள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி அந்துவற்
கொருதந்தை யீன்ற மகள் பொறையன் பெருந்தேவி
யீன்றமகன்
நாடுபதி படுத்து நண்ணா ரோட்டி
வெருவரு தானை கொடுசெருப் பலகடந்
தேத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி
மாய வண்ணனை மனனுறப் பெற்றவற்
கோத்திர நெல்லின் ஒகந்தூ ரீத்துப்
புரோசு மயக்கி
மல்ல லுள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழி யாதனைக்
கபிலர் பாடினார் பத்துப்பாட்டு

★ ★ ★

**பாடிப்பெற்ற பரிசில்** - சிறுபுறம் என நூறாயிரங்காணங் கொடுத்து, **நன்றா** என்னும் குன்றேறி நின்று, தன் கண்ணிற் கண்ட நாடெல்லாங் காட்டிக்கொடுத்தான் அக் கோ.

## ஓரி

*43.* அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைப் [1]குளவியொடு பசுமரல் கட்குங்
காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்

1. 'குவியொடு பசுமரல் கடுக்கும்' அச்சுப்புத்தகத்துப் பாடம்

வல்வில் லோரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே. (குறுந். 100)

என்பது, பாங்கற்குரைத்தது; அல்ல குறிப்பட்டு மீள்கின்றான், தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.

## நள்ளி

44. மான்றமை யறியா மரம்பயி லுறும்பின்
ஈன்றிளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தென
மடமான் வல்சி தரீஇய நடுநாள்
இருண்முகைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
பணைமரு ளெருத்திற் பல்வரி யிரும்போத்து
மடக்க ணாமான் மாதிரத் தலறத்
தடக்கோட் டாமா [1]னண்ண லேஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்பு வீர்க்கும்
பெருங்க னாட பிரிதி யாயின்
மருந்தும் உடையையோ மற்றே இரப்போர்க்
கிழையணி நெடுந்தேர் களிறொ டென்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழறொடித் தடக்கைக் கலிமான் நள்ளி
நளிமுகை யுடைத்த நறுங்கா ரடுக்கத்துப்
போந்தை முழுமுத னிலைஇய காந்தள்
மென்பிணி முகையவிழ்ந் தலர்ந்த
தண்கமழ் புதுமலர் நாறுநறு நுதற்கே. (அகம். 238)

என்பது, இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

1. 'அண்ண னல்லேறு' என்றிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

## அகுதை

45. உண்போன் றானறுங் கள்ளி னிடச்சில
நாவிடைப் பஃறேர் கோலச் சிவந்த
[1]வொளிறொள வாடக் குழைந்தபைந் தும்பை
யெறிந்திலை முறிந்த கதுவாய் வேலின்
மணநாறு மார்பின் மறப்போ ரகுதை
குண்டுநீர் வரைப்பிற் கூட லன்ன
குவையிருங் கூந்தல் வருமுலை சேப்ப
..............................................
என்னா வதுகொல் தானே....
விளங்குறு பராரைய வாயினும் வேந்தர்
வினைநவில் யானை பிணிப்ப
வேர்துளங் கினநம் மூருண் மரனே. (புறம். 347)

திணை - காஞ்சி
துறை - மகட்பாற் காஞ்சி.

## பாரி

46. ஆர்கலி யினனே சோணாட் டண்ணல்
கவிகை மண்ணாள் செல்வ ராயினும்
வாள்வலத் தொழியப் பாடிச் சென்றாஅர்
[2]வாறொ கமலர.....................
வீத லானா விலங்குதொடித் தடக்கைப்
பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென

1, 2 பிழைபட்டுள்ளன.

அகிலார் நறும்புகை ஐதுசென் றடங்கிய
கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு
மனைச்செறிந் தனளே வாணுதல் இனியே
அற்றன் றாகலிற் றெற்றெனப் போற்றிக்
காய்நெற் கவளந் தீற்றிக் காவுதொறுங்
கடுங்கண் யானை காப்பன ரன்றி
வருத லானார் வேந்தர் தன்னையர்
பொருசமங் கடந்த வுருகெழு நெடுவேற்
குருதி பற்றிய வெருவரு தலையர்
மற்றிவர் மறனும் இற்றாற் றெற்றென
யாரா குவர்கொல் தாமே நேரிழை
யுரித்தல் பல்சுணங் கணிந்த
மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே. (புறம். 337)

திணை - காஞ்சி
துறை - மகட்பாற் காஞ்சி

## தலைவன் கூற்று

47. சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் [1]தன்றோ இலளே பானாட்
பள்ளி யானையி[2] னுயிர்த்தென்
னுள்ளம் [3]பின்னுந் தன்னுழை யதுவே. (குறுந். 142)

என்பது, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது. தோழிக்குத் தலைமகன் தன் குறை கூறியதூஉமாம்.

48. மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகை ததும்பும் பன்மலர்ச் சாரற்

1. 'தனனோ இவளோ'
2. 'உயிர்த்தெனை' அச்சுப் புத்தகப் பாடம்
3. 'இன்னுந்'

சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்ன என் னுரனவித் தன்றே. (குறுந். 95)

என்பது, தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

49. சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
இசையி னிசையா இன்பா ணித்தே
கிளியவள் விளியென [1]விழலோ வாவே
அதுபுலந் தழுத கண்ணே சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றவ்வே. (குறுந். 291)

என்பது, பாங்கற்கு உரைத்தது.

50. உடும்பு [2]கொலீஇ வரிநுண லகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத் தீயல் கெண்டி
யெல்லுமுய லெறிந்த வேட்டுவன் அஞ்சுவல
பல்வேறு பண்டத் தொடைமறந் தில்லத்
திருமடைக் கள்ளி னின்களி செருக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே யன்புகலந்து
நம்வயிற் புரிந்த கொள்கையொடு நெஞ்சத்
துள்ளின ளுறைவோ ளூரே முல்லை
நுண்முகை யவிழ்ந்த புறவிற்
பொறைதலை மணந்தன் றுயவுமா ரினியே. (நற். 59)

இது, வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

---

1. 'விழலொல் லாவே' அச்சுப் புத்தகத்துப் பாடம். இது, 'வெழலொல் லாவே' என்பதன் திரிபாகலாம்.

2. 'கொரீஇ' அச்சுப்புத்தகத்துப் பாடம்.

## தலைவி கூற்று

51. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பய லுழந்த இரும்பிணர்த் துறுகற்
பைத [2]லொருகலை சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே. (குறுந். 13)

என்பது, தோழியிற் கூட்டங் கூடி ஆற்றுவகையான் ஆற்றுவித்துப் பிரிய வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.

52. மெய்யே[3] வாழி தோழி சாரல்
[4]மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
தான்குறி [5]வாராத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே. (குறுந். 121)

என்பது, இரவுக்குறி வருந் தலைமகன் செய்யுங் குறி பிறிதொன் றனான் நிகழ்ந்து மற்று அவன்குறியை ஒத்தவழி அவ் வொப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று ஆண்டு அவனைக் காணாது மயங்கிய தலைமகள், பின்னர் அவன் வர உணர்த்திய தோழிக்குக் கூறியது.

53. குன்றக் கூகை குழறினும் முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்
அஞ்சும னளித்தென் னெஞ்சம் இனியே

---

2. 'ஒருதலை' அச்சுப் புத்தகத்துப் பாடம்
3. 'மெய்யோ'
4. 'மைப்பட் டன்ன'
5. 'வாயாத்'

ஆரிருட் கங்கு லவர்வயிற்[1]
சார னீளிடைச் செலவா னாதே. (குறுந். 153)

என்பது, வரையாது நெடுங்காலம் வந்தொழுகுகின்றுழி, நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை என்ற தோழிக்கு, அவர் வரவு நமது ஆற்றாமைக்குக் காரணமாம் எனத் தலைமகள் கூறியது.

54. மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையொ டின்றே
யாமங் கொளவரிற் [2]கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
எவன்கொல் வாழி தோழி மயங்கி
இன்ன மாகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவின்
இருளிடை மிதிப்புழி நோக்கி
அவர், தளரடி தாங்கிய சென்ற தின்றே. (அகம். 128)

என்பது, இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

55. முளைவளர் முதல மூங்கின் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை

---

1. 'வரிற்'
2. 'கன்றிக்'

நீர்நசை மருங்கி [1]னிறம்பார்த் தொடுங்கிய
பொருமுர ணுழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் செங்கோ டழிதுளி கழாஅக்
கனமுகை யடுக்கத்து மென்மெல டறுகால்
யாழிசைப் பறவை இமிரப் பிடிபுணர்ந்து
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சும் நாட
னின்[2]புரைத் தக்க சாயலன் எனநீ
அன்புரைத் தடங்கக் கூறிய இன்சொல்
ாய்த்தன வாழி தோழி வேட்டோர்க்
கமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்குமுந்
தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே. (அகம். 332)

என்பது, இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

56. பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப அதற்கொண்
டோரும் அலைக்கும் அன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரும் [3]மடவரும் உளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே. (குறுந். 246)

என்பது சிறைப்புறம்.

57. இனமயி லகவு மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சார லவர்நாட்டுக்

1. 'நிரம்பா'
2. 'புரை'தக்க சாயல் எனநீ'
3. 'முதியரும்'

குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே. (குறுந். 249)

என்பது, வரைவிடை வைப்ப ஆற்றகிற்றியோ என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

58. ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழி [1]மற் றொன்ற னானே. (குறுந். 208)

என்பது, வரைவிடை ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

59. யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டு [2]தான் மணந்த ஞான்றே. (குறுந். 25)

என்பது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

60. கான மஞ்ஞை [3]அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
ணீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா [4]தகறல் வல்லு வோர்க்கே. (குறுந். 38)

---

1. 'யொன்ற னானே', 'யென்றனிமை யானே'
2. 'தா மணந்த' அச்சுப் புத்தகத்துப் பாடம்
3. 'அறையின்' அச்சுப் புத்தகத்துப் பாடம்
4. 'தாற்றல்' என்றிருத்தல் அமைதி

என்பது, வரைவு நீட்டித் தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

61. நெகிழ்ந்த தோளும் வாடிய வரியுந்
தளிர்வனப் பிழந்தவென் னிறனும் நோக்கி
யான்செய் தன்றிவ டுயரென அன்பின்
ஆழல் வாழி தோழி வாழைக்
கொழுமட லகலிலைத் தளிதலைக் கலாவும்
பெருமலை நாடன் கேண்மை நமக்கே
விழும மாக [1]வறியுந [2]ரின்றெனக்
கூறுவை மன்னோ நீயே
தேறுவன் மன்யான் அவருடை நட்பே. (நற். 309)

இது, வரைவு நீட ஆற்றாளெனக் கவன்று தான் ஆற்றாளாகிய தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

62. செவ்வரைச் [3]சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பா லார மாந்திப்
பெருவரை நீழ லுகளும் நாடன்
கல்லினும் வலியன் தோழி
வலிய னென்னாது மெலியுமென் னெஞ்சே. (குறுந். 187)

என்பது, வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

63. யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையின் அழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்

1. 'வறியின் நன்றென'
2. 'ளின்றெனக்'
3. 'செச்சை' அச்சுப் புத்தகத்துப் பாடம்.

மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறா திட்ட ஏமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவென் கண்ணே. (குறுந். 241)

என்பது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

64. கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயி லகவு நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பசந்தக் காலும் பசப்பொல் லாதே. (குறுந். 264)

என்பது, ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்றது.

65. கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கன் னாடன்
இனிய [1]னாகலி னினத்தி னியன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ணாடே. (குறுந். 288)

என்பது, தலைமகனது வரவுணர்ந்து, நம்பெருமான் நமக்கு அன்பிலன் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

66. புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்

1. 'னாக வினத்தி னியன்ற', 'னாக லினினத் தியன்ற' அச்சுப்புத்தகத்துப் பாடம், 'னாகலி னினிநமக் கியன்ற' என்றிருக்கலாம் போலும்.

'வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயி னெதிர் கொண்டு
[2]தாமணந் தனையமௌன விடுகந் தூதே. (குறுந். 106)

என்பது, தலைமகன் தூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது.

67. அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை
மாலைப் பெய்த மணங்கம ழுந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தண்
[3]மெல்லிலை குழைய முயங்கலும்
இல்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே. (குறுந். 361)

என்பது, வரைவு மலிந்த வழித் தோழி நன்காற்றினாய் என்றாட்குக் கிழத்தி சொல்லியது.

68. ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசைத்
தோடமை முழவின் றுதைகுர லாகக்
கணக்கலை இகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் லிமிழிசை கேட்டுக் [4]களிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
[5]விழவுக்கள விறலியிற் றோன்று நாடன்

1. 'நயத்தன்று'
2. தாமளந் தனையம்' அச்சுப் புத்தகத்துப் பாடம் 'தாம்வரைந் தனைய'
3. 'மெல்லிரல்'
4. 'கலி'
5. 'நனவுப்புகு'

உருவ வல்விற் பற்றி யம்புதெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்
புலர்குர லேனற் [1]புரையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்கு லணையொடு பொருந்தி
ஓர்யா னாகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே. (அகம். 82)

என்பது, தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.

69. கூறாய் செய்வது தோழி வேறுணர்ந்
தன்னையும் பொருளுகுத் தலமரும் மென்முறிச்
சிறுகுள கருந்து தாய்முலை பெறாஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கு மாயி னதூஉம் நாணுவல்
இலங்குவளை நெகிழ்ந்த செல்லல் புலம்படர்ந்
திரவின் மேயல் மரூஉம் யானைக்
கால்வ லியக்க மொற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணி னெறிந்த சிறுகல்
[2]உடுவுறு கணையிற் போகிச் சாரல்
வேங்கை விரியிணர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துட் டங்கு
மலைகெழு நாடன் மணவாக் காலே. (அகம். 292)

என்பது, வெறியச்சுறீஇத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

70. பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
[3]சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்

1. 'புழை'
2. 'உடுவரு'
3. 'சிலையிற்'

செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் [1]கிழவோன் என்றும்
அன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்ம இவ் வழுங்க லூரே. (குறுந். 385)

என்பது, வேற்றுவரைவு மாற்றியது.

71. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடிய ரல்லர் எங்குன்றுகெழு நாடர்
[2]பசைஇப் பசந்தன்று நுதலே
[3]ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே. (குறுந். 87)

என்பது, தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது.

72. நின்ற சொல்லர் நீடுதோ றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி [4]மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா [5]நந்நயந் தருளி

---

1. 'கிழவன்'
2. 'பசைஇய'
3. 'ஞெகிழிய'
4. 'மீமிசைச் சாரல்'
5. 'வென்னயந் தருளி'

நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை யுறுப[1] செய்பறி யலரே. (நற். 1)

இது, பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

73. இசைபட வாழ்பவர் செல்வம் போலக்
காண்டொறும் பொலியுங் கதழ்வாய் வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது
கருங்கால் வேங்கை யூறுபட மறலிப்
பெருஞ்சினந் தணியுங் குன்ற நாடன்
நனிபெரி தினிய னாயினுந் துனிபடர்ந்
தூட லுறுவேன் தோழி நீடு
புலம்புசே ணகல நீந்திப்
புலவி யுணர்த்தல் [2]வன்மை யானே. (நற். 217)

இது, தலைமகள் வாயின் மறுத்தது.

74. முருகுறழ் முன்பொடு கடுஞ்சினஞ் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப
வாழை யீன்ற வையேந்து கொழுமுகை
மெல்லியன் மகளி ரோதி யன்ன
பூவொடு துயல்வரு மால்வரை நாடனை
இரந்தோ ருளர்கொல் தோழி திருந்திழைத்
தொய்யில் வனமுலை வரிவனப் பிழப்பப்
பசந்தெழு பருவர றீர
நயந்தோர்க் குதவா நாரின் மார்பே. (நற். 225)

(1) இது, வன்புறை எதிரழிந்தது.

---

1. 'யுறுபவோ' அச்சுப் புத்தகத்துப் பாடம்

2. 'வண்மையானே' அச்சுப் புத்தகத்துப் பாடம்

(2) [1]பரத்தை தலைமகட்குப் பாங்காயின வாயில் கேட்பச் சொல்லிய தூஉமாம்.

## தோழிகூற்று

75. எழாஅ யாகலின் எழினலந் தொலைய
அழாஅ தீமோ நொதுமலர் தலையே
ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிதிரிற் [2]சிறுபல தாஅய்
வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
[3]மயிலறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே. (நற். 13)

இஃது, இயற்கைப் புணர்ச்சியின் பிற்றைஞான்று தலைவியின் வேறுபாடு கண்ட தோழி, தலைவி மறைத்தற்குச் சொல்லியது.

76. சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குகுலைக் காந்த ளண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற மாடன்
உடுக்குந் [4]தழைதந் தனனே [5]யாமஃ
துடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்
[6]கேளுடைக் கேடஞ் சுதுமே யாயிடை

---

1. இதுவே பாட்டின் பொருளுக்கேற்ற துறையாயிருத்தலின், இச்செய்யுள் ஈண்டு வைக்கப்பட்டது.
2. 'சிறுபல் காய' அச்சுப் புத்தகத்துப் பாடம்
3. 'மயலறி'
4. 'தழையீத்'
5. 'யவையாம்' அச்சுப் புத்தகத்துப் பாடம்.
6. 'கேளிடை'

[1]வாடல கொல்லோ தாமே அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே. (நற். 359)

இது, தோழி, தழை யேற்றுக் கொண்டு நின்று தலைமகள் குறிப்பின் ஓடியது.

77. மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
யம்மலை கிழவோன் நந்நயத் தென்றும்
வருந்தின னென்பதோர் வாய்ச்சொற் றேறாய்
நீயுங் கண்டு [2]நுமரொடு மெண்ணி
[3]யறிவறிந் தளவல் வேண்டும் மறுத்தரற்
கரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டுநா டார்[4]தம் மொட்டியோர் திறத்தே. (நற். 32)

இது, தலைவிக்குக் குறைநயப்புக் கூறியது.

78. பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலரே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை [5]கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே. (குறுந். 355)

என்பது, இரவுக்குறி நேர்ந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது.

---

1. 'வாடுப'
2. 'நுமரோ டெண்ணி'
3. 'யறிவந்'
4. 'தா மொட்டியோர்'
5. 'கமழூஞ்'

79. காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத் தியம்பு நாடனந்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே. (குறுந். 42)

என்பது, இரவுக்குறி வேண்டின கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.

80. நகைநீ கேளாய் தோழி யல்கல்
வயநா யெறிந்து வன்பறழ் தழீஇ
இளைய ரெய்துதன் [1]மடக்கிக் கிளையொடு
நான்முலைப் பிணவல் சொலியக் கானொழிந்
தரும்புழை முடுக்க ராட்குறித்த நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் றொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலன் முன்பிற்றன் படைசெலச் செல்லா
தருவழி [2]விலக்குமெம் பெருவிறல் போன்மென
எய்யாது பெயருங் குன்ற நாடன்
செறியரி றுடக்கலிற் பரீஇப் புரியவிழ்ந்
தேந்துகுவவு மொய்ம்பிற் பூச்சேர் மாலை
ஏற்றிமில் கயிற்றி னெழில்வந்து துயல்வர
இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை
வல்லே என்முகம் நோக்கி
நல்லை மன்னென் நகூஉப்பெயர்ந் தோளே. (அகம். 248)

என்பது, இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தலைமகன் கேட்பத் தோழி சொல்லியது.

81. குணகடன் முகந்த கொள்ளை வானம்
பணைகெழு வேந்தர் பல்படைத் தானைத்
தோனிரைத் தனிய வாகி வலனேர்பு

1. 'மடக்கிளை யோடு'
2. 'விலங்குமெம்'

கோனிமிர் கொடியின் வசிபட மின்னி
உருமுர றதிர்குர றலைஇப் பானாட்
பெருமலை மீமிசை முற்றின வாயின்
வாளிலங் கருவி தாஅய் நாளை
இருவெதி ரங்கழை யொசியத் தீண்டி
வருவது மாதோ வண்பரி யுந்தி
நனிபெரும் பரப்பின் நம்மூர் முன்றுறைப்
பனிபொரு மழைக்கண் சிவப்பப் பானாண்
முனிபட ரகல மூழ்குவங் கொல்லோ
மணிமருண் மேனி யாய்நலந் தொலையத்
தணிவருந் துயரஞ் செய்தோ
னணிகிளர் நெடுவரை யாடிய நீரே. (அகம். 278)

என்பது, இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தலை மகட்குத் தோழி சொல்லியது.

82. பிறருறு விழுமம் பிறரும் நோப
தம்முறு விழுமம் தமக்கோ தஞ்சம்
கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல ஒருதூக் கின்னியங்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக் [1]கேற்ப
[2]அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமரென ஆங்கவற்
கறியக் கூறல் வேண்டும் தோழி
அருவி பாய்ந்த கருவிரன் மந்தி
செழுங்கோட் பலவின் பழம்புணை யாகச்
சாரற் பேரூர் முன்றுறை யிழிதரும்
வறனுற லறியாச் சோலை
விறன்மலை நாடன் சொன்னயந் தோயே. (அகம். 382)

என்பது, இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

1. 'கொப்ப'
2. 'அணங்கமர்'

83. முனிபட ருழந்த பாடி லுண்கட்
பனிகால் போழ்த்து பணையெழில் ஞெகிழ்தோள்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல வென்னுஞ் சொல்லை மன்னிய
ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்றோய் வெற்பன் மணவா லூங்கே. (குறுந். 357)

என்பது, தோழி, கிழவன் கேட்கும் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது.

84. உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிரு ணடுநாண்
மின் னுநிமிர்ந் தன்ன கனங்குழை யிமைப்பப்
பின் னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவன ளொதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனென் இவளென
அலையல் வாழிவேண் டன்னை நம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே இவடான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர
மன்ற மராஅத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரும் அதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு
முருகி னன்ன சீற்றத்துக் கடுந்திற

லெந்தையும் இல்ல னாக
அஞ்சுவ ளல்லளோ இவளிது செயலே. (அகம். 158)

என்பது, தலைமகள் சிறைப்புறத்தானாகத் தோழி செவிலித் தாய்க்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

85. பெரும்புனங் கவருஞ் சிறுகிளி யோப்பிக்
கருங்கால் வேங்கை யூச றூங்கிக்
கோடேந் தல்குற் றழையணிந் தும்மோ
டாடினெம் வருதலி [1]னினியது முண்டோ
நெறிபடு கூழைக் கார்முதிர் பிருந்த
வெறிகமழ் கொண்ட நாற்றமுஞ் சிறிய
பசலை [2]பாய்தரு நுதலும் நோக்கி
வறிதுகு நெஞ்சினள் பிறிதொன்று சுட்டி
வெய்ய வுயிர்த்தனள் யாயே
ஐய அஞ்சினம் அளியம் யாமே. (நற். 368)

இது, தோழி தலைமகற்குச் செறிப்பறிவுறீஇயது.

86. முன்றிற் பலவின் படுசுளை மரீஇப்
புன்றலை மந்தி தூர்ப்பத் தந்தை
மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி
ஐவன வெண்ணெற் குறூஉ நாடனொடு
சூருடைச் சிலம்பி னருவி யாடிக்
காரரும் பவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாவமை யிதண மேறிப் பாசினம்
வணர்குரற் சிறுதினை கடியப்
புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே. (நற். 373)

இது, செறிப்பறிவுறீஇயது.

1. 'னணியது'
2. 'பாய்திரு'

87. முறஞ்செவி யானைத் தடக்கையிற் றடைஇ
இறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை
வரையோன் வண்மை போலப் பலவுடன்
கிளையோ டுண்ணும் வளைவாய்ப் பாசினம்
குல்லை குளவி கூதளங் குவளை
இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன்
சுற்றமை வில்லன் செயலைத் தோன்று
நற்றார் மார்பற் காண்குறிற் சிறிய
நற்கவற் கறிய வுரைமின் பிற்றை
அணங்கு மணங்கும் போலு மணங்கி
வறும்புனங் காவல் விடாமை
[1]யறிந்தனி ரல்லிரேர அறனில் யாயே. (நற். 376)

இது, தோழி கிளிமேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறிப் பறிவுறீஇயது.

88. கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சிக்
கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென
விசும்பா டாய்மயில் கடுப்ப யானின்று
பசுங்கா ழல்குல் பற்றுவன னூக்கிச்
செலவுடன் விடுகோ தோழி பலவுடன்
வாழை யோங்கிய வழையமை சிலம்பிற்
றுஞ்சுபிடி மருங்கின் மஞ்சுபடக் காணாது
பெருங்களிறு பிளிறுஞ் சோலை யவர்
சேணெடுங் குன்றங் காணிய நீயே. (நற். 222)

இது, தோழி, தலைமகன் வரவுணர்ந்து சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.

---

1. 'யறிந்தன வில்லிரோ'

89. நொச்சி மாவரும் பன்ன கண்ண
எக்கர் ஞெண்டி னிருங்கிளைத் தொழுதி
இலங்கெயிற் றேஎரின்னகை மகளிர்
உணங்குதினை துழவுங் கைபோல் ஞாழன்
மணங்கமழ் நறுவீ வரிக்குந் துறைவன்
றன்னொடு புணர்த்த இன்னமர் கானற்
றனியே வருதல் நனிபுலம் புடைத்தென
வாரேன் மன்யான் வந்தனென் றெய்ய
சிறுநா வொண்மணித் தெள்ளிசை [1]கடுப்ப
இனமீ னார்கை யீண்டுபுள் ளொலிக்குர
லிவைமக னொன்னா வளவை
வயமான் றோன்றல் வந்துநின் றனனே. (நற். 267)

(1) இது, தோழி, காப்புக் கைமிக்குக் காமம் பெருகிய காலத்துச் சிறைப்புறமாகச் சொல்லியது.

(2) வரைவு கடாயதூஉமாம்.

90. கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு[2]
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறியா வின்பம் [3]எளிதினின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய
வெறுத்த வேஎர் வேய்புரை பணைத்தோள்

1. 'கெடுப்ப'
2. 'ஊழ்படு'
3. 'எளிதென நின்மலைப்'

நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளும் இனைய ளாயின் தந்தை
யருங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலும் உரியை பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களும் ஊர்கொண் டன்றே. (அகம். 2)

என்பது, பகற்குறிக்கட் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவுகடாயது.

91. கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த
வாணிற வுருவின் ஒளிறுபு மின்னிப்
பரூஉவுறைப் பஃறுளி சிதறி வானவின்று
பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயலே றுரைஇய வியலிரு ணடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயற்
றடைஇத் திரண்டநின் றோள்சேர் பல்லதைப்
படாஅ வாகும் எங் கண்ணென நீயும்
இருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்
வரவெளி தாக எண்ணுதி அதனால்
நுண்ணிதிற் கூட்டிய படுமா ணாரந்
தண்ணிது கமழும் நின்மார் பொருநாள்
அடைய முயங்கே மாயின் யாமும்
விறலிழை நெகிழச் சாய்தும் அதுவே
அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்பன் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட எரிமருள் [1]தோன்றியொ

1. 'தோன்ற, லொண்பூ'

டொண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரற் பகல்வந் தீமே. (அகம். 218)

என்பது தோழி, தலைமகளை இடத்துய்த்து வந்து பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால், தலைமகனை வரைவுகடாயது.

92. யாயே, கண்ணினுங் கடுங்கா தலளே எந்தையும்
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி என்னும்
யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே
ஏனிலங் காவல ரானா தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயங் கொண்மார்
குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்
நலவரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா ழலளே. (அகம். 12)

என்பது, பகற்குறிவாராநின்ற தலைமகன், தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு, இரவுக்குறிவாரா வரைவல் என்றாற்கு அதுவும் மறுத்து வரைவுகடாயது.

இப்பாட்டினுள், 'நீவரின்' என்றது வரவுமறுத்தது. 'சீறடி சிவப்ப' என்றது செறிப்பறிவுறீஇயது.

93. நீர்நிறங் கரப்ப ஊழுறு புதிர்ந்த
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப வொற்றி
உராஅ வீர்க்கும் உட்குவரு நீத்தங்

கடுங்கட் பன்றியின் நடுங்காது [1]துணிந்து
நாம வருந்துறைப் [2]பேர்தந் தியாமத்
தீங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப
ஒருநாள் விழும முறினும் வழிநாள்
வாழ்குவ ளல்லளென் றோழி யாவதும்
ஊறில் வழிகளும் பயில வழங்குநர்
நீடின் றாக இழுக்குவர் அதனால்
உலமரல் வருத்தம் உறுதுமெம் படப்பைக்
கொடுந்தே னிழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகனீ வரினும் புணர்குலை அகன்மலை
வாங்கமைக் கண்ணிடை கடுப்ப
யாய், ஓம்பின ளெடுத்த தடமென் றோளே. *(அகம். 18)*

என்பது, தோழி இரவு வருவானைப் பகல்வர வென்றது.

*94.* [3]பூங்கண் வேங்கைப் பொன்னிணர் மிலைந்து
வாங்கமை நோன்சிலை யெருத்தத் திரீஇத்
தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்
வீளை யம்பின் இளையரொடு மாந்தி
ஒட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சுங் குன்றநாட
அரவெறி யுருமோ டொன்றிக் கால்வீழ்த்
துரவுமழை பொழிந்த பானாட் கங்குற்
றனியை [4]வந்த வாறுநினைந் தல்கலும்
பனியொடு கலுழும் இவள் கண்ணே அதனாற்

---

1. 'துறந்து'
2. 'போதந்து' என்றும் படிக்கலாம்.
3. 'ஆங்கண் வேங்கை யொள்ளிணர் மலைந்து'
4. 'வருத லாறு'

கடும்பகல் வருதல் வேண்டும் தெய்ய
அதிர்குரன் முதுகலை கறிமுறி முனைஇ
உயர்சிமை நெடுங்கோட் டுகள வுக்க
கமழித மூலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன்களங் கடுக்கும்
பெருவரை நண்ணிய சாரலானே. *(அகம். 182)*

என்பது, தோழி இரவு வருவானைப் பகல்வர என்றது.

*95.* கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை உருமுநனி உரறு
[1]மரவும் புலியும் அஞ்சுதக வுடைய
[2]இரவழங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டொடு பிரசம்
முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை ஒன்றோ
இன்றுதலை யாக வாரல் வரினே
எம்முறு துயரமொ டியாமிவ ணொழிய
எற்கண்டு பெயருங் காலை யாழ நின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
ஊதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்த நின்
னாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே. *(அகம். 318)*

என்பது, இரவுக்குறி வந்த தலைமகனை வரவுவிலக்கி வரைவுகடாயது.

*96.* வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசினோரே சாரற்

---

1. 'மாவும்'
2. 'அரவழங்கு'

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந். 18)

என்பது, இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவுகடாயது.

97. கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅன்
தேங்கம ழிணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பினை வயநாய் பிறபடப்
பகல்வரிற் கவ்வை யஞ்சுதும் இகல்கொள
இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானைக் கோட்பிழைத் [1]திரீஇய
அடுபுலி வழங்கும் ஆரிரு ணடுநாள்
தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்
என்னா குவள்கொல் தானே பன்னாட்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்
அளியன் தானின் னளியல திலளே. (அகம். 118)

என்பது, செறிப்பறிவுறீஇ இரவும் பகலும் வாரல் என்று வரைவுகடாயது.

98. பிணர்ச்சுவற் பன்றி தோன்முலைப் பிணவொடு
கணைக்கா லேனல் கைம்மிகக் கவர்தலிற்
கல்லத ரரும்புழை [2]யல்கிக் கானவன்
வில்லிற் றந்த வெண்கோட் டேற்றைப்
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்
குடிமுறை [3]பகுக்கு நெடுமலை நாட

1. 'திரீஇ'
2. 'பொல்கி'
3. 'பகுதரு'

உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கு
மிரவி னஞ்சாய் அஞ்சுவல் அரவி
னீரளைப் புற்றங் காரென முற்றி
இரைதே ரெண்கினம் அகழும்
வரைசேர் சிறுநெறி வாரா தீமே. (நற். 336)

இஃது, ஆறுபார்த்துற்றுச் சொல்லியது.

99. ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல் போலக் கணங்கொள
ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை
முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழங்
கல்லுழு குறவர் காதன் மடமகள்
கருவிரன் மந்திக்கு வருவிருந் தயரும்
வான்றோய் வெற்ப சான்றோ யல்லை யெங்
காமங் கனிவ தாயினும் யாமத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானை
வெஞ்சின வுருமி னுரறு
மஞ்சுவரு சிறுநெறி வருத லானே. (நற். 353)

இது, தோழி ஆற்றதருமை யஞ்சித் தான் ஆற்றாளாய்ச் சொல்லியது.

100. கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்ன இவ
ளொலிமென் கூந்தல் உரியவாம் நினக்கே. (குறுந். 225)

என்பது, வரைவிடைவைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது.

101. மலிபெயற் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயலரு நிலைஇய [1]பெயலேர் மணமுகைச்
செவ்வரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே
நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யாவையுஞ்
சென்றுசேக் கல்லாப் புள்ள உள்ளில்
என்றூழ் வியன்குள நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோ ருவந்த உவகை யெல்லாம்
என்னுட் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே. (அகம். 42)

என்பது, தலைமகள் வரைவுமலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

102. [2]மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தானா நாறு நறுநுதற்
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே
ஒல்வை யாயினுங் கொல்வை யாயினும்
நீயளந் தறிவைநின் புரைமை வாய்போல்
பொய்ம்மொழி கூறலஃ தெவனோ
நெஞ்சம் நன்றே நின்வயி னானே. (குறுந். 259)

என்பது, காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகியவழி, தோழி, அறத்தொடு நின்று யானே பரிகரிப்பல் என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது.

1. 'பெயலொடு'
2. 'மழைசேர்'

103. பெருநன் றாற்றிற் பேணாரு முளரே
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி இலைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே. (குறுந். 115)

என்பது, உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தோழி தலைமகற்குக் கூறியது.

104. அமுத முண்க நம் மயலி லாட்டி
[1]கிடங்கி னன்ன விட்டுக்கரைக் கான்யாற்றுக்
கலங்கும் பாசி நீரலைக் கலாவ
ஒளிறுவெள் ளருவி யொண்டுறை மடுத்துப்
புலியொடு பொருத புண்கூர் யானை
நற்கோடு நயந்த அன்பில் கானவர்
விற்சுழிப் பட்ட நாமப் பூச
லுருமிடைக் கடியிடி கரையும்
பெருமலை [2]நாடன் வருமென் றோளே. (நற். 65)

இது, விரிச்சிபெற்றுப் புகன்ற தோழி தலைமகட்குச் சொல்லியது.

## செவிலிகூற்று

105. உவக்குந ளாயினும் உடலுந ளாயினும்
தாயறிந் [3]துணர்க என்னார் தீவா

---

1. 'கிடங்கி னன்ன?' என்னும் பாடமே இயைபுடையதா யிருத்தலின், மேல், 'கிடங்கில்' என்னும் பாடத்தை மேற்கொண்டு, 'கிடங்கில்-ஓரூர்' என்று குறித்தது (பக். 60) தவறாமெனக் கொள்க.

2. 'நாடனை'

3. 'துணர'

யலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்
இன்னாள் இனையள் நின் மகளெனப் பன்னாள்
எனக்குவந் துரைப்பவும் தனக்குரைப் பறியேன்
நாணுவள் இவளென நனிகரந் துறையும்
யானிவ் வறுமனை யொழியத் தானே
அன்னை யறியின் இவணுறை வாழ்க்கை
எனக்கெளி தாகல் இல்லெனக் கழற்கால்
மின்னொளிர் நெடுவே லிளையோன் முன்னுறப்
பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கியான்
அன்னே னன்மை நன்வா யாக
மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
1வெய்திடை யுறாஅ தெய்தி முன்னர்ப்
புல்லென் மாமலைப் புலம்புகொள் சீறூர்ச்
செல்விருந் தாற்றித் துச்சி லிருக்க
நுனைகுழைத் தலமரு நொச்சி
மனைகெழு பெண்டியா னாகுக மன்னே. (அகம். 203)

என்பது, மகட்போக்கிய தாய் சொல்லியது.

★ ★ ★

1. 'வேய்கிடை யுறாஅ'.

# சொல்லகராதி

## எண் - பக்க எண்


அ

அகத்திணையியல் - 130

அகத்தியம் - 23

அகத்தியர் - 8

அகநானூற்றின் உரை - 218

அகநானூற்றின் உரையாசிரியர் - 218

அகநானூறு - அகம் 24

அகுதை - 71

அங்கவை - 195, 196

அசோகந்தளிர் - 86

அசோகு - 106

அஞ்சியாந்தையார் - 54

அடியார்க்குநல்லார் - 198

அண்ணாமலைச் சதகம் - 29

அணி - 135

அதிகன், அதிகமான் - 4, 9

அந்தணர் - 85

அம்பல் - 164

அயிரைமலை - 81

அரிசில்கிழார் - 20

அருண்மங்கை - 8

அரும்பல் - 164

அரையம் - 80

அல்குல் - 52

அல்லாந்து - 204

அலையும் - 148

அவ்வை - 4

அவ்வை முதலியோர் - 10

அவ்வையார் - 24

அவரை - 106

அளிதோ - 159

அளியர் - 159

அறிந்தீயாது - 158

அறியுநர் இன்று - 144

அன்றில் - 103

அனங்கன் ஐயம்பு - 65

ஆ

ஆ - 97

ஆசாரக்கோவை - 191

ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியர் - 144

ஆசிரியர் நச்சினார்க்கினியர், நச்சினார்க்கினியர் - 23

நச்சினார்க்கினியருரை - 130

ஆசிரியர் நல்லந்துவனார், நல்லந்துவனார் - 46

ஆசை - 187

ஆடவர் - 86

ஆடுமகள் - 94

ஆதப்புலைச்சி - 5

ஆதனுங்கன் - 33

ஆதி - 3

ஆம்பல் - 112
ஆமான் - 97
ஆயர் - 93
ஆர் (அசைநிலை) - 155
ஆரியவரசன் பிரகத்தன் - 20
ஆரூர் - 4
ஆவு - 181

இ

இஃதொத்தன் - 144
இகும் - 156
இடைக்காடன் - 137
இடைச்சொல்லியல் - 156
இமிரும் - 163
இமில் - 161
இமிழும் - 163
இயம்பல் - 175
இயவர் - 94
இரக்குவாரேன் - 157
இரட்டுதல் - 55
இருங்கோவேள் - 18, 27
இருதலைப்புள் - 103
இல்வாழ்வோர் - 85
இல - 160, 181
இலக்கணச் சிறப்பு - 146
இலக்கண மாறுபாடு - 143
இலக்கணவிளக்கம், பாட்டியல் - 63
இலக்கணை - 52
இ.வை. அனந்தராமையரவர்கள் - 61
இளம்பூரண அடிகள், இளம்பூரணர் - 23
இளமகளிர் - 86
இற்றி - 106
இறைச்சிப்பொருள் - 135
இறையனாரகப் பொருளுரை - 16
களவியலுரை - 164
இன் - 156
'இன்று' என்னும் சொல் - 144
இன்னாதவை - 119
இன்னாநாற்பதின் ஆசிரியர் - 55
இன்னாநாற்பது - 41
இன்னினி - 172
இனியவை நாற்பது - 56

ஈ

ஈட்சு - 181
ஈம் - 146
ஈர்க்கும் - 163
ஈழ் - 181

உ

'உண்டு' என்னும் சொல் - 144
உண்மென - 155
உணவு - 88
உத்தரராமாயணம் (தெலுங்கு) - 169
உத்தி - 161
உப்பை - 4
உமணர் - 93
உய் - 168
உயிர் மயங்கியல் - 173
உரிச்சொல்லியல் - 164
உருவுவமம் - 146
உலமரல் - 160

உவமவியல் - 146
உவமான சங்கிரகம் - 53
உவமைகள் - 138
உழவர் - 93
உழிஞை - 106
உள்ளுறையுவமம் - 129
உறி - 167
உறுவை - 3, 6
உறையூர் - 7
உறையூர்ப் பெரும்பறையன் - 8
உன்னம் - 107

ஊ

ஊசல் - 167
ஊய் - 168
ஊய்தல் - 168
ஊர் - 87
ஊர்கள் - 83
ஊற்றுக்காடு - 3, 9

எ

எச்சவியல் - 147
எடுப்பி - 162
எருக்கு - 107
எருவை - `103
எலே - 181
எழுக - 163
எழுத்தியல் - 146
எழுப்பி - 162
எள்ளா - 181
எற்படுபொழுது - 175
எற்பாடு - 175
எறிச்சலூர்மலாடனார் - 69
எறும் - 113
எனவ - 174

ஏ

ஏத்துகு - 174
ஏர்க - 163
ஏலும் (இயலும்) - 170
ஏலே - 181

ஐ

ஐங்குறுநூறு - 41, 42
ஐந்திணை எழுபது - 61
ஐவனம் - 107
ஐவாயரவு - 217

ஒ

ஒகந்தூர் - 80
ஒரு பெண்டிர் - 149
ஒருமை (ஒருமெய்) - 168
ஒள்ளொளி - 172
ஒளிர் - 161
ஒளிறு - 161

ஓ

ஓரி - 71
ஓரும் - 173

ஔ

ஔவை - 9

க

கடம்பவனபுராணம் - 2
கடமா - 100
கடற்காக்கை - 103
கடுங்கோவாழியாதன், - 77
செல்வக்கடுங்கோ வாழியாதன் - 18
கடுவன் - 95
கண்டன்று - 157
கண்டிகின் - 156
கண்டிகும் - 156
கண்டிசின் - 156
கண்ணகி - 73
கண்ணாலம் - 194
'கண்ணுமைழயா' என்னும் பாட்டு - 70
கந்தபுராணம் - 9
கபிலதேவநாயனார் - 16
கபிலம் - 42, 68
கபிலர் - 6
கபிலர் இயற்றிய
செய்யுட்கள் - 41
கபிலர் இயற்றியவை என்று
வழங்கும் நூல்கள் முதலியன - 59
'கபிலர்' என்னும் நூல் - 14
கபிலர் குலம் - 15
கபிலர் தாய் தந்தையர் - 12
கபிலர் பாட்டுக்களால்
அறியப்படுபவை - 81
கபிலர் பிறந்த ஊர் - 10
கபிலர் பிறப்பு - 13
கபிலர் பெருமை - 39
கபிலர் வரலாறு - 15
கபிலரகவல் - 3, 66
கபிலரது புலமைத்திறன் - 37
கபிலராற் பாடப்பட்டவர் - 71
கபிலரியல்பு - 38
கபிலரின் வாழ்க்கைநிலை - 32
கபிலருக்கு நண்பர்கள் - 36
கபிலரும் ஆரியவரசன்
பிரகத்தனும் - 20
கபிலரும் இருங்கோவேளும் - 27
கபிலரும் கடுங்கோவாழி
யாதனும் - 29
கபிலரும் தனிச் செய்யுளும் - 69
கபிலரும் திருவள்ளுவ
மாலையும் - 69
கபிலரும் பேகனும் - 20
கபிலரும் மலையமான் காரியும் - 19
கபிலரும் விச்சிக்கோனும் - 26
கபிலரும் வேள்பாரியும் - 21
கபிலரைக் குறித்து வழங்குங்
கதைகள் - 1
கபிலரைப் பற்றிக் கூறும் நூல்கள் - 2
கபிலரைப் பற்றி வழங்குங்
கதைகளின் ஆராய்ச்சி - 10
கபிலன் - 3
கம்பர் - 193
கம்பராமாயணம் - 135
கர்ணாடக சப்தமணிதர்ப்பணம் - 180
கர்ணாடக பாஷாபூஷணம் - 180
கரடி - 95
கருங்குரங்கு - 96
கருங்குவளை - 107
கருவிளை - 112
கலித்தொகை - 11

கவிமரபான செய்திகள் - 142

கவிமரபு - 142

கழாத்தலையார் - 27

கள்ளிலாத்திரையனார் - 33

களவழி நாற்பது - 192

கற்பியற்சூத்திரம் - 215

கன்முகை - 163

கன்முழை - 163

கன்னடமொழி - 172

கன்னட மொழியிலுள்ள சாசனங்கள் - 75

கா

காந்தள் - 107

காபு (காப்பு) - 167

கார்நாற்பது - 192

காரி - 18, 19

கால் - 169

காவலர் - 92

காவிரிப்பூம்பட்டினம் - 3

காற்று - 169

கானல் - 176

கி

கிளவியாக்கம் - 145

கிளி - 104

'கின்று' இடைநிலையோடுகூடிய எச்சச் சொல் - 194

'கின்று' இடைநிலையோடு கூடிய நிகழ்கால வினைச்சொற்கள் - 68

'கின்று' என்னும் இடைநிலையோடு கூடிய சொல் - 64

கு

குட்டிகள் - 97

குண்டுகட்டு - 171

குத்து - 182

குதிரை - 95

குர்த்து - 182

குரங்கு - 95

குரா - 112

குருகு - 104

குருகுகள் - 88

குருந்து - 112

ருளவி (மலைமல்லிகை) - 108

குறமகளிர் - 91

குறவர் - 89

குறள், திருக்குறள் - 12, 204

குறிஞ்சிக்கலி - 49

குறிஞ்சிக்கலியின் ஆசிரியர் கபிலரே - 45

குறிஞ்சிப்பாட்டில் வந்துள்ள பூக்களின் சிறப்பியல்பு -112

குறிஞ்சிப்பாட்டில் வந்துள்ள பூவும் இலையும் - 112

குறிஞ்சிப் பாட்டின் ஆசிரியர் கபிலரே - 51

குறிஞ்சிப்பாட்டின் உரை - 199

குறிஞ்சிப்பாட்டு - 20

குறுந்தொகை - 41

குறுந்தொகையுரை - 221

குன்றம் - 170

கூகை - 104

கூடல் - 83

கொ

கொகுடி - 112
கொடுமணம் - 83
கொல் - 173
கொல்லிமலை - 81
கொலிய - 166
கொன்றை - 112

கோ

கோங்கு - 108
கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை - 37

ச

சங்கவை - 195, 196
சசகபுரம் - 76
சந்தனமரம் - 108
சமயம் - 16
சளன் - 75

சி

சிந்தாமணி, சீவகசிந்தாமணி - 52, 53
சில செய்திகள் - 83
சிலப்பதிகாரம் - 65
சிலுக - 181
சிவந்து - 170
சிவபெருமான் திருவந்தாதி - 64,
சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை - 63
சின் - 156

சு

சுணங்கு வேங்கைமலரின் நிறம்போல்வது - 85
சுந்தரமூர்த்திநாயனார் - 194
சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் - 16
சுரபுன்னை - 108

சூ

சூடாமணி நிகண்டு - 81

செ

செங்குவளை - 108
செந்தமிழ் - 22
'செய்யியர்' என்னும் வாய்ப் பாட்டுச் சொல் - 155
செலின் - 172
செவந்து - 170
செவிலிக்கூற்று - 127
சென்மின் - 172
சென்மே - 147

சே

சேக்கிழார் - 17
சேந்து - 170
சேம்பு - 108
சேரமான் அந்துவன் - 77
சேரி - 182

சொ

சொல்லாராய்ச்சி - 150
சொலிய - 166

சோ

சோழமண்டல சதகம் - 2, 3

ஞா

ஞானவெட்டியான் - 67
ஞானாமிர்தம் - 5
ஞாழல் - 108

ஞெ

ஞெகிழ - 164

த

த்வநி - 135
தைந்த - 160
தமிழ் இலக்கிய வரலாறு - 28
தமிழ் நாவலர் சரிதை - 2, 6
தமிழ் நாவலர் சரிதையின் முகவுரை - 28
தமிழ்ப்பொழில் - 167
தமிழ் வரலாறு - 194
தலைவன் கூற்று - 120
தலைவி - 126
தலைவிகூற்று - 121
தவமுனி - 7
தளி - 160
தளிர் - 160
தனிப்பாடல் - 81
தனிப்பாடற்றிரட்டு - 6

தா

தாலவ்யம் - 153

தி

திணைமாலை நூற்றைம்பது - 191
திணைமொழி ஐம்பது - 191
தி.த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் - 189
திமில் - 161
திருக்கோவலூர்க் கீழூர்ச்சாசனம் - 32
திருக்கோவலூர்ச் சாசனம் - 28
திருவள்ளுவமாலை - 42
திருவள்ளுவர் - 7
திருவள்ளுவர் கதை - 2, 7
திருவாதவூர் - 11
திருவாரூர்ப் புலைச்சி - 8
திருவாலவாயுடையார் திருவிளையாடல் - 2
திருவிளையாடற் புராணங்கள் - 10
தில் - 173
தினை - 108

து

துகில் - 176
துத்தி - 161
துதைந்த - 160
துவரை, துவராபதி - 83, 74
துளி - 160
துளிர் - 160

தூ

தூண்டில் - 89

தெ

தெய்வீகன் - 195, 196
தெருமந்து (தெருமர்ந்து) - 164, 165
தெருமர் - 165
தெறுழ் - 109

தே

தேங்கி (தியங்கி) - 170

தை

தைநீராடும் வழக்கம் - 87

தொ

தொகுதி - 163
தொகுதியொருமை - 149
தொகைமரபு - 174
தொண்டை மண்டலம் - 4
தொல்காப்பியச் செய்யுளியலுரை - 190
தொல்காப்பியம் - 23
தொல்காப்பியவுரை - 190
தொழுதி - 163

தோ

தோழி - 126
தோழிகூற்று - 122
தோற்றுவாய் - 1
தோன்றி - 109

ந

நகர் - 177
நசை - 187
நம்பியகப்பொருள் - 178
நம்பியாண்டார் நம்பி - 16
நம்பியாண்டார்நம்பியின் திருவந்தாதி - 16
நயமிக்க பாட்டுக்கள் - 120
நள்ளி - 71
நற்கிரனார் - 24
நற்றிணை - 19
நற்றிணையுரை - 220
நற்றிணையுரையாசிரியர் - 42
நறைக்கொடி - 109
'நன்றா' என்னும் குன்று - 80
நன்னூல் வினையியல் - 148
நன்னூலார் - 144

நா

நாய் - 97
நாராயணசாமி ஐயரவர்கள் - 42
நாலசைச்சீர் - 60
நாலடியார் - 177

நி

நிதம்பம் - 52

### நீ

நீதிஐயன் - 8
நீம் - 156
நீன் - 156

### நூ

நூறுநாள்ளு=நூர்நாள்ளு - 162

### நெ

'நெட்டிலை' என்னும் செய்யுள் - 14
'நெட்டிலை யிருப்பை' - 13, 69
நெடுவெண்டிங்கள் - 219
நெய்தல் - 109
நெய்தற்கலி - 212
நெற்றம் (நெற்று) - 170

### நே

நேரிசை வெண்பா - 189, 190
நேரிமலை - 81
நேஸறு மூடிதுது = நேஸர் மூடிதுது - 161

### நொ

நொச்சி - 109

### ப

ப்ரஹ்ம சூத்ரம் - 2
பகவன் - 3
பச்சை குத்திக்கொள்ளும் வழக்கு - 87
பசப்ப - 166
பத்திரகிரியார்மெய்ஞ்ஞானப் புலம்பல் - 66
பத்துப்பாட்டின் மூன்றாம் பதிப்பு - 30
பதிற்றுப்பத்து - 30
பதினொன்றாந்திருமுறை - 16
பந்தர் - 83
பம்பபாரதம் - 172
பயப்ப - 166
பயிர்த்தொழில் - 88
பர்மா - 90
பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம் - 2
பரணர் - 3, 20
'பரணர்' என்னும் நூல் - 3
பரிபாடல் - 51
பல்லியாடுதல் - 88
பலா - 109
பறம்புமலை - 82
பறவைகள் - 103
பன்மாண் - 216
பன்மை (பல் மெய்) - 168
பன்றி - 98, 183
பன்னிருபாட்டியல் - 59
பன்னிருபுலவர் சரித்திரத்திற் காணும் மற்றொரு கதை - 9
பன்னிருபுலவர் சரித்திரம் - 12
பனி - 183

### பா

பாக்கம் - 178
பாகு (பாக்கு) - 167

பாடினி - 94
பாண்டி மண்டல சதகம் - 11
பாணர் - 94
பாதிரி - 113
பாரதம்பாடிய பெருந்தேவனார் - 69
பாரி, வேள்பாரி - 11, 73

பி

பிங்கலம் - 1
பிச்சி - 110
பிடவு - 109
பித்திகம் - 110

பீ

பீர் - 169
பீர்க்கு - 169
பீர - 169
பீரம் (பீர்க்கு) - 169
பீரை - 169

பு

புகார்நகர் - 9
புட்டம் - 52
புராணக்கதை - 142
புருவை - 98
புரைம் - 147
புரையோர் - 178
புலம்பு - 179
புலவர் புராணம் - 7
புலி - 99
புலிகடிமால் - 27
புலையர் - 94
புள்ளி மயங்கியல் - 169
புற்றம் - 170
புறநானூற்றின் இரண்டாம் பதிப்பு - 29
புறநானூற்றுரையாசிரியர் - 156
புறநானூறு, புறம் - 2
புறப்பொருள் வெண்பாமாலை,
வெண்பா மாலை - 22, 164
புறப்பொருள் வெண்பாமாலையின்
உரையாசிரியர் - 47
புறம்பு - 170

பெ

பெண் - 169
பெண்டு - 169
பெண்ணையாறு - 196
பெரிய புராணம் - 4
பெருங்குன்றூர்கிழார் - 20
பெருஞ்சாகரர் - 8
பெரும்புலைச்சி - 3
பெரும்பூட் பொறையன் - 71
பெருமாள் திருமொழி - 55
பெருமூங்கில் - 113

பே

பேகன் - 20
வையாவிக்கோப்பெரும்பேகன் - 20
பேராசிரியர் - 129
பேராளி -
பேலூர்த்தாலுகா
சாசனங்கள் - 75, 76, 77

பொ

பொதியில் - 82
பொம்மை - 168
பொய்சள - 75, 76
பொய்மை - 168
பொய்யாமொழியார் - 190
பொருந்தில் இளங்கீரனார் - 37
பொருளியல் - 130
பொற்றை - 166
பொறை - 166
பொறையன் பெருந்தேவி - 77

போ

போக்கியார் - 69
போர் (போர்பு) - 170

ம

மகளிர் - 86
மதி - 173
மதுரைக்காஞ்சி - 55
மந்தி - 96
மயில் - 104
மயிலாப்பூர் - 9
மயிலை - 4
மான்று (மரனையுடையது) - 164
மரவகை - 106
மரை ஆ - 100
மலைகள் - 81
மலையமான் - 30
மலையாளமொழி - 164
மறவர் - 93
மன்று - 164
மஹாமஹோபாத்யாய, டாக்டர்,
வே. சாமிநாதையரவர்கள் - 29
மஹாவித்வான், ஸ்ரீமத் ரா.
ராகவையங்காரவர்கள் - 47

மா

மா - 110
மாணிக்கவாசகர் வரலாறும்
காலமும் - 16
மாமை நீலமணியின் நிறம்
போல்வது - 85
மாறனலங்காரவுரையாசிரியர் - 137
மாறோக்கத்து நப்பசலையார் - 15
மான் - 100
மான்கள் - 99

மி

மிளகு - 110
மிளா - 100

மீ

மீமிசை - 172

மு

முசுக்கலை - 96
முதலை - 100
முருகாற்றுப்படை - 177

முல்லை - 110
முல்லைப்பாட்டு - 68, 172
முழவு - 89
முள்ளூர் - 83
முள்ளூர்மலை - 82
முளவுமா - 100
முன்றில் - 170

மூ

மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை - 61

மே

மேக்கு - 173
மேகலை - 85

மோ

மோசிகீரனார் - 69

ய

யசோதரசரித்ரெ - 77

யா

யாங்கனம் - 164
யாங்ஙனம் - 164
யாப்பருங்கலக்காரிகை - 190
யாப்பருங்கலம் - 190
யாளி - 5
யாளிதத்த முனிவன் - 5
யானை - 89, 100

ர

ரகுவம்ஸம் - 137

வே

வேது - 170

வ

வஞ்சி (நகர்) - 4
வடசொற்கள் - 184
வடி - 161
வடு + இ = வடி 161
வண்டுகள் - 105
வணிகர் - 85
வந்தமாறு - 158
வந்திசின் - 155
வந்தீமே - 158
வந்து - 164
வயலை - 110
வர் - 165
வர்ந்து - 164
வரகு - 110
வருடை - 99
வல்வில்ஓரி - 71
வழக்கங்கள் - 85
வள்ளி (பெண்) - 9
வள்ளிமலை - 9
வள்ளுவர் - 4
வளை - 89

**வா**

வாங்குதல் - 179
வாசல் - 167
வாதில் - 167
வாய்தில் - 167
வாரர்தி - 158
வாராதீமே - 158
வாராமாறு - 158
வாழை - 111
வானம்பாடி - 106

**வி**

விச்சிக்கோன - 18
விநாயகவணக்கம் - 61
விநாயகன் - 61, 194
விநோகரசமஞ்சரி - 2, 7
விலங்குகள் - 95
விவேக சிந்தாமணி - 219
வின்னயியல் - 148
விஷ்ணுபுராணம் - 218
விஷ்ணுஸஹஸ்ரநா
மஸ்தோத்ரம் - 1

**வீ**

வீரசோழியம் - 36
வீரர் - 88

**வெ**

வெட்பாலை - 112
வெண்பாப்பாட்டியல் - 63
வெதிர் - 111
வெய்யள் - 179
வெருகு - 102

**வே**

வேங்கடசாமி நாட்டாரவர்கள் - 13
வேங்கை - 111
வேடர் - 91
வேதமொழி - 9
வேலன் - 92
வேளிர்வரலாறு - 22

**வை**

வையை - 51

**ஸ்**

ஸ்காந்தம். காசிகண்டம் - 53

**ஸு**

ஸுபாஷிதரத்னபாண்டாகாரம் - 53

**ஸூ**

ஸூர்யஸித்தாந்தம் - 218

**ஹ**

ஹரிவம்ஸம் - 169
ஹளபீடு (பழைய வீடு) - 83

**ஹா**

ஹாலாஸ்யமாஹாத்ம்யம் -2


★★★

# 'கபிலர்' என்னும் இவ்வாராய்ச்சி நூலில் எடுத்தாளப்பட்டுள்ள நூல்கள் முதலியன

அகநானூறு
அண்ணாமலைச் சதகம்
ஆசாரக்கோவை
இலக்கண விளக்கம்
இறையனாரகப் பொருளுரை
இன்னாநாற்பது
இனியவை நாற்பது
உவமான சங்கிரகம்
ஐங்குறுநூறு
ஐந்திணை எழுபது
கந்தபுராணம்
கபிலர் (ந.மு.வே.)
கபிலரகவல்
கம்பராமாயணம்
கலித்தொகை
களவழிநாற்பது
கார்நாற்பது
குற்றாலத்தலபுராணம் (முன்னுரை)
குறிஞ்சிப்பாட்டு
குறுந்தொகை
சிலப்பதிகாரம்
சிவபெருமான் திருவந்தாதி
சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை

சீவகசிந்தாமணி
சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
சூடாமணி நிகண்டு
செந்தமிழ் (பத்திரிகை)
சோழமண்டல சதகம்
ஞானவெட்டியான்
ஞானாமிர்தம்
தமிழ் இலக்கிய வரலாறு
தமிழ் நாவலர் சரிதை
தமிழ்ப் பொழில் (பத்திரிகை)
தமிழ் வரலாறு
தனிப்பாடற்றிரட்டு
திணைமாலை நூற்றைம்பது
திணைமொழி ஐம்பது
திருக்குறள்
திருக்கோவலூர்க்கீழூர்ச்சாசனம்
திருமுருகாற்றுப்படை
திருவள்ளுவமாலை
திருவாலவாயுடையார் திருவிளையாடல்
தொல்காப்பியம்
தொல்காப்பியவுரைகள்
நம்பியகப்பொருள்
நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி
நற்றிணை
நன்னூல்
நாலடியார்
பத்திரகிரியார்மெய்ஞ்ஞானப்புலம்பல்
பதிற்றுப்பத்து
பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம்

பரணர்
பரிபாடல்
பன்னிருபாட்டியல்
பன்னிருபுலவர் சரித்திரம்
பாண்டிமண்டல சதகம்
பிங்கலம்
புலவர் புராணம்
புறநானூறு
புறப்பொருள் வெண்பாமாலை
பெரியபுராணம்
பெருமாள்திருமொழி
மதுரைக்காஞ்சி
மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்
மாறனலங்காரவுரை
முல்லைப்பாட்டு
மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
யாப்பருங்கலக்காரிகை
யாப்பருங்கலம்
விநோதரச மஞ்சரி
விவேக சிந்தாமணி
வீரசோழியம்
வெண்பாப் பாட்டியல்
வேளிர் வரலாறு

## கன்னடம்

கர்ணாடக சப்தமணிதர்ப்பணம்
கர்ணாடக பாஷாபூஷணம்
பம்ப பாரதம்

பேலூர்த்தாலுகா சாசனங்கள்
யசோதரசரித்ரெ

## தெலுங்கு

உத்தரராமாயணம்
ஹரிவம்ஶம்

## வடமொழி

ப்ரஹ்மசூத்ரம்
ரகுவம்ஶம்
விஷ்ணுபுராணம்
விஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்
ஸ்காந்தம், காசிகண்டம் (ஶப்தகல்பத்ருமத்து மேற்கோள்)
ஸுபாஷிதரத்னபாண்டாகாரம்
ஸூர்யஸித்தாந்தம்

★ ★ ★

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

### அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் .. | 40.00 |
| நாட்டிய நன்னூல் .. | 25.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 .. | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 .. | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் .. | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு .. | 65.00 |
| தமிழக மேடைநாடகப்பெண்கலைஞர்கள்குறிப்பேடு .. | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil .. | 80.00 |
| Cilappatikaram .. | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் .. | 125.00 |
| Tani Pacura Togai .. | 30.00 |
| Dedication .. | 25.00 |
| Temple Chimes .. | 20.00 |
| Nala Venba .. | 45.00 |
| Tamil Heroic Poems .. | 40.00 |
| Six Long Poems from Sangam Tamil .. | 30.00 |
| Kurinci-p-pattu-Muttollayiram .. | 40.00 |
| Kuruntokai .. | 110.00 |
| Landscape and Poetry .. | 50.00 |
| Tamil Culture and Civilization .. | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi .. | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை .. | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1. . | 50.00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை .. | 55.00 |
| சடத்தலம் .. | 40.00 |
| காத்தவராய நாடகம் .. | 30.00 |
| மதங்க சூளாமணி .. | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் .. | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் .. | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் .. | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் .. | 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி 1. . | 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி 2. . | 65.00 |
| சோதிடவியல் .. | 70.00 |


கபிலர் விலை ரூ.70/-